

தெய்வமேதுணை.

இருக்கு-யஜுர்-சாமம்-அதர்வணம்

என்கிற

நான்குவேதாகமியம்

இவை,

கோயமுத்தூர்ஜில்லா உடுமலைக்கோட்டை

டிஸ்டிரிக்ட்முன்ஸீபாகிய

சைவ சூர்யம்.

காசிவிஸ்வநாதமுதலியா

ரவர்களால்.

இங்கிலீஷிலிருந்தும்

கிரந்தத்திலிருந்து,

தமிழில்மொழிபெயர்த்து

தமிழ்ப்பண்டிதர்,

கோ. இராசகோபாலபிள்ளை

யவர்களால்பார்வையிடப்பட்டு,

சென்னை சூளை,

சிறுமணவூர்,

அண்ணாமலைமுதலியா ரவர்களது

ஆயுர்வேத அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

Registered Copy Right. இசன் விலை ரூபா 1 0 0

1906

ரிஜிஸ்ட்டர் காபிரைட்

இதனுல் சகலமான வர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் இந்தநான்குவேத ரகசியமென்னும் நூலையாரும் அச்சிடாதிருந்த படியால் சைதாபுரத்தில் வாழும் காசிவிஸ்வநாத முதலியா ரவர்களால் கிரந்தத்திலிருந்தும் இங்கிலீஷிலிருந்தும் தமிழில் மொழிபெயர்த்து அதற்க்குநான்குவேத ரகசியமென்னும் பெயரமைத்து இன்னூலை சென்னை சூளை ஆண்டியப்பநாய்க்கன் தெருவு 44-வது நெம்பர் வீட்டில் ஸ்தாபித்திருக்கும் ஆயுர்வேத அச்சுக்கூடத் தலைவராகிய யானே சகலசுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு எனது ஆயுர்வேத அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு கனம்பொருந்திய கெவர்ன் மெண்டார் அவர்களது 1867-ஞுத்திய 25-வது, ஆக்ட்டு 20-வது, செக்ஷன் 8-வது, ரூல்பிரகாரம் (ரிஜிஸ்ட்டர் காபிரைட்) செய்யப் படடிருக்கிறபடியால் என்னுடைய உத்திரவின்றி இன்னூலை யாரும் அச்சிடக் கூடாது.

விளம்பரம்.

இப்புத்தக மாவது இன்னும் இதரமான புத்தகங்களாவது அவிஷ்தங்களாவது ரப்பர் ஸ்டாம்புகளாவது தேவையானவர்கள் அடியில்கண்டிருக்கும் கம்பேனியாரவர்களுக் கெழுதி பெற்றுக்கொள்ளலாம் பெரிய கேட்லாக் தேவையானவர் களுக்கு அரையணு ஸ்டாம்பு அனுப்பினுல் அனுப்பப்படும்.

இப்படிக்கு,

சிறுமணவூர்,

அண்ணுமலை முதலியார்

ஆயுர்வேத அச்சுக்கூடத்தலைவர்

சூளை, போஸ்ட்டு, மதராஸ்.

நூலிறுப்பிரிவு.

1-கைவல்லியநவநீதத்தில்	1
2-அதர்க்குமகாவாக்கிய ரத்தினவளியில்	0
3-பிரம்மப்பிரணவார்த்த ப்ரகாசிகையில்	0
4-மஹாவாக்கியரத்னவளியில்	2
5-அன்றியும்பாரதம் அநுஸாஸிகபருவத்தில்	6
6-மீமாம்ஸத்தில்	7
7-பராசரஸ்மிருதியில்	0
8-பராசரஸ்மிருதியில்	0
9-பராசரஸ்மிருதியில்	0
10-ஸ்வாத்தியாயலக்ஷணம்	0
11-ஸ்வாத்தியாயம்வேதமூலமந்திரபாடம்	0
12-விஷ்ணுபுராணம் திருதியாம்ஸை	8
13-சதுர்த்தாத்தியம் பராசரர்	0
14-வாபுராணத்தில்	0
15-பாகவதம் துவர்தசஸ்கந்தம்	0
16-ஷஷ்ட்டாத்தியாயம்	0
17-சுக்லயஜுர்வேதம்ஹ்தர	0
18-பாஷியத்தில் பக்கம்	1
19-கிருஷ்ணயஜுர்வேத பாஷியத்தில்	9
20-பட்டபாஸ்கரர்	0
21-சரணவியூஹத்தின் வியாக்கியானத்தில் எந்தெந்தவேதம்	0
22-வேதங்கள் நாலுஎன்பதற்கு	0
23-கைவலியநவநீதத்தில்	0
24-சிந்துதேசத்துச்சாஸ்திரங்களுக்குச்	15
25-சமுதாயப்பெயர்	0
26-அஷ்டாதச வித்தையென்பதேயாம்	0
27-பதினெட்டுவிதசாஸ்திரங்கள்	0
28-அவற்றின்பெயரும் முறையும் தொகையும்வருமாறு	0
29-சதுர்வேதங்கள்	0

நூலிருட்பிரிவு

30-சடங்கம் 0
31-மீமாஞ்சைநியாயசாஸ்திரம் 0
32-தர்மசாஸ்திரம் 0
33-புராணங்கள் 0
34-ஆயுர்வேதம் 0
35-தனுர்வேதம் 0
36-காந்தர்வவேதம் 0
37-அர்த்தசாஸ்திரம் 0
38-வேதங்கள் 0
39-வேதம்வெளிப்பட்டவிதம் 17
40-முதலாவது இருக்குவேதம் 20
41-இரண்டாவது யஜுர்வேதம் 45
42-மூன்றுவது சாமவேதம் 68
43-நான்காவது அதர்வணவேதம் 78
44-மனுநீதிசாத்திரம் 87
45-பிராயச்சித்தநிருணய சாத்திரசங்கிரகம் 99
46-குறிப்பு 127
47-ஸ்ரீபராசரஸ்மிருதி சங்கிரகம்மூலமும்-உரையும் 128

அகராதி.

முற்றுப்பெற்றது.

கடவுள் துணை.

முகவுரை.

சித்தி விநாயகர்

உள்ளமெனுங்கூடத்தி லூக்கமெனுந்தறிதிறுவி யுறுதியாசத்
தள்ளரியவன்பெண்ணுந் தொடர்பூட்டி யிடைபடுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப்பசுபோதக் கவளமிட்களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழமுத்தை நினைந்துவரு வினைகடீர்ப்பாம்.

நூன்முக விருத்தம்.

பாரப்பாரன்குவேத ரகசியந்தான்
பராபரத்தினருளாலே சொல்லிவந்தேன்
சீரப்பாமதநீதி சாத்திரந்தான்
சிரப்பாகபிராயச்சித்தமதுவுஞ் சொன்னேன்
தீரப்பாபராசரஸ்மிருதிச் சேர்த்து
திரையொன்று மில்லாமல்யெழுதிவைத்தேன்
காரப்பாசத்திசிவம் பாதம்போற்றி
கழறினேன்வசனமதாய் போற்றிபோற்றி

1. உலகத்தில் இந்து சமயவேதந்தவிர மற்ற எல்லாச்சமயங்களுக்கும் உரியவேதம் அல்லது தேவவாக்குக் கருதிகதங்களிலும் அச்சிலும் இருக்கின்றமையால் அச்சமயிகளில் தங்கள் வேதத்தை அறியவேண்டுமென்று விரும்புவோர் களுக்குக் கிடைக்கும் படியாயிருக்கிறது. ஆனால் இந்துசமய வேதங்களும் அவ்வேதங்களைச் சார்ந்த சிலவைதிகசாத்திரங்களும் அந்தப்படி கிடைக்கும்படியான நிலைமையில் இல்லை, ஏனெனில்வேதங்கள் எழுதப்பட்டாவது அச்சியற்றப்பட்டாவது பூர்வத்தில் இல்லாமையாலும், சாத்திரங்கள் எழுதப்பட்டிருந்தபோதிலும் பிராமணர்களுடைய ஆதீனத்திலே இருந்தமையாலுமேயாம்,

முகவுரை.

2. வேதம்வெளிப் பட்டவிதமென இந்நூலின் முதற்பக்கத்தில் சொல்லியிருக்கிறபடி வியாக்கியானத்தோடு எழுதப்பட்ட வேதம் புறச்சமயிகள் வசத்தில் கிடைத்தபின்பு சிலரால் சிலமுக்கிய பாகங்கள் மாத்திரம் பாரிசு பாஷையிலும், இங்கிலீஷ்பாஷையிலும், மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

3. ஓரியின்டல் டிரான்சலேஷன்பண்டு கம்மிட்டியார் இருக்கு வேதத்தை அச்சிட்டனர். அவ்வேதத்தில் ஒருபாகத்தைப்பம்பையில் சிவரெண்டு மேஸ்டர் ஸ்டிவென்ஸன் என்பவர் இங்கிலீஷில் மொழி பெயர்த்து அச்சியற்றினர்-புனுகலீஜில் சமஸ்கிருத பாடசாலைக்கு விசாரணைகர்த்தராகிய மார்ட்டின்ஹாக் என்பவர் அவ்வேதத்தின் ஒருபிரிவாகிய ஐத்திரேயபிராமணத்தைத் தமது சுயபாஷையில்மொழிபெயர்த்துப் பிரசுரப்படுத்தினர்.

4. இந்தப்பிரகாரம் இந்துசமயத்தாருடையவேதம் வெளிப்பட்டுக்கடைகளிலும் விற்கப்படுகின்றது. புறச்சமயத்தார்களில் சாதாரணமான ஜனங்களும் வீலைகொடுத்துவாங்கி உணர்ந்து பயடைந்து கொண்டிருக்கிறார்கள், அந்தப்படி வெளிப்பட்டவேதமும் பாளடந்துவிலும் நாசரத்திலும் அச்சியற்றப் பட்டிருக்கின்றமையாலும், மொழி பேயர்ப்பொ இங்கிலீஷ்பாஷையா யிருக்கின்றமையாலும் அவ்வேதமே ஆதாரமாகக்கொண்ட சமயத்தைச்சார்ந்தவரும் மேற் கூறியபாஷைகளைக்கல்லாத வருமாகிய ஒருவர் வேதத்தை அறிய வேண்டுமெனக்கொண்ட ஆவலானது பயனடையாமற்போகின்றது.

5. வேதமோதுதற் கதிகாரிகளென்னும் * அந்தணர் அரசர்வைசியராகிய இம்மூன்றுவருணத்தாரில் அநேகருக்கு மேலேசொல்லிய பாளபந்து எழுத்துத்தெரியாது. ஒருவேளை தெரிந்தபோதிலும் அத்தியயனம்செயது உதாத்தம் அநுதாத்தம் என்னப்பட்ட சுரங்கள் வழுவாமல்தாமே ஓதும்வல்லவராகார்கள், எவ்வகையாலாவது தெரிந்துகொள்ளினும் அவற்றின்பொருள் சடங்கங்களையும் மற்றுஞ்சார்புநூல்களையும் கற்றுணர்ந்த புலமையைக் கொண்டன்றி எவ்விதில் உணர்ந்துகொள்ள முடியாது.

முகவுரை.

6. வேதங்களின் பொருள்களை அறிந்துகொள்வதென்றல் இவ்வளவு அருமையாயிருப்பதையோசித்து அவற்றை ஒருவாறு நம்மவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டுமென்னுங்கவலை கொண்டிருந்தயான், சமஸ்கிருதபாஷையில் மகாபண்டிதராயிருந்த மேஸ்டர் கோல்புருக்கென்பவரால் செய்யப்பட்டு மாஸ்டர்வார்ட்ஸ் கவுண்டு ஆப் இந்தூஸ் என்கிறபுத்தகத்தில் வெளிப்படுத்திய வேதச்சுருக்கம் என்பதில் இன்றியமையாத வற்றைத்தமிழில் மொழிபெயர்த்து அதற்கு நான்குவேதரகசியமெனப் பெயரிட்டு, ஆகமங்களுக்கும் தருமநூல்களுக்கும் சிறந்த ஆதாரமாகிய மநுஸ்மிருதிச்சுருக்க அட்டவணையும் மனுநீதி சாஸ்த்திரமும் அரியாமர் செய்தகாரியத்திர்க்கு பிராயச்சித்த நிருணயசாத்திரசங்கிரகமும் ஸ்ரீபராசரஸ்மிருதி வசனகாவியமும் பிரகடனஞ்செய்யத்துணிகின்றேன்.

இங்ஙனம்,

சைதாபுரம், காசிவிஸ்வநாதமுதலியார்.

---

*மநுவசனத் தாற்பரியபிரகாரம், வேதம் ஓத அறியாத பிராமணன் உணர்ந்த புல்தீயில்விழுந்து எரிந்து போவதுபோல் நாசம் அடைவான் உண்மையாய் ஈனம் அடைவான். பிரமக்ஷத்திரிய வைசியகுலத்தினராகிய இருபிறப்பாளர் வேதத்தைக்கற்றிலராயின் அவர்களும் அவர்களுடைய சந்ததிகளும் சூத்திரநிலையினர்களாய்த் தாழ்ந்துவிடுவார்கள். "வேதபராஸ்துவிப்பிரகா" என்கிறவசனத்தின்படி விப்பிரன் என்கிறநாமம் வேதபாராயணத்தாலன்றிப் பிறப்பினாலே யே வந்ததன்று. இக்காலத்தில் வேதம் ஓதாதவர்கள் அநேகரைக்காண்கிறோம், நியாயப் பிரமாணத்தின்படி அவர்களெல்லாம் அந்தப் பெயருக்கும், மரியாதைக்கும், சுதந்தரத்துக்கும், உரியவர்களல்லராகிறார்கள்.

வைத்திய சிகாமணி
தயாரய்விட்டது.

ஆர்டர்செய்தால்
உடனேவரும்.

இங்கிலீஷ், தமிழ் வைத்தியசிகாமணி.

லண்டன், மெடிகல், பார்லிமெண்டு, **64**-டாக்டர்களால் பதிப்பிக்கப்பட்டு சீமை, பாங்காளம், கல்கட்டா, இந்தியா இந்த நான்கு கெவர்மெண்டுக்குள் ளடங்கிய இங்கிலீஷ் ஆஸ்பத்திரிகளில் எல்லா டாக்டர்களும் கையாண்டு வருகிறார்கள், ஷெசிர்மை **64**-டாக்டர்களின் பிரஸ்கிரிப்ஷன் புத்தகத்தை அதற்குச்சரியான தமிழ்பாஷையில்டிரான்சிலேஷன் செய்து தமிழும் இங்கிலீஷ்மாக அச்சிடப்பட்டது (அன்றியும்) இந்துராஜாக்கள் ஔஷதமுறைகளும் சேகரித்து மொத்தம் **100**-ஆயிர முறைகள் ஒரே புத்தகமாய் அச்சிடப் பட்டு தயாராயிருக்கிறது, ஷெமுறைகள் ஒவ்வொன்றிலும் அதை அனுபோகித்த டாக்டர்களின் பெயர்களை தமிழிலும் இங்கிலீஷிலும் அங்கங்கே காட்டியிருக்கிறது ஆகையால் சீமைமெடிகல் பார்லிமெண்டு அனுபத்து நான்கு டாக்டர்களும் உங்கள்பக்கத்திலிருக் கிறதைப் போலவே கவனியுங்கள் இதற்குச் சந்தேகமில்லை. இந்த வைத்திய சிகாமணி யென்னும் புத்தகம் உங்களிடத்திலிருந்தால் நீங்கள் என் வைத்தியராகக்கூடாது. அல்லது உங்கள் குடும்பத்திற்கு வேண்டிய ஔஷதங்களை நீங்களே செய்துக்கொள்ளலாமல்லவா ஒருவைத்தியனிடத்தில் எத்தனைநாள் ஊழியஞ்செய்தாலும் எவ்வளவு பணம்செலவு பண்ணினாலும் அவன் ஜீவனம் செய்யும் ரகசியத்தைக் கபடுலாமல் சொல்லிக்கொடுப்பானா.

இந்தவைத்திய சிகாமணியென்னும் புத்தகத்தில் தங்கம் வெள்ளி அயம் காந்தம் நாகம் முதலிய எல்லாவித பஸ்பங்களும் செந்தூரங்களும் சாதிபுஷ்டிக்கு வேண்டிய அனேக முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றது. எல்லாம் அனுபோகமான முறைகள் பலரும்செய்துக் கொள்ளலாம்.

ஷெ புத்தகம் **1**-க்கு விலை ரூபா **3 8 0** தபாற்கூலி அணா-**5**.

உ

தெய்வமேதுணை.

சதுர்வேத சாரமென் னும்

நான்கு வேத ரகசியம்.

ஓம்

ஸ்ரீகுருபர பிரஹ்மணே நமஃ

குருபிரம்ஹா குருர்விஷ்ணுர் குருதேவோ மஹேச்வராஃ
குருஸ்ஸாக்ஷாத் பரபிரமா தஸ்மை ஸ்ரீகுருவேநமஃ
க்ஞ்யாநந்தமயம் தேவம் நிர்மலஸ் படிகாகிருதிம்ஃ
ஆதாரம் ஸர்வ வித்யானும் ஹ்ருத்கீர வுபாஸ்மஹே.

வேதங்கள் எவனைப்பற்றி சொல்லுகின்றனவோ அந்தபரபிரம் ஹஸ்வரூபமான ஒங்காரசப்தத்தின் மகிமையரிவது எல்லாதருமங் களால் முதல்தருமமாக விருப்பதால் அதன்விஷயத்தைப் பற்றி இத னடியில் ஸங்கிரகமாக விவரிக்கப்பட்டிருக்கின்றது.

கைவலிய நவநீதத்தில்.

சுலோஃ—ஓங்காரச் சாதசப்தச் சத்வாவேதௌ ப்ரமஹரண: புராகண்டம் பித்வாவி நிர்யாதௌ தஸ்மான் மாங்களிகாவுபௌ.

ஓங்காரமானது பதிநாறு கலைகளோடு கூடியிருக்கிறது. அதா வது லோககலைகள் பதினைந்தும் ஆலோக கலை யொன்றும் கூடிபதி நாறுகலைகளாயின.

அதற்கு மகாவாக்ய ரத்நாவளியில்.

சுருதிஃ—அஷ்டாங்கஞ்ச சதுஷ்டி பாதம் த்ரிஸ்த்தானம் பஞ்ச தைவதம் ஓமித்யேவம் நஜானுதிப்ராஹ்மணே நபவேத்ஸஹி.

பிரம்ஹப்பிரண வார்த்தப்ரகாசிகையில்.

ஸ்முருதி:—அஸ்யைகபாத வித்யாஸ்யாந்திரவித்யாத்ரி பாதபூத் என கூறப்பட்டிருப்பதால் பிரணவத்தில் அகார, உகார, மகாரஸ்வ ரூபங்களான அவித்யா—வித்யாநந்த பாததுரியபாதாத்மி சங்களான ஸமஷ்டிவ்யஷ்டி, ஸ்தூல ஸூக்ஷ்ம, காரணமஹா காரணங்களென அஷ்ட்ட சரீரங்களின் கார்யங்களான ஜாக்ரதை, ஸ்வப்னம், ஸுஷுப்தி, துரியங்களென்னும் நான்கு அவஸ்தைகளுக்கு ப்ரஹ்ம,

விஷ்ணு, ருத்ர, மஹேச்வரர்கள் நால்வரும் ஆதிதேவதைகளாயினர் அது பஞ்சதைவதமானதால் ஜந்தாவதான ஸதாசிவ மூர்த்திக்கிடமில்லாமற் போயிவிட்டது, அதிலுல் மாண்டூகாதி உபநிடதங்களில் மேற்சொன்ன அவித்யாதி பாதங்கள் நாலுக்கும் பதிநாலுபாகங்களாக பிரிக்கக்காரணங்களாயின ஆதலால்.

மஹாவாக்ய ரத்னவளியில்.

சுருதி:—கதா: கலா: பஞ்சதசாப்ரதிஷ்ட்டா தேவச்ச ஸர்வே ப்ரதிதேவதாஸு கர்மாணிக்ஞ்யான மயச்ச ஆத்மாபரேவ்ய யே ஸர்வமேகீபவந்தி.

என லோகக்களின் பதினைந்தை யதிகரித்த பதிலாவது சுத்தஸதாசிவனுக்குஸ்தானமாக விருப்பதால் பிரணவம் பதிநாலு பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் வேதாத்தியனம் செய்யுமவர்களுக்கு விசேஷபலனுண்டென்று பலசுருதிஸ்மிருதிகள் முறையிடுகின்றன. ஆனல் வேதவாக்கியத்தின் பொருளரியாமல் அத்தியனம் செய்து விணென்று அந்த சுருதிஸ்மிருதிகளாலேயே அரியலாம். அதற்கு.

(1) நிருக்த்தத்தில்: ஸ்த்தாணுரயம் பாரஹார: கிலாபூத், அதீத்யவேதம் விஜானாதியோர்த்தம், அர்த்தக்ஞ இந்சகலம் பத்ரமச்னுதே நாகமேதிக்ஞ்யான விதூதபாப்மா.

(2) யத்க்ருஹீதமவிக்யாதம் நிகதேனைவசப்த்யதே, அக்ஞவி வசுஷ்கேந்தோ நதுஜ்வலதிகர்ஹிசித்.

(3) வேதஸ்யாத்யனம் ஸர்வம் தர்மசாஸ்த்ரஸ்யசாபியத் அஜானதோர்த்தம் தத்ஸர்வம் துஷாணும் கண்டனம் யதா.

(4) பாடமாத்ரா தாம்ஸ்தாம் ஸ்தாந்த் விஜாதீம் ச்சார்த்தவர் ஜிதான் பசுரிவஸதான் ப்ரௌக்ங்யோ வாங்மாத்ரேணபிநார்சயேத்

(5) யோதீத்ய விதிவத்வீப்ரோக வேதார்த்தம் விசாரயேத் ஸ ஸாந்வயச்சூத்ரஸம: பாத்ரதாம் நப்ரபத்யதே. (மனு)

(6) வேதசாஸ் தார்த்ததத்வக்ங்யோயத்ரயத்ராச்ர மேவஸேத் இஹைவலோகே திஷ்ட்டந்த்ஸத்ப்ரஹ்ம பூயாயகல்பதே. (மனு)

(இ-ள்) அத்தியயனஞ்செய்து வேதபதார்த்த மரியாதவன் பாரத்தைச் சுமந்துக்கொண்டிருக்கும் நாணலைப் போன்றவன். அதன் பொருளரிந்தவன் எல்லாசுபங்களை யடைவான் சுவர்க்கத்திலும் க்ஞ்யானத்தால் பாவம்போக்கடித்துக் கொள்வன்.

(2) க்ஞயான ஈனமான அத்தியயனம் விரகு உலர்ந்தசாயினும் அக்னியின் துணைவன்றி எரியாததைப்போல் நிஷ்பிரயோஜனமாம்.

(3) சகலவேதங்களும் அத்தியயனஞ் செய்தபோதிலும், சகல சாஸ்த்திரங்கள் கற்றபோதிலும்அதன்பொருளையரியாதவன் உமியை க்குத்தின நெல்லுக்குச்சமானன்.

(4) வேதபாடத்தை விரும்பினவர்களாய் அதன் அர்த்தமரி யாத துஷ்ஜானப்பசுவிற்குச் சமானமாக நினைத்து, பிராக்ஞன்வா மொழிமாத்திரத்தி நாலாவது கௌரவிக்கப்படாது.

(5) கிரமமாய் அத்தியனஞ் செய்தும் வேதார்த்தத்தை யரியாத அர்த்தனர் தாமும் தம்மமிசத்தாரும் சூத்திரருக்குச் சமானமான வர்களாய்போக்கியதை யற்றவர்கள் ஆவார்கள்.

(6) வேதார்த்தமும் சாஸ்திரார்த்தமும் அரிந்தவன் எந்த ஆசி ரமத்திலிருந்த போதிலும் இம்மையில் பிரம்ஹகன்பன். உபதேச சித்திக்காக மந்திரானுஷ்டானம் அர்த்தக்ஞான பூர்வகமாக விருக் கவேண்டும். ஆகையால் உபதேசிக்கப் பட்டவன் அர்த்த க்ஞான முடையவனாக விருக்கவேண்டும்.

இருளாலிருள் போவதுபோல் அக்ஞனல் உபவீத ஞானவன் அக்ஞயனுவான் என்று ஆபஸ்தம்பர் கூறினர் யஜமான்தனவானும் சமர்த்தனுமாக விருந்தாலும் அர்த்தக்ஞான மிராவிடின் செய்யும் கருமத்துக்கு லோபமுண்டாகு மென்னும் பயத்தால் யாகாதிகாரி விசேஷணங்களில் "வித்வத்" என்னும் பதத்தைப் படிக்கப்பட்டது. அன்னியன் "ஸ்வாத்யாயோ தேதவ்யம்" அதாவது சுயசாகையில் அத்தியனஞ் செய்யும் விதியில் மந்திரார்த்தமரிய வேண்டியதில்லை என்று சொல்லத்தகாது. அத்தியன் விதியில் பலபிராப்த்தி வரையில் வியாபிக்கப்பட்டது. "ப்ராஹ்மணை நிஷ்காரணோதர்ம ஷடங்ஞ் யோவேதேத்யே யோக்ஞ்யேச்ச" இவை முதலியவைகளில் அத்தி யயனத்தின் அர்த்தக்ஞானம் வெவ்வேராக கூரப்பட்டிருப்பதால் அத்தியயனம் பாடமாத்திரமென்று சொல்லப்படாது "ஸர்வம்பாப் மானம் தர்தி தர்திப்ரம்ஹஹத்யாம்ய அச்வமேதேனயஜதேய உசை னமேவம்வேத" அசுவமேதயாசத்தைச் செய்தவன் எல்லாபாவங்க ளைப் போக்கடித்துக் கொள்வன், பிரம்ஹத்தியை என்னும் மகாபா தகத்தையும் தாண்டுவன், ஆதலால் இப்பொரு ளரியாதவனுக்கிப் படிப்பட்ட பலனுண்டு. அப்படியாயின் அற்பபிரயாசையினல் சாத் தியப்படும் வேதார்த்தத்தினல் சித்தியடைவதை விட்டு மிகப்பிரயா சையினல் சாத்தியப்படும் யாகமுதலிய அனுஷ்ட்டானங்களேனை என்று சொல்லப்படாது.

சுருதி:—உபௌகுருதோயச்சைத்தேவம் வேத, யதேவ யச்ச நவேதம் வித்யயாகரோதித தேவவீர்யவத்தாம்பவதி, அரிந்தவனும் மரியாதவனு மிருவரும் செய்தவர்களே. ஆயினும் எதைசரிந்துச் செய்வார்களோ அதுவே வலிவானபலனுண்டாக்கும் ஆதலால் அர்த்தக்ஞ்யானமாவச்யகம்.

சதுர்முகப் பிரம்ஹாவின்நான்குமுகனினின்றுநாலுவேதங்கள் பிரந்தன. அவை, உருக், யஜுர்ஸாம, அதர்வணங்களெனவிவரிக்கப் பட்டன உருக்வேதம், 21-சாகைகளும், யஜுர்வேதம் 109-சாகைகளும், சாமவேதம் 1000-சாகைகளும், அதர்வணவேதம் 50-சாகைகளுமாகப்பிரிக்கப் பட்டிருக்கின்றன. அவ்வேத சாகைகள் யுகங்களின்பேதத்தினாலும், இராஜபரிபாலனவிசேடத்தினாலும்பிராமஹணன்முதலியவர்ணங்களுக்கு திருடபுத்தியில்லாமல் தப்பிப்போவதினாலும் கிரமகிரமமாய் சிலது அழிந்துப்போய்விட்டன. அப்படி அழிந்தசாகைகளுள் என்னவிசேஷங்களுண்டோவென ஜனங்கள் சந்தேகமடையாமல் நஷ்டமான வேதசாகைகளின் பொருள்களை ஸ்ரீவேதவியாசமுனிவர் தேடிமூன்று லக்ஷம்கிரந்த பரிமிதியுடைய சிவ-மார்கண்டேய-பவிஷ்யத்-லிங்க-வராக-ஸ்காந்த - வாமன-கூர்ம- மத்ஸ்ய பிரம்ஹாண்டங்களென்னும் சிவமகிமைகளைக்காட்டும் பத்துபுராணங்களாயும், ஐம்பதுசாயிரகிரந்த பரிமிதியடைந்து விஷ்ணுமகிமையைக்காட்டும் விஷ்ணு-பாகவத-நாரத-கருடபுராணங்கள் நாலும், இருபத்தையாயிர கிரந்தபரிமிதியடைந்து பிரம்ஹாதேவன் மகிமையைக் கொண்டாடும் பிரம்ஹ-பத்மங்களென்னும் இரண்டுபுராணங்களாயும் பன்னீராயிரத்தி ஐந்நூறுகிரந்த பரிமிதியுடையதாய் சூரியன் மகிமையைக்காட்டும் பிரம்ஹகைவர்த்த புராணமும், அன்றியும் பன்னீராயிரத்தைந்நூறு கிரந்தபரிமிதியடைந்து அக்னிதேவன் மகிமையைப் பிரதிபாதிக்கும் ஆக்னேயபுராணங்களென பதிநெட்டு புராணங்களை நிர்மித்து, பின்பு ஐந்காவது வேதமென்று சொல்லப்படும் ஸ்ரீமகாபாரதம் என்னும் இதிகாசத்தைக் கற்பித்து, உபபுராணங்களெனபேர்பெற்று வைதிககர்மானுஷ்டானங்களை பிரதிபாதித்து புராணநாமங்களுடையமுனிகளால் நிர்மிக்கப்பட்டஸநத்குமார-நாரசிம்ஹநந்தி-சிவதர்ம-துர்வாச-நாரத-கபில-மனு-உசன-பிரம்ஹாண்ட-வருண-காளி-வலிஷ்ட்ட-லிங்க-சாம்ப-ஸௌர-பராசர-மரீசி - பார்கவபுராணங்களைச் சேகரித்து நான்குவர்ணங்களுடையவும், நான்குஆசிரமங்களுடையவும், பதிநெட்டு ஜாதிகளுடையவும் ஆசாரங்களை

யும், மகாபாதகங்களுக்கு பிராயச்சித்தங்களை வியவகாரபேதங்களை ல்காட்டிக்கொண்டு ஸ்மிருதிகளென்று பெயர்பெற்று ஸ்மிருதிகளின் பெயருடையவர்களால் செய்யப்பட்டமனு-அத்ரி - ஹரித்-விஷ்ணு-யாக்ஞ்யவல்க்ய-உசன - ஆங்கிரசயம்-ஆபஸ்தம்ப-சம்வர்த்த-காத்யாயன-பிருஹஸ்பதி-பராசர-சங்க-லிகித்தக்ஷ-கௌதம-சாதாப-வஸிட்டாதி ஸ்மிருதிகளைசோதித்து தன்பேரால் பேர்பெற்றவியாஸஸ்மிருதியை நிர்மித்து, வேதாங்கங்களெனபிரசித்தியடைந்துபிரம்ஹாவின் நிர்மிதங்களையும், உதாத்த அனுதாத்த-தீர்க்க-ஸ்வரிதப் பிரசயங்களென்னும் ஸ்வரங்களைத் தெரியப்படுத்தும் சிக்ஷாஸ்மிருதியையும், ஸுசப்தாபசப்தங்களின் பேதத்தையும் அரிவிக்கும் வியாகரணமும் கண-யதி-ப்ராஸ-அக்ஷரலக்ஷணங்களை யரிவிக்கும் இருபத்தாறுபேதங்களோடு கூடிய சந்தஸ் சாஸ்திரமும், வர்ணகம-வர்ணலோப-வர்ணவியத்யாசங்களை நிச்சயிப்பதும், வேதோத்தவர்ணஸ்திரமங்களுக்கு நியதர்மாதிகளுக்கு காலநிர்ணயஞ் செய்துவரும் நிரக-நக்ஷத்திர-உதயஅஸ்தமயாதிகளை பிரிதிபாதிக்கும் ஜியோதிட சாஸ்திரத்தையும் ஆபஸ்தம்ப-ஆச்வலாயன-காத்யாயன-போதாயனியங்களென பேர்பெற்று, ஸ்ரௌத-ஸ்மார்த்த கிரியைகளில் வல்லமையுள்ளகற்பத்தை விசாரித்து, மீமாம்ச நியாயபுராண ஸ்மிருதிகளென்னும் உபாங்கங்களைசோதித்து, வியாதிஸ்தான-வியாதிலக்ஷணை-மணி-மந்திர-அவுடதங்களாலுண்டான சிகிச்சைகளால் ஆயுசாரோக்கியங்களை யரிவிக்கும் ஆயுள்வேதமும், பாகங்களில்தக்ஷிணையையும், சூஜ்ய-சரு-புரோடாசங்களென்னும் உபஹாரமுதலிய வைகளைத்தேடவும் தர்மாதி நான்குவர்க்கங்களும், ஸாதனமான அர்த்தவேதத்தையும், சத்துருக்களை வெல்லத்தக்க அஸ்திரபிரயோக மந்திராதிகளைக் காட்டும் தனுர்வேதமும், ஸாமவேதாதிகளில் ஸ-ரி-க-ம-ப-த-நி-என்னும் ஸப்தஸ்வரங்களையும், தீதாதிகளையும் போதிக்கும் காந்தர்வவேதமென்றுசொல்லப்படும் உபதேசங்களையும் சோதித்தனர்.

பின்புசதுர்க சவித்யைகளில் ஸ்ரேஷ்ட்டமானதாய் மீமாம்ஸசாஸ்திரமிருபது அத்தியாயங்களுடையதாய் பூர்வமீமாம்ச-உத்தாமீமாம்சங்களென விரண்டுபாகங்களுடையதாக விருக்கும். அதில்பூர்வமீமாம்ஸசாஸ்திரம் கர்மகாண்டத்தைப் பிரதிபாதித்துக் கொண்டுபதிரெண்டத்தியாயங்களுடையதாய் வேதவியாசசிஷ்யரான ஜைமினிமுனியால் செய்யப்பட்ட சூத்திரங்களுடையதாய், கர்மகர்த்ருப்பிரதிபாதகமாய் லோகவேதாதி கர்ணதிஸஹஸ்ராதி காரணங்கள் அடை

ந்திருக்கும். மேலும் ஜைமினிசூத்திரத்திற்கு சாபரமென்னும் பாஷியத்தையும், பட்டாசாரியரால் செய்யப்பட்ட வார்த்திக ரூபமான "பாட்டம்" என்று சொல்லப்படும் ஒருவேரு மதவிஷயமான சாஸ்திரமுமுண்டு. அன்றியுமந்த சாபர்பாஷ்யத்திற்கு பட்டாசாரி சீடனான "பிரபாகரனால்" விவாக்கியான ரூபகமாய் செய்யப்பட்ட "ப்ராபாகரீயம்" என்னுமதாந்தர கிரந்தமொன்றுண்டு. மேலும் உத்தர மீமாம்ஸம் தேவகாண்டம் பிரம்ஹகாண்டமென விரண்டுகாண்டங்களாக வியாசமுனிவரால் செய்யப்பட்ட சூத்திரங்களுடைய வைகளாய் பிரகாசிக்கும். அதில்தேவகாண்டம்நாலு அத்தியாயங்களுடையதாய் மந்தவாதமான தேவர்கள் முதலானவர்களால் பிரகாசிக்கும் பிரம்ஹகாண்டமுதல் நாலுஅத்தியாயங்களுடையதாய் பரபிரம்ஹத்தைப்பிரதிபாதிக்கும். இந்த பிரம்ஹகாண்டத்துக்கு ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரியரால் அத்தியாஸ பிரகரணம் முதலாகிய வேதாந்தபாஷ்யம் செய்யப்பட்டது. பிரகு இந்தசங்கரா சாரியருடைய சீடர்களானவிவரணு சாரியரால் இந்த இந்த பாஷ்யத்திற்கு அர்த்தரூபகமாய் விசதப்படுத்தப்பட்டு பின்பு வாசஸ்பதி, மிச்ரன் முதலிய கிலசீடர்களால் வ்ருத்தி, பஞ்சபாதிகை, அதிகாணரத்தின மாலிகை, ராமாநந்தகிரியம் முதலிய பலவியாக்கியானங்களையும், கௌஸ்துபமணிக்கு பொருளுஞ் செய்யப்பட்டது.

அன்றியும் பாரதம்-அநுசாஸ நீகபருவத்தில்.

தர்மம் ஜிக்ஞ்யாஸமானானம் ப்ரமாணம் ப்ரசமம் ச்ருதி:
த்விதீயம் தர்மசாஸ்த்ரந்து த்ருதீயம்லோகலங்க்ரஹ:

(இ-ள்) தருமத்தையரிய விரும்புவோர்க்குச் சுருதியானது முதலனவையாம், தருமசாஸ்திரமான ஸ்மிருதிகள் இரண்டாமன வையாம், சான்றோர் ஒழுக்கவழக்கமானது மூன்றுமனவையாம், (அளவை-பிரமாணம்) ஆதலால் வேதப்பொருளை யரிவதே முதல்தருமமாகக்கூறப்பட்டது.

"தருமம்" பதத்திற்கு தர்கசாஸ்திரத்தில்:

விஹிதக்ரியயாஸாத்ய: பும்ஸோதர் மோகுணமத:

(இ-ள்) விதிக்கப்பட்ட கருமத்தால் அடையத்தக்க புருஷனுடைய குணமேதருமமென்று சொல்லப்படும்.

மீமாம்ஸத்தில்.

சோதநாலக்ஷணோர்த்தோதர்ம:

(இ-ள்) வேதவாக்கியமே இலக்கணமாக வுடையது தருமமென்று சொல்லப்படும்.

பராசரஸ்மிருதியில்.

சுலோ:—கல்பே கல்பேஷ்வயோத்பத்யாப்ரம்ஹவிஷ்ணுமஹேச்சவாரச்ருதிஸ்மிருதி லமாச்சார நிர்ணேதாரச் சஸர்வதா.

(இ-ள்) கற்பங்கள் தோறும் தோற்ற ஒடுக்கங்களால் பிரம்ஹா விஷ்ணு, மஹேசுவரன் என்னும் மூவரும் எப்பொழுதும் சுருதி ஸ்மிருதிகளின் ஒத்த ஒழுக்கங்களை விதிப்பவர்களாகின்றார்கள்.

வேதத்திற்குக்கர்த்தா ஒருவருமில்லை என்பதற்கு

பராசரஸ்மிருதியில்.

சுலோ:—ஏகச்சித் வேதகர்த்தாச வேதம் சதுர்முகஃ தஸ்யவதர்மான் ஸ்மரதிமனு: கல்பாந்தரேந்தரே.

(இ-ள்) வேதத்திற்கு கர்த்தாவொருவருமில்லை, சதுர்முகப்பிரம்ஹன் வேதத்தைகேட்டு கற்பத்தின் (அந்தரார்ந்தரம்) இடைஇடையேமனுவாய் அவ்வாரே தருமங்களை நிகழ்க்கின்றான். அன்றியும்.

பராசரஸ்மிருதியில்.

சுலோ:—ஜக்ராஹபாதம் ருக்வேதாத்ஸாம் ப்ரோசிதமேவச யஜுர்வேதாதபி நயம் ஸாமான்யாதர்வணாதபி.

(இ-ள்) இருக்வேதத்தினின்றும் காலால் நடித்தல் விகற்பமும், ஸாமவேதத்தில் ஸாமத்தில் நின்றும் இசைவிகற்பமும், யஜுர்வேதத்தினின்றும் அவிநயவிகற்பமும், அதர்வணவேதத்தினின்றும் இவற்றினெழியும் பொதுவுமாகிய சுருதி, லயை, ஸ்தாயி, தானம், பாவம் முதலியனவும் கொள்ளப்பட்டன. ("பாவம்" என்பதுகருத்து)

ஸ்வாத்யாய லக்ஷணம்

ஸ்வாத்யாயம்-வேதமூலமந்திரபாடம்.

ஸ்வாத்யாயம் வாசகமென்னும், உபாம்சு வென்னும், மாநசிகமென்றும் மூன்றுவிதங்கள். அதில் அன்னியன் கேட்க்கும்படி படிப்பது வாசகம், அன்னியனுக்குக் கேளாமல் படிப்பது உபாம்சு, ஒவ்வொரு அக்ஷரமும் விர்னமாய் மனதிலேயே ஜபித்தல் மானசிகமென்று சொல்லப்படும்.

ஆதிகாலத்தில் வேதமொன்றுக விருந்ததாயும், பிறகு அவ்வேதம் நான்கு சாகைகளாகப் பிரிந்ததாயும் புராணபிரசித்தி.

விஷ்ணுபுராணம், திருதியாம்சை, சதுர்த்தாத்தியம் பராசார்.

சுலோ:—ஆத்யோவேதச் சதுஷ்பாத: க்ருதஸ் ஸாஹஸ்ரஸம் மித: ததோத்சகுண: க்ருத்ஸ் நோயகஞ் யோயம் ஸர்வகாமதுக் ததோத்ரமத் ஸுதோவ்யாஸோஹ யஷ்டாவிம்சதி மந்தரே! வேத மேகம் சதுஷ்பாதம் சதுர்த்தாவ்ய பஜத்ப்ரபு: !!

(இ-ள்) ஆதியில் வேதமொன்றுக இருந்ததை பிறகு பராசர்புத்திரரான வியாசர் நாலுபாதங்கள் அல்லது சாகைகளும், ஆயிரம்சம் மிதைகளும் மாகச்செய்தனர்.

வாயுபுராணத்தில்.

சுலோ:—அஸ்மின்யுகேக்ருதோவ்யாஸ: பாராசர்ய: பரம்தப: ப்ரஹ்மணுசோதி தஸ்ஸோஸ்மின் வேதமவ்யஸ்தம் ப்ரசக்ரமே அத சிஷ்யான்ஸஜக்ராஹ சதுரோவேதகாரணுத் ஜைமினிஞ்சஸுமந்துஞ் சவைசம்பாயனமே வசபைலம் தேஷாம் சதுர்த்தந்து பஞ்சமம்ரோ மஹர்ஷணம்.

பாகவதம், துவாதசஸ்கந்தம், ஷஷ்ட்டாத்தியாயம்.

சுலோ:—பராசரத்ஸத்ய வத்யாமம் சாம்சகலயாவிபு: அவதீர் ணோமஹாபாகோ வேதம்சக்ரே சதுர்விதத் ருகதர்வ யஜுஸ்வாம் னும்ரா சிநுத் த்ருத்யவர் கச: சதஸ்ரஸ்ஸம் ஹிதாச்சக்ரே ஸுத்ரே மணிகண நிவதாஸாம்ஸசதுரச் சிஷ்யாநுப ஹுயமஹாமதி: ஏகை காம்ஸம் ஹிதாம் ப்ரஹ்மக்நேகை கஸ்மைததளவிபு: பைலாயஸம ஹிதாமாத்யாம் பஹ்வ்ருசாக் க்யாமுவாசஹ வைசம்பாயனஸம் க்ஞ்யாய நிகதாக்கியம் யஜுர்காணம்ஸாம்காம் ஜைமினயே ப்ராஹ ததாச்சந்தோக ஸம்ஹிதாம் அதர்வாங்கிரஸம் நாமஸ் வசிஷ்யாய ஸுமந்தவே.

சுக்கில யஜுர்வேத மஹ்தரபாஷியத்தில், பக்கம். (க)

ஸ்மிருதி:—தாத்ரா தெளப்ரம்ஹபரம்பர யாப்ராப்தம் வேதம் வேதவ்யாஸோமந்த மதீன்மதுஷ்யான் விசிந்த்யதத்க்குபயா சதுர்த் தாப்யஸ்யநக் யஜுர்ஸ்ஸாமாதர் வாக்க்யாம் சதுர்வேதான் பைல வைசம்பாயன கைமினிஸுமந்துப்பய: க்ரமாது பதேசிதேசஸ்வசி ஷ்யேப்ய: ஏவம்பரம்பரயாஸஹஸ்ர சாசோபவேதோ ஜாதஃ தத்ரவ் யாசசிஷ்யோ வைசம்பாயனேயா க்ஞ்யவல்காதிப்ய: ஸ்வசிஷ்யேப் யோ யஜுர்வேத மத்யாபயத்.

கிருஷ்ணயர்வேத பாஷியத்தில் பட்டபாஸ்கர்.

பூர்வம்பகவதாவ்யாஸேன ஜகதுபகாரார்த்தம் ஏகிபூதஸ்த்திதா வேதா: வ்யஸ்தா: சாகாச்ச பரிச்சின்ன: தத்ரவைசம்பாயனம் நாம ஸ்வசிஷ்யம் யஜுர்சாகானுமாதிபத்யே நியுயோஜ ஸைவம் பாடம் யஸ்காய, யச்சச்சதித்திரயே, ஸோபிச உகாயச, உகச்சாத்ரேயாயத தென, யேனபதவி பாகச்சக்ரே அதச்சேயம் சாகா ஆத்ரேயீத்யுச் யதே.

சரணவியுஹத்தின்வியாக்கியானத்தில் எந்தஎந்தவேதம்

எந்தெந்த இடத்தில் வியாபித்திருக்கின்றதோ, அதுவிஷயம்,

சுலோகம்:—ஆந்த்ராதி தக்ஷிணக்ஞ்யேயிகோதாஸாகர ஆவதீ யர்வேதஸ்த்து தைத்திர்ய: ஆபஸ்தம்போ ப்ரதிஷ்ட்டிதா ஸஹ்யா த்ரிபர்வத ராமபாத்திசாம் கைர்ருத்ய ஸாகராத்ஹிரண்ய கேசீச காசபரசுராமஸ்ய ஸந்நிதென அங்கவங்க களிங்காச்ச காஸீநோ கூர் ஜரஸ்த்ததா வாகஸநீய சாகாசமாத்யந்தினீ ப்ரதிஷ்ட்டிதா ருக்ஷ்ணு யாக்ஞ்யவல்கேனஸர்வ தேசேஷு விஸ்த்ருதா வாஜஸநீய தேவஸ்ய ப்ரதமாகாண்ட ஸம்கஞ்யகா.

வேதங்கள் நாலுஎன்பதற்கு

கைவலிய நவநீதத்தில்,

பரபிரஹமத்தை யரிவிக்கும் வைகளாய், பரபிரஹ்மத்திலுண் டான வைகளாய் பிரகாசிக்கும் நாலுவேதங்களில் இருக்வேதத்தில் "ப்ரக்ஞ்யானம் ப்ரஹ்மா" வென்ற மஹாவாக்கியமும் யஜுர்வேதத்தில் "அஹம் ப்ரஹ்மாஸ்மி" என்ற அனுபவ மஹாவா க்யமும், ஸாமவேதத்தில் "தத்வமஸி" என்னும் உபதேசமஹாவா க்யமும், அதர்வணவேதத்தில் "அயமாத்மா ப்ரஹ்மா" வென்றஸமா ப்தி என்னும் மஹாவாக்யமுமாய் நான்கு மஹாவாக்யங்கள் உண்டு இந்நான்கு மகாவாக்யங்களே நான்குவேதங்கள். அவ்வேதங்களை ஆதாரப்படுத்திக்கொண்டு இவ்வாக்யார்த்தங்களை விசாரிக்கும் மோ க்ஷார்த்திகளுக்கு சித்தசுத்தியடைய கர்மகாண்டத்தையும், குருவி னிடத்திலும் க்ஞ்யானசாஸ்திரங்களிலும் நம்பிக்கை யுண்டாவதற்கு பக்த்திகாண்டமும், ப்ரஹ்மஸாக்ஷாத் காரத்தைப் பொருட்டுக்ஞ்யா னகாண்டமுமென மூன்று காண்டங்கள் ஒவ்வொரு வேதத்திற்குமு ண்டான நாலுவேதங்களும் பிரத்யேகங்களாய் விசதப் படுத்தப் பட்டன.

வேதங்கள் நாலாக விராமல் பலவையாகவாவது, ஒன்றாகவாவது இருக்கக்கூடாதா வென்றாலோ ஒருவாக்யத்தினாலேயே வேத புருஷன் மஹாவாக்கியம் முற்றும் முடிவாகாததினால் முன் இருக்வேதத்தில் "ப்ரக்ஞ்யானம் ப்ரஹ்மா" வென்னும் ஸாகூஷாத்கார மகாவாக்யத்தை நிரூபித்து அதனாலனுபவம் பெறுததினால் யர்வேதவாக்யமாகிய "அஹம்ப்ரஹ்மாஸ்மி" என்னும் மகாவாக்கியத்தினால் அனுபவத்தைக்காட்டிற்று. அவ்வர்த்தத்தை நன்றாய் காணூன்றாவதான சாமவேதத்தில் "தத்வமஸி" என்னும் மஹாவாக்யத்தால் உபதேச கிரமத்தைக் காட்டிற்று. அதுவே முடிவென்று ஸம்பூரணமடைய அதர்வணவேதத்தில் "அயமாத்மாப்ரஹ்மா" வென்றமஹாவாக்யம் பிரந்தன ஆதலால் வேதங்கள் அனேகங்களாகாமல் நான்கேயாயின.

"ப்ரக்ஞ்யானம் பிரஹ்மா" வென்னும் இருக்வேதத்தில் ஸாகூஷாத்கார மஹாவாக்யத்திற்கு பொருள்: இவ்வாக்யத்திலும் "ப்ரக்ஞ்யானம், ப்ரஹ்மா" வென்றிரண்டு பதங்களுண்டு, அதில்ப்ரஞ்யானசப்தத்திற்கு-சுலோ:—"ஏநேகூஷேத ச்ருணோதீதம் ஜிக்ராதீவாக ரோதிச ஸ்வாத்வஸ்வாது விஜாநாதித்த ப்ரக்ஞ்யாலா மிதீர்யதே" ஸ்வாதிஷ்ட்டான சிதாபாஸனை ஜீவன்கண்களினின்று பிரந்த அந்த: கரண விருத்தியுடன் கூடி அக்ஞ்யானத்தினால் கருப்பு வெளுப்பு முதலிய வைகளாயிகின்றனை, செவிகளினின்று பிரந்த அந்தக்கரண விருத்தியோடுங் கூடிய எந்தக்ஞ்யானத்தினால் சகலசப்தங்களைக் கேழ்க்கின்றனை, கிராணேந்திரியத்திலிருந் துர்பத்தியான அந்த: கரணவிருத்தியோடுங் கூடிய எந்தக்ஞ்யானத்தால் பேசுகின்றனை, நாவினற்பிரந்த அந்த: கரணவிருத்தியோடுங் கூடிய எந்தக்ஞ்யானத்தால் உப்புபுளிப்பு துவர்காரம் கசப்புமுதலியவையரிகின்றனை, மேலும். வாய்கைமுதலிய சகலேந்திரியங்களினின்று பிரந்த அந்த: கரணவிருத்தியுடன் கூடி உள்ளும் வெளியிலுமிருக்கு மெல்லாவிஷயங்களு மரிகின்றனை அந்தக்ஞ்யானமே ப்ரக்ஞ்யான பதப் பொருளாம்.

ப்ரஹ்ம" பதத்தின்பொருள்:—சுலோ-சதுர்முகேந்த்ரதே வேஷுமனு ஜாச்வகஜாதிஷு சைதன்யமேகம் ப்ரம்ஹாத்மா ப்ரக்ஞ்யானம் ப்ரஹ்மமேத்யபி. பொருள்:—சதுர்முகன் முதலிய தேவர்களிலும், மரிதரிலும், ஆனை, குதிரை முதலியவைகளிலும் சலந்து

எந்த சைதன்யமுண்டோ அந்த சைதன்யமே ப்ரஹமென்னும் பதத் தின் லக்ஷ்யார்த்தம், ப்ரஹ்மபதத்திற்கு பிரம்மாமுதல் தன்சரீரபரிய ந்தம் யாவச்சரீரங்களும் வாச்சார்த்தமாதலால் மாயாகாரியமென்று தன்னப்பட்டது. எல்லாவற்றிலு நிரைந்திருக்கும் பிரக்ஞ்யான மென்னும் சைதனியமதுவே பிரஹஸ்வரூபம். சைதனியமென்றும், பிர க்ஞ்யானமென்னும், பிரம்ஹமென்றும், ஆத்மாவென்றும் பெயர்கள் மாத்திரமே வேரொழிய முக்கியமான பொருளொன்றே. ஆதலால் நானே பிரம்ஹ்மமென்று நிச்சயித்துக் கொள்ளவும். இதுவே பிரம க்ஞ்யானம், பிரம்ஹஸ்வரூபமென்று வாக்யார்த்தமாம்.

"அஹம் ப்ரம்ஹாஸ்மி என்னும் யஜுர் வேதத்தின் அனுபவ மஹாவாக்கியத்திற்குப் பொருள்:—சுலோ—பரிபூரண பராதாஸ்மி ன்தேஹே வித்யாதிகாரிணு புத்தேஸ்ஸாக்ஷிதயாஸ்திக் வாஸ்புரன்ன ஹம்தீர்யதே.

(இ-ள்) எங்கும்பரிபூரணமான பரமாத்மா பிரஹ்ம வித்யைக்கு யோக்கியமான எந்த சரீரத்தில் புத்திக்கி ஸாக்ஷியாக விருந்துக்கொ ண்டிருக்கும் "அஹம்" என்னும்பதம் இலக்ஷணவிருத்தியால் சொல் லத்தகும் என்றுல் அஹமென்று சொல்லும்போது சைதனியமான தநிர்விகாரமாயி விட்டதாதலால் அஹம் எனத் தகாது அஹங்கார ம்ஜடமாகையால் அஹமென்றதோன்று. பரமாத்ம ஸ்வரூபமாகிய சைதனியமே அஹங்காரத்தோடுகூடி அஹமென விசதப்படுகின்றது. ஆதலால் ஜடமான அஹங்காரத்தை விட்டு சைதனிய மாத்திரமே அஹமென்னும் பதத்திற்கு பொருளென்றறிக.

"பிரம்மம்" என்னும் பதத்தின்பொருள்:—ஸ்வத: பூரணபரா த்மாத்ர ப்ரஹ்மசப்தே விநிர்மித: அஸ்மீத்யைக்ய பராம்ருச்சய தே னப்ரஹ்மாதாம்யஹம். தனக்குத் தானுய் பரிபூரணமாய் நிரைந்த பரமாத்மா இம்மஹாவாக்யங்களில் பிரம்மம் என்னும் பதத்திற்கு யார்த்தம், எக்காரணத்தைப்பற்றி எங்கும் நிரைந்த ஆத்மா பரபிரம் மமோ அக்காரணத்தினுலேயே புத்திக்கி ஸாக்ஷியாக விருக்கும் நா னே பரபிரம்மமானே னென்று அஸ்மின் என்னும் பதத்தினுல் ஜக் கிய பாவத்தை பிரதிபாதிக்கின்ற தாகையால் நாமும் அவ்வாரே புத் திக்கி சாக்ஷியாகவிருப்பதால் தானே பரபிரம்மமென்று நிச்சயித்து க்கொள்ளத்தக்கது.

ஸாம வேதத்தில் உபதேச மஹாவாக்கியமான "தத்வமஸி" என்பதில் தத் த்வம் அஸியென்று மூன்றுபதங்களுண்டு. இதில் அதுவென்னும் தத்பதத்திற்கு வாச்சியார்த்த மென்னும் லக்ஷ்யார்த்த மென்னுமிரண்டு பொருள்களுண்டு. அதில் வாச்சியார்த்த மென்றால் மூலாவித்யாஸ்வரூபமாகிய மாயையில் பரபிரம்மச்சாயா பிரதிபிம்பித்தலுய் ஈசுவரனும், அவைகளின் ஸ்தூல சூக்ஷ்மகாரண சரீரங்களும், ஜாக்கிரதை ஸ்வப்னம், ஸுஷுப்தி அவஸ்தைகளும், அவ்வவஸ்த்தைகளின் அன்னமய, பிராணமய, மநோமய, விக்ஞ்யானமய, ஆநந்தமய கோசங்களும், அக்கோசங்களில் அபிமானமுடைய விராட்புருஷன் ஹிரண்யகர்பன், அவ்யாக்ருதன் என்னும் பேர்களும், ஸர்வக்ஞத்வாதி குணங்களுடன் கூடிதத்பதத்திற்கு வாச்சியார்த்த மாம் இவைகளுக் கெல்லாம் விலக்ஷணமாய் ஸத்ய க்ஞ்யானாநந்த நித்ய நிர்மலத்வங்களுடைய பரமாத்மா "தத்" பதத்தின் லக்ஷ்யார்த்தமாம்.

நீ. என்னும் அர்த்தமுடைய "த்வம்" பதத்திற்கு வாச்சியார்த்தமென்றும், லக்ஷ்யார்த்தமென்று மிரண்டுளன. அதில்வாச்யார்த்த மென்றால் மூலாவித்யாஸ்வரூபமான அவித்யையில் பிரதிபிம்பித்த பிரம்மச்சாயாஸ்வரூபனான ஜீவனும், அவனஸ்தூல ஸூக்ஷ்ம காரணசரீரங்களும், அச்சரீரங்களில் உண்டாகிய ஜாக்ரதை, ஸுஷுப்தி, ஸ்வபனமெனும் அவஸ்த்தைகளும், அவ்வவஸ்த்தைகளுக்குரிய அன்னமய, ப்ராணமய, மநோமய, விக்ஞ்யானமய, ஆநந்தமய கோசங்களும், அக்கோசங்களில் அபிமானமுடைய விச்வ, தைஜஸ, ப்ராக்ஞ்ய நாமங்களும், கொஞ்சம் க்ஞ்யானகுணங்களுங் கூடி த்வம்பதத்தின் வாச்யார்த்தமாம். இவைகளுக் கெல்லாம் விலக்ஷணனான "ப்ரத்யகாத்மா" லக்ஷ்யார்த்தமாம்.

"அயமாத்மா பிரம்ஹ" வென்ற அதர்வணவேதத்தின் ஸம்பூரணமஹாவாக்கியத்திற்குப் பொருள்:—இவ்வாக்யத்தில் அயம், ஆத்மா, ப்ரஹ்மாவென்னு மூன்றுபதங்களுள்ளன. அதில் அயம் என்னும்பதத்திற்குப் பொருள்:—சுலோ-ஸ்வப் காசாபரோக்ஷத்வம் அயத்மித்யுக்த்திதோமதம் அஹங்காராதி தேஹாந்தாத் ப்ரத்யகாத்மேதி கீயதே. அயமெனும் பதத்தால் ஸ்வவசமாய் நித்யாப ரோக்ஷமாய் இருப்பது இவ்வாத்மாவே வெனச்சொல்லப் படுகின்றன. அஹங்காரமுதல் ஸ்தூல திரேகம்வரையில் என் அஹங்காரம், என்திரேகம் யென்றியும் சைதன்யமே ப்ரத்தீயகாத்ம ஸ்வரூபம். இதர்க்குப் பார்க்கப்பெற்ற சமஸ்தமும் ப்ரஹ்மாவென்னும் சப்தத்தினால் கூரப்பட்ட லக்ஷ்யார்த்தமாம் ஜகத்திஷ்டானமான பிரமமமே ஸ்வப்ரகாசமான ஆத்மா. அந்த ஆத்மஸ்வரூபமேதான். இம்மாரு நான்கு மஹாவாக்கியங்களிலும் "நீயே ப்ரஹமம்" ப்ரஹமமே நீ" வென்று பிரதிபாதிக்கின்றன.

அன்றியும் மஹாவாக்யத்தில்:—ஜீவனுக்கும் ஈசுவரனுக்கும் சரீரங்களும் குணங்களும் வேருபட்டிருப்பதால் ஒன்று படாமல் ஜீவஸாக்ஷியான "த்வம்" பதத்தின் லக்ஷ்யார்த்தமா ப்ரத்யகாத்மாவிற்கும், ஈச்வரஸாக்ஷியான "தத்" பதலக்ஷ்யார்த்தமான பரமாத்மாவிற்கும் ஸச்சிதாநந்த நித்ய நிர்மலத்வங்களென்று ஐந்து லக்ஷணங்களும் ஸமமுடையதா யிருப்பதால் ஐக்யமுண்டாயிற் றென்று முக்கியாபிப் ராயம்.

வேதங்கள் கருமகாண்டம், உபாசனகாண்டம், க்ஞ்யானகாண்டமென மூன்றுகாண்டங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

கருமகாண்டம், இந்திரன், ஆகாயம், அக்னி, சூரியன், சந்திரன் அப்பு, வாயு, அசரீரிகள், பரமாணுக்கள், பிருதிவி, உருத்திரர், வஸுக்கள், அசுவனிதேவர் முதலியதேவர்களையும், அவர்களுக்கோக்கிச் செய்யப்படும் பற்பலயாகங்கள், லோமபானம்முதலிய அநேக சமயாசார சடங்குகளையும், ஸ்தோத்திரங்களையும், மந்திரங்களையும் இவைகளாலுண்டாகும் பலன்களையும் அரிவிக்கின்றது.

உபாசனகாண்டம் மேற்கூரிய தேவர்களை கெனப்படுத்திச் செய்யும் உபாசனத்தைப்பற்றிச் சொல்லுகின்றது.

க்ஞ்யானகாண்டமான து ஸர்வபரிபூரண ஸச்சிதாநந்தனுய், ஆதிமத்தியாந்த ரஹிதமாய், ஸகலபுவன ஸ்தாவரஜங்கம ப்பிரபஞ்சத்திற்கு ஆதார மகாபூதமாய் இருக்கும் சிரேஷ்ட்டமான பொருளொன்றே என்னும் வாஸ்த்தவமான க்ஞ்யானத்தை ஸ்பஷ்ட்டமாய் தெளிவிக்கிறது.

மேற்சொன்ன மூன்றுகாண்டங்களை (காண்டம் - அத்தியாயம், ஸ்வர்கம், பருவம், சாகை, எனவும் சொல்லப்படும்) வேதத்தில் ஏர்ப்பாடு செய்திருப்பதைப்பற்றி யோசிக்குமளவில் ஒருவனுக்குத் தேவபக்தியுண்டாகும் வரையில் யாகமுதலிய கருமங்கள் செய்யவேண்டுமென்றும், உண்மையான க்ஞ்யானம் சித்தியாகும் வரையில்பக்தி அல்லது உபாசனமார்க்கத்தில் மனதை திடமாக நிருத்தவேண்டுமென்றும், நிச்சயமான க்ஞ்யான முண்டான பின்பு கருமோபாசனங்களிரண்டும் தனக்குத் தானுகவே நீங்கிப்போமென்றும் யோசிக்கப்படும். வேதத்தில்கண்டிருக்கும் அனுஷ்ட்டானத்திற்கும், இக்காலத்திலுண்டான ஆசாரத்திற்கும் அனேகவிஷயங்களைப்பற்றி யோசிக்குமளவில் பற்பலபேதங்களாக விருக்கின்றன.

வேதானுஷ்ட்டானமாவது வேதத்தில் சொல்லிய விதிப்படிக்கி ஆசரித்து நித்தியோபாசனமாக ஹோமாக்கினியை யுண்டாக்கி அந்த அக்னிக்கு அன்னம், ஆஜியம் முதலியவைகளை ஆகுதிசெய்து அக்னி, ஆகாயம், வாய்வு, சந்திரன், சூரியன், இருதுக்கள்முதலிய தேவதைகளுக்கு திருப்த்திசெய்து இந்த தேவதைகளை வேதமூல புருஷனை பரப்பிரம்ஹஸ்வரூபங்களாக நினைத்து பிரார்த்திப்பதேயாம்.

மேற்சொல்லிய தேவதைகளைப் பிரார்திப்ப தேனெனில் புருஷ சூக்த்தத்தில் சந்த்ரமாமன ஸோஜாதச் சக்ஷுஸ் ஸூர்யோ அஜாயத முகாதிந்த்ரச் சாக்னிச்ச, ப்ராணாத்வாயு ரஜாயத, நாப்ய ஆஸீதந்தரிக்ஷம், சீர்ஷ்ணேத் யெனஸ்ஸமவர்த்தத, பத்ப்யாம்பூமிர்திசச் ச்ரோத்ரார்த, ததாலோகாகும் அகல்பயன். என்று கூறப்பட்டிருப்பதாலும், ப்ருதிவ்யாபஸ்தே ஜோவாயுராகாசாத் என்றுபரப்பிரம்ஹத்தை பஞ்சபூதாத்மிகமாகப் பிரதிபாதிக்கப் பட்டிருப்பதாலும் மேற்சொன்னதேவதைகளை பிரார்த்திக்கவேண்டு மென்பது திண்ணம்.

வேதங்கள் இருக்கு, யஜுஸ்வு, ஸாமம், அதர்வணம் என்று நாலுபாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் அதர்வண வேதம் சாதாரணமாய் மந்திரங்களைப்பற்றி விசேஷம் அரிவிக்கிறதென்றும், இதிஹாஸ புராணங்கள் உபவேதம் அல்லது ஐந்தாம் வேதமென்றும் சொல்லப்படும்.

ஒவ்வொருவேதமும் மந்திரம், பிராம்ஹணம் அல்லது ஸ்தோத்திரங்கள், விதிகள் என்னும் பெயருள்ளவிரண்டு பாகங்களாக விருக்கின்றன. வேதத்தைச் சேர்ந்த கீதங்கள், பிரார்த்தனைகள் ஸ்தோத்திரங்களுமாய்ச் சேர்ந்து சங்கீதமென மூழுப்பெயர் வைக்கப்பட்டது. வேதத்தின் மற்றபாகங்கள் பிராம்ஹணங்க ளென்றுச் சொல்லப்படும். இதில்வைதிக அனுஷ்ட்டானங்களையும் வேதத்தை யனுசரித்த தர்க்கங்களைக் கற்பிக்கும் விதிகளை போதிக்கிறது. ஆனால் வேதங்களின் தற்காலகோட் பாட்டில் பிராம்ஹணங்களென்றுச் சொல்லப்பட்ட வாக்கியங்களடங்கிய பாகத்தில் ஸ்தோத்திரங்களும் மந்திரங்களும் அடங்கி இருக்கின்றன. வேத க்ஞ்யான நூலில் வேதாந்தமென்றுச் சொல்லப்படுகிற கியாயபாகமும் அடங்கிபிருக்கின்றது. உபநிஷத்துக ளென்னும் சிறுகிரந்தங்களும் அடங்கி இருக்கின்றன அவைகளில் சிலது பிராஹ்மணத்தின் பாகங்களாக விருக்கின்றன. மற்றவைகள் புறம்பாகவும் சிலசங்கீதபாகங்களாகவும் காணப்படும்.

இருக்குவேதமும், யஜுர்வேதமும் பதம், கிரமம், ஜடை, கனம்முதலிய வழிகளாலும் அத்தியனஞ் செய்யலாம். சாமவேதம் கீதங்களுக்காகவே பிரதிகள் ஏற்படுத்தப் படுகின்றன. இருக்கு, யஜுர் வேதங்கள்போல் இந்த வேதத்தின் வசனங்களுக்கு முன்னும் பின்னுமான திருப்புதலை இல்லை.

சிந்துதேசத்துச் சாஸ்திரங்களுக்குச் சமுதாயப்பெயர்,

அஷ்டாதசவித்தையென்பதேயாம்.

அஃதாவது.

பதினெட்டுவிதசாஸ்திரங்கள். அவற்றின்பெயரும்முறையும் தொகையும்வருமாறு.

சதுர்வேதங்கள்.....	4
* சடங்கம்.....	6
மீமாஞ்சை, நியாயசாஸ்திரம்....	2
தர்மசாஸ்திரம்.....	1
புராணங்கள்.....	1
ஆயுர்வேதம்.....	1
தனுர்வேதம்.....	1
காந்தர்வவேதம்.....	1
அர்த்தசாஸ்திரம்.....	1

என்பவையாம்.

வேதங்கள்.

மீமாஞ்சை சாஸ்திரத்தை அநுசரிக்கப் பட்டவர்கள், வேதங்கள் சிருஷ்டிக்குட்பட்டன அல்லவென்றும், அநாதியென்றும், ஆகி

---

* சடங்கமாவது, சிக்ஷாசாஸ்திரம், கல்பசாஸ்திரம், வியாகரண சாஸ்திரம், நிருத்தசாஸ்திரம் சோதிடசாஸ்திரம், ஸ்மிருதிசாஸ்திரம். மீமாஞ்சைசாஸ்திரத்தில் வேதாந்தசாஸ்திரமடங்கியிருக்கின்றது. ஆம்-சிலகாலங்களில் வேதங்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன வென்றும், மற்றகாலங்களில் மறைக்கப் பட்டிருந்தன வென்றும் சொல்லுகிறார்கள். நியாயசாஸ்திரம், வேதாந்தசாஸ்திரம், இன்னு மற்றசாஸ்திரங்களுக் குரியவர்கள் கடவுள், வேதங்களைச் சிருஷ்டித்

தாரென்று சொல்லுகிறார்கள். ஆயினும் அந்தவேதங்களி னுடைய பொருள் நித்தியத்தினின்று உண்டானதா யிருக்கிறதென்பர். வே தாந்தசாஸ்திரத்தில், தவறுதலில்லாதவராயும், யாதொன்றினும் கவ னஞ்செலுத்த வேண்டியவ ரல்லாதவராயும், குணகுணங்களுக்குட் படாதவராயும், கள்ளமாயங்களினின்று நீங்கினவராயுமிருக்கிற கட வுளுடையவாக்கிலிருந்து புறப்பட்ட தற்பூரணமொழியே வேதங்க ளெனச் சொல்லியிருக்கிறது. பண்டிதர்கள், ஒருகாலத்தில் கடவுள், வேதங்களைப் பிர்மாவுக்குபதேசஞ் செய்தாரென்றும், பிர்மா அவை களை மூனிசனுக்குப் போதித்தாரென்றும், முனிவர்கள், அவைகளை த்தங்களுடைய சீடருக்குக் கற்பித்தார்களென்றும் சொல்லுகிறார் கள். இவ்வண்ணமாக வேதங்கள் உலகத்தில் தெரியவந்தன. ஆகிலு ம்இதன்பின்பு சங்கனென்னும் பெயருடைய ஒரு அசுரன் வேதங் களைத் திருடிக்கொண்டு பாதாளத்தில்போய்ச் சேர்ந்தான். கடவுள் மச்சாவதாரமெடுத்து வேதங்களை மீட்டுக்கொண்டுவந்து மூனிசனுக் குக்கொடுத்து, சமுத்திரத்தில் எவையெவை அழிக்கப் பட்டிருக்கின் றனவோ அவைகளை எல்லாம் மீட்டளிக்கவேண்டு மெனவும், எவை யெவை துர்பலமானவைகளா யிருக்கின்றனவோ அவைகளைத் தெ ரிவிக்க வேண்டுமெனவும், ஆக்கியாபித்தார். கடவுளது ஆக்கினையி னால் வேதங்களில் சிலபாகங்கள் முனிகளாற் செய்யப்பட்டவைகளா கஇருக்கின்றன. ஒருமுனியாகிய வேதவியாசர் வேதத்தைப் பிரத்தி யேக பாகங்களாக்கிச் சாமவேதம், ருக்குவேதம், யஜுர்வேதம், அதர்வணவேதம், எனநான்கு பாக்களாக்கினர்.

வேதங்களின் முதற்காண்டம் கர்மகாண்டமென்று சொல்லப் படுகின்றது. இந்தக்காண்டம் கர்மானுஷ்டானங்கள் செய்கிறவிதங் களின் முறைமையும், அஸ்வமேதமுதலாகிய கிரியைகள் செய்வதி னால் பரத்திலுண்டாகு மின்பங்களையும், சொல்லுகின்றது. இரண்டா வதுகாண்டம் உபாசனமென்று சொல்லப்படுகிற சுவாமியின் ஆரா தனைசெய்ய வேண்டிய விதங்களை விதிக்கின்றது. மூன்றாவது காண் டம் வேதாந்தங்களைச் சொல்லுகின்றது. அது கடவுளை இரண்டுவித ங்களாகத் தெரிவிக்கின்றது. முதலாவது, சருவஜ்ஞத்துவம், சருவே ச்சுரத்துவம், உடையவரா யிருக்கிறபடியால் குணங்களை யுடையவ ராயிருக்கிறார். இரண்டாது, நித்தியானந்தமயமும், குணரகிதமயமும் இருக்கிறதென்பதேயாம். இவ்விதமாக வேதம் மூன்றுவிஷயங்களை க்குறித்து விளக்குவதாகச் சொல்லப்படுகின்றது.

அவையாவன.

முதல்வது-கர்மானுஷ்டானங்களைக் குறித்துச் சொல்லுகின்றது. இரண்டாவது-கடவுளுடைய உபாசனத்தைக் குறித்துச் சொல்லுகிறது. அதனால் கடவுள், உபாசனமென்னும் ஆராதனை செய்கிறவனுக்கு ஆதீனனாகிறானென்பது. மூன்றாவது-தத்துவக் கியானம் அல்லது பிரமக்கியானம் என்று சொல்லப்படுகிற கடவுளது உண்மைக்கியானத்தைக் குறித்துச் சொல்லுகின்றது. என்பவையாம். இவையும், இதனால் வேதம் இந்த மூன்றுகாண்டங்களாப் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாகவே நினைக்கப்பட வொண்ணாது ஆகிலும் இந்த விஷயங்கள் வேதங்களில் காணப்படுகின்றன. ஆகையால் கர்மங்களை விளக்குவது கர்மகாண்டமெனவும் தியானம், பக்திமுதலாகிய வைகளை விளக்குவது உபாசனகாண்டமெனவும், பிரமஞானத்தை விளக்குவது ஞானகாண்டமெனவும், சொல்லப்படும்.

வேதம் வெளிப்பட்ட விதம்.

1. வேதம்வெளியரங்கமாக விருந்ததோ அல்லது அவைகளின் பாகங்கள் இன்னும் காப்பற்றப் பட்டிருக்கின்றனவோ மற்றவிஷயங்களிற் கற்றவனாயிருக்கிற யாவனொருவன் அவைகளின் பழமையாகிய பாஷையைக்கண்டு பிடிக்கக்கூடுமோ கூடாதோ என்பவற்றைக் குறித்துச் சந்தேகப்பட விருந்தது. ஒரு பிராமணன் உண்மையாய் வேதாத்தியயனஞ் செய்திருப்பானாகில், அவன் தன் மதக்கோட்பாட்டினுடைய கொள்கையின்படி இருபிறப்பாளருக்கேயன்றி மற்ற ஒருவனுக்கு வேதக்கியானத்தைப் போதிப்பதினின்று தடுக்கப்படுகிறான். வேதங்கள் தாராஷ்கோ வென்பவனுக்குப் போதிக்கப்பட்டவெகுகாலத்துக்குப் பின்பும், இந்த வபிப்பிராயங்கள் வழக்கமான கதைகளால் உறுதிப்படுத்திக்கொண்டே வந்தன. வேதங்களிற்பாதி பாகம் தாராஷ்கோவினால் பாரிசுபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டது. கர்னல்போலியர் என்பவர் ஜயபுரத்தில் வேதங்களைப் பூரணமாய்க் கையாலெழுதப்பட்ட பிரதியைச் சம்பாதித்துப் பிரிட்டிஷ் துரைத்தனத்தாருடைய கண்காட்சிச் சபையில்வைக்கிற பரியந்தம், மேற்படி சந்தேகங்கள் நிவர்த்தியாகவில்லை. அக்காலத்திலே தானே சர்ராபர்ட் சேம்பாஸ் என்பவர் காசியில் வேதங்களின் அநந்த

பாகங்களைச் சேர்மானஞ் செய்தார். ஜெனரல்-மார்ட்டின் என்பவர். பின்னகாலத்தில், வேதத்தின் சிலபாகபிரதிகளைச் சம்பாதித்தார் சர்உல்லியம் ஜோன்ஸ் என்பவர் வேதங்களின் அருமையான பாகங்களைச் சம்பாதிப்பதிலும், அவைகளிலொன்றி லிருந்து அநேகவிசேஷமான வாக்கியங்களை மொழிபெயர்ப்பதிலும், வெற்றி பெற்றார். காசியில் இந்தச் சிறப்புப்பொருந்திய வேதங்களில் பெரியபாகங்களுக்கு மூலவாக்கியங்களும், வியாக்கியானமும் மேஸ்டர் கோல்புருக் என்பவர் விசேஷமாய்ச் சம்பாதித்தார். அவைகளில் என்னவிஷயங்கள் அடங்கியிருக்கின்றனவோ அவைகளின்சுருக்கமானவிவரம் இதனடியில் எழுதப்படுன்றன.

2. இருக்கு, யஜுர், சாமம் என்று சொல்லப்பட்ட வைகள் வேதத்தில் மூன்று பிரதானபாகங்களாக விருக்கின்றன வெனவும், அதர்வணம் நாலாவதுபாகமாய்ச் சாதாரணமாகச் சொல்லப்படுகிறதெனவும், நாநாவிதபுராண மதகவிகளாகிய இதிகாசம் புராணங்கள் உபவேதமெனவும், அல்லது-ஐந்தாம்வேத * மெனவும், எண்ணப்படுவனவாகத்தோன்றுகிறது.

---

* கானகுப்பிசபிராமணர்கள் வேதங்களில் சிறந்தவராக விருங்கின்றார்கள். ஒரேவேதம் அத்தியயனஞ் செய்தவர்க்குப் பட்டப்பெயர் ஒன்று மில்லை. இரண்டு வேதங்கள் அத்தியயனம் செய்தவர்க்கு திவிவேதி என்றும், மூன்றுவேதங்கள் அத்தியயனஞ் செய்தவர்க்கு திரிவேதி என்றும், நான்குவேதங்கள் அத்தியயனஞ் செய்தவர்க்கு சதுர்வேதி என்றும்பெயர்.

கனோஜாபிராமணர்களுக்குள் மரூஉ மொழியாகத் திவிவேதிக்குத்துபே என்றும், திரிவேதிக்குத் தேவாரிஎன்றும் சதுர்வேதிக்குச்சௌபே என்றும் வழங்குவதுமல்லாமல் ஒவ்வொருபெயரும்-ஒவ்வொருகுடும்பத்திற்குப் பட்டப்பெயராகவு மிருக்கின்றது.

3. ஒவ்வொருவேதமும், மந்திரம், பிராம்மணம், அல்லது தோத்திரங்கள், விதிகள் என்னும்பெயருள்ள விரண்டுபாகங்களா யிருக்கின்றது. ஒருவேதத்தைச் சேர்ந்த கீதங்கள், பிரார்த்தனைகள், துதிகள், இவைகளுடைய முழுச்சேர்மானம் சங்கீதமென்று சொல்லப்படும். வேதத்தின்மற்ற அந்தந்தப்பாகம் பிராம்மண மென்கிற பொதுவான தலைப்பின்கீழ்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றது இதில் வைதிக கடமைகளையும், அந்தவிதிகளை விளக்குகிறபழமொழிகளையும், வேத நூலைச்சேர்ந்த தர்க்கங்களையும், கற்பிக்கிறவிதிகளடங்கி யிருக்கின்றன. ஆனல் வேதங்களின் தற்கால ஏற்பாட்டில் பிராம்மண மென்று சொல்லப்படுகிற வாக்கியங்களடங்கிய பாகத்தில் தோத்திரங்கள், மந்திரங்கள், அநேகம் அடங்கியிருக்கின்றன. வேதஞான நூலில் வேதாந்தமென்று சொல்லப்படுகிற நியாயபாகம் அடங்கியிருக்கின்றது. உபநிஷத்தென்று பெயருடைய சிறுகிரந்தங்களும் அடங்கியிருக்கின்றன. அவைகளில் சிலபிராம்மணத்தினுடைய பாகங்களாகவிருக்கின்றன. மற்றவைகள் புறம்பாகவும், சில சங்கீதத்தின் பாகமாகவும் காணப்படுன்றன.

இப்படிக்கு,

சிறுமணவூர் அண்ணமலைமுதலியார்

ஆயுர்வேத அச்சுக்கூடத்தலைவர்

நெ. 44, ஆண்டியப்பநாய்க்கன் தெருவு,

சூளைபோஸ்டு, மதராஸ்.

முதலாவது இருக்குவேதம்.

1. முதல் வேதத்தினது சங்கீதத்தில் மந்திரங்கள் அல்லது தோத்திரங்கள் அடங்கியிருக்கின்றன அத்தோத்திரங்கள் பெரும் பாலும் இருக்கு வேதமென்னும் சொல்லினது பொருளின் படி துதிகளாகவே இருக்கின்றன. இந்தத் திரட்டு அஷ்ட பாகங்களாக அல்லது சந்தஸ்ஸுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. அந்தந்தச் சந்தஸ்ஸும்அநேக அத்தியயனமாக வுட்பிரிவு செய்யப்பட்டிருக்கின்றது. வேறொருவிதப்பிரிவு பத்துமண்டலங்களாகவும், அந்த மண்டலங்கள் நூறு அனுவாகங்களுக்கு மேலாகவுமே

---

* இருக்கு என்பது-ரிக்என்னும் வினைச்சொல்லிலிருந்து உற்பவமானதாக விருக்கின்றது. ரிக்-என்னு மொழியின் அருத்தம் துதித்தல். சரியாகச் சொல்லுமிடத்தில் எதனால் யாதொருதெய்வம் துதிக்கப்படுகிறதோ அந்தப் பிரார்த்தனை அல்லது சங்கீதப் பாட்டாம். வேதத்திரட்டுச்செய்த வியாசர் துதிகளாகவிருக்கிற மூலவாக்கியங்களை அநேகமாய்ச் சேர்த்துத்திரட்டி அதற்கு இருக்கு என்றுபெயர் வைத்தார்.

உட்பிரிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதில் ஆயிரஞ் சூக்தங்கள் என்னுங் கீதங்கள் அல்லது தெய்வஸ்துதிகள் அடங்கியிருக்கின்றன. மேல்கின்ற உட்பிரிவில் இரண்டாயிரம் வருக்கமென்னும் பிரிவுகள் அடங்கியிருக்கின்றன. இது இரண்டுவகைகளுக்கும் பொதுவாயிருக்கின்றது. இவைகளெல்லாவற்றிலும் பல அளவுகளுடைய பதினாயிரங்கவிகளடங்கியிருக்கின்றன.

2. வேதம் ஓதுகிற கிரமத்தில் எல்லா ஆசாரியர்களுக்கும், விதித்திருக்கிறபிரகாரமும், மகாராஷ்டியரிலும் தெலுங்கரிலும் வழங்கிவருகிற பிரகாரமும், வித்தியார்த்தி அல்லது ஓதுகிறவன் கிரந்தகர்த்தாவையும், விஷயத்தையும், இசை விகற்பத்தையும், முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது மல்லாமல், அந்தமந்திரம் அல்லது தோத்திரத்தின் கருத்தையும் அறியவேண்டும். அந்தந்த வாக்கியத்தின் அருத்தத்தைத்தெரிந்து கொள்வது முக்கியமென்றெண்ணப் படுகிறதில்லை

வேதாகமஏற்பாடுகளை உண்டாக்கினவர்கள் அக்கருத்தைக் கவனிக்கும்படி யதார்த்தமாகவே சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் அப்பிரகாரமே எவராலுமுதலில் அவ்வாக்கியஞ் சொல்லப் பட்டதோ அந்த ரிஷியினுடைய அல்லது-அவருடைய பெயரையும், எந்தத்தேவதைக்கு ஓதப்பட்டதோ அந்தத் தேவதையையும், எந்தவிஷயத்திற்குச் சம்பந்தப்படுகிறதோ அதையும், இசைவிகற்பத்தையும், அதன்கருத்தையும், எவ்விதக்கர்ம்மா னுஷ்டானங்களில் ஓதப்பட வேண்டுமோ அவற்றையுங்கவனமாய்க் கற்பிக்கிறார்கள். இக்காலத்துவழக்கம் இற்றப்பழமொழிகளுக் கொத்துவருகிறது. வேதம் சிறுவர்களுக்குக் கல்வியின் ஆரம்பகாலத்தில் தானே ஓதுவிக்கப்படுகிறது. பிற்பாடும் மொழிகளின் அருத்தந் தெரிந்து கொள்ளவேண்டிய நிமித்தமில்லாமல் தானே வாக்கியங்களி னிமித்தம் வாய்ப்பாடமாக வோதப்படுகிறது.

3. அந்தப்பிரகாரம் வேதம்பல விதங்களான சடங்குகளிலே அல்லது-கிரியைகளிலே பிரித்துப்பிரித்து மொழிமொழியாய் மாறிமாறிமுன்னும் பின்னுமாய்ஒருதரம்அல்லது-பலதரம்ஓதப்படுகிறது. இருக்குவேதம் யஜுர்வேதம் இவற்றினுடைய பிரதிகள் இவைகளுக்காகவும், மற்றவிதமாகிய ஓதலுக்காகவுமே சித்தப்படுத்தப்படுகின்றன. அப்பிரதிகள் பதம் க்ரமம் ஜடை கனம் முதலாகிய வைகளெனவழங்கப் படுகின்றன. சாமவேதம்-கீதங்களுக்காகவே பிரதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் வசனங்களைப் பலவழிகளாய்த் திருப்புதல் பிரதான வேதங்களுக்கு மாத்திரமென்று திட்டப்படுத்தப் பட்டிருக்கின்றது. இருக்கு யஜுர்வேதங்களினுடைய ஆதிபிரசுரத்தில் அது அளவுபடுத்தப் பட்டிருந்தது. பிற்பட்டபிரசுரங்களில் வாக்கிய ஏற்பாடுகள் வேறுபாடுகளாகி யிருக்கின்றன. அதனால் உட்பாகமானசாகைகளாக எண்ணப்பட்டுச் சாதாரண விதமாக மாத்திரம் ஓதப்படுகின்றன.

4. அந்தந்தவாக்கியத்தின் கிரந்தகர்த்தர்களுடைய பெயர்கள் அனுக்கிரமணிகையில் அல்லது பொழிப்புவிவர அட்டவணையில் காப்பாற்றப்பட்டு, அந்த அனுக்கிரமணிகை அல்லது பொழிப்புவிவர அட்டவணைவேதத்தோடு வழங்கிவரப்பட்டுக் கொண்டிருக்கின்றது, இந்த அட்டவணைப் பிரகாரம் விசுவாமித்திரர் இருக்கு வேதத்தின்

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 2792
நன்கொடை எண்: 2792

மூன்றுவது காண்டத்தில் அடங்கியிருக்கிறகீதங்களுக்கெல்லாம்கிரந்த கர்த்தாவாகவிருக்கிறார். பரத்துவாசரும் வேருபாடில்லாமல் ஆறுவ துகாண்டத்தில் சேர்மானஞ் செய்யப்பட்டிருக்கிற கீதங்களைச் செய் தவராயிருக்கிறார். வசிஷ்டர் ஏழாவதுகாண்டத்திலிருக்கிற கீதங்களு க்கதிகாரியாயிருக்கிறார். கிரதசமதன் இரண்டாவது காண்டத்தி லடங்கிய கீதங்களுக் கதிகாரியாயிருக்கிறார். வாமதேவன் நான்காவது காண்டத்தி லடங்கிய கீதங்களைச் செய்தவராயிருக்கிறார். புதனும், அத்திரியினுடைய மற்றசந்ததியாரும், ஐந்தாவதுகாண்டத்தி லடங் கியவைகளைச் செய்தவர்களாக விருக்கிறார்கள். ஆயினும் இந்த வே தத்தின் மற்றகாண்டங்களிலே யிருக்கிற கீதங்களைச் செய்தவர்கள் அநேகராயிருக்கிறார்கள். அவர்கள் யாரெனின் அகஸ்தியர், மரீசிபுத் திரராகிய கசியபர், அங்கீரசர், பிருகுபுத்திரராகிய ஜமதக்கினி, வியா சருடைய தந்தையாகிய பராசர், கௌதமர், அவருடைய புத்திரரா கிய கோதசர், பிரகற்பதி, நாரதர், மற்றுமுண்டான பெருமை பெற்ற ரிஷ்களுமல்லாமல் மகா பிரகாசம் பெற்ற கண்ணுவர் அவருடைய அந்தசந்ததிகளாகிய மேதாதிதி முதலிய பேர்கள் பிர கற்பதி சந்ததிகளில் மதசந்தன் முதலாகிய பேர்கள், அஜிகர்த்தன் புத்திரனுகிய சுனஸ்சேபன் அங்கீரசன் சந்ததிகளாகிய சுத்சன், இர ண்ணியஸ்தூபன், சவ்வியன், என்பவர்களாம். இவர்களுமல்லாமல் மேல்விவரித்த பெரியவர்களுடைய சந்ததியில்வந்த அநேக இதர இருடிகளும் நூலாசரியர்களாக விருக்கின்றார்கள்.

5. அநேகராஜவம்சத்தினரும் வேதகிரந்த கர்த்தர்களாயிருக்கி றார்கள். அதற்குத் திஷ்டாந்தம், விரகங்கர் என்னும் இராசாவினு டைய ஐந்துபுத்திரரும், அரசர்களாயிருந்த திரயருணன் திரசதசயன் என்பவர்களுமாம். இவர்கள் இந்த வேதத்திலடங்கிய கீதகிரந்த கர்த் தர்களில் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலவிடங்களில் நூலாசாரியர் களுடைய பெயர்கள் வேதவசனங்களிற்றானே வாஸ்தவமாய்க் காண ப்படுகின்றன. சிலவிடங்களில் திஷ்டாந்தமாகப் புராணங்களில் வழ ங்கி வருகிற பெயர்களுள்ள சக்கிரவர்த்திகளைக் குறித்துக் காட்டி யிருக்கிறது.

6. முதற்காண்டத்தின் பதினெட்டாவது அத்தியாயத்தில் ஆறுவது சூக்தம், ககூீவதனென்னும் பெயருடைய ஒரு இருடியினுல், அவருக்கு அளவிறந்ததான மளித்திருந்த சுவநயன் என்பவனுடைய சகையைப்புகழ்ந்து பேசியிருக்கின்றது,

7. எட்டாவதுகாண்டத்தின் ஆரம்பத்தில் ஒருதோத்திரமிருக்கின்றது. அதிலொரு உத்தமமான கதைகுறிக்கப்பட்டிருக்கின்றது. பிளயோகன் என்பவனுக்கும், அவனுக்குப் பின்னுல் அரசாண்டவனுக்கும் புத்திரனுகிய அசங்கன் பெண்ணுக உருமாற்றஞ் செய்யப்பட்டான். ஆனுல் மேதையதிதி யென்பவனுடைய தோத்திரங்களால் மறுபடியும் தன் ஆண்டவடிவை யடைந்தானுகையால் மேதைய திதிக்கு மகாவுதாரத்துவத்தோடு வெகுமதிகள் தந்தான் இந்தக்கீதத்தில் அவனுடைய சொந்த சகையைக்குறித்துப் புகழ்ந்திருக்கிறது. அந்தச்சூக்தத்தின் கடைசியில் அங்கீரசனுடைய புத்திரியும் அசங்கனுடையமனைவியுமாகிய சசுவதி யென்பவள் அவன் மறுபடியும் புருஷவடிவுகொண்டதைக் குறித்து அடைந்த மகிழ்ச்சியுங் கூறப்பட்டிருக்கின்றது.

8. அடுத்த, சூக்தங்கள் விபிந்து இராஜன், கூரயானன் என்பவனுடைய புத்திரனுகிய பகஸ்தமனன் என்னும் இராஜன், குரூங்கன் என்னும் இராஜன், சேதிபுத்திரனுகிய கஷ என்னும் இராஜன், பரஷபுத்திரனுகிய திருந்திரனென்னும் இராஜன், ஆகிய இராஜாக்களுடைய தியாகத்தைக்குறித்து அவ்வீகையையடைந்த இருடிகள் புகழ்ந்த சூக்தங்களாக இருக்கின்றன. அதேகாண்டத்தின் மூன்றுவது அத்தியாயத்து ஏழாவது சூக்தத்தில் மாந்தாத்திரி யென்பவனதுபௌத்திரனுகிய திரசதாசயனுடைய தயாளத்தைக் குறித்துப் புகழ்ந்து பேசியிருக்கிறது. நான்காவது அத்தியாயத்தின் முதலில் தோத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அதில் சித்திரனுடைய நன்கொடையைக் குறித்த புகழ்ச்சி யடங்கியிருக்கிறது. அதே அத்தியாயத்தின் நான்காவது சூக்தத்தில் சூஷாமனன் புத்திரனுகிய வரு என்பவனைப் புகழ்ந்து பேசியிருக்கிறது.

9. பத்தாவது காண்டத்தின் முதலாவது அத்தியாயத்தில்-அம்பரீஷனுடைய புத்திரனுகிய சிந்துதி வீபன் என்கிற பெயருடைய ஒரு ராஜாவினுல், உலகத்தைக் குறித்துப் பேசப் பட்ட ஒருகீத மிருக்கின்றது. ஏழாவது அத்தியாயத்துப் பதினேந்தாவது சூக்த முதல் பதினெட்டாவது சூக்தம் வரையில், அதிசயமான கதைகள் அடங்கிய அநேகவாக்கியங்க ளிருக்கின்றன. இக்ஷு வாகுவினுடைய புத்திரன், அல்லது-சந்ததியாகிய அசமாதி யென்பவன், தன்னுடைய பூர்வ ஆசாரியர்களைத் துறந்துவேறே ஆசாரியர்களை நியமித்துக்கொண்டான். அந்தப்படி, துறந்து விடப்பட்ட அந்தணர்கள், அவன் அழிந்து போகவேண்டு மென்று மந்திரோச் சாரணங்களைச் செய்திருக்கிறார்கள். ஆகிலும், அவனுடையபுதிய ஆசாரியர்கள் துறந்த பிராமணர்களுடைய கெட்ட எண்ணங்களுக்கு எதிரிடையான மந்திரோச் சாரணங்களைச் செய்ததுமல்லாமல் அவர்களுக்குப் பதிலாகஉடப்பித்து அந்த அந்தணர்களில் ஒருவர்க்கு மரணமுண்டாகும்படியாயும் செய்தார்கள். மற்றபிராமணர்கள் தங்களுடைய சொந்தக் காப்புக்காகவும் தங்கள் தோழன் மறுபடியும் பிழைக்கவேண்டியதற்காகவும், துதிகளை யோதினுர்கள். இவையெல்லாம் அவற்றுளடங்கி யிருக்கின்றன.

10. எட்டாவது அத்தியாயத்தின் முதலில் ஒருகீதம், மனுவின் புத்திரனுகிய நாபானேதிக்ஷுதனைக் குறித்து, ஒருகதை சொல்லுகிறது. அதாவது-இந்த நாபானேதிக்ஷுதன் அவனுடைய சகோதரர்களோடு பிதுரார்ச்சிதச் சொத்தைப்பாகித்துக் கொள்வதினின்றும், புறம்பாக்கப் பட்டிருந்தானென்பது. இந்தக்கதை இருக்குவேதத்தின் ஆத்திரேய பிராம்மணத்தில் அல்லது இரண்டாவது பாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

11 வேதவிஷயத்தைச் சுருக்கமாய் யோசித்துப்பார்க்குமிடத்தில் துதிக்கப்படுகிற தேவதைகள், அந்தத் தேவதைகளை நோக்கிப் பிரார்த்திக்கிற துதிகளுக்குக் கிரந்தகர்த்தர்கள், எத்தனைபேர் இருப்பார்களோ, அத்தனை தேவதைகளாக இருப்பதாய்க் காணுகிறது. அப்படியிருப்பினும், வேதத்தின் பூர்வவியாக்கியானங்களின் பிரகாரம், அநேகர்களுடைய அளவிறந்த பெயர்களும், வஸ்துக்களுடைய பெயர்களும், மூன்று தேவதைகளுடைய பலநாமாவளிகளாகவும், முடிவாய் ஒரேகடவுளுடைய நாமாவளியாய் ஆக்கப்பட்டிருக்கின்றன ஆகவு

மிருக்கின்றன. வேத நிகண்டு, தேவதை களின் பெயரைக் குறித்த மூன்று அட்டவணைகளோடு முடிந்திருக்கின்றது. முதலாவது அட்டவணைபில், அக்கினிக்கு ஏகார்த்தமுள்ள பலபெயர்களாயிருப்பவை அடங்கி யிருக்கின்றன. இரண்டாவது அட்டவணையில் வாயுவுக்கு ஒரேபொருள்தரும் பெயர்களாயிருப்பவை, அடங்கி யிருக்கின்றன. மூன்றுவது அட்டவணையில், சூரியனுக்கு ஒருபொருள் குறித்த பல பெயர்களாயிருப்பவை, அடங்கி யிருக்கின்றன. நிருக்தத்தின் கடைசிப்பாகம்முழுதும் தேவதைகளையே குறித்துச் சொல்லுவதா யிருக்கின்றது. அதில் மூன்றுகடவுளர்மாத்திரம் இருப்பதாக இரண்டிடத்திலுறுதியாகச் சொல்லியிருக்கின்றது. அதாவது-திசரவை தேவதா என்பது. இதில் ஒரேகடவுளென்று குறித்துக் காட்டுவதற்கே யென்றுகொள்ளும் விசேஷ யூகிப்பு, வேதத்தின் அநேகவாக்கியங்களால் தாபிக்கப்பட்டிருக்கிறது மல்லாமல் நிருத்தம், வேதம் இவைகளினுடைய அதிகாரத்தைக் கொண்டு, இருக்கு வேதத்தின் ஆரம்பத்தில் மிகவும் தெளிவாகவுஞ் சுருக்கமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

12. யாதொருமுக்கியவாக்கியத்தை எவர்சொன்னவரோ, அவரேரிஷி. அவ்வாக்கியம் யாதொருதேவதையை நோக்கிச் சொல்லுகிறதோ, அந்தத்தேவதையே அந்தவாக்கியத்திற்குத் தேவதை. அசைகள்சேர்ந்து தோத்திரத்தின் இசைவிகற்பமாகின்றது. யாதொருமுக்கியவிஷயத்தைக்கோரிய இருடிகள், இசைவிகற்பத்தில் செய்திருக்கிறதோத்திரங்களால் அந்தத்தேவதைகளை யடைந்திருக்கின்றார்கள்.

13. கடவுளர் மூவராகமாத்திரமிருக்கிறார்கள். அவர்களுடைய இடங்கள், பூலோகம், புவாலோகம், சுவர்லோகமாக விருக்கின்றன. அவர்கள், அக்கினி-வாயு-சூரியன் என்பவர்கள். இக்கடவுளர், பலவாகவும், மறைவாகவுமிராநின்ற பேர்களையுடையவர்களா யுச்சரிக்கப்படுகிறார்கள். சிருஷ்டிகர்த்தாவாகிய பிரஜாபதி படைப்புக்குடன் பட்டவைகட்குக்கடவுளாயிருக்கிறார் ஓம் என்கிற அசைஅந்தந்தக்கடவுளைக்கருதுகின்றது. மேலான இடத்தில் வசிக்கிற பரமேட்டிக்கு அந்த அசைச்சொல் சம்பந்தப்படுகின்றது. அது-அகண்டரூபியாயிராநின்ற பிரம்மத்திற்கு, தேவனுக்கு-அத்தியாத்மாவுக்கு உரித்தாகின்றது. பலதிக்குகளுக் குரியவர்களா யிருக்கிற மற்றதேவதைகள் மூன்று கடவுளருடைய அமிசமாக விருக்கின்றார்கள். ஏனென்றால், அவர்களுடைய பலகிருத்தியங்களைப்பற்றிப் பலவாய்நாம மிடப்பட்

டும் குறிக்கப்பட்டு மிருக்கிறபடியாலே தான். ஆனால் வாஸ்தவமாய் ஒரேதெய்வமிருக்கின்றது. அதாவது-மகாத்மா. அத்தெய்வம் சூரிய னென்று சொல்லுகிறது. ஏனென்றால், அச்சூரியன் எல்லாப்பொரு ளுக்கட்கும், ஆத்மாவாக விருக்கின்ற தென்பதால். இது-மகத்துக்க ளாற் கூறப்பட்டிருக்கின்றது அந்தச் சூரியபகவான் சலனமாயிரா நின்ற ஜகத்திற்கும், ஸ்தாவரமாயிராநின்ற தஸ்துஷ்டிற்கும், ஆத்து மாவாகவிருக்கிறார். மற்றதேவதைகள் அவருடைய கூறுக இருக்கின் றார்கள். இப்படி அறிஞரால் வெளிப்படையாய்க் கூறப்பட்டிருக்கி ன்றது. ஞானிகள்-அக்கினி, இந்திரன், மித்திரன், வருணன் முதலா கியபேர்களே ஸ்தோத்திரிக்கிறார்கள்.

14. வேதத்தில் அடங்கிய தோத்திரங்களின் பொருள்களும், உபயோகங்களும், பிரார்த்திக்கப்படுகிற தேவதைகளுக்கும், எந்த நாமங்களால் அத்தேவதைகள் துதிக்கப் படுகின்றனவோ, அந்த நா மங்களுக்கும், மிகவும்வேறு பட்டிருக்கின்றன. ஒவ்வொரு வாக்கிய மும், புராணகதைகளின் குறிப்புகளாலும், தேவசுபாவத்தைக் குறி த்தும், விண்ணவரைக்குறித்தும் கூறியகருத்துகளாலும், நிறைந்திரு க்கின்றது. கிரகஸ்தாச்சிரமத்தில் இருப்பவரால் செய்யப் படவேண் டிய அல்விறந்த சமயாசார கிரியைகளைக் குறித்தும், வானப்பிரஸ் தன் சன்னியாசி இவர்கட்கு விதித்திருக்கிற முடிவில்லாத சடங்கு களைக்குறித்தும், உசிதமான பிரார்த்தனைகள், அவ்வக்கிரியா விசே ஷகாரியங்களில் ஓதப்படுகின்றன. இந்திரன், அல்லது-ஆகாயம், அக் கினி, ஆதித்தன், சந்திரன், அப்பு, வாயு, அசரீரிகள், பரமாணுக்கள் பிருதிவி, ஆகிய இவைகளேநோக்கி, அடிக்கடி பிரார்த்திக்கும் பிரார் த்தனைகள் சொல்லப்படுகின்றன. பலயாகங்களிலும், சோமபானசம யங்களிலும், அநேக சமயாசார சடங்குகளிலும், ஓதப்படுகிற அள விறந்தமந்திரங்கள் அடிக்கடி ஓதப்படுகின்றன.

15. முதற்புத்தகத்தின் பதினேந்தாவது அத்தியாயத்தில் குத் சன் என்பவனைக்குறித்தும், கங்காபுத்திரனாகிய திருதன் என்பவனை க்குறித்தும் சொல்லப்பட்ட இரண்டு கீதங்களிருக்கின்றன. வேதத் தின் மற்றொருபாகத்தில் அப்புத்திரர்களாகிய ஆப்தியர்கள் என்று சொல்லப்படும் மூன்றுசகோதரர்களாகிய தவசிகள், ஒருமணலாகிய வனாந்திரத்தில், பிரயாணம் போய்க்கொண்டிருக்கும் போது, தாகத் தினால் வருத்தமுற்றவர்களாய்க் கடைசியில் அவர்கள் ஒரு கிணற்

றைக்கண்டு அவர்களிலொருவன், அக்கிணற்றிலிறங்கித் தனது தோழருக்காகத் தண்ணீரெடுத்தேந்தினன். ஆனால் நன்றியற்ற சகோதரர்கள் அவனுடைய காரியசித்திகளைக் கவர்ந்துகொண்டு அவனை அக்கிணற்றில்விட்டுப் பாரமாகிய ஓர்வண்டியின் சக்கரத்தால் அக்கிணற்றை மூடிப்போய் விட்டார்கள். அவனந்த இடுக்கத்திலிருந்து கொண்டு அப்பிரஸ்தாபத்திற் சொல்லப்பட்ட கீதங்களோயோதினன். குத்சன் என்பவனும், ஒருகாலத்தில் அவ்விதமான துன்பத்திலிருந்து இவ்விதமான பிரார்த்தனை யோதினதாக வேதவசனத்தாற் காணப்படுகின்றது. இந்த ஏதுவிற்காக வேதகலம்பகம்செய்த கிருஷ்ணதுவைபாயனர் அக்கீதங்கள் குத்சனுற்செய்யப்பட்ட கீதங்களோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன.

16. அப்புத்தகத்தின் இருபத்தி மூன்றாவது அத்தியாயத்தில் அகஸ்தியர், இந்திரன், மருத்துக்கள், இவர்கள் மத்தியில் நடந்த சல்லாபங்கள் முதலிற்கண்டிருக்கின்றன. மற்றவைகளிலும், இருபத்து நான்காவது அத்தியாய முழுவதிலும் அகஸ்தியரை நோக்கியும், அச்சுவனிதேவர், அக்கினி, ஆதித்தன், இவர்களிலொருவர்களை நோக்கியும் அகஸ்தியரால் சொல்லப்பட்ட இருபத்தாறு கீதங்களடங்கியிருக்கின்றன. இக்கீதங்களின் கருத்தெல்லாம் விஷயங்களுக் கஞ்சி அகஸ்தியரா லுச்சரிக்கப்பட்டதாக இருக்கின்றது. அதுவிஷம் ஏறவொட்டாமற்றடுக்கிற நிமித்தம் உச்சாரண மந்திரமாக வுபயோகப்படுத்தும்படி கிரியைமுறையினால் விதிக்கப்பட்டதாக இருக்கின்றது அந்நோக்கத்துக்காக மற்றமந்திரோச் சாரணங்கள் வேதத்தின் பலபாகங்களில் வருகின்றன. அதற்குத் திருஷ்டாந்தம். விஷத்தின் துன்பத்தினின்றும் நிவாரண மாவதற்காக வசிஷ்டரால் ஓர்பிரார்த்தனை செய்யப்பட்டிருக்கின்றது. இதைவேறாவதுபுத்தகம் மூன்றாவது அத்தியாயம் பதினெட்டாவது பிரகரணத்திற்காண்க.

17. மூன்றாவதுபுத்தகம் ஐந்து அத்தியாயங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது. அவைகளில்காதினன் புத்திரனாகிய, கூஷிகன் பௌத்திரனுமாகிய விசுவாமித்திரரால் செய்யப்பட்டுப் போற்றுதலடங்கியிருக்கின்றது. இப்புத்தகத்தின்கடைசிகீதத்தில் அல்லது சூக்தத்தில்ஆறுமந்திரங்களடங்கியிருக்கின்றன. அவைகளுள் ஒன்றில் காயத்திரியைக்குறித்துச் சிறப்பித்திருக்கின்றது. இவ்விசேஷ வாக்கியமம்மற்றவேதங்களிற் பலவாறு ஓதப்பட்டிருக்கின்றது, ஆனால் விசுவாமித்தி

ரருக்கு அது முதல்வெளிப்பட்டது. அதற்குத்தகுதியான முதன்மை யான இடம் இக்கீதத்திற்முனென்று காணப்படுகிறது. இத்துதிகள் சூரியனேநோக்கிச் செய்தவைகளாக இருக்கின்றன.

18. அவையாவன ஒருபிரகாசம் பொருந்திய விநோதவிளையாட்டுடைய ஆதித்தனே? உன்னைக் குறித்த இப்புதிய உசிதமானது திபையுமக்குராங்கள்சாத்துகிறேம். எமதுவாசகமாகியஇத்துதியால் சந்தோஷமடையக்கடவீர் இந்த அவாவையுடைய மனத்தை ஆசை கொண்டஒருமனிதன் பெண்மகளைத்தேடுவதுபோல் அணுகுவீராக. சர்வலோகங்களையும் அனுசந்தித்துக் கடாக்ஷிக்கிற பூஷனுகிய ஆதித்தனே? எங்களுடைய இரட்சகரா யிருக்கக்கடவீராக.

19. சாவித்திரி என்னும்பரம ஆண்டவனுடைய பணியத்தக்க பிரகாசத்தை தியானிக்கக் கடவோமாக. எங்களறிவை விளக்குவா யாக. உணவாசைகொண்டயாம் பிரகாசம்பொருந்திய சாவித்திரியா கிய திகரனை வரமளிக்கப் பிரார்த்திக்கின்றேம். அவனைச் சிந்தனை யால் ஆராதிக்க வேண்டும். அறிவிலுலாளப் பட்டுப் போந்தமனிதர் சாவித்திரி யாகிய தெய்வீகத்தின மணியை ஜெப தப துதியோடு வணங்குகிறார்கள்.

20. ஏழாவது புத்தகத்தின் மூன்றுவது அத்தியாயத்தில் கடைசியிற் சொல்லப்பட்ட இரண்டு கீதங்கள் விசேஷமான வைகளாக இருக்கின்றன. இவைகள் இல்லறத்தேவதையைநோக்கிச் செய்யப்படுந் துதிகளாக இருக்கின்றன. ஒரு வீடுகட்டும்போது அருக்கிய நைவேத்தியங்களோடு இந்தத்தோத்திரங்கள் ஓதப்படுகின்றன. இந்தக்கீதங் களில் இரண்டாவது கீதத்திற்குச் சம்பந்தமாகியகதை விசித்திரமான தாயிருக்கின்றது. வசிட்டர் வருணனன் வீட்டிற்கு இரவில் நித்திரைசெய்யவேண்டுமென்கிற எண்ணத்தோடு அல்லது சிலர்சொல்லுகிற பிரகாரம் மூன்றுநாள் உபவாசமாயிருந்து பசிதீர்த்துக் கொள்ளுகிற நிமித்தம் தானியத்தைத் திருடவெண்டு மென்கிற எண்ணத்தோடுவருகையில் அவ்வீட்டு நாய்தன்மேல்விழ அப்போது அந்நாய் தூங்கும்படி இதனடியில் வரும் பிரார்த்தனையை அல்லது மந்திரோச்சாரணத்தை அவர் ஓதினர்.

21. அவையாவன, இந்தக்கிருகத்தின் பாலன தேவதையே? எங்களோடு ஊடாடிக்கொண் டிருப்பாயாக. எங்களுக்குச் சவுக்கிய மான வாசஸ்தலமா யிருப்பாயாக. யாம் வேண்டுவதை எமக்களிப்

பாயாக. எங்களுடைய இருகாற்பிராணிகளுக்கும், நற்கால் ஜீவன்களுக்கும், பாக்கியமளிப்பாயாக. இந்த வீட்டின் காவலனுகிய தேவனே? எங்களையும், எங்கள்செல்வத்தையும், பெருகச்செய்வாயாக. சந்திரனே எங்களிடத்தில் அன்புவைத்து, நாங்களும், எங்களுடைய பசுக்களும் குதிரைகளும், மூப்பிலிருந்து நிவர்த்திக்கும்படிச் செய்வாயாக ஒருதந்தையானவன், தனதுசந்ததிகளைக் காப்பது போலக் காக்கவேண்டும். இந்தக்கிருகதேவதையே? நாங்கள் சந்தோஷமடையக்கடவோம். உன்னுல் ஆனந்தகரமான விநோத இசைகள் தங்கிய கிருகம் பெறுவோமாக. இப்போது உனது ஆசரவிலிருக்கின்ற எமதுசெல்வத்தை அல்லது எதிர்பார்க்கும் செல்வத்தைக்காத்து எங்களுக்குக் காப்பாயிருப்பாயாக இவையே.

22. நான்காவது அத்தியாத்தில் நான்காவதுகீதம் ருத்திரனை நோக்கிச்செய்யப்பட்ட தோத்திரத்தோடு முடிவாகின்றது அந்தத் தோத்திரம் நூறுவருஷம் பாக்கியவானுயிருக்கும்படி சித்தியாகவேண்டுமென்கிற கோரிக்கையோடு மூன்றுநாள் உபவாசமாயிருந்து கர்மானுஷ்டான நியமங்களோடு ஓதப்படுகின்றது ஆருவதுபுத்தகத்தில் மூன்றுகீதங்களிருக்கின்றன. அவைகள் சூரியனுக்குப் பூசைசெய்து அவைகளை ஓதினுல் ஐந்துதினங்களுக்கு மேல் மழைவரும். அவைகளில் முதலிரண்டுகீதங்கள் மேகத்தைநோக்கி இசைய ஓதப்படுகின்றன. மூன்றுவதுகீதம் தவளைகள் கத்தவேண்டிய தற்காக அவைகளை நோக்கியோதப்படுகின்றது. முதலில் சொல்லப்பட்ட தோத்திரங்கள் வசிஷ்டரால் சொல்லப்பட்டன. இச்சங்கதியை நற்சகுனமாகவசிஷ்டர் அங்கீகரித்திருக்கிறார்.

23. பத்தாவது புத்தகத்தின் ஆருவது அத்தியாயம், இரண்டு கீதங்களோடு முடிவாகின்றது. அவைகளில் செய்யப்படுந் தோத்திரமேதுக்கென்றுல் சத்துருக்கள் நாசமாவதற்கேயாம். இந்தக் கீதங்கள் அதற்காகவே செய்யப்படும் யாகங்களில் ஓதப்படுகின்றன.

24. ஏழாவது அத்தியாயத்தில் முதலில் ஒரு கீதமிருக்கின்றது அதில் சந்திரன்மனைவியாகிய சாவித்திரியென்னும் உபநாமம் பெற்ற சூரியனை இப்பிரசங்கம் செய்தவராகச் சொல்லியிருக்கிறது. பிரஜாபதியின் புத்திரியாகிய தட்சணையும் பிரம்மாவின் புத்திரியாகிய ஜகனுளும் அதற்கடுத்த அத்தியாயங்களில் பிரசங்கஞ் செய்தவர்களாகச் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இன்னும் ஓரிடத்தில் வெகுவிசித்திரமா

னவாக்கியம் வருகின்றது. அதில் யமன் தன் இரட்டைப் பிறப்புச் சகோதரியாகிய யமுனையின் கற்பழிக்க யத்தனித்தபோது அவள் சன்மார்க்க நியாயங்களை எடுத்துக்காட்டி அவனுடைய வேண்டுதல் கணை நிராகரித்த சமயத்தில் இருவர்க்கும் நடந்த சம்பாஷணைகள் அடங்கியிருக்கின்றன.

25. பத்தாவது-அத்தியாயத்தின் கடைசிப் பாகம்மிகவும் வித்தியாசமானவாசக நடையையுடைய கவனமாக விருக்கின்றது. அம்பரீஷன் புத்திரியாகிய வாக்காள்-அவன் தன்னைத்தானே சிரேஷ்ட சமஸ்த பரிபூரண ஆன்மாவாகப் புகழ்ந்து பேசியிருக்கிறாள், வாக்குரைன்பது, பாஷையென் றருத்தமாகின்றது. பிரம்மாவினின்று முண்டாகும் விவேகசத்தியாக விருக்கிறாள். வேதங்களின் வைதிகத்துக்குரியசாஸ்திரங்களுக் கொத்திருப்பதாக வியாக்கியானியால் வியாக்கினஞ்செய்யப் பட்டிருக்கிற இந்தக்கீதத்திற்குச் சரியான மொழி பெயர்ப்பு இதற்கடியிற் கூறப்படுகிறது.

26. நான் உருத்திரர், வசுக்கள், ஆதித்தியர்-அச்சுவினிதேவர் இவர்கள்வரிசையில் நிற்கின்றேன். மித்திரன்-வருணன்-என்னும்-சூரியனையும், கடலையும், இந்திரனென்னும் ஆகாயத்தையும், அக்கினியையும், அச்சுவினி தேவரையும் நிலைப்படுத்துவேன் சத்துருநாசனுகிய சோமனென்னுஞ் சந்திரனையும், துவஷ்டரி, பூஷனன், பகன், என்னும் பட்டப்பேருடைய சூரியனையும் நிலைபெறச் செய்வேன். யாகம், அருக்கியம், தேவர்பூஜை முதலாகிய வைகளைச் செய்துவருகின்ற உண்மையான அடியாருக்குச் செல்வமளிப்பேன், அரசியாயிராதின்றநான் செல்வமளிப்பவளாகவும், கல்வியாட்கிக் குடையவளாகவும், தொழத்தகுந்தெய்வங்களில் நான்முதல் தெய்வமாகவுமிருக்கின்றேன். தேவர்கள் தொழப்பெற்றவளாகவும், எங்கும்நிறைந்தவளாகவும், எல்லாவஸ்துக்களிலும், வியாபித்தவளாகவு மிருக்கின்றேன் உண்டியையுண்ணுகிறவன் என்மூலமாயுண்ணுகிறான். பார்க்கிறவன், மூச்செறிகிறவன், கேட்கிறவன். என்மூலமாய்ப் பார்க்கிறான். என் மூலமாய் மூச்செறிகிறான். என்மூலமாய்க்கேட்கிறான். என்னையறியாதவன் இழந்தவனாயிருக்கிறான். நான் ஓதுகிறகோட் பாட்டைக்கேள் தேவர்களாலும், மக்களாலும், தொழப்படுகிற என்னையே இது வென்று நான்விளம்புகிறேன். நான்தெரிந்தெடுக்கிறவனைப் பலவந்தனாக்குகிறேன். அவனைநான் பிரம்மா ஆக்குகிறேன் அய்யவனாக்குகிறேன்

ஞானியாக்குகிறேன். பிரம்மாவுக்குச் சத்துருவாகிய அரக்கனைக் கொல்ல வுருத்திரனுக்காகவில்லவனைத்தேன் பிரஜைகளுக்காக அவர்களுடைய சத்துருக்கள் மேல்யுத்தஞ் செய்கிறேன் மண்ணுலகத்திலும், விண்ணுலகத்திலும், வியாபகமாயிருக்கிறேன். சர்வவியாபக மனத்தின் தலையில் பிதாவைப்பெற்றேன்; நான்பிறந்தது கடலினடிவிலேயாம், ஆகையால் எல்லாவஸ்துக்களிலும் யான்வியாபகமாயிருக்கிறேன், என்னுடைய வடிவால் இந்த வானத்தைத் தொடுகிறேன் எல்லாவஸ்துக்களையும், சிருஷ்டித்து வாயுவைப்போல் சஞ்சரிக்கிறேன்நான் வானத்திற்கும் அதீதமாயிருக்கின்றேன், இந்தப்பூமியைக்கடந்துநிற்கின்றேன் பெரிதாகிய ஒன்றென்பது யானேயாம்.

27. பத்தாவது அத்தியாத்தின்முடிவில். இரவைநோக்கியோர் கீதஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. பதிஞென்றுவதுஅத்தியாயத்தின் முதலில், உலகசிருஷ்டிக்குச் சம்பந்தமாகிய இரண்டுகீதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தவிஷயத்தைக் குறித்தமற்றொரு கீதம்-வேறொரு வியாக்கியானத்தில், மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. இருக்குவேதத்தில் இது கடைசியான ஒரே கீதமாயிருக்கின்றது, இதைச் செய்தவர் மதுசந்தன்புத்திரனுகிய அகமரஷனனுக விருக்கிறார். அவரிலிருந்து இதற்கு பேருண்டாயிற்று. அந்தப்பெயரினல்' இதுசாதாரணமாக வோதப்படுகின்றது, மற்ற கீதங்கள் இன்னுரால் சொல்லப்பட்டவைகளெனநிச்சயப்படுத்தக்கூடாமையாயிருக்கின்றன. பரமேஷ்டியென்னும் பிரஜாபதியும், அவனுடைய புத்திரனை எஜுயனும், ஆதியில்சம்பாஷித்தவர்களாகச் சொல்லப்படுகிறார்கள். ஆனலிந்தப்பேர்களில் ஒன்று ஆதியாத்துமாவினது பட்டப்பேராக விருக்கின்றதுமற்றபெயர் பிர்மாவினுடைய ஒட்டுவமையான பலி செலுத்துகையக்குறித்து ஏதப்பட்டதாக இருக்கின்றது.

28. மேற்சொல்லிய மேற்கோள்கள், வேதத்தின் இந்தப் பாகத்தினது பாஷாநடையைக்காட்டப் போதுமான வைகவாக விருக்கலாம். அதில் தோத்திரங்களும், அடங்கியிருக்கின்றன.

29. அதேவேதத்திற்குச் சம்பந்தமாயிருக்கிற வேறொரு பாகம்ஆத்திரேயபிராம்மணமென்று சொல்லப் படுகின்றது. அது அஷ்டபஞ்சீதங்கள், அல்லது-புத்தகங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது, ஒவ்வொன்றில் ஐந்து அத்தியாயங்கள், அல்லது அத்தியயனங்கள் அடங்கியிருக்கின்றன, மேலும் ஏகதேசமான எண்ணங்களுடைய பிரக

ரணங்கள், அல்லது-சந்தஸ்ஸுகளாகஉட்பிரிவுசெய்யப்பட்டிருக்கின்றன, எல்லாம், இருநூற்றெண்பத்தைந்தாகின்றன, பாதியுரைவாசகமாயிருப்பதால் அந்தப்பிரகரணங்களில் அடங்கியிருக்கிற பிரத்தியேகவாக்கியங்களின் தொகையையெத்துக் காட்டவேண்டியது அவசியமாயில்லை,

30, பூரணமான வியாக்கியானம் இல்லாமையைப்பற்றியும், விவரமான அட்டவணையில்லாமையைப்பற்றியும், மேற்பார்வையாய்ப் படித்துப்பார்த்து. அதைக்கொண்டு வேதத்தின் இந்தப்பாகத்தினது மூழப்பொழிப்புகள், விரித்துக்காட்டக்கூடாமையாயிருக்கின்றன. ஆகிலும், அவற்றின்கடைசியில் இராகின்ற அநேகவிசேஷ வாக்கியங்கள் மாத்திரம் எடுத்துக்காட்டப்படும். ஏழாவது புத்தகம் இராஜர்களால் செய்யப்பட்ட யாகங்களைக்குறித்துச் சொல்லுகின்றது. எட்டாவது புத்தகத்தின்முதலில், மேலேசொல்லப்பட்ட நாலு அத்தியாயங்களில் அடங்கியிருக்கிற விஷயமாகவிருக்கின்றது, இவைகளில் மூன்று அத்தியாயங்கள் இராஜர்களுடைய பட்டாபிஷேகத்தில் அதினிமித்தஞ் சித்தப்படுத்தப்பட்ட சிங்காதனத்தின்மீது உட்கார்ந்திருக்கும்போது-தேன், தயிர், மது, இரண்டுவிதப் புல், தானியக்கதிர், இவைகள் கலந்தஜலத்தை அவர்கள் சிரசின் மீதுவிட்டு அபிஷேகஞ்செய்கிறசடங்குகளைக் குறித்தவையாகவிருக்கின்றன. அபிஷேகமென்று சொல்லப்படுகிற இந்தச்சடங்கு ஒரு அரசன் பட்டத்திற்குவரும்போதுசெய்யப்படுகிறது. இது பின்பும், பலசமயங்களில் யாதொருமுக்கிய நோக்கங்களையடைதற்காகச் செய்யப்படும் கிரியாகங்களுக்குச் சம்பந்தமாகிய கிரியைகளில் ஒருபாகமாகவுமிருக்கின்றது.

31. எட்டாவது புத்தகத்தின், இரண்டாவது அத்தியாயத்தின்விஷயம் பட்டாபிஷேகத்தினுடைய சிறப்புச்செய்தலின் விதமாகவிருக்கின்றது. அல்லது-மூப்பத்தேழாவது அத்தியாயம், அதைக்குறித்துவியாக்கியானஞ்செய்தவரால் எண்ணப்பட்டிருக்கிற பிரகாரம், ஆத்திரேயத்தினது ஆரம்பமுதல் எண்ணப்பட்டிருக்கிறது. அதிலொரு திருஷ்டாந்தமிருக்கின்றது. அதுவேதங்களில் விசித்திர மானவை போல் அல்லது-ஞானசாஸ்திரங்களைச்சொல்லுகிற-கிரந்தகரத்தர்களுக்குள் வாதிக்கப்பட்டபலவித அபிப்பிராயங்களைக்குறித்துக்கூறப்படும் சதாதியதிருஷ்டாந்தரூபணங்களின் ஞானவிஷயமாக விருக்கின்றது. அந்தஅபிஷேகம் அதற்குரிய தோத்திரங்களோடு முடிக்க வேண்டியதென்று விதிக்கப்பட்டிருக்கிறதும் அல்லாமல், இந்தச் சமயத்தில் வீணை

ன்று நினைக்கப்படுகிற வியாகிருதிகள் என்னும் வேதமொழிகளில் லாமல் முடிக்கலாமென்றும், சிலர் விதிக்கிறதாக அதிற கூறப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் முக்கியமாய் தாவாலன்புத்திரனுகிய சத்திய காமனுல் விரிவாகச் சொல்லப்பட்ட ஞாயங்களைப்பற்றி அந்தமொழிகளை முழுதும் ஒதும்படியாய் விதிக்கின்றார்கள். அருணன் புத்திரராகிய உத்தாலகர் இந்தச்சடங்கு செய்வதைக்குறித்து அந்தப்பிரகாரமே விதித்திருக்கிறார்.

32. முப்பத்தெட்டாவது அத்தியாயம், அல்லது-எட்டாவது புத்தகத்தின் மூன்றுவது அத்தியாயம், இந்திரனைத் தேவர்கள் தங்களுடைய இராஜாவாக ஏற்படுத்திக் கொண்டபோது, அவனுக்குச் செய்த பாவனபட்டாபிஷேகத்தைக்குறித்து விவரித்துச் சொல்லுகின்றது. அதில், அதுபோன்றவிசேஷமான நியமத்தோடு செய்யவேண்டியகிரியைகள் அடங்கியிருக்கின்றன. அதில்சொல்லப் பட்டிருக்கிற இதரவிசேஷமான சங்கதிகளில், அவனுடைய சிங்காசனம், வேதவசனங்களால் பாவனையாகக்கட்டப் பட்டதைக்குறித்துச் சொல்லியிருப்பதையாம். இதுவல்லாமல், சர்வாதிகாரத்தை நிச்சயப்படுத்த அநேக மண்டலங்களில், செய்யப்படும் அபிஷேகசடங்குகளைக்குறித்துப் பலவாறு சொல்லுகிறது.

33. இவ்வண்ணமாக அந்தப்பெரிய பட்டத்தில், அபிஷேகஞ் செய்யப்பட்ட இந்திரன் எல்லாவற்றையும் வெல்லத்தக்கவனுய் மண்ணுலகங்களைக் கீழ்ப்படுத்திச் சர்வலோகங்களையும் வென்றான். அவன்எல்லாத் தேவர்களுக்கும் மேலாகி மேலானவுசிதமான பதத்தையும், பெருமையையும் அடைந்தான். இந்தத்தாழ்ந்த வுலகத்தில் வெற்றியடைந்து சமமான இராஜரீகத்தையும், மேலான பதவியையும், பாகியத்தையும், முழுஆளுகையையும், பிரத்தியேகமான அதிகாரத்தையும், தன்னரசாட்சியையும், மகாவல்லமையையும், மேலான நியமாதிகாரத்தையும், அடைந்து சுயம்பாகி, யேகாதிபத்தியத்தையடைந்து, தீர்க்காஸ்ஸுடையவனுகிய, தெய்வ லோகத்தில் தான் கோரியதெல்லா மடைந்துசாவற்றவனுனன் சாவற்றவனுனன்.

34. முப்பத்தொன்பதாவது அத்தியாயத்தில், பயபக்தியாய்ச் செய்யப்படும் சடங்குகிரிகையைக் குறித்ததாயிருக்கின்றது. அந்தக் கிரியை இந்திரனுடைய பாவனையான பட்டாபிஷேகத்திற்குச் சரியாகளண்ணிச் செய்யப்படுகிற கருமமாம், இந்தப்படி சடங்குக்கிரியை பெரிய அதிகாரத்தையும், சர்வசக்கிராதிபத்தியத்தையும், அடை

யலாமென்கிற எண்ணங்கொண்டு செய்யப்படுகின்றது. அந்த அத்தி யாயத்தில், கடைசியில் சொல்லப்பட்ட மூன்றுபிரகரணங்களில் அந் தப்படிசெய்து வெற்றியடைந்து வருகிறதிருஷ்டாந்திரங்கள், எடுத் துக்காட்டிச் சொல்லப்பட்டிருக்கின்றன.

35. இந்திரனுக்குச் செய்த பட்டாபிஷேகத்திற்குச் சமமாக, கவஷன்புத்திரனுகிய தருவுக்கும், பரிக்ஷித்து புத்திரனுகிய ஜனமே ஜயனுக்கும், பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டது. ஆகையால் பரிக்ஷி த்துப்புத்திரனுகிய ஜனமேஜயன் சர்வதிக்கிலும், பூமியை முழுதும் ஆண்டு எங்கும் பிரதட்சணம்வந்து அஸ்வமேத யாகம் நிறைவேற்றி னான்.

36. அவன் தன்னில் பூரணத்தை யடைந்திருந்ததினுல், சிலயா கத்தை ஒருகுருவானவர் நடப்பித்துக் கொண்டிருக்கும்போது அவ ரைப்பார்த்து இந்தப் பயபக்தியோடு செய்கிறகருமத்திற்கு என்னே வரவழையும் ஓ! மகத்துவமுள்ளவரே, இதை முடிக்கும் உமக்குப் பதினுயிரம் யானைகளையும், பதினுயிரம் பெண்சிறைகளையும், தருவே னென்றான்.

37. அந்தவிஷயத்தைக் குறித்து இந்தவாக்கியங்கள் எங்கும் ஓதப்படுகின்றன. இவைகள் ஒரு நியமமான வேள்வியில் அதம்மிய னுக்குப்பிரியமேதனுடைய புத்திரர் உதவிசெய்ததற்காக, அத்திரியி னுடைய இந்தப்புத்திரன் அவர்கட்கு நித்தியம்மத்தியான காலத்தில் ஒவ்வொருவனுக்கும் நூறு கோடிபசுக்களில் இரண்டாயிரம் பசுக் கள் தானமாகக்கொடுத்ததைக் குறித்தவைகளாக விருக்கின்றன.

38. விரோசனன் புத்திரனுகிய அங்கன், தன்னுடைய ஆசாரி யன் ஒருயாகஞ்செய்து கொண்டிருக்கையில் உபயோகப்படும் படி யான எண்பதினுயிரம் வெள்ளைக்குதிரைகள் தானங்கொடுத்தான்.

39. அத்திரிபுத்திரன் பலதேசங்களிலிருந்து கொண்டுவந்தசெ ல்வர்களுடைய புத்திரிகளாகிய கண்டசரங்களால் அலங்கரிக்கப்பட் டபதினுயிரம் ஸ்திரீகளைத் தானங்கொடுத்தான்.

40. அவச்சத்துருக்கத்தில் பதினுயிரம்யானைகளைத்தானமாகக் கொடுத்துக் கொண்டிருக்கையில் மகிமைபெற்ற-அத்திரி புத்திரன் அலண்டுபோய் அந்தத் தானத்தை முடிக்கும் படித் தூதர்களை யனு ப்பினுன்.

41. உனக்கு நூறு தருகிறேன் உனக்கு நூறு தருகிறேன் என்று இந்தச்சுகிர்தபுருஷன் ஆபிரமாபிரமாகத் தானங்கள் செய்து கொண்டிருக்கையில் அலண்டு ஆயாசமடைந்து ஆசோதையடைய வேண்டியவனுனன்.

42. அந்தவிஷயத்திலும் இந்தவசனங்கள் எங்கும் ஒதப்படுகின்றன. பரதன் சுவர்ணுபரணங்களால் அலங்காரஞ் செய்யப்பட்ட வெண்மைதங்கிய தந்தங்களையுடைய நூறுகோடியே யெழுபது லட்சங் கறுத்தயானைகளைத் தானஞ்செய்தான் இவையெல்லாம் மேற்படி வாக்கியங்களிலடங்கிய பொருளேயாம்.

43. சகசூனத்தில் துச்சந்தன் புத்திரனுகிய பரதனுக்காகச் செய்யப்பட்டயாகத்தில், ஆபிரம் பிராமணர்கள் நூறுகோடி பசுக்களை யவரவர்களுக்கு வேண்டியமட்டும் எடுத்துக்கொண்டார்கள்.

44. ஐத்திரேய பிராம்மணத்தின் நாலாவது அத்தியாயத்திலும், கடைசி அத்தியாயத்திலும், ஒரு புரோகிதனை யுபசரிப்பதிலுமும், ஒரு ஆசாரியனைநியமிப்பதிலுமும், உண்டாகும் பலனைக்குறித்தும், அந்த அந்தஸ்துக்குத் தக்கவனைத் தெரிந்தெடுப்பதைக் குறித்தும், இராஜாவினல் அவனைநியமகஞ் செய்யப்படும் விதத்தைக் குறித்தும் அவனல் நிறைவேற்றப் படவேண்டிய தொழில்களைக் குறித்தும் சொல்லுகின்றது.

45. ஏழாவது புத்தகத்தின் அந்தியத்தில் அநேக இராஜர்களுடைய பேர்களும் அவர்களுக்குப்பலரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட கர்மானுஷ்டான விவரங்களும் அடங்கியிருக்கின்றன. கடைசிப் பிரிவில் அரசனுடைய சத்துருக்கள் நாசமடைவதற்காக அப்படிப்பட்ட ஒரு ஆசாரியனது கட்டளைக்குட்பட்டு நிறைவேற்றப் படவேண்டிய கிரியைகள் விவரித்துக்காட்டப் பட்டிருக்கின்றன.

46. ஐத்திரேய ஆரண்ணியகம் என்பது இருக்கு வேதத்தின் மற்றொரு பாகமாக விருக்கின்றது அதில் ஐந்து ஆரண்ணியகமாகச் சமமாய்வகுக்கப் பட்டிருக்கிற பதினெட்டு அத்தியாயங்கள் அல்லது அத்தியயனங்கள் அடங்கியிருக்கின்றன. இரண்டாவதோ அதிதீர்க்கமாகவிருக்கின்றது-ஆனென்றல் அதில் ஏழு அத்தியயனங்கள் அடங்கியிருக்கின்றன. அது மூன்றுவதோடு சேர்ந்து பவரிப் பிராம்மணமென்னும் உபநிஷத்து அல்லது ஆத்திரேய ரென்னும் பெயருள்ள

ஒரு அறிஞரால் ஒதப்பட்டிருப்பதால் ஆத்திரேயபிராம்மணவுபநிஷத்து என்று பெயருள்ள இந்த வேதத்தின் உபநிஷத் தாகின்றது. இரண்டாவது. ஆரண்ணியத்தின் கடைசியில் சொல்லப்பட்ட நாலு அத்தியாயங்கள் வேதாந்த சாஸ்திரங்களுக்கு முக்கியமாக வொத்திருக்கின்றன. வேதாந்த சாஸ்திரிகளால் அவைசரியான ஐத்திரேயவுபநிஷத்து என்று கூறப்படுகின்றன. இரண்டாவது ஆரண்ணியகத்தினுடைய பாகம் இதற்கடியில் வருவதுபோல் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது.

47. இந்தப்பிரபஞ்சம் யதார்த்தமாக ஆதியில் ஆத்துமாவாகமாத்திரமிருந்தது. சராசரமாகியாதொன்றும் அதுவன்றி வேறில்லை கடவுள் உலகங்களைச் சிருஷ்டிப்பேனென்று நினைத்தார். இவ்விதமாகஅவர் பலவுலகங்களைச் சிருஷ்டித்தார். ஜலம், வெளிச்சம், சாவுக்குரிய ஜீவர்கள், ஜலங்கள், இவைகளைச் சிருஷ்டித்தார். ஜலமானது வானத்திற்கு மேலும் இருக்கின்றது. அதற்கு வானம் ஆதாரமாகவிருக்கின்றது. வாயுமண்டலத்தில் வெளிச்சம் அடங்கியிருக்கின்றது பூமி அதித்தியமுள்ளதாயிருக்கிறது. அடியிலிருக்கிற பிரதேசங்கள் ஜலங்களேயாம்.

48. இவைகள் யதார்த்தமாகவே யுலகங்களாக விருக்கின்றனவென்று உலகங்களின் திக்குப்பலாசனைச் சிருஷ்டிப்பேனென்றார். இவ்விதமாக ஜலங்களிலேயிருந்து வலித்துப்பிண்டாமான ஒருவஸ்துவையுண்டாக்கினார். அவரதை நோக்கிப்பார்த்தார். அந்தப்படி யனுசந்தித்த வஸ்துவிலிருந்து ஒரு முட்டையைப் போல் வாய்திறந்து, அந்தவாயிலிருந்து பேச்சுண்டாச்சு, அந்தப்பேச்சிலிருந்து அக்கினியுண்டாச்சு. நாசிகள் பரவியதால் நாசிகளிலிருந்து மூச்சுப்புறப்பட்டது. மூச்சிலிருந்து வாயுபிறந்தது. கண்கள்திறந்தன. கண்களிலிருந்துகண்ணேக்கம் பிறந்தது. அந்தக் கண்ணேக்கத்திலிருந்து சூரியன் பிறந்தான். காதுகள்விரிந்தன. காதுகளிலிருந்து கேட்டல் வந்தது. அதிலிருந்து இடமுள்ள மண்டலங்கள் பிறந்தன. சருமம்விரிந்தது. சருமத்திலிருந்து உரோமம் உண்டாச்சு. அதிலிருந்து பூண்டுகளும் விருட்சங்களும் வளர்ந்தன. மார்பு திறக்கப்பட்டது. மார்பிலிருந்து மனதுபிறந்தது. மனதிலிருந்து சந்திரன்பிறந்தான். தொப்புள்வெடித்தது. தொப்புளிலிருந்து விழுங்குகைபிறந்தது. அதிலிருந்து மரணம் பிறந்தது. பிறப்பிக்கிற அவயவம் வெடித்தது. அதிலிருந்து உற்பீஜம் பிறந்தது. அதிலிருந்து அதின் மூலமாகியஜலங்கள்பிறந்தன.

49. இந்தத் தேவர்கள் இவ்வண்ணமாக உண்டாக்கப் பட்டு இந்த விரிந்த சாகரத்தில் விழுந்தார்கள். கடவுளிடத்திற்கு அவர் கள் பரிதாகத்தோடுவந்தார்கள். அவரை அவர்கள் இவ்வண்ணமாக க்கேட்டுக்கொண்டார்கள். எங்களுக்கு ஒருசிறிய உருவத்தைக்கொ டும் அதில் நாங்கள் அடங்கி ஆகாரம்புசிப்போம் என்றார்கள். அவர் அவர்களுக்குக்கு ஒருபசுரூபத்தைத் தந்தார். அவர்கள் அது எங்க ளுக்குப் போதாதென்றார்கள். அவர் அவர்கட்கு ஒரு அசுவரூபத் தைக்காட்டினார். அவர்கள் அதுவுந்தங்களுக்குப் போதா தென்றார் கள். அவர் அவர்கட்குமனித வடிவைக்காட்டினார் அவர்கள் நன்று ப்பச்செய்தீர் ஆ! ஆ! அதிசயமென்று கூவிச்சொன்றார்கள். ஆகை யால் மனிதன்மாத்திரமே நல்லவடிவமாகச் செய்யப்பட்டானென்று சொல்லுகிறது.

50. அவர் அவர்களை அவரவர்க்குரியவிடங்களி லிருக்கும் படி யுத்தரவுசெய்தார். அக்கினியேச்சாய் வாயில்நுழைந்தது. வாயுமூச்சா கிராசியில்நுழைந்தது. சூரியன்நோக்கமாகிக் கண்களில்நுழைந்தான் ஆகாயம்கேட்டலாகிச் செவியிலிடங்கொண்டது. பூண்டுகளும் விரு ட்சங்களும் உரோமங்களாய்ச் சருமங்களில் நுழைந்தன. சந்திரன் மனதாகிமார்பில் நுழைந்தான். மரணம் விழுங்கலாகித் தொப்புளில் உருகிப்பாய்ந்தது. ஜலம் உற்பீஜமாகி உபஸ்தத்தில் நுழைந்தது.

51. பசியுந்தாகமும் அவரைநோக்கி யெங்களுடைய இடங்களை யேற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டதுகள். அவர் உங்களை இந்தத்தேவதைகளுக்குள் பாகித்துவிடுகிறேன். அவர்களோடு உங்க ளைப் பங்காளிகளாக்குகிறேன் என்று விளம்பினார். ஆகையால் யா தொரு தேவதைக்குநைவேத்தியம் செய்யும்போது பசியுந்தாகமும் அவர்களோடு பாகித்துக்கொள்ளுகின்றன.

52. உலகங்கள் இருக்கின்றன. உலகங்களில் ஆளுகையு மிருக் கின்றன. அவர்களுக்காகப்புசிப்பையுண்டு பண்ணுவேனென்று அவர் ஆலோசித்தார். அவர் ஜலங்களைநோக்கிப் பார்த்தார். ஜலங்களிலிரு ந்துவடிவம் உண்டாச்சு. அவ்விதமாகப் பிறந்தவடிவம் ஆகாரமாக விருக்கின்றது.

53. இவ்விதமாக வண்டாக்கப்பட்ட அவ்வாகாரந் திரும்பிக் கொண்டுபறந்து போகப்பார்த்தது. இந்த ஆதியானமனிதன் அதைப்பேச்சினால் பிடிக்கயத்தினப்பட்டான். ஆனாலதை அவனுடைய குரலோசையால் அடையமாட்டாதவனானன். குரலோசையால் அதையடைந்திருப்பானாகில் பசியானது உணவின்பேரைச் சொல்வதினாலேயே பரிகரித்துபோகும். பின்புதன்னுடைய மூச்சினாலதைப் பிடிக்கயத்தினப்பட்டான். ஆனால்சுவாசத்தினால் ஆக்கிராணிக்க மாட்டாதவனாய்ப்போனான். அதை ஆக்கிராணிப்பினால் கிரகிப்பதாயிருந்தால் பசியானது உண்டியின்வாசனைப்பிடிப்பதால் திருப்தியடைந்துவிடும். அதைப்பார்வையால் பிடிக்கயத்தினப்பட்டான். ஆனால் பார்வையினால் பிடிக்கமாட்டாதவனானன். பார்வையாலதைப் பிடிப்பதாயிருந்தால், பசியானது உண்டியைப் பார்ப்பதினால் தீர்ந்துவிடும். அதைக்காதால் கேட்கிறதினால் பிடிக்கயத்தினப்பட்டான். காதுகொடுத்துக்கேட்பதினால் பிடிக்கமாட்டாதவனானன். செவிகொடுத்து அதைப்பிடிப்பதாயிருந்தால் பசியானது உண்டியைச் செவியால் கேட்பதினால் தீர்ந்துவிடும் அதையவன் தொக்கினால்பிடிக்க யத்தினப்பட்டான், ஆனாலவனுடைய தொக்கினால்பிடிக்கமாட்டாதவனாய்விட்டான். தொடுகிறதினால் பிடிப்பதாயிருந்தால் பசியானது அன்னத்தைத் தொடுவதினால் தீர்ந்துவிடும். அவனதைமனதினால் எட்டவிரும்பினான்; ஆனாலதை நினைக்கிறதினால் பிடிக்கமாட்டாதவனானன். அவனதைநினைப்பினால் பிடிப்பதாயிருந்தால் பொசிப்பைத் தியானிப்பதினால் பசிதீர்ந்துவிடும். அவனதையுபஸ்தத்தினால் பிடிக்க யத்தினப்பட்டான். ஆனால் அதனால்பிடிக்க மாட்டாதவனானன். இவ்விதமாக அதைப்பிடிக்கிறதாயிருந்தால் பசியானது, உஸ்தம் விரும்புதலினால் திருப்தியடைந்துவிடும். கடைசியில், அதைவிழுங்குதலினால் பிடிக்கயத்தினப்பட்டான்; அப்படியே அதைவிழுங்கினான். அதையுள்ளுக்கு வலித்தவாயுவானது, உண்டியைப் பிடித்துக்கொண்டது. அந்தவாயு பிராணபந்தமாக இருக்கின்றது.

54. சர்வாத்துமாவாகிய, அவர் இந்தச்சரீரம் என்னையல்லாமல் எப்படியிருக்குமென்றும், எந்த இறுதியில் புகவேண்டுமென்றும் யோசித்தார். என்னையல்லாமல் வாக்குவசனித்தாலும் சுவாசம், ஆக்கிராணித்தாலும், நேத்திரம், பார்த்தாலும், செவி, கேட்டாலும், தொ

க்கு, உணர்ந்தாலும், மனது, தியானித்தாலும், விழுங்கல், விழுங்கினாலும், உபத்தம்; அதின் தொழிலைச்செய்தாலும், அப்போது சான்யா ரென்று நினைத்தார்.

55. சீமன் என்னுந்தலை யோட்டின் பொருத்தத்தை நீக்கி இந்தவழியாய் அவர் உட்புகுந்தார். அந்தத்திறப்பு வைதிருதி என்னும் தலையோட்டின் பொருத்தமென்று சொல்லப்படும். அந்தத் தலையோட்டின்பொருத்தம், நாந்தனமென்னும் மூத்திக்குப்போகிற மார்க்கமாக இருக்கின்றது.

56. அந்த ஆன்மாவில் இளைப்பாறுகிறஸ்தானங்கள் மூன்றிருக்கின்றன. நித்திரையின்விதங்கள் பலவாயிருக்கின்றன. வலதுகண்ணுகியஇது நித்திரையின்ஸ்தானமாகஇருக்கிறது. கண்டம் அனுபவத்தின்ஸ்தானமாக இருக்கின்றது. இருதயம் ஆனந்த மண்டலமாக விருக்கின்றது.

57. இவ்வண்ணமாகச் சைதன்னியமுள்ள அசரீரியாகப்பிறந்து அவர் பூதியங்களைத் தெரிந்தெடுத்து நானன்றியாதொன்று மிவ்விடத்திலிருக்கிறதென உறுதிப் படுத்தமாட்டேன். அவர் நினைக்கிற இந்தவொருவனை ஆராய்ந்து விரிந்தபிரபஞ்சத்தையும், சிந்தித்து, நானைப்பார்த்தேனேவென்றார். ஆகையால், அவர் இதமத்திரம் அல்லதுசாட்சியெனப் பெயரிடப்படுகிறார். யதார்த்தமாகச் சாட்சியென்பது தான் அவரது நாமமாயிருக்கின்றது சாட்சியாயிருக்கிற அவரைஆழ்ந்த அருத்தமுள்ள பேராகிய இந்திரனென் றழைக்கிறார்கள். ஏனெனில் தேவர்கள் சாதாரணமாய்த் தங்கள் பேர்மறைவா யிருப்பதில் ஆனந்திக்கிறார்கள், தேவர்கள் மந்திரங்களில் ஆனந்திக்கிறார்கள்

58. இந்தஆத்துமாமனிதனில் மூலகாரணமாக அல்லது, கருவாக அல்லது விந்துவாக இருக்கின்றது. அந்தவிந்துசரீரத்தின்எல்லா அவயவங்களிலுமிருந்து இழுத்தசத்தாக இருக்கின்றது, இவ்விதமாக மனிதன் தனக்குள் தன்னைப்போஷிக்கிறான், ஆனால் அதையவன் ஸ்திரிக்குள் பிரயோகிக்கும்போது, அந்தக்கருவையவன் ஜனிப்பிக்கிறான் அதுவே அதன்முதற்றறப்பாக இருக்கின்றது.

59. அது பெண்மகளோடு அபேதமாகி, அவள் சொந்த சரீரத்தைப்போல் ஆகிவிடுகின்றது. அது அவளை யழித்துவிடாது, அவள் அவனைத்தனக்குள் இவ்விதமாகஏற்றுக்கொண்டு போஷிக்கிறாள். அவளைப்போஷிக்கும்போது அவனால் அவள் போஷிக்கப்படவேண்டும் பெண்மகள் அந்தக்கருவைப் போஷிக்கிறாள். ஆனால், அவன்அதர்கு முன்னமே அக்குழந்தையைப்போஷித்தான். அதுபிறந்தபின்பும் அதை யின்னம் போஷிக்கிறான், குழந்தை பிறப்பதற்கு முன்னும் பின்னும், அவன்போஷிக்கிறபடியால், அவன்தன்னையே போஷிக்கிறான் சந்ததி கிலை பெற்றுவரவேண்டிய நிமித்தம் இவர்களும் இவ்விதமாக கிலை பெறச் செய்யப் பட்டிருக்கிறார்கள், அப்படிப் பட்டதே அவனுடைய இரண்டாவதுபிறப்பாக இருக்கின்றது.

60, இந்த இரண்டாவது பிறப்பான அவனே சமையாசாரனை திகசருமங்கள் செய்தற்காகஅவனுடையபிரதிகாரியஸ்தனாகிறான், மற்றொருவனாகியதானே அதனுடைய கடமைகளை நிறை வேற்றி ஆயுள் நாளைமுடித்து இறந்துபோகிறான். இந்தப்பிறப்பை விட்டகன்று மற்றொருவடிவாக மறுபடியும் பிறக்கின்றான். அது அவனுடைய மூன்றாவது பிறப்பாக இருக்கின்றது.

61. இதுபரிசுத்த மகாத்துமாவினால் கூறப்பட்டது. கருப்பாசயத்தில் இந்தக்கடவுளருடைய தொடர்ச்சியுள்ள பிறப்புகளை யெல்லாம் நான் அறிந்திருக்கிறேன். நூறுசரீரங்கள் இருப்புச் சங்கிலிகளைப்போல் என்னை அமர்த்துகின்றன. ஆகிலும் நான் ஒரு இராசாளியைப்போல் வேகமாக எழும்புகிறேன். இவ்விதமாகக் கருப்பாசயத்தில் அமைதலாயிருந்த வாமதேவர் சொன்னார் இந்த நிருவிகற்பகக் காட்சியையடைந்து அவன் அந்தச் சரீரபந்தத்திலிருந்து நீங்கியெழும்பிச் சுவர்க்கலோகத்திற் கேறிப்போய், எல்லாக்கோரிக்கையையும் அடைந்து சிரஞ்சீவியாய் விட்டான் அவன் சிரஞ்சீவியாய்விட்டான்.

62. நாம் அவனைத்தொழலாமென்றால் ஆன்மாவென்பதென்ன ஆன்மாவென்பதது ஒருமனிதன் எதினால் பார்க்கிறானே எதினால்கேட்கிறானே எதினால் வாசனை அறிகிறானே எதினால் வசனிக்கிறானே எதினால் இனிப்புள்ள அல்லது இனிப்பற்ற உருசியைப் பிரித்

தறிகிறதே அது இருதயமா? அல்லது அறிவா? அல்லது மனதா? அல்லது உணர்வா? அல்லதுமனேதத்துவமா? அல்லது பகுத்தறிவா அல்லது திரகிப்பா? அல்லது புலப்பாடா? அல்லது ஞாபகமா! அல்லது கவனிப்பா? அல்லது மன்றுடுகையா? அல்லது தீவிரமா? அல்லது வருத்தமா? அல்லது அவதானமா? அல்லது இணக்கமா? அல்லது துணிவா? அல்லது பிராணிகளின் செய்கையா? அல்லது விருப்பமா? அல்லது இச்சையா?

63. இவைகளெல்லாம் அறிவின்பரியாய நாமங்களாக இருக்கின்றன. ஆனல், அறிவின் அந்தரிந்திரியம் அடங்கிய இந்த ஆத்துமர் பிர்மாவாகவிருக்கின்றது. அவரே, இந்திரன் அவரே, சிருஷ்டிகர்த்தாவாகிய பிரஜாபதி. இந்தத்தேவர்களெல்லாம், அவராகவே யிருக்கின்றார்கள். இந்தப்பிரதிவி வாயு, பரமாணு, சலிலத்துவம், உதகம், சுடர், ஆகிய மூலபஞ்ச பூதங்களும், அவராகவே யிருக்கின்றன. இவைகளும்இவைகள்கலந்தசூக்குமப்பொருள்களும்மற்றவஸ்துக்களும் மற்றவிதைகளும்,முட்டைகளிலிருந்துஉற்பத்தியாயும்,அல்லது கருப்பாசயத்தில் பிறந்தும், அல்லதுவேர்வையில் உதித்தும்,அல்லதுசாகங்களிலிருந்து துளிர்த்தும் அசுவங்கள், அல்லது பசுக்கள், அல்லது மனிதர் அல்லது யானைகளுமாகவுண்டாகி யெல்லாச் சீவப்பிராணிகளாக இருப்பவைகள், நடப்பவைகள், அல்லது பறப்பவைகள், பூண்டுகள், விருட்சங்கள், ஆகியயாவத்து அசரங்களும், அவைகளெல்லாம்அறிவின் நோக்கமாக விருக்கின்றன. அறிவின்பேரில் எல்லாவஸ்துக்களும் ஆதேயமாயிருக்கின்றன. உலகம், அறிவினேக்காக விருக்கின்றது. அதற்காதாரம், அறிவேயாம். அறிவேபெரியவஸ்துவாகிய பிர்மாவாகவிருக்கின்றது.

64. இந்த இயற்கையறிவாகிய ஆத்துமாவினல்தான் அந்தயோகிஇந்தவுலகத்திலிருந்து சுவர்க்கத்திற்கு ஏறி எல்லாக்கோரிக்கையும் அடைந்து சாவில்லாதவனுனன். அவன் சாவில்லாதவனுனன்.

65. என்னுடையபேச்சு அறிவின்மீது ஆதாரப்பட்டிருக்கலாம் என்னுடையமனது; எனது வசனிப்பினிடத்தில் கவனமாயிருக்கலாம். ஓ! சுவயம் விளக்கமாகிய அறிவே! எனக்குவிளக்கமா யிருக்கக்கடவாய். எனக்காக ஓ! பேச்சே ஓ! மனதே இந்த வேதத்தையணுகுவாயாக. நான்கேள்விப் பட்டிருக்கிறது மறந்துபோகாதிருக்கக்

கடவது. இரவும்பகலும் நான் அவதானித்திருப்பதை யுற்றுப்பார்த்துக்கொண்டிருப்பேனுக. உண்மையை நினைப்பேனுக. சத்தியத்தைப் பேசுவேனுக. அதுஎன்னைக்காப்பாற்றக்கடவது. கற்பிப்போனைக்காப்பாற்றக்கடவது. அது என்னைத்தற்காக்கக்கடவது. அதைக்கற்பிப்போன் தற்காக்கக்கடவன். அதைக்கற்பிப்போன் தற்காக்கக்கடவன் கற்பிப்போனை அதுதற்காக்கக்கடவது.

66. இந்தவேதத்தின் ஒருமுக்கியசாகத்தைச் சேர்ந்த வேறொரு உபநிடதம் அதனிடத்திலிருந்தும் அதன்பிராம்மணத்திலிருந்தும், கவுஷீதகீ பிராம்மண வுபநிஷதமென்று பேர்வைக்கப்பட்டிருக்கின்றது. அதனுடைய சுருக்கத்தில் இரண்டுசெல்லாபங்கள் அடங்கியிருக்கின்றன. அவற்றுள் ஒன்றுகிய வேதாந்தசாஸ்திரம் இந்திரன் பிரதர்த்தனுக்கு உபதேசஞ்செய்தது மற்றொன்று காசிராஜாவாகிய அஜாதசத்துரு என்பவன் என்பவன் பாலாகீ என்னும்பேருடைய ஒருகுருவுக்கு ஞானோபதேசம் செய்ததேயாம். இதேவிதமாக இவ்விரண்டு பேர்களுக்கு மத்தியில் நடந்தபிரசங்கம், யஜுர்வேதத்தின் விரயத்து ஆரண்ணியம் என்பதில் காணப்படுகின்றது.

67. மேற்சொல்லிய சுருக்கத்தில், மாதவாசாரியருக்குக் குருவாகியவித்தியாரண்ணியரால் இருபது அத்தியாயங்களாகப் பன்னிரண்டுபிரதான உபநிஷத்துகள் செய்புள் நடையாக விரித்துரைக்கப்பட்டிருக்கின்றன. அவர் கவுஷீதகீயை இருக்குவேத சாகத்தின் பேரென்றுவெளிப்படையாகச் சொல்லியிருக்கின்றார்.

68. கவுஷீதகீயினுடைய மூலப்பிரதி வேதத்தின் ஒருபாகமாக இருக்கின்றது. அதின் ஆரம்பத்தில் காங்கேயனீ என்னும் சித்திரனும் வேதகேதுவும் அருணன்புத்திரனுகிய உத்தாலகனோடு செய்த பிரசங்கங்கள் அடங்கியிருக்கின்றன.

69. ஓ வாயுதேவனே! எம்மையணுகுவாயாக; எமக்குத்தரிசனமளிப்பாயாக; இந்தச்சோமரசம் உனக்காகச் சித்தம்செய்யப்பட்டிருக்கின்றது. எம்மையணுகி அதைப்பானம் செய்து எங்களுடைய துதியைக்கேட்பாயாக.

70. வாயுதேவா! உன்னைப் போற்றுகிறபெயர் திவ்விய கீதங்களால் கீர்த்தனம்பண்ணித் துதிக்கிறார்கள்; சோமரசதிரவியஞ் சேர்க்கிறார்கள்: கீவேதனத்துக்கு ஆகத்தக்க இருதுக்களே அறிகிறார்கள்.

71. வாயுதேவா! ஆகுதியிடுபவனுக்கு உன்னுடைய இணக்கமுள்ள இனியகுரலோசை வருவதாக; அருக்கிய அவிப்பாக மூலமாய்அநேகருக்கு வருவதுபோலவருவாயாக.

72. இந்திரனே! வாயுவே! இந்தச்சோமரசஞ் சித்தப்பட்டிருக்கின்றது; எமக்குக்கிருபை யளிக்கவருவாயாக. உண்மையாய் இந்த அருக்கியம் உன்னைக்கருதுகின்றது.

73. வாயுவே! இந்திரனே! அவிப்பாகங்களில்கொடுக்கிற அருக்கியங்களே அவதானியுங்கள்; சிக்கிரமாய்வாருங்கள்.

74. வாயுவே! இந்திரனே! மகத்துக்களே!விரைவில்வேள்வியாளனே அவனுடைய துதிகளுக்காக அணுகுவீர்களாக,

75 பரிசுத்தத்திற்கு மூலமாயிராநின்ற (ஆதித்தனுகிய) மித்திரனே! நான்துதிக்கிறேன்; அழிக்கவல்லமையுள்ள பூமியை ஜலத்தினுல்ஆதரிக்கிறவருணனே! நான் துதிக்கிறேன்.

76. மித்திரனே! வருணனே! இந்தஉரித்தான் அவிப்பாகத்தில் மனங்களிப்பீராக; ஏனெனில் ஜலங்களானவை பூரணத்தை யளிப்பதுபோல் உமக்குநாங்கள் செய்யும்வேள்வி ஐயமற வெற்றி பெறுவதாக.

77, மித்திரனே! வருணனே! எல்லா ஞான மூர்த்திகளாகிய கடவுளே! ஜனத்திரளின் பிரயோஜனத்திற் காகப்பிறந்து திரளாப் பரியிடப்படுகிறது, எங்கள் கருமங்களுக்குச் சித்தியளிப்பீராக.

78, சிலவசனங்களில் மூன்றேகடவுளரென்றும் அவர்களுடையஸ்தானங்கள்-பூர் - புவர்-சுவர்-என்னும்-பூலோகம் - புவர்லோகம் சுவர்லோகமென்றும் அக்கடவுளரென்பவர் அக்கினிவாயுசூரியனென்றும் அக்கடவுளர்வேதங்களின் மூலாதாரக் கோட்பாடான ஏகேச்சுவரவாதத்தின்படி பரமதத்துவத்தின்பல்வேறு யடையாளங்களாக இருக்கிறார்க ளென்றும் வாஸ்தவமாக மேலானபரம ஆவியாகிய ஒரேதெய்வம் உண்டென்றும் அவனிலிருந்து பிரபஞ்சம் உண்டாச்

சென்றும் அவன் பிரபஞ்சத்திற்குக் கர்த்தனாகியு மிருக்கிறனென் றும் இந்தப்பிரபஞ்சம் அவனுடைய வேலையாயிருக்கிற தென்றும் அவன் மேலானவஸ்துவா யிருக்கிறனென்றும் சொல்லியிருக்கிறது.

79. ஆகமத்திலும் ஒரேகடவுள ஆராதிக்கும்படி விதிக்கப் பட்டிருக்கிறது.

80. வேதத்தின்பேரில் ஆதாரப்பட்டிராநின்ற வேதாந்தத்திலும் பரம்பொருள் ஒன்றென்பதுதவிர வேறொன்றும்பேசப் படுவதில்லை மெய்ஞ்ஞானிகளும் அவ்வொன்றைத்தவிர வேறொன்றையும் தியானிப்பதில்லை, என்பதற்கு அநேக வேற்கோள்க ளிருக்கின்றன என்பது பிரசித்தமாயிருக்கின்றது.

81. வேதசாஸ்திரங்கள் முழுதுங்கற்றறிந்த வித்வ சிரோமணியாயிருந்த ராஜா ராமோகன்ராவ் என்பவர் இந்தக்கற்பனையானமூடிவில்லாத சமயங்களை அடக்கி உண்மையான வேதக்கியானத்தை விளங்கச்செய்ய யத்தனப்பட்டதண்டு அதுவீணாய்ப்போய் விட்டபோதிலும் பின்பு கல்கத்தாவில் தத்துவபோதினி சபாஎன்னும் பெயரினால்ஓர்சபை ஏற்பட்டிருக்கின்றது அதில் அந்தஸ்திலும் சாமர்த்தியத்திலும், கணிசமுள்ளபேர்கள் கூடியிருக்கிறார்கள், அவர்கள் மேலான பரம்பொருள் ஒன்றே என்னும் கோட்பாட்டில் அத்தியந்தமாய் அதுசாரஞ் செய்கிறார்கள் வாரத்தில் ஏற்பாடான ஒருநாளில் சபை கூடிச்சன்மார்க்க நியமங்களைக்குறித்தும் அந்தப்பரம் பொருளினது இலட்சணங்களைக் குறித்தும் பிரசங்கஞ்செய்தும், கீதங்கள்பாடியும் தோத்திரங்கள்செய்தும் தேவாராதனைசெய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட பிரசங்கம் கல்கத்தாகலீஜில்சமஸ்கிருத பண்டிதராகிய ஒரு பிராமணனால் நடப்பிக்கப்பட்டு வருகிறதாகத் தெரியவருகிறது.

இருக்குவேதம்-மூற்றிற்று.

இரண்டாவது யஜுர்வேதம்.

82. வாஜஸனேயி அல்லது வெள்ளை யஜுஸ்ஸானது வேதங்களிலெல்லாம் வற்றினுமிகவும் சுக்குமமுள்ளதாயிருக்கின்றது. அதின்மூதன்மையான பிரதானபாகங்களில் மந்திரங்களடங்கியிருக்கின்றன. இந்தவேதங்தைச் சேர்ந்த சன்னிதத்தில், அல்லது தோத்திரங்கள் பிரார்த்தனைகளின் திரட்டில் நாற்பது அத்தியயனங்கள் அடங்கியிருக்கின்றனவென்றுக்கொன்று பேதமுள்ள அனந்தகந்திகங்களாக உட்பிரிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருகந்திகமும் ஒவ்வொருதோத்திரம் அல்லதுமந்திரமாகஇருக்கின்றது. இருக்குவேதத்தைப்போலவேஇதுவும்அனுவாகங்களாகஅல்லது அத்தியாயங்களாகவகுக்கப்பட்டிருக்கின்றது. இந்தவேதத்தோடுசேர்ந்திருக்கிற அட்டவணையின் முடிவில் சொல்லப் பட்டிருக்கிற அனுவாகங்களினது தொகை இருநூற்றெண்பத் தாறுகவும், பிரகரணங்களின் அல்லது வாக்கியங்களின் தொகை, கிட்ட கிட்ட இரண்டாயிரம் அல்லது சரியாகச்சொல்லுமிடத்து ஆயிரத்துத்தொளாயிரத் தெண்பத்தேழாகவும் காணப்படுகின்றது. ஆனல் இதில்பலவிடங்களில் ஒரேவாக்கியம் பலதரம் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வத்தியயனங்களில் ஒன்றுக்கோன்றுமிகவும் பேதமாகியபதின் மூன்றுமுதல் நாற்றுப்பதினேழுகந்திகங்கள் அடங்கியதாகவுமிருக்கின்றன.

83. யஜுர்வேதமென்று சொல்லப்பட்ட போதிலும் அது இருக்கு என்று சொல்லப்பட்ட சிலவாக்கியங்களும் மற்றவைகள் சரியாய் யஜுஸ்வாக்கியங்களுமாக இருக்கின்றது. இருக்கு வாக்கியங்கள் இருக்குவேத தோத்திரங்களைப்போல இசைவிகற்பங்களாக இருக்கின்றன. மற்றவைகள் ஒன்றுமுதல் நூற்றாறு அசைகள் அடங்கிய அளவுடைய வசனங்களாவது அல்லது அந்த அளவுக்கு மீறிய அளவிறந்த வசனங்களாவது இருக்கின்றன.

84. யஜுர்வேதம் அந்தப்பெயரின் அருத்தத்தின் பிரகாரம் முக்கியமாய் நைவேத்தியங்கள், வேள்விகள் இவைகளைச் சேர்ந்ததாகஇருக்கின்றது. முதலாவது அத்தியாயமும், இரண்டாவது அத்தியாயத்தின் முழுக்கூறும், பௌரணமையிலும் அமாவாசையிலும் செய்யப்படும் வேள்விகளுக்குரித்தாகியபிரார்த்தனைகள் அடங்கியிருக்

கின்றன. ஆனுற்கடைசியில் சொல்லப்பட்ட ஆறுபிரகரணங்கள் பிதுருகர்மங்களைச் சார்ந்தனவாக இருக்கின்றன. மூன்றுவது அத்தியாயத்தின்விஷயம் நித்தியாக்கினியின் நிவேதனமாகவும், இரத்தபலியைக்குறித்த நிவேதனமாகவும் இருக்கின்றது. அடுத்த ஐந்து அத்தியாயங்கள் முக்கியமாய் அக்கினிஸ்தோமம் என்னும் சடங்கைச் சேர்ந்ததாக இருக்கின்றது. அச்சடங்கில் சோமபானத்தைக் குறித்த சடங்கும் அடங்கியிருக்கின்றது. அடுத்த இரண்டு அத்தியாயங்கள் வாஜபேயம் ராஜசூயம் இவைகளைச்சேர்ந்த வைகளாக இருக்கின்றன ராஜசூயத்தின் சடங்குகளில் ராஜபட்டாபிஷேக சடங்குகளும் அடங்கியிருக்கின்றன. பதினெள்றுமுதல் பதினேட்டு வரையிலுமுள்ள எட்டு அத்தியாயங்கள் ஓமாக்கினி நிவேதனத்தையும், சௌத்திராமணியென்னும் யாகத்தையுங் குறித்தனவாக இருக்கின்றன. பத்தாவது அத்தியாயத்தின் சடைசிப் பிரகரணத்தில் அடங்கிய விஷயமாகிய சௌத்திராமணியென்னும்யாகமே, பத்தொன்பதாவது அத்தியாயமுதல் இருபத்தொன்றுவது அத்தியாயம் வரையிலுமுள்ள மூன்று அத்தியாயங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. இருபத்திரண்டாவது முதல் இருபத்தைந்தாவது வரையிலுமுள்ள நாலு அத்தியாயங்களில் சர்வலோக அதிகாரங்களைச் செலுத்தவேண்டுமென்கிற ஆசையுள்ள ஒரு ராஜனல் செய்யப்படும் ஒரு அசுவத்தையாவது மற்றயாதொரு மிருகத்தையாவது வைத்தியாகஞ் செய்கிறதைக் குறித்தபாவனைச் சடங்கு அல்லது அசுவமேயாகத்திலுபயோகப்படுகிற பிரார்த்தனைகள் அடங்கியிருக்கின்றன. அடுத்த இரண்டு அத்தியாயங்கள் பலவகை விஷயங்களைக் குறித்தவைகளாக இருக்கின்றன. சௌத்திராமணியாகமும், அசுவமேதயாகமும், இதரவிரண்டு அத்தியாயங்களில் முடிவாயிருக்கின்ற புருஷமேதயாகமும் அல்லது ஒட்டுவமையான நாராணபலிசெலுத்துகைக்கு ஒப்பாகச் செய்யப்படுஞ் சடங்கும் முப்பதாவது முப்பத்தொன்றுவது அத்தியாயங்களில் நிறைந்திருக்கின்றன. அடுத்தமூன்று அத்தியாயங்கள் சருவவெற்றியடைவதற்காகச் செய்யப்படும்சருவமேதயாகத்துக்கும் அல்லது பிரார்த்தனைகளுக்கும் நிவேதனங்களுக்கும் சம்பந்தப் பட்டவைகளாக இருகின்றன. அடுத்த ஒரு அத்தியாயம் இறந்தபிதுருவின் ஆசரிப்பில் செய்யப்படும் பித்துருமேதயம் அல்லது அபகிருத்தியங்களைக் குறித்ததாக இருக்கின்றது.

கடைசியில் சொல்லப்பட்ட ஐந்தஅத்தியாயங்களில்அதர்வணன் புத்திரன் அல்லது சந்ததியாகிய ததயக்கஷிக் குறித்ததாயிருக்கிற இந்த வேதத்தின்வாக்கியங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகளில் நான்கு எக்கியம் நியமம் தவம் முதலாகியபலவித சமயாசாரக் கிரியைகளுக் குபயோகப்பட்ட தோத்திரங்களா யிருக்கின்றன கடைசி அத்தியாயத்தில் ஞானநூல் அடங்கியிருக்கின்றது.

85. இந்த ஐந்து அத்தியாயங்கள் சவிரமேலேகுறித்த தோத்திரத்திரட்டினது பாகத்தில் அடங்கியிருக்கிற வாக்கியங்களின் முழுக் கூறும் தெய்வத்தன்மையுடைய தெய்வபுருஷர்களைக் குறித்தவைகளாக இருக்கின்றன. அவைகள்பிரஜாபதியென்றும் பரமேஷ்டியென்றும் நாராயணபுருஷனென்றும் பேர்வைக்கப்பட்ட முதலில் வெளிப்பட்டவஸ்துவைக் குறித்தவைகளாக இருக்கின்றன. சிலவாக்கியங்கள் சுவயம்பு பிரமத்தைக்குறித்ததாக இருக்கின்றன. மற்றவைகளின்கிரந்த கர்த்தர்கள் கீர்த்திபெற்ற பிரகற்பதி இந்திரன் வருணன் அசுவனி தேவதைகளாக இருக்கின்றார்கள். சிதறியிருக்கிற சிலவாக்கியங்களுக்கு வசிஷ்டர் விசுவாமித்திரர் வாமதேவர் மதுசந்தஸ மேதாதிதர் இவர்களுமஇதரமானிடரும் கிரந்தகர்த்தர்களாகக்குறிக்கப்படுகிறார்கள். அட்டவணையில் சில வாக்கியங்களைக் குறித்து யாதொரு இருடியின் பெயரும் கண்டிருக்கவில்லை. ஆசையால் வைவசுவது அல்லது ஆதித்தன் ஆகியசூரியனுக்கு முதலில் வேதம் வெளிப்படுத்தப்பட்டது. அதேபிரகாரம் யாஞ்ஞவற்கியர் வெளிப்படுத்திய வேதத்தைப் பெற்றுக்கொண்டவரா யிருக்கிறார். அதேபிரகாரம்இருக்கு வேதத்துக்கு நியமிக்கப்படாத வாக்கியங்கள் பிரஜாபதியல்லது பிர்மாவுக்கு வெளிப்படுத்தியனவாகச் சொல்லப் பட்டிருக்கின்றன.

86. யஜுர் வேதத்தின் அநேக தோத்திரங்களும் கீதங்களும், பூர்வியாக்கியானங்களின் முன்னமே மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன, அதின் வாசகப் புணர்ச்சியினது நடைக்கு அவைகள் போதுமான திஷ்டாந்தமாக உபயோகப்படலாம், இவ்விடத்தில் முக்கியமான இரண்டு வாக்கியங்கள் மாத்திரஞ்சேர்க்கப்பட்டிருக்கின்றன முதல்வாக்கியம் சருவமேதயத்தைக்குறித்த தோத்திரங்களின் ஆரம்பமாக இருக்கின்றது, அது இரண்டு அனுவாகங்கள் அல்லது அத்தியாயங்கள் பதினுறுவாக்கியங்கள் அடங்கிய முப்பத்திரண்டாவது அத்தியயனமாக இருக்கின்றது,

87, அக்கினியாண்டு மூலகரணமாக இருக்கின்றது சூரியனும் அதுவாகவேயிருக்கிறன் அந்தப்பிரகாரமே வாயு அதுவாகவே இருக்கின்றது, அப்பிரகாரமே சந்திரனும் அதுவாகவே இருக்கிறன், அதுவே சுத்தபிரமமாகவு மிருக்கின்றது, அந்தஜலங்களும் சிருஷ்டிகளின் கர்த்தாவும் அதுவாக இருக்கின்றன, நிமிஷங்களும் மற்ற காலஅளவுகளும், சோதிவீசுகிறவனிடத்திலிருந்து பிறந்தன அவனே ஒருவனும் ஸபரிசத்தில் அகப்படுகிற ஒருபொருளைப்போல் மேலேயாவதுகீழிலுமாவது மத்தியிலாவது கண்டுபிடிக்கக்கூடாது, யாருடையமகிமை அவ்வளவுபெரிதாயிருக்கின்றதோ அவரிலே உருவமொன்றில்லை, யார்அநேக திவ்வியகீதங்களால் துதிக்கப்பட்டிருக்கிறாரோ அவர் அதுவாகவிருக்கின்றார், சகலமண்டலங்களிலும் வியாபகமாயிருக்கின்றகடவுளாக அவர் இருக்கின்றார் முதற்பேருக அவர் இருக்கின்றார், எவர் கருப்பாசயத்தில் இருக்கிறவராயும், பிறந்தவராயும் பிறக்கப்போகிறவராயும் இருக்கிறாரோ அவரே அதுவாயிருக்கின்றார். அவர் எல்லோரிலும், தனித்தனியாகவும், சருவமாகவும் இருப்பவரேயாம்.

88. யாருக்முன் ஒன்றும் பிறக்கப்படவில்லையோ! யார் எல்லாவஸ்துக்களுமாயிருக்கிறாரோ; அவரே பதினாறு அவயவங்களோடாகிய சரீரத்துடன் சிருஷ்டிகர்த்தாவாகி, சிருஷ்டியில் ஆகந்தங்கொண்டசூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று சோதிகளை யுண்டாக்கினார்.

89, எந்தக்கடவுளுக்கு நாம் நிவேதனஞ் செய்தாலும், அவருக்கேயாம். அவரேசலிலமுள்ள ஆகாயத்தையும் கெட்டியான பூமியையும், செய்து சுவர் என்னுஞ் சூரியமண்டலத்தையும், நாகமென்னும் ஆகாய உறையிடம் அல்லது பரமண்டலத்தையும், ஸ்தாபித்து, வாயுமண்டலத்தில் மழைத்துளிகளை யுண்டாக்கினவராம். நாம் எந்தக்கடவுளுக்கு நைவேத்தியஞ்செய்தாலும். அவருக்கேயாம். அவரை விண்ணுலகமும், மண்ணுலகமும், மனதினுல தியானிக்கின்றன. அவைகள் அவிர்ப்பாகங்களால் உறுதிப்பட்டு ஸ்தாபிக்கப்படுகின்றதுமல்லாமல் அவைகளுக்குமேல் உதித்து வராநின்ற சூரியனுல் பிரகாசிக்கப்படுகின்றன.

90. ஞானியானவன் அந்த இரகசியப்பொருளைப் பார்க்கிறான். அந்தப்பொருளில் இந்தப்பிரபஞ்சமுழுதும் அந்த ஆதாரவிஷ்ணுவில் நித்தியமாயிருக்கின்றது. அவனிலே இந்தவுலகம் அமிழ்ந்திருக்கின்றது. அவனிலிருந்து இந்தப் பிரபஞ்சம் உண்டாகின்றது. ஜீவப்பிராணிகளில் அவன் நானுவடிவங்களோடு புரிமுறைக்காகி நெசவாயிருக்கின்றான். அந்தப் பெரியகாரிய அறிவிப்பின் கருத்தை யறிந்திருக்கிற அறிஞர் அந்தநித்தியப்பொருளை, அந்த அந்தரங்கப்பொருளை, அந்தப்பலவாகிய இருப்பிடத்தைத் தீவிரமாய்க் கொண்டாடக்கடவர். அந்தரங்கத்தில் அடங்கியிருக்கிற சிருஷ்டிதிதி சம்மாரமாகிய மூன்று நிலைகளை யறிந்திருக்கிறவன், தந்தைக்குத்தந்தையாக இருக்கிறான். யாராலேதேவர்கள் மூன்றுவது உலகம் அல்லது பரமண்டலத்திலிருக்கும்போது, சாவில்லாமையைப் பெறுகிறார்களோ, அந்தபபிர்மா நம்முடைய வணங்கத்தக்க தந்தையாகவும், எல்லாவுலகங்களையும், ஆளுகிறதிருவுளச் செயலாகவு மிருக்கின்றார்.

91. ஐசுவரியத்துக் காகவும், ஞானத்துக் காகவும், இந்தவேதிகையின் ஆச்சரியமான இறைவனை இந்திரன்சிநேகனை மிகவும் விரும்பத்தக்க அக்கினியை நான் வணங்குகிறேன். இந்த நிவேதனம் பிரயோஜனப்படுவதாக. ஓ? அக்கினியே எந்தஅறிவினால் எந்தஅறிவைக்கடவுளரும், பிதிர்களும், தொழுகிறார்களோ அந்த அறிவுள்ளவனுகஇன்றைதினம் ஆக்குவாய். இந்தநிவேதனம் பலித முண்டாகக்கடவது. வருணனே எனக்கு ஞான மளிப்பாயாக. அக்கினியே? பிரஜாபதியே? எனக்கு யூகம் அளிப்பீராக. இந்திரனே வாயுவே? எனக்குக்கல்வி அளிப்பீராக. திருவுளமே எனக்கு அறிவு அளிப்பாயாக. இந்தநிவேதனம் அதிட்டமாய்க் கொடுக்கப்படுகின்றது. என்சம்பத்தைக்குருவும், க்ஷத்திரியனும், பாகித்துக் கொள்வாராக. கடவுளர் மேலானபாக்கியத்தை யெனக்களிப்பாராக. அந்தச் சம்பத்தாபிருக்கிறவமக்கு இந்த நிவேதனம் பிரயோசனத்தோடு கொடுக்கப் படுவதாக.

92. இந்தவேதத்தின் நாற்பதாவதும் கடைசியதுமாகிய அத்தியாயம் இதற்கு முன் குறித்திருக்கிற பிரகாரம் ஒரு உபநிஷத்தாக இருக்கின்றது. அது இரண்டு தொடக்கமான மொழிகளால் ஈஷவாசிய மென வழக்கமாக வழங்கப்படுகிறது. இவ்வேளை முதன் மொழி

யினல் ஈஷதயாய மென்றும் வழங்கப்படுகிறது. ஆனல் வாஜஸனேய சன்னித உபநிஷத்தென்று சொல்வது தகுதியுள்ள பெயரா யிருக்கின்றது. இதற்குமுன் சொல்லியிருப்பதுபோல் அதின் கிரந்தகர்த்தா அதர்வணன் புத்திரன் அல்லது சந்ததியாகிய ததியக்கனக இருக்கிறன்.

93. மாத்தியந்தமசாகத்திற்குச் சம்பந்தமாகிய இந்த வேதத்தின் இரண்டாவதுபாகம் சதபத்திய பிராம்மண மென்று பேர் பெறும். இது தோத்திரத்திரட்டைவிட மிகவும் விரிவா யிருக்கின்றது. அதில் பதினலுகாண்டங்கள் அடங்கி யிருக்கின்றன. அக்காண்டங்கள் சம மில்லாத இரண்டுபாகங்களாகப் பாகிக்கப் பட்டிருக்கின்றன. முதல் பாகத்தில் பத்துக் காண்டங்களும், இரண்டாவது பாகத்தில் நாலு காண்டங்களும் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொருகாண்டத்தி லடங்கிய அத்தியாயங்களின் இலக்கம் பலவா யிருக்கின்றன, ஒவ்வொரு பிராமணத்தின் அல்லது பிரத்தி யேகமான விதிகளின் இலக்கமும் அப்பிரகாரமே வித்தியாசங்களாக இருக்கின்றன. புத்தகம் முழுதும் பிரபாதகம் என்னும் அத்தியாயங்களாகச் செய்யப்பட்டிருக்கிற வேறொரு விதமான பிரிவு மேற்கொண்டிருக்கின்றது. கந்திகங்கள் என்னும் சிறியபிரிவுகளாகவும் உட்பிரிவுகளாகவும் செய்யப்பட்டிருக்கிறபிராம்மணங்களின் பிரிவில் மேற்சொல்லிய இரண்டுவிதமான பிரிவுகளும் உண்டாயிருக்கின்றன.

94. வேதத்தின் இந்தப்பாகம் அடங்கிய பதினலுகாண்டங்களில் அறுபத்தெட்டு அத்தியாயங்களுக்குச் சம்பந்தப் பட்டிருக்கிறநூறு அத்தியாயனங்கள் அடங்கியிருக்கின்றன. பிராம்மணம் என்னும்பிரத்தியேகப்பிரிவுகளின் முழு இலக்கம் நானூற்று நாற்பதாக இருக்கின்றன. கந்திகங்கள் என்னும் பிரிவுகளும், இலக்கம் வைக்கப் படுகின்றன. அவைகள் ஏழாயிரத் தறுநூற்றிருபத்து நாலாக இருக்கின்றன.

95. சமயக்கிரியைகளுக்கடுத்த தோத்திரங்களின் ஏற்பாட்டில் தொடர்ந் திருக்கப்பட்ட சமயக்கிரியையைக் குறித்த தேவகற்பனைகளின் இந்தத்திரட்டு மேற்சொல்லிய வரிசைக்கிரமமே அனுசரிக்கப் பட்டிருக்கிறது. முதலாவதிரண்டாவது காண்டங்கள் பௌர்ணமியிலும், அமாவாசியிலும், செய்யப்படுஞ் சடங்குகளையும், ஓமாக்கினி

முதலாகியவைகளின் சடங்குகளேயும், விளக்குகின்றன. மூன்றுவது நாலாவதுகாண்டங்கள் சோமபானஞ் சித்தஞ்செய்யப்பட வேண்டிய விதத்திற்கும், அதைக்குறித்த ஜயாதிஸ்தோமம் முதலாகியவைகளுக்குறித்த இதரசடங்குகளுக்கும், சம்பந்தமாயிருக்கின்றன. ஐந்தாவதுகாண்டத்தில் ராஜசூயம் இவைகள்மட்டும் அடங்கியிருக்கின்றன. அடுத்தநாலு காண்டங்கள் எக்கிய ஓமாக்கினியின் பிரதிஷ்டைக்கிரியைகளைக் கற்பிக்கின்றன. அக்கினி ரகசியம் என்னும் பத்தாவது காண்டம், இச்சடங்குகளினால் உண்டாகும் பிரயோஜனங்களைக் காட்டுகின்றது. இரண்டாம் பாகத்தைச் சேர்ந்தமுதலில் சொல்லப்பட்டமூன்று காண்டங்கள் சௌத்திரா மணியாகத்தையும், அசுவமேதயாகத்தையும், குறித்த வைகானவியாக்கியானியரால்சொல்லப்பட்டிருக்கின்றன. கடைசியதாயிருக்கிற நாலாவதுகாண்டம், வேதாந்தவிஷயத்தைச்சேர்ந்ததாக விருக்கின்றது. ஆரம்பத்தில் பதின்மூன்றுவது காண்டம் முக்கியமாய் அசுவமேதயாகமென்று குறிக்கப்பட்டதாக இருக்கின்றது. பதினாறவதுகாண்டம் விரயத்து ஆரண்ணியகம் என்று சொல்லப்படுகின்றது.

96, இந்த வேதத்தால் விதிக்கப்பட்டிருக்கிற விதமாகச் செய்யப்படும் அசுவமேதயாகத்திலும், புருஷமேத யாகத்திலும், வாஸ்தவமாக அசுவங்களும், மனிதர்களும், பலிகொடுக்கப்படுவன வல்லர். அசுவமேதயாகச்சடங்கில் அநேகவிதங்களாகச் சொல்லப்படும் அறுநூற்றொன்பது காட்டுமிருகங்கள், குடிமுறைக்கடுத்த மிருகங்கள், பட்சிகள், மச்சங்கள், புழுப்பூச்சிகள், இருபத்தொரு ஸ்தம்பங்களில் கட்டப்படுகின்றன. சாதுவானமிருகங்களைக் கற்றாண்கள் மத்தியில் கட்டிச் சில தோத்திரங்கள் ஓதப்பட்டபின்பு பலியாகிய யாதொரு துன்பமுமில்லாமல் அவிழ்த்து விடப்படுகின்றன. மற்றொன்றில் பலிதருவங்களும், நடத்தைகளும், தொழில்களுமுண்டயநூற்றெண்பத்தைந்து மனிதரைப் பதினெருஸ்தம்பங்களிற் கட்டி ஒட்டலங்காரமாகச்சொல்லப்படும் நாராயணபலியைக்குறித்துக் கீதங்கள் ஓதப்பட்டபின்னர் இந்த மானிடபலிகள் காயமில்லாமல் விட்டுவிடப்படுகின்றன. ஓமாக்கினியில் நெய் ஆகுதி செய்யப்படுகிறது. அசுவமேதயாகங்களும், புருஷமேத யாகங்களும், இந்த வேதத்தில் பாவனையான சடங்குகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றனவே யொழியயதார்த்தமானபலியைக் குறித்துச்சொல்லப்பட்டிருக்க வில்லை. இந்த வியாக்கியா

னம் கிரியைமுறைச் சாத்திரிகளாலும், சங்கிதங்களைச்குறித்தும் பிராமணத்தைக் குறித்தும், பேசுகிற வியாக்கியானிகளாலும், பூரணமாய்ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. அவர்களில் ஒருவர் ஒரு யாகத்தில் வாஸ்தவமாகப் பலியிடப்படுகிற பலிகளின் மாம்சம் அந்தப் பலியிடுகிறபேர்களால் தின்னப்படவேண்டுமென்று நியாயஞ்சொல்லியிருக்கிறார். ஆனால் மானுஷமாம்சத்தைத் தின்னும்படி மனிதன் ஒப்புக்கொண்டிருக்கமாட்டான் மானுஷபலிகள் வேதத்தால் விதிக்கப்பட்டிருக்கவில்லையென்று யூகிக்கப்படுகின்றது. ஆனால் அவைகள் விலக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குப் பதிலாகஒப்புவமையான சடங்குகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அல்லது சிலபுராணங்களினுடைய தப்பிதமாகக் கிரகித்த உபமானங்கள் பேரிலும் ஆதாரப்பட்டிருக்கிற அநேக அநியாய வழக்கங்களே ஸ்தாபித்திருக்கிறதந்திர சாஸ்திரங்களுடைய அதிகாரத்தின் பேரிலும் சிலகாலத்தில் அவைகள் வழக்கத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கலாம்.

97, அசுவமேதமென்று சொல்லப்படுகிற சமயக்கிரியையின் விஷயமாயிருக்கிற அசுவம்மிராட்டுவுக்கு அல்லது மூலகாரணமான சருவ விலக்கமானவஸ்துவுக்கு உறுதியான அடையாளமாக இருக்கின்றது. தைத்திரிய யஜுர்வேதத்தின் கடைசிப்பிரகரணத்தில் அசுவமுடினது பலவித்பாகங்கள் காலத்தின் பிரிவுகளைக் காட்டப்பட்டவைகளாக இருக்கின்றன. காலைப்பொழுது அதன் சிரசாகவும் சூரியன் அதன்கண்ணுகவும் வாயு அதன் மூச்சாகவும் சந்திரன் அதன்காதாகவும் இவ்விதமாக இருக்கின்றன. சதபத பிராமணத்தின் பதினாலாவது காண்டத்தில் அதேவிதவாக்கிய மொன்று அசுவமேதஞ்செய்யக் கூடாதென்று ஆலோசிக்கும்படி ஒட்டுவமையான அசுவத்தைக்குறித்து விரித்துக்காட்டுகின்றது. ஜீவதசையிலிருக்கிற மிருகங்களின் சேர்மானம் உண்மையான அசுமேதத்தில் ஆகுவதுபோலப் பாவனைபலியாகி வேதசாஸ்திரங்களின்படி சமஸ்தபரிபூரண வஸ்துவைக் காட்டுகின்றது. ஆகிலும் வேதாதிகாரமில்லாமல் அசுவத்தை வாஸ்தவமாகப் பலியிடுகிறயாகத்திற்கு இந்தக்கிரியை அவசியமாகுமோ ஆகாதோவென்று நிச்சயப்பட்டிருக்கவில்லை.

98, சதபதபிராம்மணத்தின் பதினாலாவது காண்டத்திற் சொல்லப்பட்டிருக்கிற பிரகதாரண்ணியம் வாஜஸனேயி அல்லது வெள்ளை யஜுர்வேதினுடைய முடிவாக இருக்கின்றது. அதிலே ஏழு அத்தியா

யங்கள் அல்லது எட்டு அத்தியயனங்கள் அடங்கியிருக்கின்றன. கடைசியில் சொல்லப்பட்ட ஐந்து அத்தியயனங்கள் ஒரு ஏற்பாட்டில்கடைசி ஆறு அத்தியயனங்களோடு ஒத்திருக்கின்றன மற்றதில் விரயத்து உபநிஷதமென்று அல்லது வாஜஸனேயி பிராம்மண உபநிஷத்து என்றுசொல்லப்படுகிற வேதாந்த கிரந்தமாகின்றது. ஆனால் இது சாதாரணமாய் விரயாரண்ணியக மென்றுவழங்கப்படுகின்றது அதன்முழுப்பாகம் பிரசங்கமாக இருக்கின்றது. யாஞ்ஞவல்கியர் அதன்பிரதானபிரசங்கியாக இருக்கின்றார்.

99, இந்தஉபநிஷத்தின் கருத்தையும்நடையையும்குறித்தச்சில அபிப்பிராயத்தை வெளிப்படுத்தமகாமுக்கியமானவாக்கியங்களில் சில வற்றைஇவ்விடத்தில்சருக்கமாகஎடுத்துக்காட்டப்படும். முக்கியமாய்வித்தியாரண்ணியரால் உரைசெய்யப் பட்டிருக்கிற வாக்கியங்கள் எடுத்துக்காட்டப் பட்டிருக்கின்றன. சிலவாக்கியங்கள் முன்னமே கூறப்பட்டிருக்கின்றன. இதற்கடியில் வருபவைகள் அறியத்தகுதியுடையவைகளாக இருக்கின்றன.

100, விரயத்து ஆரண்ணியகத்தின் ஆரம்பத்தில் அசுவமேதத்திற்காக நிவேதிக்கப்பட்ட அக்கினிமூலத்தைக் குறித்து ஒருவாக்கியமிருக்கின்றது. அது இதற்கடியில் வருவதுபோல் விளக்குகின்றது அதாவது இந்தவுலகத்தில் மனதுண்டாவதற்குமுன் ஒன்றுமிருந்திருக்கவில்லை. இந்தப்பிரபஞ்சம் பட்சித்துவிட ஆசையுள்ள மரணத்தால் சூழப்பட்டிருந்தது ஏனென்றால் மரணமானது ஆவலாய்ப்பட்சிக்கிற பட்சணியாயிருக்கின்றன். அவன்தானே ஆத்துமாவையுடையவனாக வேண்டுமென்று இச்சைகொண்டு மனத்தையுண்டாக்கினன்.

101, இவ்விடத்தில் வியாக்கியானகர்த்தர் மரணம் சொன்னவகிலவண்டத்திலிருந்து பிறந்தநரமனிதனாக இருக்கிறானென்று விளம்பினர். இருக்குவேதத்திலிருந்து உதகரிக்கப்பட்ட வாக்கியத்தில் மரணம்முதலில் உண்டாயிருந்த தில்லையென்று சொல்லப்பட்டிருக்கின்றது. காலவளவின்படி உலகம் அழிந்தும்மறுபடியும் புதுப்பிக்கப்படுகிறதென்றும் கடைசியில் எல்லா வஸ்துக்களும் பெரியபொருளாகி விடுகின்றன வென்றும் அபிப்பிராயத்துக்கு இது எளிதில் ஒத்திருக்கின்றது.

102. வித்தியாரண்ணியரால் இந்த உபநிஷத்தி லிருந்து முதலில் ஆராய்ந்தெடுத்தெழுதியது விசயத்து ஆரண்ணியகத்தின் மூன்றுவது அவிபாக்கியானத்தின் நாலாவது பிரிவு பிராம்மணமாக இருக்கின்ற தஅதுவிசாட்டுவை இதற்கடியில் வருவதுபோல் விவரித்துக் காட்டுகின்றது.

103. இவ்வண்ணமாகச் சரீரம் பிறப்பதற்கு முன்னதாய் வேறுபாடுள்ள வடிவங்களாக இருந்தது. ஆத்துமா மானுஷவடிவு கொண்டு உடனே தன்னைச்சுற்றிலும் பார்த்தான். அந்தஆதிவஸ்து தன்னைத்தவிற மற்றொன்றுங் காணவில்லை. அவன் முதலில் நானேநான் என்று சொன்னான். ஆகையால் அவனுடையபேர் நான் என்பதாக இருந்தது அதன் பின்பும் இப்போது கூடஒருமனுஷனை அழைக்கும்போது நான்தான் என்றுமுதலில் மறுமொழி சொல்லுகிறான். அதன்பின்பு அவனுக்குரிய மற்றொரு பெயரைச்சொல்லுகிறான்.

104. மேன்மையைத்தேடுகிற இதுக்கெல்லாம் முன்பட்டவனாயிருக்கிற அவன் தன்னுடைய சொந்த மேன்மைக்குப் பாபகரமான தடங்கலாயிருக்கிற எல்லாவற்றையுந் தீயால் எரித்து விட்டான். ஆகையால் இந்தவண்ணமையறிந்த மனிதன் இதைச்செய்ததனக்கு முந்தியிருக்க வகைதேடுகிற அவனைவெல்லுகிறான்,

105. அவன்பயமுற்றான் அதனால் தான்மனிதன் தனியாயிருக்கும்போது பயப்படுகிறான், ஆனால் அவன் தன்னைவிட வேறொன்றுமில்லாததினால் நான்பயப்படவேண்டிய தென்னவென்று ஆலோசித்தான், இவ்விதமாக அவனுடைபயம் அவனை விட்டுப்போய் விட்டது பயமானது மற்றொருவனுக்காகையால் அவன் எதுக்காகப்பயப்படவேண்டும்.

106. அவன் ஆனந்தப்படவில்லை ஆகையால் மனுஷன் தனித்திக்கும்போது ஆனந்தப்படுகிறதில்லை, மற்றொருவர் இருக்கவேண்டுமென்று அவன்கோரினான் உடனே அவன்ஒரு ஆண்பிள்ளையும் ஒரு பெண்பிள்ளையும் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டிருக்கும்படியானஅவ்விதமாய்விட்டான், தன்னிலிருந்தே தானே இரண்டாகும்படி இதைச்செய்தான், இவ்விதமாக ஒருபுருஷனும் ஒருமனைவியுமானான் ஆகையால் இது அவ்விதமாகப்பிரிந்த சரீரமாக விருந்தது. அதுதன்

னில்தானே அபூரணமான பாதிசரீரமாக விருந்தது. யாஞ்ஞவல்கியர் அதைப்பாதி சரீரமென்றே சொல்லி யிருக்கிறார். இந்த வெற்றிடம் ஸ்திரியினல் பூரணமாக்கப் பட்டிருக்கிறது, அவன் அவளைச் சேர்ந்தான். அதனல்மனுடர் உற்பத்தியானர்கள்.

107. அவள் அவனிடத்திலிருந்து என்னை யுண்டாக்கி யிருக்க முறையற்ற விதமாக அவன் என்னை எப்படிச் சேருவான். நான் இப்போது ஒரு மாறு வேஷங்கொள்வே னென்று அனு மானத்தோடு ஆலோசித்து அவள் ஒருபசுவானுள், அவன் ஒரு இடபமாகி அவளைப்புணர்ந்தான், கன்றுகள்பிறந்தன. அவள் ஒரு கோளிகைக்குதிரையானுள் இவன் ஒருமாப்பிள்ளைக் குதிரையானன். அவள் ஒருபெண் கழுதையானுள். இவன்ஒரு ஆண்கழுதையானன். இவ்விதமாக அவன்அவளை மறுபடியுஞ்சேர்ந்தான். ஒரு குளம்புள்ள சந்ததிகள் உண்டாயின, அவள் ஒருபெண் வெள்ளாடானுள். இவன் ஆண் வெள்ளாடானன். அவள் ஒருபெண் செம்மறியாடானுள், இவன்ஒரு ஆண்செம்மறியாடாகியவளைப் புணர்ந்தான் அதனல்செம்மறி ஆடுகளும் ஆடுகளும் உற்பத்தியாயின. இவ்விதமாக மகா நுட்பமான ஜந்துக்களாகிய யாவற்றையும் ஜதைஜதையாகச் சிருஷ்டித்தான்,

108. இந்த வாக்கியத்தின் அனுபந்தம் அதிசய முடையதாக இருக்கின்றது, ஆனல் அதை இவ்விடத்தில் குறித்துப் பேசினல் வெகுவாய்விரியும், விராட்டு தானுகிய வஸ்துவை ஆணுகவும் பெண்ணுகவும் பிரித்ததாகச்சொல்லப்படும் அபிப்பிராயம்ஒருபுராணத்திற் சொல்வதைவிட அநேக புராணங்களிற் சொல்லப் பட்டிருக்கிறது; அந்தப் பிரகாரமே முதல் மனு அவனுடைய புத்திரி பாகிய சதரூபாளுடன் முறைதப்பின விவாகமும் சம்பந்தமுஞ் செய்ததாகச் சொல்லுகின்றது, உபநிஷத்தின் வியாக்கியானிகள் அந்தக்கதை இந்த இடத்தில் குறிக்கவேண்டுமென்று அபிப்பிராயஞ் செய்கிறார்கள், ஆனல் மனுவைக்குறித்துச் சொல்லப்பட்ட ஏற்பாடுகள் விராட்டு அந்தப்படிபிறந்தவர்களின் சந்ததியென்றும் மனு அவருடைய சந்ததி யென்றுங் காட்டுகின்றன.

109, மேலேசொல்லிய வியாக்கியானகிரந்த கர்த்தர்கள் விரய த்து ஆரண்ணியகத்தின் நாலாவது அத்தியாயத்தி லிருந்து மூன்று பிரசங்கங்களைத் தெரிந்தெடுத்தார்கள், முதல் பிரசங்கத்தில் இந்த அத்தியாயம் ஆரம்பமாயிருக்கிறது, அதில் மூன்று பிராம்மணங்கள டங்கியிருக்கின்றன,

110, ஒருயோகியும், கதாப்பிரசங்கியும், பாலா என்னும் பே ருள்ளதாயாரால் பாலாகீ என்றும், கார்க்கயன் என்னும் மூலபுரு ஷனல் கார்க்கேயன் என்றும் பேர்பெற்றவருமாகிய ஒரு ஆசாரி யர் காசிதேசத்தரசனுகிய அஜாதசத்துருவைவந்து கண்டு அவருக் குப் பிர்மக்கியாலேபதேசம் செய்வேனென்றார். அரசனவர் அப் படி அவர்சொன்னதற்காக, விஸ்தாரமான காணிக்கைகள் சமர்ப்பி த்தார். அந்த ஆசாரியரும், தம்முடைய கோட்பாட்டை வெளிப்படு த்திச் சொல்லுகிறதாவது, சூரியனில் விளக்கமாயும், மின்னலில் பிர காசமாயும், பரமாணுசுவருபமாயும் இருப்பவரும், பூதியங்களுக்குள் வாயுவில், அக்கினியில், அப்புவில், படிகத்தில், ஆகாயமண்டலங்களி ல், நிழலில், ஆத்துமாவில் விளக்கமாய் இருப்பவரும் யாரோ? அவ ரையேகடவுளாக நான் ஆராதிக்கிறேன், அறிகிறேனென்றார். அரச னவர் வேதாந்தசாஸ்திரங்களை நன்று யுணர்ந்திருப்போராகையா ல்அந்தந்த அபிப்பிராயங்களைக் கிரமக்கிரமமாய்ப் பேசித் தோற்கடி த்தார். மேலே அந்த ஆசாரியர், மௌனமாயிருப் பதைக்கண்டு, நீர்சொல்லவேண்டிய தெல்லாம் இவ்வளவுதானுவென்று கேட்டார் எல்லாம் இவ்வளவுதானென்று கார்க்கேயர் மறுமொழி சொன்னர் அப்போது அரசன், பிர்மக்கியானத்துக் கிவ்வளவு ஞானம் போதா னென்றார். இதைக்கேட்ட கார்க்கேயர் உமக்கு நான் சிஷ்யனுகிவிடு கிறே னென்றார். அரசன்ஒரு ஆசாரியர்சமயாசாரவுபதேசத்துக்காக ஒரு க்ஷத்திரியனிடத்தில் அடுக்கிறது உலகவொழுக்கத்துக்கு விரோ தமாயிருக்கும் ஆனல் உமக்கு அந்தக்கியானத்தை யுபதேசஞ் செய் வேனென்று அவரைக்கையைப் பிடித்துக்கொண்டு எழுந்து, ஒரு மனுஷன் நித்திரைசெய்கிற இடத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் அந்தநித்திரை செய்பவனை அந்த ஆசாரியினுடைய கோட்பாட்டுக்கு இசைந்தபலபெயர்களாலும் அவரழைத்தார் அதனல் எழுப்ப மாட்

டாதவராகி நித்திரைசெய்கிறவனை அசைத்தெழுப்பினர் பிற்பாடு ஆசாரியரைப்பார்த்து அந்தமனுஷன் இவ்விதமாக நித்திரை செய்துகொண்டிக்கும் போது, அறிவு ரூபமாயிருக்கிற அவனுடைய ஆத்துமா எங்கேயிருந்ததென்றும், அவன்விழித்துக்கொண்டபோது அவனுடைய ஆத்துமா எங்கிருந்து வந்ததென்றுங் கேட்டார். கார்க்கேயர் இந்தக்கேள்விக்குத்தரவு சொல்லமாட்டாதவரானர். அப்போது அரசனவர் வேதாந்த அபிப்பிராயப் பிரகாரம் ஆத்துமா மனசு இவற்றினுடைய சுவபாவத்தை வெளிப்படுத்தத் தொடங்கினர். அந்தச்சாஸ்திரங்களை யோசிப்பது இந்தவியாக்கியானத்தின் காரியமல்ல. ஆதலால் அந்தப் பிரசங்கத்தின் மற்றபாகம் இவ்விடத்தில் எழுதப்படவில்லை.

111. விசித்திரவிஷயம் அடங்கிய அடுத்த ஒருபிரகரணம், யாஞ்ஞவல்கியருக்கும், அவருடைய மனைவியாகிய மைத்திரேயிக்கும். நடந்த சம்பாஷணையாக இருக்கின்றது. அவர் உலகவாழ்க்கையினின்றும் துறவுகொள்ளப் போகிற தனது எண்ணத்தை அவளுக்குத்தெரிவித்து, அவளுடைய சம்மதியைக் கேட்டுத் தன்னுடைய லௌகிக யவளுக்கும் அவளுடைய இரண்டாவதி மனைவியாகிய காத்தியாயனிக்கும். பகிர்ந்து கொடுப்பேனென்றார், அதற்கவள் நானிகள் நிறைந்த இந்தப்பூமண்டலம் முழுமையும் என்னுடையதாயிருந்தாலும், சாவில்லாத வள்ளாவேனே வென்றாள். அதற்கு யாஞ்ஞவல்கியர் நீசாவில்லாதவளாகமாட்டாய். தனங்கள் ஜீவனத்துக்கு மாத்திர முதவத்தக்கதேயாம். ஆனால், சாவில்லாமை செல்வத்தினால் அடையத்தக்கதல்லவென்றார் மைத்திரேயி அவரைப் பார்த்து, எதன்மூலமாய் மரண மில்லாமை எனக்குண்டாகாதோ அதனால்எனக்குப்பிரயோஜனமில்லையென்று கூறினதன் மூலமாய் முத்தியடையலாமோ அதைக்குறித்து நீர் அடைந்திருக்கிற ஞானத்தை யெனக்குபதேசஞ் செய் வீரென்று சொல்லித் தன்கணவனை வணங்கிக் கேட்டாள். யாஞ்ஞவல்கியர் என்பிரியமே! எனதன்புடையவளே! ஒரு நல்லசந்தோஷகரமான அபிப்பிராயத்தை எனக்கு வெளிப்படுத்தினாய். வந்துட்காரு அந்தக் கேள்ப்பாட்டை உனக்குபதேசஞ் செய்வேன். அதைநீயுணரக் கடவாயென்றார். அந்தப்பிரசங்கத்தில் துறவினால் நித்தியத்தை யடையலா மென்கிறகியானத்தையாஞ்ஞவர் கியர்விளக்கினர். ஆகையால், உலகப்பற்றுக்கள் ஆத்துமாவுக்குச் சம்பந்தமுடையன வாக இருக்கின்றன. எல்லா

வஸ்துவும் ஆத்துமா வாகையால், எல்லாப் பொருள் களையும், இது வென்றே யோசிக்கப்படவேண்டும், ஆகையால், எல்லாப் பொதுவா னநினைப்பும், முக்கிய நினைப்பும், கடைசியில் ஒன்றாய் நிருணயிக்கத் தக்கனவாக இருக்கின்றன, அந்த ஒன்றி லிருந்து எல்லா மூண்டாகி அதில்தானே எல்லாம் ஒடுங்குகின்றன. அதுவே பரமாத்துமாவென் றநிச்சயிக்கப்படுகின்றது. இந்த ஞானத்திலேதான் முத்தியடைய வேண்டும்.

112. இந்தப்பிரசங்கத்தில் பேசப்படும் ஏதுக்களுக்கு ஒருமா திரியாகப் பலசங்கதிகளைக்குறித்து ஒரு முக்கியமான வாக்கியத்தை த்தெரிந் தெடுத் தெழுதப்படும். அதில் வேதங்களின் கணக்கும், அவைகளிலடங்கிய பலவிதவாக்கியங்களின் கணக்கும், அடங்கியிரு க்கின்றன. இந்தவியாக்கியானத்தின் ஆரம்பத்தில் சொல்லி யிருக்கப் கப்பட்ட அபிப்பிராயங்கள் அதனால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன.

113, ஈரவிறகில் பற்றவித்த அக்கினியிலிருந்து வெவ்வேறுக வுண்டாகிற புகையைப்போலவும், பலவஸ்துக்களைப் போலவும், இந் தப் பெரியவஸ்துவினிடத்திலிருந்து இருக்குவேதம், யஜுர்வேதம், சாமவேதம், அங்கீரசம், இதிகாசம், புராணம், சாஸ்திரங்கள், உப நிஷத்துகள், சுலோகங்கள், பழமொழிகள், வியாக்கியானங்கள், திஷ் டாந்தங்கள் இவைகளெல்லாம் அதனால் உயிர்ப்பிக்கப் பட்டிருக் கின்றன.

114, இவ்விடத்தில் நான்குவகை மந்திரங்களும், எண்வகைப் பிராம்மணங்களுஞ் சொல்லப்படுவனவாக வியாக்கியானிகள் குறிக் கிறார்கள். நாலாவதுவித மந்திரங்களில் அதர்வணனுக்கும், அங்கீரச னுக்கும், உபதேசமாகி அவர்களால் வெளியிடப்பட்ட மந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகள், அதர்வணவேத மென்றருத்தமாகி ன்றன. இதிகாசம் பிராம்மணமென்னும் வேதங்களின் இரண்டாவது பகுதியில் கதை சரித்திரமாகச் சொல்லுகிற வாக்கியங்களைக் குறிக்கி ன்றது. அதற்குத்திஷ்டாந்தம் ஊர்வசியன்னுந் தெய்வப்பெண்ணு க்கும், புரூரவசன் என்பவனுக்கும், நடந்த சரித்திரங்களைப் போலே யாம். புராணமென்பது சிருஷ்டியைக் குறித்துப் இன்னும் அப்படி ப்பட்ட விஷயங்களைக் குறித்தும் சொல்லப்பட்டகதைகளை விளக்கப்

பட்டதேயாம். சாஸ்திரங்க ளென்பவை சமயாசார ஆராதனைகளைக் குறித்தவைகளேயாம். சுலோகங்கள் என்பவை ஞாபகக்குறிகளின் பாவிவடிவுகளாக இருக்கின்றன. பழமொழிக ளென்பவை சுருக்க மரனடையுடைய சிறுவாக்கியங்களாக இருக்கின்றன. வியாக்கியா னங்களென்பவை, அப்படிப்பட்டவைகளுக்குச் செய்யப்பட்ட வுரை களாக இருக்கின்றன. திஷ்டாந்தங்கள் என்பவை, மந்திரங்களின் அருத்தங்களை விளக்கப்புட்டவைகளாக இருக்கின்றன.

115, இவ்விடத்தில் இதிகாசங்களும், புராணங்களும், அதே பேருடைய புராணச்செய்யுள்க ளல்லவென்று சொல்வது வீணுகமா ட்டாது. ஆனல் வேதங்களின் சிலவாக்கியங்களும் அந்தச் செய்யுள் களில் இடையில்சேர்க்கப் பட்டிருக்கின்றன. வேதங்களின் அந்தப் பாகங்களெல்லாம் பிராம்மணமென்று சொல்லப்பட் டிருக்கின்றன. அதன்திஷ்டாந்தங்கள் இப்போது பிரகிருதவியாக்கி யானத்தில் பல விடங்களில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன.

116, மேற்சொல்லிய யாஞ்ஞவற்கியருக்கும், மயித்திரேயிருக் கும், மத்தியில் நடந்தசல்லாபம், ஆறவது அத்தியயன முடிவில் சுரு க்கமும், அவசிய மில்லாமையு மாகிய சில சேர்மானங்களைக் கண்டு மறுபடியும் சொல்லப் பட்டிருக்கின்றது. இந்தவிடத்தில் ஆன்மாவி னுடைய ஏகத்துவத்தைக்குறித்து நடந்த பிரசங்கம் அடுத்துச்சொல் லப்பட்டிருக்கின்றது. அதன்கடைசிப்பாகம் இரண்டு அசுவனிகளுக் குஅதர்வணன் சந்ததியாகிய ததியக்களுல் சொல்லப்பட்ட பிரசங்க மாகவிருக்கின்றது.

117, இந்தவுபநிஷத்தினது ஐந்தாவதாறவது அத்தியயனங்க ளில் எதில்யாஞ்ஞவற்கியர் பிரதானபிரசங்கியா யிருந்தாரோ அந்தப் பிரசங்கங்கள் அடங்கியிருக்கின்றன.

118, ஆறவது அத்தியாயத்தின் யாஞ்ஞவற்கியருக்கும், ஜனக ருக்கும், நடந்த இரண்டுபிரசங்கங்கள் அடங்கியிருக்கின்றன, அவற் றில் வேதத்தின் இந்தப்பாகம் யாரால் வரிசைக்கிரமமாய்க் கற்பிக்க ப்பட்டிருக் கிறதோ அந்தவுபாத்தி யாயர்களுடைய பெயர்களின் அட்டவணையும் கண்டிருக்கின்றன.

119, விரயத்து ஆரண்ணியத்தின் மற்றபாகம் உபாத்தியாயர்களுடைய அட்டவணையோடு அதுமுடிந்திருப்பதாகச் சொல்லப்பட வேண்டும்.

120, கானவசாகத்துக்குச் சம்பந்தமாயிருக்கிற அனுரூபபத்திரத்தோடு வாஜினம் அல்லது வாஜஸ்நேயி யஜுர்வேதத்தின் எல்லாச் சாகைகளுக்கும் பொதுவாயிருக்கிறதாக வியாக்கியானிகளால் சொல்லப்படுகிற ஒரு விசேஷ அட்டவணை சேர்க்கப் பட்டிருக்கின்றது. அது சேர்க்கப்பட்டிருப்பது ஏதுக்கென்றால் அந்தவேதம் வெளிப்படுத்தப்பட்ட காலத்துக்கு முன்வரைக்கும் அது இருந்தவிதத்தைவிளக்குவதற்கேயாம். அதுமேற்சொல்லிய அட்டவணையில் யாஞ்ஞவல்கியருடைய ஐந்தாவது சந்ததியாகிய சாஞ்சீவியின் புத்திரனிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. அது அந்தரிஷிபெயரைக்குறித்து ஒன்றுங்கட்டாமல் பிரமத்தினிடத்திலிருந்து உபதேசம்பெற்ற பிரஜாபதியால் உபதேசிக்கப்பட்டிருந்த காவசேயன் என்றுபெயருள்ளதுரு என்பவன் வரைக்கும் முந்தியபத்துச்சந்ததிகள் ஏறியிருக்கின்றதாயிருக்கின்றது.

121, கடைசியில் சொல்லப்பட்ட இருடியாகிய கவஷ்யன் புத்திரனாகிய தருவை, பரிக்ஷித்து மைந்தனாகிய ஜனமேஜயனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தகுருவாகிய ஐத்தரேயனிலிருந்து பூர்வமேற்கோளில் குறித்திருக்கின்றது.

122, வெள்ளை யஜுர்ஸ்ஸைவிடத்தைத்திரீயம் அல்லது கறுப்புயஜுர்ஸ்ஸுமந்திரங்கள் அதிக விஸ்தாரமாயிருக்கின்றன. ஆனால் இருக்குவேதத்தைவிடக் கொஞ்சமாயிருக்கின்றன, அதன்சன்னிதம் அல்லது மந்திரத்திட்டு ஏழுகாண்டங்களாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதில் ஐந்துமுதல் எட்டுவரையிலுள்ள அத்தியயனம் பிரஷ்ணம் அல்லது பிரபாதங்கள் அடங்கியிருக்கின்றன. அந்தந்த அத்தியாயம் அநுவாகங்களாக உட்பிரிவு செய்யப் பட்டிக்கின்றது அந்த அநுவாகங்கள் மூன்றுவது ஆறுவது காண்டங்களில்சமமாகப் பாகிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் மற்றவைகளில் அதிகமாகவும் குறைவாகவும் பாகிக்கப் பட்டிருக்கின்றன. எல்லாங் கூடி அறுநூற்றைம்பதுக் கதிகமாகின்றன.

123, காண்டங்களாகவகுக்கப்பட்ட வேறொருவிதம் அட்டவணையில் கண்டிருக்கின்றது. இந்தஏற்பாட்டில் ஒவ்வொருகாண்டமும் வெவ்வேறு விஷயத்திற்குரியதாயிருக்கின்றது. அதில் பிரஷ்னங்கள் இத்தனையென விவரிக்கப்பட்டு யிருக்கின்றன. இதல்லாமலும் சன்னிதத்தில் தானே ஒவ்வொரு பிரிவிலிருக்கிற வசனங்களித்தனையென்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அந்தப்பிரகாரமே ஒவ்வொருவசனத்தில் இத்தனை அசைகளென்றுங் கணக்கேற்படுத்தப் பட்டிருக்கின்றன.

124, இந்தமந்திரத்திரட்டில் முதலாவது அநுவாகம் வெள்ளையஜுஸ்ஸில் முதலாவது கந்திகத்திற்கு ஒத்திருக்கின்றது மற்றவைகளுக்கேல்லாம் வித்தியாசமாக இருக்கின்றது. அந்தப்பிரகாரமே விஷயங்களுக்குறித்த ஏற்பாடுகளுமிருக்கின்றன. விஷயங்களில் அநேகம் இரண்டு வேதங்களிலும் உண்மையாகவே ஒரேமாதிரியாக இருக்கின்றன. ஆனால் பலவிதமாகவைக்கப்பட்டும் நடப்பிக்கப்பட்டும் வருகின்றன. இவ்விதமாக இராஜசூய மென்று சொல்லப்படும் சடங்கு முதலாவது அஷ்டகத்தின் எட்டாவது பிரஷ்னத்தோடொத்திருக்கிற ஒரு காண்டத்தில் அடங்கியிருக்கின்றது. இது முன்னே சொல்லியிருக்கிற பிரஷ்னத்தில் பதினொன்று அநுவாகங்களில் அடங்கியவாஜபேயத்திற்கும் அதைக்குறித்துச் செய்யப்படும் அனுஷ்டானங்களின் விதத்திற்கும் சமபந்தமாயிருக்கிற இரண்டுகாண்டங்களுக்குப்பின் வருகின்றது. நாலாவது ஐந்தாவது அஷ்டகங்களில் அடங்கிய நாலு காண்டங்களின் விஷயம் ஒமாக்கினியைக்குறித்ததாக இருக்கின்றது முதலாவது அஷ்டகத்தின் இரண்டாவது மூன்றாவது அத்தியயனங்களிலும் அதவ்ரவேள்வியே குறிக்கப்பட்டிருக்கின்றது. இந்தவிஷயம் ஏழாவது அஷ்டகத்திலும் கடைசி அஷ்டகத்திலும் தொடர்ந்திருக்கின்றது அந்தக்கடைசி அஷ்டகம் சோமபானஞ் சித்தப்படுத்தப்படும்விதங்களும், அதைப்பானஞ்செய்யப்படும் விதங்களும், அடங்கிய ஜ்யோதிஸ் தோமத்தைக்குறித்து விரிவாகச்சொல்லுகின்றது. அசுவமேதம், நரமேதம், பித்திரிமேதம், அவைகளின் இடங்களில் வெவ்வேறாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது இத்தவேதத்

தில் இரண்டாவது பாகத்திலும் மந்திரத்திரட்டிலுமேயாம் பலவிடங்களில் கூறப்பட்டிருக்கிற மற்றவிஷயங்கள் அனந்தங்களாக இருக்கின்றன. அவைகளைவிரிவாயெடுத்துச் சொல்லவேண்டுமென்றால் தொல்லையாய் முடியும்.

125. வசனங்களைச்செய்த இருடிகளில் நரமனுஷியராகிய கிரந்தகர்த்தர்களில்லை. அட்டவணையிற் காட்டியிருக்கிற இரண்டாவது வகுப்புப் பிரகாரம் ஒன்பது முழுக் காண்டங்களும் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரஜாபதியாலும், பலகாண்டங்கள் சந்திரனுயசோமனாலும், ஏழுகாண்டங்கள் செஞ்சுடராகிய அக்கினியினாலும், பதினாறுகாண்டங்கள் எல்லாத்தேவர்களாலும் கூறப்பட்டிருக்கின்ற வைகளாகக் காணப்படுகின்றன. சிலவாக்கியங்கள் ஆத்திரேயசாகத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிற அட்டவணையில் குறிக்கப்பட்டாவிட்டாலும் வியாக்கியானிகளால் அவைகளின் உண்மையான கிரந்த கர்த்தர்களின் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

126. இந்தவேதத்திலிருந்து அநேக மந்திரங்கள் பூர்வவியாக்கியானிகளால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. மற்றவிசேஷவாக்கியங்கள் இந்த மந்திரத்திரட்டின் விசாரணையில் வந்திருக்கின்றன. ஏழாவது காண்டத்திலிந்தும், கடைசிஒண்டத்திலிருந்தும், இதற்கடியில் வரப்பட்டவை தைத்திரீய பஜுர்வேதத்திற்கு மாதிரியாகஎடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. இதற்குமுன் உதகரித்திருக்கிற அநேகத்தைபோலச் சிருஷ்டியைக் குறித்த அபிப்பிராயங்கள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன, பூர்வமதத்தை விளக்குவதில் சில முக்கியமான வாக்கியங்கள் இவ்விடத்தில் தெரிந்தெடுத்தெழுதப்பட்டிருக்கின்றன. இப்போது சொல்லப்பட்ட விஷயம் வராக அவதாரக்கதைக்கு மூலமான புராணத்தைக் குறித்ததாக இருக்கின்றது, இதிலிருந்து கற்பமென்றுசொல்லப்பட்ட கணிதகாலங்குறிக்கப்பட்டிருக்கின்றது

127; ஜலங்கள் மாத்திரமிருந்தன. இந்தவுலகம் ஆதியில் ஜலமாகவிருந்தது. இதில் சிருஷ்டி கர்த்தாவாயுவாகி அசைந்தாடிக் கொண்டிருந்தார் அவர் இந்தபூமியைப்பார்த்து வராகரூபமாகி அதை யெடு

த்துத் தாங்கிக் கொண்டிருந்தார், பிற்பாடு பிரபஞ்ச சிற்பாசாரியாகிய விசுவகர்மாவாகி இந்தப்பூமியை உருப்படுத்தினர். அது அபாரதமர கிவெளிப்படையான பிருதுவியாயிற்று, அதனால் பூமிக்குப் பிருதுவி யென்று பெயரிடப்பட்டது,

128, சிருஷ்டிகர்த்தா பூமியைக்குறித்து ஆழிய சிந்தையாய்த் தியா னித்துப்பார்த்துத் தேவர்களையும், வசுக்களையும், உருத்திரர்களையும் ஆதித்தர்களையும், சிருட்டித்தார், அந்தத்தேவர்கள் சிருட்டி கர்த்தா வைநோக்கி சிவகோடிகளே நாங்கள் என்னமாகச் சிருட்டிப்போமென்றார், அதற்கவர் நான் ஆழ்ந்ததியானத்தால் உங்களைச் சிருட்டித்த தபோல நீங்களும் அவ்விதமே தபசுமூலமாய்ச் சிவகோடிகளைச் சிரு ட்டிக்கும் படியானவகை தேடுங்களென்றார். அவர் அவர்களுக்கு வேதாக்கினியைக்கொடுத்து இந்த வேதாக்கினியைக் கொண்டு தேவ பக்தியை முடியுங்களென்றார், அதைக்கொண்டு அவர்கள் தபசுகளைச் செய்தார்கள். ஒருவருடத்தில் ஒரு பசுவையுண்டாக்கினர்கள். அந்த ப்பசுவைக்காக்கும்படி வரிசை பிரமப் பிரகாரம் வசுக்களுக்கும் உரு த்திரருக்கும், ஆதித்தியருக்கும், அவர்கொடுத்தார். வசுக்களும், உரு த்திரரும், ஆதித்தியரும், வெவ்வேறாக அந்தப்பசுவைக்காத்தார்கள் அதுவசுக்களுக்கு மூந்நூற்று முப்பத்து மூன்று கன்றுகளையும் உரு த்திரர்களுக்கு அத்தனை கன்றுகளையும் ஆதித்தியருக்கு அத்தனை கன்றுகளையும் ஈன்றது இவ்விதமாக அந்தப்பசு ஆயிரமாவதாயிற்று,

129, அவர்கள் சிருட்டி கர்த்தாவை நோக்கித் தானத்துக்காக ஆயிரம் பசுக்களைத் தானஞ்செய்து ஒரு வேள்வியைச் செய்யத் தங்க ளுக்குத்தரவாகவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அவர் வசு க்களைப்பார்த்து நீங்கள் அக்கினி ஸ்தோமனைக்கொண்டு அந்தவேள்வி யைமுடிக்க வேண்டியதென்று அவர்கட்கு ஆக்கியாபித்தார். அவர்க ள்இந்த உலகத்தை வென்று அதையந்த ஆசாரியருக்குக் கொடுத்து விட்டார்கள். அவர்உருத்திரரைநோக்கி ஊர்த்தயனைக்கொண்டு வேள் வியை முடிச்சும்படி அவர்கட்கு ஆக்கியாபித்தார். அவர்கள் மத்திய லோகத்தைவென்று எக்கியகாணிக்கைக்காகக் கொடுத்து விட்டார்க ள்அவர் ஆதித்தரைநோக்கி அத்திராத்தனைக்கொண்டு வேள்வியைமுடி க்கும்படி அவர்கட்கு ஆக்கியாபித்தார், அவர்கள் மற்றொரு லோகத் தைவென்று ஆசாரியர்களுக்குத் தானமாக கொடுத்து விட்டார்கள்.

130, இந்தப்பிரகரணத்தின் முடிவிலும், மற்றதிலும், யாகம் நிறைவேற்றுகிற ஆசாரியருக்கு ஆபிரம்பசுக்கள் கொடுக்கப்படவேண்டுமென்பது குறிக்கப்பட்டிருக்கிறது.

131, இந்தவேதத்தின் இரண்டாவது பாகத்திற்கு ஒரு ஆரண்ணீயம் சம்பந்தமாயிருக்கின்றது சந்நிதம்போலவே பிரஷ்ணங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் அவை அநுவாகங்களாக உட்பிரிவுசெய்யப் பட்டிருக்கின்றன. அவை வசனங்களும் அல்லது பிரிவுகளுமென இலக்கமிட்டிருக்கின்றன. அவைகளில் அசைகளும் கணக்கிடப்பட்டிருக்கின்றன. பலவிஷயங்கள் பிரகாரம் காண்டங்களாகவகுக்கப்பட்டிருக்கின்றன. முதலில் ஆறு பிரஷ்ணங்களும், அவைகளுக்குச் சம்பந்தமாகிய சிலகாண்டங்களும் சமயாசாரகிரியைகளைச் சார்ந்தவைகளாக இருக்கின்றன. அடுத்த இரண்டுபிரஷ்ணங்கள் மூன்று உபநிடதங்களைக்குறித்தவைகளாகஇருக்கின்றன, அல்லதுஅவைகளில் வழக்கமாய் உதகரிக்கிற இரண்டுஉபநிடதங்களில்ஒன்றுசாதாரணமாகத்தைத்திரீயகஉபநிடதமென்றுவழங்கப்படுகின்றது. மற்றொன்றுநாராயணவுபநிடதமென்றுசொல்லப்படுகின்றது. அதுஅதர்வணவேதத்திற்குமுழுதும் சம்பந்தமாயிருக்கிறமற்றொரு உபநிடத்திலிருந்துபிரித்தறியும்பொருட்டு மகாநாராயண உபநிடதம் அல்லது விரயன் நாராயண வுபநிடதமென்று வழங்கப்படுகின்றது. இவைகளெல்லாம் அதர்வணவேதத்திற்குச் சம்பந்தமாயிருக்கிற வேதாந்தநூல்களினது திரட்டில் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆலை கடைசியில் சொல்லப்பட்டது, இரண்டு உபநிடதங்களாக உட்பிரிவாக்கப் பட்டிருக்கிறது.

132, இந்தயசுர்வேதத்துக்கு ஒருவிசேஷ திஷ்டாந்தத்துக்காக வாருணி அல்லது இரண்டாவது தைத்திரேயக வுபநிடதத்தின் மூன்றாவது அத்தியாயத்தின் ஆரம்பமும், கடைசி அத்தியாயமும் முதலாவது உபநிடதத்தின் முகவுரை அத்தியாயமும் எடுத்து உதகரிக்கப்படுகின்றன.

133. வருணன் சந்ததியான பிருகு என்பவர் தம்முடைய தந்தையை நெருங்கிப்போய், வணங்கப்பெற்ற தந்தையே; எனக்குப்பிரமத்தைத்தெளிவிக்கவேண்டுமென்றார். அதற்குவருணன் இதற்கடியில்வருவதை விளக்கினார். உண்டி (அல்லது-சரீரம்.) உண்மை (அல்லது-பிராணன்.) பார்வை, கேட்டல், மனது (அல்லது-எண்ணம்.) பேச்சு இவைகளும், மற்றெல்லாப் பதார்த்தங்களும் எவ்விடத்திலிருந்துண்டாயினவோ அதுவும், பிறந்தபோது எதனால் ஜீவித்திருக்கின்றனவோ அதுவும், அவைகள் எதைப்பராமரிக்கின்றனவோ அதுவும், எதில் அவைகள் செல்லுகின்றனவோ அதுவுமே பிரமமாக இருக்கிறது.

134. அவர் தபோ நிஷ்டையிலிருந்து கியான திருஷ்டியினால் உண்டி அல்லது சரீரமே பிரமமென்றறிந்தார், ஏனென்றால் எல்லாச்சீவர்களும் உண்டியிலிருந்தே உண்டாயினார்கள். பிறந்த போதும் உண்டியினாலேயே பிழைத்திருக்கிறார்கள். உண்டியைப் பராமரிக்கிறார்கள். உண்டிக்குள்ளாகவே செல்லுகிறார்கள் ஆதலால். இதையவர்கண்டறிந்தார். ஆனால் இன்னம் திருப்தியையடையாமல் வருணனாகிய தந்தையைக்கிட்டிப்போய் வணங்கப்பெற்ற தந்தையே! பிரமத்தையெனக்குத் தெளிவிக்கவேண்டுமென்றார். வருணன் நிஷ்டையினால்பிரம ஞானத்தையடையென்று மறு மொழிசொன்னார் பிரமம் அனுசந்தானப் பொருளாயிருக்கிறதென்றார்.

135. பிருகு ஆனவர் கனயோகத்திலிருந்து பார்த்து உயிர்ப்பாகிய பிராணனே பிரமமாக்கக்கண்டார், ஏனென்றால் இந்த வஸ்துக்களெல்லாம் உண்மையாகவே உயிர்ப்பிலிருந்து உண்டாயிருக்கின்றன. பிறந்தபோது உயிர்ப்பினாலேயே அவைகள் சீவித்திருக்கின்றன. உயிர்ப்பையே அவையவை பராமரிக்கின்றன. உயிர்ப்பிலேயே அவைகள் செல்லுகின்றன ஆதலால். இதையவர் உணர்ந்தார் ஆனால்மறுபடியும் அவர்தந்தையாகிய வருணனைக் கிட்டிப்போய் வணங்கப்பெற்ற தந்தையே! பிரமத்தையெனக்குத் தெளிவிக்கவேண்டுமென்றார். அதற்குவருணன் கனயோக நிஷ்டையினால் தேடியறி-அதுதான்பிரமமென்றார்.

136, விஷ்டையிலிருந்து தியானித்து அறிவேபிரமமாகக் கண்டார். ஏனென்றால், இந்த எல்லாஜீவர்களும் உண்மையாகவே அறிவிலிருந்துண்டாயிருக்கிறார்கள். பிறந்தபோது அறிவினாலே ஜீவித்திருக்கிறார்கள். அறிவைப் பராமரிக்கிறார்கள். அறிவிலே செல்லுகிறார்கள் ஆதலால். இதையவர் அறிந்தார். ஆனால்மறுபடியும் அவர்தந்தையாகிய வருணனிடஞ்சென்று வணங்கப்பெற்ற என்தந்தையே! பிரமத்தை யெனக்குத் தெளிவிக்கவேண்டுமென்றார். ஞானவஜ்சந்தானத்தினால் விசாரித்தால் கனயோகமே பிரமமாக இருக்கிறதென்றார்.

137, அவர் தியானித்துப்பார்த்து ஆனந்தமே பிரமமென்றறிந்தார். ஏனென்றால், எல்லாஜீவர்களும் உண்மையாகவே ஆனந்தத்திலிருந்துண்டாயிருக்கிறார்கள். பிறந்ததுபோதும் ஆனந்தத்தினாலேயே ஜீவித்திருக்கிறார்கள். ஆனந்தத்தையே பராமரிக்கிறார்கள் ஆனந்தத்தில்தானே செல்லுகிறார்கள் ஆதலால்.

138, இப்படிப் பட்டதுதான் வருணனால் போதிக்கப் பட்டுப் பிருகுவினால் அடையப்பட்ட சாஸ்திரமாக இருக்கின்றது. அது மேலானபரமாணுஸ்வரூப ஆத்துமாவைக் குறித்துப் பேசப்பட்டதாக இருக்கின்றது. இதை எவன் அறிந்திருக்கிறானே இதை எவன் அனுஷ்டிக்கிறானே அவன் விஸ்தாரம் போஜனமளிக்கப்படுவான். அன்னத்தை ஜீரணிப்பிக்கிற ஒளியுள்ள அக்கினியாவான். சந்ததியினாலும், கால்நடைகளாலும், பரிசுத்த பரிபூரணங்களாலும், பெரியவனாகி மங்காகரமான கீர்த்தியினாலும், பெரியவனாயிருப்பான்.

139, மேலே சொல்லியது வருணவுபநிடதத்தின் சடைசி அத்தியாய ஆரம்பமாக இருக்கின்றது. மற்றவை இவ்விடத்தில் எழுதாமல் விட்டுவிடப்பட்டிருக்கின்றன. முதலாவது சைத்திரீயக உபநிடதத்தில் இதற்கடியில்வருகிற சோத்திரம் எழுதப்பட்டிருக்கின்றது. பகலையாளுகிற மித்திரனே! இரவையாளுகிறவருணனே! சூரியனையும் நேத்திரத்தையும், ஆளுகிற அரியமனே! பலத்தைக்கொடுக்கிற இந்திரனே! வாக்கையும், புத்தியையும், ஆளுகிறபிரகஸ்பதியே! மாட்சிமை தங்கிய பாதங்களையுடைய விஷ்ணுவே! எமக்குச் சுகவாழ் வளிப்பீ

ராக, நான் பிரமத்திற்கு வணங்குகிறேன். ஓ! வாயுவே உனக்குவந்த னம். நீயும் பிரமமாக இருக்கின்றாய். எங்கள் உணர்விற் கெட்டுகின் றாய், உன்னை இப்போதிருக்கிற பிர்மாவென்றழைக்கிறேன். உன்னை நீதியென்கிற பேராலழைக்கிறேன். உன்னைச்சத்தியமென்று உச்சரிக் கிறேன் சர்வபரிபூரணமான வஸ்துவென்றும், வாயுவென்றுஞ் சொ ல்லப்படுவதுமாகிய பிரமமே! என்னைரக்ஷிப்பாயாக. எனதாசாரிய ரையும் காப்பாயாக. மங்களமாயிருக்கக்கடவை.

140, யசுர்வேதத்தின் சாகைகளிலே மைத்திராயணி யென்னு ஞ்சாகையில் ஒரு உபநிடதமிருக்கின்றது. அதுவும்அதேபேரைப்பெ ற்றிருக்கின்றது. அதன்வியாக்கியானச் சுருக்கமானது சாகாயரென் னும் பேருடைய ஒரு இருடி விரகத்திரத்தர் என்னும் அரசருக்கு மைத்திரர் என்னும்மற்றொரு இருடியால் தாமடைந்த ஏகாந்த ஞா னத்தைப்போதித்த பிரசங்கமாகக் காணுகின்றது.

141, கதா அல்லது காதாகவென்னும் பேருடைய இந்தவேத த்தின் வேறொருசாகையில் அந்தப்பேருடைய ஒரு உபநிடதம் சொ ல்லப்பட்டிருக்கின்றது. அது வேதாந்தகிரந்த கர்த்தர்களால் மிகவும் அடிக்கடி உதகரிக்கப் பட்டவைகளில் ஒன்றாக இருக்கின்றது. அது ஒரு பிராம்மணத்திலிருந்து எடுத்தெழுப் பட்டிருக்கின்றது. அதர்வ ணத்துக்குச் சம்பந்தமா யிருக்கிற உபநிடதத் தொட்டில் ஒன்றாகவு மிருக்கின்றது.

142, எதிலிருந்து ஒரு உபநிடதத்தை யெடுத்துக் கூறப்பட்டி ருக்கிறதோ அந்தயசுர்வேதத்தின் ஒருசாகைக்குத் தன்பேரைக்கொ டுத்த சுவேதாசுவத்திரர் என்பவரைவேதாந்த போதகராக அதுசொ ல்லுகிறது. அந்தவுபநிடதத்தில் ஆறு அத்தியாயங்கள் அடங்கி யிருக் கின்றன. அது அதர்வணவேதத்திற்குச் சம்பந்தமாயிருக்கிற வேதா ந்தகிரந்தங்களின் தொட்டில் ஒன்றாக இருக்கின்றது. ஆனால் சரியாகச் சொல்லுமிடத்தில் அது யஜுருக்கு முழுதும் சம்பந்தப் பட்டதாக காணுகின்றது.

யஜுர்வேதம்-முற்றிற்று.

சாமவேதம்.

143, சாமவேதம் தனக்குரிய ஒருதிவ்விய விசேஷமகிமையடையது. சாமவேதமென்கிற பெயரைக்குறித்த சொல்லிலக்கணப்பிரகாரம் பாபநிவாரணமாகிய பலத்தைக் கொடுப்பதேயாம். அதற்குச்சம்பந்தமாயிருக்கிற தோத்திரங்கள், மேலேகண்டிருக்கிறபிரகாரம் இசைவிகற்பங்களாகவும், பாடும்படியான கீதங்களாகவும், செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளின்பலன் அவைகளை ஓதப்படும் விதத்தினுண்டாகுமென்று பிரசித்தமாய் யூகிக்கப்படுகின்றது.

144, சாமவேதத்தின் பிரதானபாகம் ஆர்ச்சிகமென்று சொல்லப்படுகின்றது. அதில்தோத்திரங்கள் அடங்கியிருக்கின்றன. அந்தத்தோத்திரங்களில் சில சாமவேதியர் அல்லது சந்தோக ஆசாரியர் இவர்களுடைய கிரியைமுறைகளில் அடிக்கடி ஓதப்பட்ட வைகளாக இருக்கின்றன. ஆர்ச்சிகத்தின் இரண்டு பிரதிகளிலிருந்து காணப்படுகிறபிரகாரம் அவைகள், அரையத்தியாயங்களாகவும், தசதீயென்னும்பிரகரணங்களாகவும் உட்பிரிவு செய்யப்பட்டிருக்கிற ஆறுபிரபாதங்களாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரபாதகத்திலும் பத்துத்தசதீகளும் ஒவ்வொன்றில் சரியாகப்பத்துவாக்கியங்களும் அடங்கியிருக்கின்றன. பிரார்த்தனைகளின் அதேதிரட்டு அதேவரிசைக்கிரமப்பிரகாரம் கீதமாய்ப் பாடத்தக்கவிதமாய்ச் சித்தப்படுத்தப்பட்டுக் கிராமகேயகானமென்கிற பெயரினல்பதினேழு அத்தியாயங்களாகப் பாகிக்கப்பட்டிருக்கின்றது. ஆனல் இதேதோத்திரத்தை ஓதும்படியாக விதிக்கிற கிரியைமுறையாளர் இசைவிகற்பமாக ஓதப்படும் பலவிதங்களுக்கு உபயோகமாயிருக்கிற இருமொழிகளே ஆர்ச்சிகமானமென்றும் சொல்லுகிறார்கள்.

145, கீதமாகி ஓதப்படுதற்கு ஏற்பாடுசெய்யப் பட்டிருக்கிற சாமவேதத்தின் மற்றொருபாகம் ஆரண்ணியகமென்கிற பேருடையதாயிருக்கின்றது. ஒன்றுக் கொன்று சரியாக ஒத்திருக்கிற அதன் மூன்றுபிரதிகளால் அதேபிரகாரம் மூன்று அத்தியாயங்களாகப்பாகிக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகின்றனது. அவைகள் மேற்சொல்

லிய ஆர்ச்சிகத்தைப்போல அரையத்தியாயங்களாகவும், பத்துப்பத்தாகவும், அல்லது பிரகரணங்களாகவும், உட்பிரிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

146, மேலே உதகரித்த உடன்சேர்வுகளில் உயிரெழுத்துக்களுடைய ஒலிகள் அளபெடுப்பதிலும், ஈருயிர்ப் புணர்ச்சிகள் இரண்டு அல்லது பல அசைகளாக்குவதிலும், இதர சேர்மானமான அசைகள் அநேகவிடங்களில் இடைபிற்சேர்ப்பதிலும் ஓசையைஒழுங்குபடுத்துவதற்காக இலக்க அடையாளங்கள் ஏற்படுத்துவதிலும், வேண்டிய இலக்கணங்கள் அடங்கியிருக்கின்றன. இசைவிகற்பங்களுடைய சிலதோத்திரங்கள், இசைவிற்பகங்களின் வித்தியாசந்தெரிவதற்காக ஒருதரமேயன்றிப் பலதரமும் ஓதப்படுகின்றன. பலவாக்கியங்களுக்கு உரியபேர்கள் பெரும்பாலும் முதலில் வைக்கப் பட்டிருக்கின்றன.

147, ஆர்ஷய பிராம்மணம் என்கிற பெயரினல் சாமவேதத்தின் இந்த இரண்டு பாகங்களுக்கும் அட்டவணை பிருக்கின்றது. அதில் வாக்கியங்களுடைய பேர்கள், அல்லது முதல் மொழிகள் ஆரண்ணிய கானத்தைத் தொடர்ந்துவருகிற கிராமகேயம் அல்லது ஆர்ச்சிகத்தில்வருகிற அதே ஒழுங்கில் இலக்கமிட்டிருக்கின்றன. மற்றவேதங்களுடைய விவர அட்டவணைகளைப் போலவே இந்த அட்டவணையும் அந்தந்ததோத்திரத்தின்இசைவிகற்பத்தையும், எந்தத்தேவதையை நோக்கி ஓதப்படுகின்றதோ அந்தத்தேவதையையும், எந்தச் சமயத்தில் ஓதப்படவேண்டியதோ அந்தச்சமயத்தையும், குறித்திருக்கவில்லை. ஆனல் இருடியை அல்லது கிரந்தகர்த்தாவை மாத்திரம்குறித்துக் காட்டுகின்றது. சிலவிடங்களில் சொல்லப்பட்டிருக்கிற பலவிதப்பேர்களால் அவ்வசனங்கள் ஒருகிரந்தகர்த்தாவை விடப்பலகிரந்தகர்த்தர்களால் செய்யப்பட்டவைகளாக யூகிக்கப்படுகின்றன.

148, அத்தோத்திரங்களையே கீதமாகப்பாடுகிற விதங்கள் பலவாயிருக்கின்றன வென்பதும், அவைகள் பலபேர்களுடையனவாக இருக்கின்றன வென்பதும், இதற்கு முன்னமே குறித்திருக்கின்றன இவ்விதமாகக்கிரியை முறையாளர் பதறம் இந்த வேதத்தினுடைய சிலவசனங்களைக் காதுக்குக்கேட்காத விதமாய்த் தாழ்ந்த ஓசையாய்

முதலில் தனிமையாக ஒதும்படி கட்டளையிட்டுப் பிற்பாடு ஆர்ச்சிக மான மென்கிறபெயரினால் வாதாரு முக்கியமானவிதமாய் அதேபி ரகாரம் ஒதும்படியாக ஆக்கியாபித்திருக்கிறார்கள். ஆகிலும், அனிரு கத்கான மென்கிற விகற்பமானபெயரினால் அந்தவிதத்தி னின்றும்ப லவிதமான வேறு பாடுகளும் விலக்குகளும் காட்டப் படுகின்றன. அந்தப்பிரகாரமே ஆர்ச்சிகத்திலும் கிராம கேயத்திலும். இருக்கிற அவ்வாக்கியங்களே அல்லது அவ்வாக்கியத்துக்குச் சற்றேறக்குறை யச் சரியாயிருக்கிற வாக்கியங்கள் ஊகக்கானமென்றுஞ் சொல்லப்ப டுகிற வேறொரு திரட்டில். அவைகளேப்பாடுகிற விசேஷவேறுபாடா னவிதங்களோடு வேறொரு வித்தியாசமான ஒழுங்கில் ஏற்பாடுசெய் யப்பட்டிருக்கின்றன.

149. சாமவேதத்தின் இந்தபாகங்களே ஒப்பிட்டு பார்ப்பதிலு ம்விசாரணை செய்வதிலும், வசனங்கள் வித்தியாசமான வரிசையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும், ஒதுகிறவித்தியாசமான வித த்திற்காக அடையாள மிட்டிருந்தபோதிலும், அவ்வசனங்களாகவே காணப்படுகின்றன. அதேபெயருள்ள மற்றதிரட்டுகள் மேற்சொல்லி யஆர்ச்சிகத்திலிருந்தும். ஆரண்ணியத்திலிருந்தும், மிகவும் வித்தியா சப்பட்ட மாட்டாவென்றும், இவைகள் மற்றவேதங்களுடைய சன்னி தங்களுக்கு ஒத்துவருகிற பாகங்களே ஸாமவேதத்தின் அந்த முழுக் கூறுகின்றன வென்றும் எண்ணப்படவேண்டும்.

150. வேதத்தின் இரண்டாவது பாகத்துக்கு அல்லது அனுப ந்தத்துக்கு உரித்தாயிருக்கிற பிராம்மணமென்கிற பெயரினால் பலவி தகிரந்தங்கள் சாமவேதத்தின் பலவித்தியாலயங்களிலும் ஏற்றுக்கொ ள்ளப் பட்டிருக்கின்றன. நாலுகிரந்தங்கள் விரிவாயிருக்கின்றன ஒன் றுசாரதிவிங்ஷம் என்னும் பேருடையதாக இருக்கின்றது. அதுஇரு பத்தாறு அத்தியாயங்களே யுடையதாக இருப்பதால் அந்தப் பெயர் கிடைத்ததாகக் காணப்படுகிறது. மற்றொன்று அத்பூதம் அல்லது அத்பூத பிராம்மணமென்று சொல்லப்படுகின்றது. இந்த வேதத்தின் மூன்றாவது பிராம்மணம் பஞ்சவிங்ஷமென்று சொல்லப் படுகின்றது அதில் இருபத்தைந்து அத்தியாயங்கள் அடங்கியிருப்பதால் அதற்க ந்தப்பேர் வந்திருக்கலாம்.

151. சாமவேதத்தின் பிராம்மணங்களில் தாந்திய மென்னும் பெயருடைய பிராம்மணம் மிகவும் பிரசித்தமானதாயிருக் கின்றது. அதுசாயனாசாரியரால் வியாக்கியானஞ் செய்யப்பட்டிருக்கிறது. பஞ் சிகமென்னும் இரண்டாவது காண்ட முழுதும் அடங்கியபங்கு அக் கினிஸ் தோமமென்னும் சமயாசார சடங்கைச் சேர்ந்த தாயிருக்கி ன்றது.

152. சாமவேதத்தின் மந்திரங்களையும் பிராம்மணங்களையும் விட ரீண்டதாகவும், மிகவும் மறைபொருளாகவு மிருக்கிற பிரதான உபநிடதம் இவ்விடத்தில் கூறப்படுகின்றது.

153. சாந்தோக்கிய வுபநிடதம் பிரபாதங்க ளென்னும் எட்டு அத்தியாயங்களாயிருக்கின்றது. அவைகள்பிராம்மணத்தின் சில்பாக ங்களிருந்து எடுத்து எழுதப்பட்டன. அவைகள் மூன்று முதல் பத் துவரையிலும் இலக்கமிட்டிருக் கின்றன. முதலாவது இரண்டாவது பிரபாதங்கள் சமயாசார சடங்குகளைச்சேர்ந்த வைகளாக இருக்கிற படி உபநிடத்தில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்த அத்தியாயங்கள் நூற்றைம்பது பிரகரணங்களுக்கு மேலாகவே உட்பிரிவுகள் செய்ய ப்பட்டிருக்கின்றன.

154. சாந்தோக்கியத்தின் பெருங்கூறுஞானபோதனை விஷய ங்களாக இருக்கின்றது. அதில் மற்ற அநேக வுபநிடதங்களைப்போல பலவினவிடைகள் அல்லது பிரசங்கங்கள் அடங்கியிருக்கின்றன, சன த்குமாரருக்கும், நாரதருக்கும், மத்தியில்நடந்த பிரசங்கத்தின் ஆரம் பம் ஏழாவது அத்தியாய முழுதுமாயிருக்கின்றது. அதற்குமுன்னத் தியாயத்தில் அருணனுடைய பௌத்திரராகிய சுவேதகேதுவுக்கும், அவருடைய தந்தையான அருணன் புத்திரர் உத்தாலகருக்கும், நட ந்த இரண்டு பிரசங்கங்கள் அடங்கியிருக்கின்றன. இவைகள் ஐந்தாவ துஅத்தியாயத்தில் சித்தப்படுத்தப் பட்டிருக்கின்றன. அதில் ஜீவலன் புத்திரனாகிய பிரவாகனென்பவர் சுவேதகேதுவை வேதாந்த ஞான சாஸ்த்திரத்தில் மூடனாகத்தீர்த்தார். அந்தச் சம்பாஷணையில் திஷ்டா ந்திரக்குறிப்புகளோடு பல இதரசம்பாஷணைகளும் சேர்ந்திருக்கின்ற னநாலாவது அத்தியாயத்தில் பூத்திரனுடைய போஜன ஜானன் சுரு தியென்பவனைக்குறித்த கதைமுதலில் எழுதியிருக்கின்றது. இந்தஅத் தியாயத்திலும், ஐந்தாவது அத்தியாயத்திலும், மற்ற பிரசங்கங்களோ

டுமனுஷ்யபிராணிகளுக்கு மத்தியில் நடந்த பிரசங்கங்கள் கலந்திருக்கின்றன. அவைகளில் பிரசங்கஞ்செய்த பேர்கள் தெய்வத் தன்மையுடைவர்கள் அல்லது மனோதிய மானவர்களாக இருக்கின்றார்கள். எட்டாவது அல்லதுகடைசி அத்தியாயத்தில் பிரஜாபதிக்கும், இந்திரனுக்கும், நடந்த சம்பாஷணையில் ஆத்மாவைக்குறித்துச் சத்தியதிட்டமான நிரூபணங்கள் அடங்கியிருக்கின்றன.

155. ஐந்தாவது அத்தியாயத்தைச்சார்ந்த ஒருவிசேஷ பிரசங்கம் இந்த வுபநிடதத்திலிருந்து இவ்விடத்தில் எடுத்துக் கூறப்படுகின்றது.

156. உபமன்னியு என்பவருடைய புத்திரனை பிராச்சீனசாலன், பூலுசன் சந்ததியாகிய சத்தியஜனயன், பல்லவி சந்ததியாகிய இந்திரித்தியுமன், சாகாட்சயன் சந்ததியான ஜனன். அசுவதராசுவன்சந்ததியான உளதிலன் ஆகிய இவர்கள் அத்தியந்தமாய் வேதப்பொருளே அறிந்து மேலானபதவிகளைப் பெற்றவர்களாய்க் கூட்டங் கூடி தம்முடைய ஆத்மாவென்பதென்ன, பிரமம்யார் என்கிற பூர்வஞாயமெடுத்துக் காட்டும் வியாக்கியான விசாரணையில் பிரவேசித்தார்கள்

157. இவ்விருத்த மூள்ள பெரியோர்கள் அருணன் புத்திரராகியஉத்தாலகர் சர்வபரிபூரண ஆத்மக்கியானத்தை நன்றாய் அறிந்திருக்கிறரென்றும், அவரிடத்துக்குடனே போக வேண்டுமென்றும், ஆலோசித்து அவரிடம்போனார்கள். ஆனால் அவர் இப்பெரியோர்கள் மிகவும் கற்றவர்களாயிருந்து நம்மைக்கேட்கிறார்கள் அவர்கள் கேட்கிறதற்கு முழுதும் தெரிவிக்க நமக்குச்சக்தியில்லை. அவர்களுக்குவேறொரு போதகரையுடனே காட்டவேண்டுமென்று தமக்குள் ஆலோசித்து அவர்களைப்பார்த்துக் கேகயன் புத்திரனை அசுவபதி சர்வபரிபூரண ஆத்மக்கியானத்தை நன்றாய் உணர்ந்திருக்கிறார். அவரிடத்துக்கிப்போதே செல்லுவோமென்றார்.

158, அவர்களெல்லோரும் சென்றார்கள். அவர்கள் வந்தடைந்தபோது அரசனவர் அவர்களுக்குரிய வந்தன வழிபாடுகளைச் செய்தார். மறுநாள்காலையில் அவர்களுக்கு மரியாதைகளோடு விடைகொடுத்தார். ஆனால் அவர்கள் போகாமல் நிற்பதையும் அவரால் கொடுக்கப்படும் வெகுமானங்களை யங்கீகரிக்காதிருப்பதையுங் கண்டு,

அவர்களோடு இதற்கடியில் வருவதுபோலப் பேசத்தொடங்கினர். எனது ராச்சியங்களில் கொள்ளைக்காரரில்லை, உலோபரில்லை, மதபானிகளில்லை, யாகாதி கிருத்தியங்களை அசட்டை செய்பவரில்லை, மூடரில்லை, விபசாரிகளில்லை நீங்கள் எதில் தன்பமடைந்திருக்க மாட்டீர் என்றார். அவர்கள் யாதொரு குறையைச்சொல்லி முறையிட்டுக் கொள்வதினால் இவ்வண்ணமாகப் பேசத்தொடங்கினர். ஓ! பெரியோர்களே! நீங்கள் எதைக்கோருவீர்களோ? அதைக்குறித்து என்னைக் கேளுங்க ளென்றார். அந்தப்படி அவர்கள் யாதொன்றும் கேட்டுக் கொள்ளாததைக்கண்டு ஒவ்வொரு ஆசாரியருக்கு எவ்வளவுகொடுப்பேனே அவ்வளவு உங்களுக்குந்தருவேன். ஆனால் நில்லுங்கள் மகாமேன்மைதங்கிய பெரியோர்களே யென்றார். அப்போதவர்கள் அவரைப்பார்த்துநாம் உம்மைவந்து கண்டகாரிய மின்னதென்று உமக்குத்தெரிவிப்பது அவசியமாதலால், சர்வபரிபூரண ஆத்துமாவாக நீர்தொழுகிற அந்தச்சர்வாத்துமக்கியானத்தை நீர் அறிந்திருப்பதால்அதையெங்கட்குத் தெரிவிக்கவேண்டுமென்று மறுமொழி சொன்னார்கள். அதற்கவர் நாளையதினம் அதையுங்களுக்குத் தெரிவிப்பே னென்றார். அவருடையநோக்கத்தை அவர்கள் தெரிந்துகொண்டு மறுநாள் சீடர்களைப்போல் கையில் விறகுக்கட்டைகள் பிடித்துக் கொண்டு அவரிடஞ் சென்றார்கள். அவரவர்கட்கு வந்தனமொன்றுஞ்செய்யாமல் இவ்வண்ணமாக அவர்களைப் பார்த்துப் பேசத்தொடங்கினர்.

159, ஓ! உபமன்னியு புத்திரரே நீர் ஆத்துமாவாக எதைஆராதிக்கிறீ ரென்று விஞ்வினர். அதற்கவர் ஓ! வணங்கப் பெற்ற அரசனே ஆத்துமாவாக நீர் தொழுகிற சர்வபரிபூரணமாய்த் தன்மயமாயிரானின்ற வஸ்துவின் ஓர்சிறந்த கூறுகியவசனத்தை நான் தொழுகிறேன். ஆனதால் உம்முடைய குடும்பத்தில் சமயாசார சடங்குகளுக்காகச்சோமம்பிழிந்து சித்தப்படுத்துவதாய்த் தெரியவருகிறது. நீர்சுடருள்ள அக்கினியைப்போல ஆகாரத்தைப்பட்சிக்கின்றீர். நீர்உமக்குப் பிரியமுள்ள வஸ்துவாகிய புத்திரன் முதலிய பொருளைக்காண்கின்றீர். சர்வபரிபூரண ஆத்மாவாக இதையார் ஆராதிக்கிறார்களோ அவர்கள் போஜனங்களை அனுபவிப்பார்கள். ஒருகாதலனைக் கருதுவார்கள். அவர்கள் குடும்பத்தில் சமயாசார வனுஷ்டானங்கள் நிறை

வேறக்காணுவார்கள். ஆனல் இதுதான் அந்த ஆத்மாவுக்குச் சரசாகஇருக்கின்றதென்று மறுமொழி கூறினர். உமதுசரசு நஷ்டமாய்ப் போயிருந்தால் நீர் என்னிடத்துக்கு வந்திருக்கமாட்டீரென்று ராஜா சொன்னர்.

160. அவர் அப்போது பூலுசுன் புத்திரனுகியசத்தியஜன யனே நோக்கி ஓ! பிரசன்னயோகன் சந்ததியாரே! நீர் ஆன்மாவாகயாரைத்தொழுகிறீரென்றூர். ஓ! வணங்கப்பெற்றவரசனே நீர் ஆன்மாவாகத்தொழுகிற சர்வ பரிபூரண தன்மய சொரூபத்தின் கூறுகிய ஆதித்தனேத்தொழு கிறேன். ஆகையால் உம்முடைய குடும்பத்தில் அனேக நானுவித சொரூபங்கள் காணப் படுகின்றன. பெட்டைக் குதிரைகள் பூட்டிய ரதங்களும், தனமும், பெண்ணடிமைகளும், உம்மைச் சூழ்ந்திருக்கக் காண்கின்றேன். நீர் ஆகாரத்தைப் பட்சிக்கின்றீர். நீர் பிரியமுள்ள பொருளைக் கருதுகின்றீர். யாவர் இதைச் சர்வ பரிபூரண ஆன்மாவாகத் தொழுகின்றூர்களோ அவர்கட்கெல்லாம் இதே அனுபவங்க ளுண்டாயிருக்கின்றன. அவர்களுடைய குடும்பத்தில் வைதிக கர்மானுஷ்டானங்கள் நிறைவேறக் காணுகிறூர்கள். ஆனல் இதுவே ஆன்மாவின் நேத்திரமாக விருக்கின்றதென மறுமொழி சொன்னர். அதற்கரசன் நீர் அந்தகனுயிருந்தால் என்னிடம் வந்திருக்கமாட்டீர் என்றூர்.

161. பல்லவி புத்திரனுகிய இந்திரத்தி யுமனைப் பார்த்து வியாக்கிரபாதர்சந்ததியாரே, நீர் ஆன்மாவாக யாரைத் தொழுகிறீர் என்றூர். அதற்கவர் ஓ! வணங்கப்பெற்ற அரசனே! நீர் ஆன்மாவாகத் தொழுகிற அந்தச் சர்வபரிபூரணதன்மய சொரூபத்தின் கூறுய் எங்கும் பரந்துவீசும் வாயுவைநான் தொழுகிறேன். அளவிறந்த காணிக்கைகள் உமக்குக்கிட்டப் படுகின்றன. அநேகதங்கள் உம்மைச்சூழுகின்றன. போஜனங்களேப்பட்சிக்கின்றீர், ஒருபிரியப் பொருளைநோக்குகிறீர். யாவர் இதைச் சர்வபரிபூரண ஆன்மாவாகத் தொழுகின்றூர்களோ அவர்களெல்லாம் போஜனத்தை யனுபவிப்பார்கள். ஒருபிரியப்பொருளைக் கருதுவார்கள். அவர்களுடைய குடும்பத்தில் சமயாசார வனுஷ்டானங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கும். ஆனல் இதுவே ஆன்மாவின் உயிர்ப்பாக இருக்கிறதென்று அவர் மறுமொழிசொன்னர். அரசன் உமது உயிர்ப்புப்போயிருந்தால் நீர் என்னிடம் வந்திருக்கமாட்டீர் என்றூர்.

162, அவர் அப்போது சரகராட்சயன் புத்திரரான ஜனனே நோக்கி ஓ! சரகராட்சயன் புத்திரரே! நீர் ஆன்மாவாக யாரைத்தொழுகின்றீரென்றார். அதற்கவர் ஓ! வணங்கப்பெற்ற அரசனே நீர் ஆன்மாவாகத் தொழுகின்ற அந்தச்சர்வபரிபூரண தன்மயமாயிராநின்ற ஆகாயப்பரமாணுவைத் தொழுகின்றேன். அதினால் நீர் தனசம்பத்தையும், புத்திரசம்பத்தையு மடைந்திருக்கின்றீர். போஜனபட்சணம் செய்கின்றீர் காதற்பொருளாக் காணுகின்றீர். யாவர் இதைச் சர்வபரிபூரண ஆன்மாவாகத் தொழுகின்றார்களோ அவர்கள்போஜனபட்சணஞ் செய்வார்கள். காதற்பொருளாக் காணுவார்கள். அவர்கள் குடும்பத்தில் சமயாசார வனுஷ்டானங்கள் நிறைவேறப் பெற்றிருப்பார்கள். ஆனால் இதுவே ஆன்மாவுக்குடலாக இருக்கின்ற தென்று விளம்பினர். அதற்கரசன் உமதுடல் அழிந்திருந்தால் நீர் என்னிடம் வந்திருக்கமாட்டீர் என்றார்.

163, அவர் பிற்பாடு அசுவதராசுவின் புத்திரராகிய ஊதிலரை நோக்கி ஓ! வியாக்கிரபாதர் சந்ததியாரே நீர் ஆன்மாவாக எவரைத் தொழுகிறீரென்றார். அதற்கவர் ஓ வணங்கப்பெற்ற வரசனே! நீர் ஆன்மாவாகத் தொழுகிற பெருஞ்செல்வப் பொருளாகிய உதகமே அந்தச் சர்வபரிபூரண சுயம்பிரகாசப் பொருளாயிருக்கின்றது. அதனாலேதான் நீர் சம்பத்துள்ளவராகவும், குடிதழைக்கப் பெற்றவராகவும் இருக்கின்றீர். போஜனபட்சணம் செய்கின்றீர். காதற்பொருளாக்கரணுகின்றீர். இதை யாவர்சர்வபரிபூரண ஆன்மாவாகத் தொழுகிறார்களோ அவர்கள் இவைபோன்ற அனுபவங்களைப்பெறுவார்கள். பிரியப்பொருளாக் கருதுவார்கள். குடும்பத்தில் சமயாசார வனுஷ்டானங்கள் நிறைவேறப் பெறுவார்கள். ஆனாலிதுவே ஆன்மாவுக்கடிவயிறாக இருக்கின்றதென்று சொன்னர். அரசன் உமக்குச் சலாசயம் வெடித்துப்போயிருந்தால் நீர் என்னிடம் வந்திருக்க மாட்டீர் என்றார்.

164, கடைசியில் அவர் அருணன்புத்திரராகிய உத்தாலகரை நோக்கி ஓ! கோதமன் சந்ததியாரே ஆத்மாவாக நீர் யாரைத்தொழுகிறீர் என்றார். அதற்கவர் ஓ! வணங்கப்பெற்ற அரசனே நீர் யாரை ஆன்மாவாகத் தொழுகின்றீரோ அந்தச் சர்வபரிபூரண சுயம்பிரகாச

வஸ்துவாகிய அசையாத பிரதிவைத்தொழுகிறேன். ஆகையால் நீரும் சந்ததியோடும் கால்நடைகளோடும் நிலையில் நிற்கின்றீர், போஜன பக்ஷணம்செய்கின்றீர் காதற்பொருளைக் காண்கின்றீர். யாரார் சர்வ பரிபூரண ஆன்மாவாக இதைத்தொழுகின்றார்களோ அவர்களெல்லாம் இப்படிப்பட்ட அனுபவங்களை யடைகிறார்கள். காதற்பொருளைக் காண்கிறார்கள். குடும்பத்தில் சமயாசார வனுஷ்டானங்களைப் பெறுகிறார்கள். ஆனால் இந்த வடிவங்களே ஆன்மாவினுடைய பாதங்களாக இருக்கின்றன வென்று விளம்பினர். அரசன் உமதுபாதங்கள் மூடமாய்விட்டால் நீர் என்னிடம் வந்திருக்கமாட்டீர் என்றார்.

165, அவர்களனைவரையும் அவர் நோக்கிப் பொதுவாக இந்தச் சர்வபரிபூரண ஆன்மாவைத்தனித்தனி ஒவ்வொருவஸ்துவாயிருப்பதாய் நீங்கள் ஆலோசித்துத் தனிதனியான அனுபவத்தில் பங்கு கொள்ளுகிறீர்கள். அதன்வெளிப் படையான கூறுகளாகக் காண்பதும் மனச்சாட்சியால் யூகிப்பதுமாகிய அதை யாரார்சர்வ பரிபூரண ஆன்மாவாய்த் தொழுகின்றாரோ அவர் எல்லா உலகங்களிலும், எல்லாவஸ்துக்களிலும், எல்லா ஆத்துமாக்களிலும், ஆகாரத்தை யனுபவிக்கிறார். அவருடைய சிரசு இந்தச் சர்வபரிபூரண ஆத்துமாவின் சிரசைப்போலப் பிரகாசமுள்ளதாயிருக்கின்றது. அவருடைய கண் சமமாகப் பலவிதப் பட்டிருக்கின்றது. அவருடைய உயிர்ப்புச் சமமாகப் பரவி இருக்கின்றது அவருடைய உடல் ஏராள மானதாயிருக்கின்றது. அவருடையஅடிவயிறு நிறைந்ததாக இருக்கின்றது. அவருடைய பாதங்கள் பூமியாக இருக்கின்றது. அவருடையமார்பு பலிபீடமாக இருக்கின்றது. அவருடைய மயிர்குசப்புல்லாகஇருக்கின்றது. அவருடைய இருதயம் சுரசாக்கினியாக இருக்கின்றதுஅவருடையமனது செந்தீயின் சுவாலையாயிருக்கின்றது அவருடையவாய் பலியாக இருக்கிறது. என்று கூறினர்.

166, அவர்க்குமுதலில் கிடைக்கிற போஜனம் நைவேதனம் செய்யப்படவேண்டும். அவர் செய்கிற முதல் நைவேதனம் சித்தியாவதாகவென்கிற மொழிகளோடு ஆகுதிசெய்யப் படவேண்டும். இவ்விதமாக உயிர்ப்புத் திருப்தியடைகின்றது. அதில் நேத்திரம் திருப்தியடைகின்றது. நேத்திரத்தில்சூரியன் திருப்தியடைகிறான். சூரியனில் ஆகாயம் திருப்தியடைகின்றது. ஆகாயத்தில் வானமும் சூரியனும் அவைகளைச் சேர்ந்த மற்றவைகளும் பூரணமடைகின்றன. அதற்குப்

பிற்பாடு உண்டியைப் புசிக்கிறவர் சந்ததியோடுங் கால்நடைகளோடும், பூரணமாய்த் திருப்தியடைகிறார். உண்டியினால் சத்துவமுண்டாகின்றது. தெய்வ ஆராதனைகளால் சிறைப்படைகிறார்.

167, ஆனால் சர்வபரிபூரண ஆன்மாவையறியாதவன் அக்கினிக்கு ஆகுதிசெய்கிறது ஒருவன்சாம்பரில் கட்டைக்கரிகளை யெறிவதற்குச் சமானமாக இருக்கின்றது. ஆத்துமக்கியான முடைந்தவன் நிவேதனஞ்செய்வது எல்லா உலகங்களிலும் எல்லாவஸ்துக்களிலும் எல்லா ஆத்துமாக்களிலும் ஆகுதிசெய்தவனாகிறான். அக்கினிக்குள் எறிகிற உலர்ந்தபுல்தானிவேகமாகப்பற்றிக்கொள்வதுபோல அந்த மனிதனுடைய பாபங்களெல்லாம் தகிக்கப்பட்டுப் போகின்றன. இதையறிந்தவன் நிவேதனத்தின் மீதியை மனதறிந்து சண்டாளனுக்குக்கொடுத்தபோதிலும் சர்வபரிபூரண ஆத்மாவுக்குமாத்திரம் நிவேதனம்செய்யவேண்டும். ஏனென்றால் இந்தவிஷயத்தில் சொல்லப்பட்ட வசனத்திலே இந்த வுலகத்தில் பசியுள்ளகுழந்தைகள் அவர்கள் தாயைச்சுற்றிக்கொண்டு வருத்துவதுபோல எல்லாஜீவர்களும் நிவேதனத்தையும் ஆராதனைகளையும் சாத்துக்கொண்டிருக்கிறார்களெனச் சொல்லப்படுகிறார்களென்றிருத்தலால்.

168, சாமவேதத்தின் மற்றொரு உபநிடதம் தலவகாரசாகைக்குச் சம்பந்தமானதாயிருக்கிறது. அது எந்தமொழியில் அல்லது மொழிகளில் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதோ அந்த மொழியிலிருந்து கேனேசித உபநிடதம் அல்லது கேன உபநிடதமென்று சொல்லப்படுகின்றது. சங்கர வியாக்கியானத்தினால் தெரியவருகிற பிரகாரம் இந்த வியாக்கியானம் எதிலிருந்துபெயர்த்தெழுதப்பட்டதோ அந்தக்கிரந்தத்தின் ஒன்பதாவது அத்தியாயமாக இருக்கின்றது. இதில் நாலுசந்தசுகள் அல்லது பிரகரணங்களடங்கியிருக்கின்றன. உபாத்தியாயர்களுக்கும், சீடர்களுக்கும், நடந்த பிரசங்க ரூபமாயிருக்கின்றன. அவற்றின் விஷயம் மற்ற உபநிடதங்களில் இருக்கிறதுபோலவே மறைபொருளும் புதைபொருளுமான வேதாந்தமுறையாக இருக்கின்றது. ஆனால் அது இவ்விடத்தில் எழுதப்படவில்லை.

சாமவேதம்-முற்றிற்று.

அதர்வணவேதம்.

169, அதர்வணத்துக்குச் சொந்த சன்னிதம் அல்லது தோத்திரம் பிரார்த்தனை வைகளின் திரட்டு இருபது காண்டங்களாக இருக்கின்றது. அது அனுவாகங்கள், சூக்தங்கள் ரிக்குகளாக உட்பிரிவுகள் செய்யப்பட்டதாகவு மிருக்கின்றது. பிரபாதங்களாகப் பிரிக்கப் படும் விதமும் காட்டப்பட்டிருக்கின்றது. வாக்கியங்கள் ஆறாயிரத்துப்பதினைந்தாகவும், தூற்றுக்கு மேற்பட்ட அனுவாகங்களாகவும், எழுநூற்றிறபதுக்கு மேற்பட்ட சூக்தங்களாகவும், எறக்குறைய நாம்பது பிரபாதங்களாகவு மிருக்கின்றன.

170, அதர்வணவேதத்தின் பாஷையையும் நடையையுங்காட்ட ஒருவாக்கியங் குறிக்கப்பட்டிருக்கின்றது. அது பத்தொன்பதாவது காண்டத்தின் நாற்பத்து மூனறுவது சூக்தமுழுதும் அடங்கியிருக்கிறது. அதே காண்டத்தின் ஆரம்பத்தில் ஆறுவது சூக்தம் வெள்ளை யஜுசுவின் மூப்பத்தொன்றுவது அத்தியாயத்திலிருந்து இதற்குமுன் உதரித்திருக்கிறசூக்தத்திற்கு மிகவும்மொழிக்குமொழிசரியாகஇருக்கின்றது இருக்குகளில் சிலவாஸ்தவமாகஅங்கங்கு ஒவ்வொருமொழிபேதப்படுத்தி மாற்றிப்பெயர்த்து வைத்திருக்கின்றன. அதற்குத் திருஷ்டாந்தம் அதன் ஆரம்பத்தில் ஆதிபுருஷனைக்குறித்துச் சொல்லும்போது ஆயிரம் சிரசுள்ளவனென்று சொல்லுவதற்குப் பதிலாய் ஆயிரம் அஸ்தங்களையுடையவனென்று சொல்கிறது. ஆகிலும் அதில் சொல்லப்பட்டபொருள் ஒன்றுகவே யிருக்கின்றது. ஆகையால் இவ்விடத்தில் அதைக்குறிக்கிறது அநாவசியமென்றுவிட்டுவிடப்பட்டது.

171, அதேகாண்டத்தின் அடுத்த சூக்தத்தில் முக்கியமான வாக்கியமொன்றிருக்கின்றது. அது கிருத்திகைமுதல் இருபத்தெட்டு நட்சத்திரங்கள் அவைகளின் கிரமத்தில் சொல்லப் பட்டிருக்கின்றன அது ஆசிலேஷமாசத்தின் கடைசியில் அல்லது மாகமாசத்தின் ஆரம்பத்தில் அயனத்தைக்குறிக்கின்றது. அது இரண்டு எதுக்களைப் பற்றிமுக்கிய வாக்கியமென்று சொல்லப் பட்டிருக்கிறது. முதலாவது இருபத்தெட்டு நட்சத்திர ஏற்பாடு அதர்வணவேதம் எவ்வளவு பூர்வீகமானதோ அவ்வளவு பூர்வீகமானதென்று காட்டுவதினாலும்,

இரண்டாவது அந்தவேதமுழுதும் இப்படிப்பட்ட முக்கியமான சூத்தத்தைப்போலவே ஆசிலேஷமாசத்தின் மத்தி அல்லது கடைசிமுதல் அயனம் எண்ணிக் கைப்படும்போதும் கிர்த்திகையின் ஆரம்பத்தில் இராசிசக்கரத்தின் தவக்கம் வைக்கப்படும் போதும் செய்யப்பட்டிருக்கலாமென்று யூகிப்பதற்கிடங் கொடுப்பதினாலுமேயாம். இந்த வேதத்தின்காலத்தைக்குறித்து வேறொரு இடத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

172, பத்தொன்பாவது காண்டத்தின் நாலாவது அனுவாகத்தில் வந்திருக்கிறமந்திரோச்சாடனத்தைப்போல்ஒருமந்திரோச்சாடனமிருக்கிறது. அதயதார்த்தமாக ஒரு பயங்கரமான மந்திரோச்சாடனமாய் இருக்கின்றது. முக்கியமாக இருபத்தெட்டு இருபத்தொன்பது மூப்பது இலக்கமிட்டமூன்று சூக்தங்களாகஇருக்கின்றன. அதிலொன்று இப்படிப்பட்ட சபித்தல்களுக்கு மாதிரியைக் காட்டப்போதுமானதா யிருக்கும். மற்றசபித்தல் மந்திரங்களில் அநேகம் ஒரேமாதிரியாகவே யிருக்கும்.

173. ஓ மகிமைபெற்ற குசப்புல்லே எனது பகைஞரை அழிப்பாயாக. எனதுசத்துருக்களை நீர் மூலஞ் செய்வாயாக. ஓ இரத்தினமேஎன்னோடு பகைக்கிற எல்லோரையும் நாசஞ்செய்வாயாக.

174. அதர்வணவேதம் சத்துருக்கள் நாசத்திற்காக அநேகவிதசபித்தலின் மந்திரங்களைக் கொண்டிருக்கிறதென்பது பிரசித்தமாயிருக்கிறது. ஆனல்இந்தவேதத்தின் முக்கியவிஷயம் அப்படிப்பட்டதேயென்று யூகிக்கப்படவொண்ணாது. ஏனெனில் அது நிர்விக்கினத்திற்காகவும், ஆயுத்திவர்த்திக்காகவும், ஓதப்படும்வெகு மந்திரங்களைக்கொண்டிருக்கின்றது ஆதலால். மற்றவேதங்களைப் போலவே கடவுளர்க்கு யஜன்னியமென்னுங் கிரியைகளிற்றவிர வேதாசாரகிரியைகளிலும், அனுஷ்டானங்களிலும் வழங்கப்படவேண்டிய தோத்திரங்களோடு அநேகசூக்தங்களும் அதில் அடங்கியிருக்கின்றன.

175. கோபதபிராம்மணம் இந்தவேதத்தின் இரண்டாவதுபாகத்துக்குச் சம்பந்தப்பட்டதாகக் காணப்படுகின்றது. இது ஐந்துபிரபாதங்களைக் கொண்டிருக்கின்றது. இதற்கு வியாக்கியானமாவது அட்டவணையாவது இருப்பதாகக் காணப்படவில்லை.

176, இந்தக்கோபத பிராம்மணத்தின் முதலாவது அத்தியாயத்தில் இந்தப்பிரபஞ்சத்திற்குக் காரணம், பிரமமென்று கண்டிருக்கிறது. இந்த அத்தியாயத்தின் நாலாவது பிரகரணத்தால் அதர்வனர் உலகத்தைச் சிருட்டித்துச் சீவபிராணிகளைக் காக்கும்படி பிரமத்தினால் நேமிக்கப்பட்ட ஒருபிரஜாபதியாக யோசிக்கப்படுகிறார்.

177, ஐந்தாவது அத்தியாயத்தில் அநேகவிசேஷ வாக்கியங்கள் உளவாயிருக்கின்றன. முதற்புருஷன் பஞ்சாங்கத்திற்குச் சம்பந்தத்தை யுண்டாக்குகிற சம்வச்சரத்தோடு உண்டானவனாக எண்ணப்படுகிறான். ஓரிடத்தில் அதாவது ஐந்தாவது பிரகரணத்தில் பன்னிரண்டு அல்லது பதின்மூன்றுசாந்திரமான மாசங்கள் ஒருவருஷமாகுமெனச்சொல்லுவது மல்லாமல், அந்தக்காலத்தின் உட்பிரிவுகள் மூன்நூற்றறுபது நாளாகவும் அதனால்பதினாயிரத்து எண்ணூறு முகூர்த்தங்களாகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

178, அதர்வணவேதத்தின் மகாவிசேஷமான பாகத்தில் அதற்குடன்சேர்வாகச் சேர்க்கப்பட்டிருக்கிற வுபநிடதங்களென்னும் வேதாந்தசாஸ்திரங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகள் ஐம்பத்திரண்டென்று இலக்கமிட்டிருக்கின்றது. ஆனால் இந்த இலக்கம் ஒருபத்தகத்தின் பலபாகங்களைப் பிரத்தியேகமான வுபநிடதங்களாகக் கணக்கிடுவதினாலே பூர்த்தியாகின்றது எட்டு உபநிடதங்களும், மற்றவேதங்களுக்குச் சம்பந்தமாயிருக்கிற மேல் விவரிக்கப்பட்ட வுபநிடதங்களில் ஆறும் அவற்றுள் அடங்கியிருக்கிற நாலுகிரந்தங்களும் வேதாந்தத்தைப்பற்றிச் செய்யப்பட்டிருக்கிற வியாக்கியானங்களில் எப்போதும் உதகரிக்கப்பட்ட வைகளாக இருக்கின்றன. மற்றவைகள் மிகவும் அருமையாய் அல்லது சுத்தமாய் உதகரிக்கப்பட்டவைகளாகஇருக்கின்றன.

179, உபநிடதம் என்பதற்கு அருத்தம் இன்னதென்று விளக்குவது இவ்விடத்தில் யுக்தமாக இருக்கலாம். அகராதிகளில் இந்தமொழி இரகசியமென்பதற்குச்சமான பதமாகச்சொல்லப் பட்டிருக்கிறது. அது இரகசியமென்கிற அருத்தத்தில்வாஸ்தவமாகமனுவாலும், பூர்வகிரந்தகர்த்தர்களாலும் அடிக்கடி உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றது உபநிடத்துகளின் வியாக்கியானிகளும் அம்மொழிகளுக்கு அதே அருத்தஞ் செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தமொழி

களின் சொல்லிலக்கணத்திலாவது அங்கீகாரத்திலாவது இரகசியம், மறைப்பு, அல்லது அந்தரங்கம் என்னும் கருத்துக்கு நேரானயா தொருசம்பந்தமும் உண்டாயிருக்கவில்லை. சங்கரர், சாயனர், மற்றும் எல்லாவியாக்கியானிகளுடைய அபிப்பிராயப் பிரகாரம் அதன் சரியான அருத்தம் ஞானசாஸ்திரம் அல்லது பிரம்மக்கியானமென்பது மேற்சொல்லிய கிரந்தகர்த்தர்களுடைய அபிப்பிராயப் பிரகாரம் வேதாந்தத்துக்கும், இந்த அருத்தத்தைப் போதிக்கிற வொருபுத்தகத்துக்கும், உபயோகிக்கப் பட்டிருக்கின்றது அதினுடைய உற்பவம் சமீபமென்றருத்தந்தருகிற (உப) என்கிற முன்னிடைச்சொல்லினாலும், இடைவிடாமல் என்கிற அருத்தந்தருகிற (நி) அல்லது நிச்சய மென்றருத்தந்தருகிற (நிஸ்) என்னும் முன்னிடைச் சொல்லினாலும், முன்வைக்கப்பட்டிருக்கிற அழிகிறது அல்லது அசைகிறது அல்லதுதளர்தலாகிறது என்றருத்தந்தருகிற சத் அல்லது (ஷத்லீ) என்னும்வினையிலிருந்து உற்பவமாயிருக்கின்றது. வியாக்கியானிகளால் சொல்லப்பட்டிருக்கிற பலவிதமான விவரங்களின்பிரகாரம் இந்தச் சொல்லிலக்கணத்திலிருந்து தகுதியாகக்கண்டு பிடிக்கிற அருத்தம் திவ்வியபரிபூரண ஞானத்தையும், அந்தஞானத்தினாலே ஆசாபாசங்களினின்றும்விவர்த்தியாகி முக்தியடைகிறதையும், நிச்சயமாகக் காட்டுகின்றதென்பதேயாம்.

180, வேதாந்த சாஸ்திரங்களெல்லாம் உபநிடதங்களின் பேரில் ஆதாரப்பட்டவைகளா இருக்கின்றன. இதற்குமுன்சொல்லியிருக்கப்பட்டவைகளும் வேதத்திலிருந்து எடுத்துச்செய்யப்பட்டவைகளாகவே காணப்படுகின்றன. மற்றவைகளும் வேதத்திற்குச் சேர்ந்தவைகளாகவே யோசிக்கப்படுகின்றன. ஆகிலும் அவைகள் அதர்வணவேதத்தின் ஒரு பிராம்மணத்திலிருந்து எடுத்துச் செய்யப்பட்டனவென்றுவது அல்லது பிரத்தியேகப்பட்ட வியாக்கியான மென்றுவதுதெளிவாகக் காணப்படவில்லை. அதர்வணவேதத்தின் சன்னிதத்திலாவது கோபதபிராம்மணத்திலாவது இவைகள்காணப்படவில்லை.

181, சிறந்த ஐம்பத்திரண்டு உபநிடதங்களில் முதற்பதினைந்து உபநிடதங்கள் எவைகளுடைய சாகைகள் அதர்வணவேதத்தில் பிரதானமானவைகளாகக் காணப்படுகின்றனவோ அந்தச்சவுனகீயங்களிலிருந்து எடுத்துச்செய்யப் பட்டவைகளாகச் சொல்லப்படுகின்றன.

மற்றமுப்பத்தேழு உபநிடதங்கள் பலசாகைகளுக்குச் சம்பந்தப்பட்டவைகளாக இருக்கின்றன. பெரும்பாலும் பாயிப்பலாதிசம் என்னும்சாகைகளுக்குச் சம்பந்தப்பட்ட வைகளாக இருக்கின்றன. ஆனால் அவைகளில்சில மற்றவேதங்களிலிருந்து எடுத்துக்கொண்டவைகளாகக்காணப்படுகின்றன.

182, மூந்தகம் இரண்டு பாகங்களாகச்சமமாய் வகுக்கப்பட்டிருக்கிற ஆறுபிரகரணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அது அதர்வணவேதத்தின் முதலாவது உபநிடதமாகவும், அதில் மகாமுக்கியமான கோட்பாடுகள் அடங்கியிருக்கப்பட்ட ஒன்றாகவு மிருக்கின்றது. அதுசங்கரரால் பூர்ணமாய் விளங்கச் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச்சங்கரருடைய வியாக்கியானம் அநந்தஜ்ஞயருடைய வியாக்கியானங்களால் உதவிசெய்யப்பட்டிருக்கிறது முதற்பிரகரண முழுதுமடங்கிய இந்த உபநிடத்தின் ஆரம்பம் இதற்கடியில் சேர்க்கப்படுகிறது.

183, பிரமன் தேவர்களுக்குள் முதல்வராகவும், சர்வபிரபஞ்சத்தைச் சிருட்டித்தவராகவும், உலகத்தை ரக்ஷிக்கிறவராகவு மிருக்கிறார். சகலசாஸ்திரங்களுக்கும் ஆதாரமாயிருக்கிற பிரமக்கியானத்தைத்தன்னுடையசேஷ்ட புத்திரனுகிய அதர்வணனுக்குப் பிரமன் வெளிப்படுத்திய இந்தத்திவ்வியக்கியானம் அதர்வணனால் அங்கீரனுக்கு உபதேசிக்கப்பட்டது. அங்கீரன் பரத்துவாஜர் சந்ததியாகிய சத்தியவகனுக் குபதேசஞ்செய்தார். பரத்துவாஜருடைய இந்தப் புத்திரன் இந்தத் தொன்றுதொட்டு வருகிறகேள்வியால் வந்தகலே ஞானத்தை அங்கீரசனுக்குப்தேசித்தார்.

184, கிரகஸ்தாச்சிரமத்தில் மேன்மைபெற்றிருந்த சவுனகர் அல்லது சூனகன் புத்திரர் அங்கீரசனுக்கு வந்தனவழிபாடுகள் செய்து ஓ வணங்கப்பெற்ற முனியே எதன்மூலமாய் இந்தப் பிரபஞ்சத்தையறிகின்றோமோ அது எது வென்றுவணங்கிக் கேட்டார்.

185, அவரைநோக்கி இந்தத்திவ்விய புருஷன் மறுமொழி சொல்லுகிறதாவது, பேதமாகப்பிரித்தறியப் படத்தக்க சாஸ்திரங்களிரண்டுண்டு. பிரமஞானம்அடைந்திருப்பவர்அதிசிரேஷ்ட சாஸ்திரமொன்றென்றும், மற்றொன்றென்றும் தெரிந்திருக்கிறார்கள். இந்த

மற்றொன்று என்பது இருக்குவேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம், எடுத்த லோசைவிதிகள், ஆகமங்கள், இலக்கணம், அரும்பதங்களின் அகராதிவியாக்கியானம், யாப்பிலக்கணம், சோதிடம்இதிகாசம், புராணம், தருக்கம், இந்தச்சாஸ்திரங்களின் வியாக்கியானவிதிகள், உலகநீதி, இவைகளேயாம்.

186, அதிசிரேஷ்ட சாஸ்திரமாவது எதனால் இந்த அழியாத சுபாவம் தெரிந்துகொள்ளப் படுகின்றதோ அதுவாக இருக்கிறது. அந்தச்சுபாவம் அதிர்சியமானதாகவும், புலப்படாததாகவும் பிடிக்கப்படக்கூடாததாகவும், கிரகிக்கப்படக் கூடாததாகவும், வருணமில்லாததாகவும், நேத்திரங்கள், செவிகளில்லாத தாகவும், கரங்கள் அல்லது பாதங்களில்லாததாகவு மிருக்கின்றது. ஆகிலும் அது எப்போதும் நானுவிதமாகச் சர்வ்வியாபகமா யிருக்கிறதாகவும், நிட்பாதபமாகவும், மாறுதாகவும், வஸ்துக்களுக்குக் காரணமாகவும் மெய்ஞ்ஞானிகளால் தியானிக்கப் படாததாகவு மிருக்கின்றது.

187, சிலந்திப்பூச்சியானது அதன் நால்களே நூற்றுமறுபடியும் சேர்ப்பது போலவும், பூண்டுகள் பூமியின்மீது முளைப்பதுபோலவும், ஜீவப்பிரணிகள்பேரில் உரோமங்கள் முளைப்பது போலவும், இந்தப்பிரபஞ்சம் அழியாதசுபாவத்திலிருந்துண்டாகின்றது. தியானத்தினால் இந்தவிரிந்த ஒன்றுமுளைக்கின்றது. அதனிலிருந்து ஆகாரம் அல்லது சரீரமுண்டா யிருக்கிறது. அதிலிருந்து கிரமவரிசைப்பிரகாரம் உயிர்ப்பு, அந்தக்கரணம், சத்திய பூதங்கள், உலகங்கள், நல்வினைகளால் உண்டாகிற அழிவின்மை உண்டாகின்றன. எல்லாமறிகிற அவனதுஞானத்தோடு கூடிய ஆழ்ந்ததியானத்தினால் சர்வக்கியத்துவமுள்ளவஸ்து தரிசனமாகும். அதிலிருந்து இந்தப்பிரத்தியட்சமா யிருக்கிற விரிந்த ஒன்றும், நாமரூபங்களும், ஆகாரமும், உண்டாகின்றன. இதுதானுண்மை.

188, பிரஷ்ணமென்பது உபநிடதத்திற், கிரண்டாவதாகஇருக்கின்றது. அது முதலாவது உபநிடத்திற்குச் சமானமாகவும், அதைப்போல ஆறுபிரகரணங்களடங்கியதாகவு மிருக்கின்றது. மேலும் அதற்குச்சங்கராலும், பாலகிருஷ்ணராலும் வியாக்கியானஞ் செய்யப்பட்டு மிருக்கின்றது. இந்தப் பிரசங்கத்தில் பரத்துவாஜர் புத்திர

ஞகிய சூசேசன், சிவியன்சந்ததியாகிய சத்தியகாமன், சூரியனுடைய தூசசந்ததியாகிய கர்க்கன், குடும்பசம்பந்தப் பட்டவனுகிய சவுரயாயனி, அசுவலாயன் என்கிற கௌசல்யன் அல்லது அசுவலன் புத்திரன், பிருகுவம்சத்தினனுகிய வாய்தர்பீ, காதியாய னென்கிற தபந்தீ அல்லது கதயன்சந்ததி இவர்கள் வேதாந்தவிசாரணைக் கர்த்தர்களாகவும், உபதேசத்திற்காகப் பிப்பலாதனைக் கேட்டுக் கொண்டவர்களாகவும், சொல்லப்பட்டிருக்கின்றூர்கள். அவர்கள் வரிசைக்கிரமமாய் அவனைஜீவகோடிகளின் மூலத்தைக்குறித்தும், தேவர்களின்சுபாவத்தைக்குறித்தும், தேகத்தோடு தேகியின்பொருத்தத்தைக் குறித்தும் ஆத்துமாவோடு அந்தக் கரணங்களின் சம்பந்தத்தைக் குறித்தும் விளவினர்கள்.

189, அடுத்த ஒன்பது உபநிடதங்கள் மூன்றுவது முதல் பதினேந்தாவது வரைக்கும் விசேஷமுக்கியமான வைகளல்லாமையினல் வேதாந்தகிரந்த கர்த்தர்களினல் வியாக்கியானஞ் செய்யப்படாமல் விட்டுவிடப்பட்டிருக்கின்றன. ஏனென்றல் அவைகள் ஆத்துமாவின் சுபாவத்தைக்குறித்த சரீரம் அல்லது வேதாந்தசாஸ்திரத்துக்கு நேராகச்சம்பந்தப் படுகையா யில்லாமையால்.

190, மந்தூகயம் நாலுபாகங்களைத் தொடர்ந்து நாலுபாகங்களாகியு மிருக்கின்றது. ஒவ்வொருபாகம் ஒருபிரத்தியேகமான உபநிடதமாகத் தக்கதாகவுமிருக்கின்றது. இந்த ஆழ்ந்தபொருளுள்ளகிரந்தத்தில் வேதாந்தின் மகாமுக்கியமான கோட்பாடுகளடங்கியிருக்கின்றன. அதுகௌதபாதர்சங்கரர் இவர்களுடைய பிரயாசங்களால் விளங்கச் செய்யப்பட்டிருக்கிறது. கௌதபாதருடைய வியாக்கியானம் அநந்தகிரி யென்பவருடைய குறிப்புக்களால் உதவிசெய்யப்பட்டிருக்கிறது.

191, பதினறுமுதல் இருபத்தெட்டுவரையிலுமுள்ள பதினைந்து உபநிடதங்களில் முதற்பதின்மூன்று உபநிடதங்கள் மேல்சொல்லிய ஏதுக்களைப் பற்றி வேதாந்தத்தின் பிரதான வியாக்கியானிகளால் வியாக்கியானஞ் செய்யாமல் விட்டுவிடப் பட்டிருக்கின்றன.

192. இருபத்தொன்பது முதல் முப்பத்துநாலு வரையிலுமுள்ள அடுத்த ஆறு உபநிடதங்கள் நிருவிங்கதா பதியமாகின்றன. அவைகளில் ஐந்து பூர்வதாப நியம் அல்லது அந்தப்படி யழைக்கிற வுபநிடதத்தின் முதற்பாகமாகின்றன. கடைசி உபநிடதம் மகாமுக்கியமானதாகையால் உத்திரதாபநியமென்று பேர்பெற்றிருக்கிறது. அது கௌதபாதரால் வியாக்கியானஞ் செய்யப்பட்டிருக்கிறது. முதற்பாகம் அல்லது முழு உபநிடதம் சங்கரரால் வியாக்கியானஞ் செய்யப் பட்டிருக்கிறது. இந்தக்கிரந்தத்தின் நோக்கம் நிருசிங்கனே யெல்லாத் தேவர்க ளொப்பந்தமாகச் செய்வதாகக் காணப்படுகின்றது.

193. இந்த அடுத்த இரண்டு உபநிடதங்கள் காதகம் அல்லது வல்லி அல்லது கத்க வல்லியென அதன் முதலாவ திரண்டாவது கூறுகளா கின்றன. அதுமேலே சொல்லி யிருக்கிற பிரகாரம் யசுரு வேதத்திற்குச் சம்பந்தப்பட்டதாக இருக்கின்றது. ஆனல் அது வழக்கமாய் அதர்வணவேதத்திலிருந்து உதகரிக்கப் படுகிறது. சங்கரராலும், பாலகிருஷ்ணராலும், இந்தவேதத்திற்குச் சம்பந்தப்பட்டதாக வேவியாக்யானஞ் செய்யப் பட்டிருக்கிறது,

194. அதில் ஆறு பிரகரணங்கள் வெகுவாய் வல்லியென்கிற பெயரிள்ளவைக ளாகவே இருக்கின்றன. ஆனல் பூர்வ வல்லி யென்றும், உத்திரவல்லியென்றும், பேருள்ள இரண்டு அத்தியாயங்களாக இருக்கின்றன. இந்தப்பிரசங்கம் மிருது அல்லது யமனலும் நச்சிகேதசன் என்னும் ராசபுத்திரனலும் செய்யப்பட்ட பிரசங்கமாக இருக்கின்றது. நச்சிகேதசனே அவனுடைய தந்தையாகிய வாஜசரவசனே நச்சிகேதனெனுஞ் சிறுவன் வைராக்கியத்தினல் சர்வலோக வெற்றியின் பொருட்டுச் செய்யப்படும் பலிக்காக என்னையாருக்குக் கொடுக்க இருக்கிறீரென்று தொந்தரைசெய்து கேட்டபோது அவ்வரசன் கோபமுண்டாகி இயமனுக்கு ஒப்புவித்து விட்டார். இயமன் நச்சிகேதசனைக்கெனமாகவரவழைத்து அவனுக்குவேதாந்தஞானம் போதித்தார் அதனல் மோட்ச இன்பமும், உலகத்துன்பங் களிலிருந்து நிவாரணமும், ஆத்துமாவின்யதார்த்த சுபாவக்கியானமும், பிரமமே தானுகும் ஞானமும், உண்டாகின்றன. இந்தக்கோட்பாடு பிரதான வுபநிடதங்களுடைய கோட்பாட்டுக் கொத்ததா யிருக்கின்றது.

195. கேனேஷித்து அல்லது கேன உபநிஷத்து அதர்வண வேதத்தின் முப்பத்தேழாவது உபநிடதமாக இருக்கின்றது. சாம வேதத்தின் ஒருசாகத்திற்குச் சம்பந்தப் பட்டதாயும், கேனேஷித் அல்லது கேனஉபநிஷத்து என்கிற அதே பெயருடைய ஒருகிரந்தத் திற்கு மொழிமொழியாக ஒத்திருக்கின்றது. ஆகிலும் சங்கரர் அவை களுக்கு வித்தியாசமான அருத்தமுண்டா யிருப்பதாகக் காட்டுகிற நிமித்தம் அவ்விரண்டின்பேரில் பிரத்தியேகமான வியாக்கியானஞ் செய்திருக்கின்றார்.

196. நாராயணம் என்கிற ஒருசிறிய உபநிடதத்தோடு முப்ப த்தோன்பதாவது முதல் நாற்பதாவது வரையிலுமுள்ள இரண்டுஉப நிடதங்கள் சேர்ந்திருக்கின்றன. அது இரண்டு நாராயணத்தின் முத லாவ திரண்டாவது பாகங்களாக இருகின்றன. இது மேற்சொல்லி யபிரகாரம் அதேபெயருடைய ஒருபநிடதத்திற் கொத்திருக்கிறது மல் லாமல் தைதிரீய யசுருவேதத்தினுடைய ஆரிண்ணியத்தோடும் மூடி ந்திருக்கின்றது.

197. அடுத்த மூன்று உபநிடதங்களுக்குறித்து வியாக்கியான ங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. அவைகள் எதிலிருந்து எழுதப்பட் டிருக்கின்றனவோ அதை நிச்சயிக்கக்கூடவில்லை.

198. அகந்தவல்லி பிருகுவல்லி என்கிற பெயர்களுடைய இர ண்டு உப நிடதங்கள் தைத்திரீயம் வாருணி யென்கிற பெயர்களால் விளங்கப்பட்ட கறுத்த யஜுசுவின் ஆரண்ணியத்திலிருந்தெடுத்தெழு தப்பட்டவைகளாக முன்னமே குறிக்கப் பட்டிருக்கிற நாற்பத்து நாலாவது நாற்பத் தைந்தாவது உப நிடதங்களுக்குத் தொடர்ந்திருக் கின்றன.

199. மற்ற ஏழு உபநிடதங்களும் வேதாந்த வியாக்கி யானிக ளால் விளக்கஞ்செய்யப்பட்டிருக்கவில்லை. அவைகள் யதார்த்தமாக வே போதுமானமட்டும் எளிதில் அருத்தம் தெரியத்தக்கவைகளாக இருக்கிறபடியால் கஷ்டப்பட்டு வியாக்கியானஞ்செய்யப்பட வேண் டியதாகவுமிருக்கவில்லை.

அதர்வணவேதம்—மூற்றிற்று.

நான்குவேத ரகசியம் முற்றும்.

மனுநீதிசாத்திரம்.

இதற்கடியில் வருபவைகள் மனு மிருதியிலிருந்து எடுத்தெழுப பட்ட சுருக்க அட்டவணை.

உலக சிருஷ்டியின் வறலாறும், தேவர் மனிதர் இவர்களுக்குரி யபலவாழ் நாளளவின விவரமும், நாற்குலத்தினரிவரென்பதும், அவ ர்களுடைய கடமைகளின்னவ்வ யென்பதும்;— பிராமணருடைய மகத்துவமும், மேன்மையும், ஞாயப்பிர மாணத்தின் வரலாறும், பத்துச் சமுஸ்காரங்களும். பூணு நூல் தரிக்க அசட்டை செய்வதினு லுண்டாகும் பலனும், மாணுக்கர் தரிக்க வேண்டிய உடை யின்ன தென்பதும்;—பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், இவர்களில் இன்னி ன்ன குலத்தினர் இவ்விதபூணு நூல் தரிக்க வேண்டு மென்பதும்;— உபநயனகாலத்தில் இன்னின்ன வருணத்தினர் இன்னின்ன தண்டுபி டிக்கவேண்டுமென்பதும்;— பூணுநூல் தரித்த பின்னர்ப் பிச்சாடஞ் செய்யவேண்டியவிதிகளும்;— மாணுக்கர் புசிக்கு முறைமையும்;— உண்டி யளவும்;—பிராமண கர்மாநுஷ்டானமும்;—நாலு வருண த்தாரும் ஜலத்தால் பவித்திரப்படவேண்டிய தென்பதும், ஸ்திரீகளு ககாகப் பத்துச்சமுஸ்காரங்கள் செய்தலும்;—மாணுக்கன் ஆசானி டத்தில் வாசிக்க ஆரம்பிப்பதற்கு முன்னும் வாசிக்கும்போதும் வா சித்து முடித்தபோதும் நடந்து கொள்ளவேண்டிய விதியும்;—ஓம் என்கிற அசையை உச்சரித்தலைக்குறித்து ஓம் வியாதிருதி காயத்திரி யென்னும் மந்திரங்கள் செபிக்கவேண்டியதும், இந்த மந்திரங்களைச் செபிப்பதினுல் உண்டாகும் பலனும்;—சோத்திரம், தொக்கு, சட்சு சிங்நுவை, ஆக்கிராணம், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத் தம், இருதயம் ஆகிய பதினெருதத்துவங்களின் வரலாறும்;—தத்து வமடக்கலும்;—இவ்விதச் சுகிர்தத்தினுல் உண்டாகும் பலனும்;— வேதம் ஒதுதலினுல் உண்டாகும்பலனும்;—இன்னருக்கு வேதாத்தி யயனஞ் செய்விக்கலா மென்பதும்;—பிரமசரியன் இவ்விதமாய் ஜீ வனம் செய்யவேண்டுமென்பதும்;—தகுந்த ஆசானிடத்தி லன்றிம ற்றவிடத்தில் வேதம் கற்பவர்களுக்கு விதித்ததண்டமும்;—வயது சென்றவர்க ளிடத்திலும், மேலானவர்க ளிடத்திலும், கொள் ளவேண்டிய முறைமையும்;— பலவகைப்பட்ட ஆசான்கள் பெயரு

ம்,அவர்களுக்குக் காட்டவேண்டிய மரியாதைகளின் கிரமமும்,வேத விற்பன்னருக்குக்காட்டவேண்டிய உபசாரமும்;— மாணாக்கனுக்கு க்குருவேதந்தை, காயத்திரியே தாய் என்று சொல்லப் படுகிறவேத சங்கிரகமும்;— ஆசானிடத்தில் வாசிக்கும் போது பிராமணன் பிச் சாடஞ்செய்யும் முறைமையும்;— மாணாக்கன் ஆசானுக்குக்காட் டவேண்டிய வழிபாடும்;— ஆசானுடைய பந்து ஜனங்கள், சிநே கர், மனைவி, மற்றவுறவின் முறையார் இவர்களுக்கு எவ்வித வந்தன வழிபாடுகள் செய்யவேண்டுமோ அவ்விதவந்தன வழி பாடுகளும்,ம ற்றவர்க்குச் செய்ய வேண்டிய முறைமையும்;— மாணாக்கன் தன் சயனத்தை விட்டெழுந்திருக்க வேண்டிய நாழிகை இன்ன தென்ப தும்;— சயனத்தை விட்டெழுந்திருக்கும் போதும் சயனத்திற்கு ப்போகும்போதும் நடக்க வேண்டிய கடமைகளும்;— திரிலோக ங்களுக்கும் மூன்று ஆச்சிரமங்களும் விவாக அக்கினி, திரியா ங்க அக்கினி, யாகாக்கினி யென்னும் மூன்று அக்கினி களுக்கும் சமமாக மதிக்கப்படுகிற தந்தை, தாய், குரு, இவர்கட்குச் செய் யவேண்டிய வந்தனவழிபாடுகளும், சன்மார்க்க நடக்கை களில் சூத்திரரைப் போலவும் நடக்கலா மென்பதைக் குறித்த கற்பனைக ளும்;—மாணாக்கன் ஆசானைவிட்டு மறுபடியும் வீடுபோய்ச் சேரும் போது ஆசானுக்கு ஒரு யல் அல்லது சொர்னம், ஒரு ஆபரணம் ஒருபசு அல்லது ஒரு அசுவம், ஒரு குடை, சோடி பாதரட்சை, ஒரு பீடம், தானியம், வஸ்திரம், அல்லது யாதொரு நேர்த்தியான கிழ ங்கு, காய், கறி அல்லது அவனுக்குக் கிடைக்கக் கூடுமான சில வில பெற்ற வஸ்து கொடுக்கவேண்டு மென்பதும்;—ஒரு பிராமணவாலி பன் தூரபந்துத்துவத்தில் இன்னுரை விவாகஞ் செய்யலாமென்பது ம், மனைவியின் நற்குணங்களும், இவ்விதக்குடும்பத்தில் அவன் விவா கஞ்செய்யலா மென்பதும்;—ஜேஷ்ட பாரியாளாகச்சூத்திரஸ்திரீயை விவாகஞ்செய்வதினால் உண்டாகும் பலனும், அஷ்ட விவாகமும்;— இந்த அஷ்டவிவாக ஏற்பாட்டின்படி முடிவுபெற்றமணத்தில் பிறந்த புத்திரர் பலனும்;—ஆண்பெண்புணர்ச்சியும்;—புத்திரரைப் பெறும் விதமும்;—பெண்ணினுடைய தந்தைதன்பெண்ணை விவாகஞ்செய்து கொடுக்கும் போது அவளுடைய பரிசம்பெற வொண்ணாததும்;—

மனைவிகள் இந்த மட்டும் ஆடையாபரணங்களின் விஷயத்தில் மேன்மையும் இணக்கமும் செய்யலா மென்பதும்;—இல்வாழ்க்கையினாலுண்டாகும் மனவானந்தமும்;—குடும்ப அழிவும், அதற்குண்டாகியகாரணங்களும்;—வேதக்கியானமுள்ள குடும்பங்களின் மகிமையும் அடுப்பு, இயந்திரம் விளக்குமாறு, உலக்கை, உரல், தண்ணீர்ப்பானை இவைகளுள்ள இடங்கள், இவைகளின் சம்பந்தத்தால் சிறுசெந்துக்கள் இறப்பதற்கான இடங்களாய் இருக்கின்றமையால் அக்கியானத்தினால் அப்பூச்சிகளைக் கொல்லுகிறதினாலுண்டாகும் பாவமும், இந்த விஷயங்களில் பரிகாரமாவதற்காகச் செய்யப்படும்வேதாத்தியயனம் செய்வித்தல், வேதாத்தியயனஞ் செய்தல், தருப்பணம், ஓமம், பிராணிகளுக்காகாரங்கொடுத்தல், அல்லது விருந்தினர்க்குத் தனமாய்ப் போஜனமளித்தலென்னும் ஐந்துசடங்குகளும்;—கிரகஸ்த ஆச்சிரமத்தின்மேன்மையும்;—நித்தியசிரார்த்தமும்;—வீட்டினும் வீட்டைச்சுற்றினும் இருக்கிறவிடங்களில் பலதேவர்க்கு அன்னபலி யிடுவதும் பரதேசிகட்கு அன்னமிடுகிற கிரகஸ்த ஆச்சிரமத்திலிருப்போருக்கு உண்டாகும் நற்பலனும்;—கிரகஸ்த ஆச்சிரமத்திலிருப்பவன் அதிதிகட் கன்னமளிக்கவேண்டிய கடமைகளும்;—விருந்தினர் இத்தன்மையரென்பதும், ஒவ்வொருவரும் இவ்விதமாக நடப்பிக்க வேண்டுமென்பதும், மாசிகம் செய்யப்படவேண்டிய முறையும் இப்படிப்பட்ட அதிதிகள் போஜனத்திற்கு வரவழைக்கப்படவேண்டு மென்பதும்;—சிரார்த்தத்தில் மிகவும் பண்டிதராயிருக்கும் பிராமணருக்குப் போஜனமளிப்பதினாலுண்டாகும் புண்ணியமும், சிரார்த்தத்தில் போஜனத்திற்குவரத் தகுதியற்றவர்களின்னாரென்பதும்;—சகுதியற்றோரை அன்னச் சிரார்த்ததில் அழைப்பிப்போருக்கு மறுபிறப்பில் உண்டாகுந் தீங்கும், சிரார்த்தத்திற்கு விருந்திட அசட்டை செய்பவருக் குண்டாகும் தீங்கின்பலனும், இருடிகள் பிதிருக்கள் இப்படிப் பட்டவ ரென்பதும்;—இருடிகளுக்கும் பிதிருக்களுக்கும் செய்யவேண்டிய அருக்கிய பாதமுதலாகிய வந்தனவழி பாடுகளும், சிரார்த்த அன்னத்தை இன்னின்னமிருகங்கள் அல்லது செந்துக்கள் அல்லது அங்கக்கேடானமனிதர், நோயுள்ளமனிதர் பார்க்கவொண்ணாதென்பதும்;—சிரார்த்ததின் சேடங்களை இன்னார் கொள்ளவேண்டு மென்பதும்;—பிதிருக்களுக்கு இன்னவிதமான போஜனபலியிடவேண்டுமென்பதும்;—ஒரு பிராமணன் ஜீவனஞ் செய்யவேண்

டிய பலவழிகளும்;—கணவன்மனைவியோடு உட்கார ஒண்ணுதென் பதும், அவள் உண்ணும்போதும் தும்மும்போதும், கொட்டாவி விடும்போதும், ஜலோபாதைக்கு மலோபாதைக்கு உட்காரும்போ தும், பார்க்கவொண்ணு தென்பதும்;—பிராமணர் நிருவாணமாக நீராடவொண்ணு தென்பதும்;—வேதியர் அக்கினிக்கெதிரே சூரிய சந்திரர்களுக் கெதிரே இருபிறப்பாளர்க் கெதிரே ஒரு பசுவுக்கெதி ரே வாயுவுக்கெதிரே மூத்திரம் பெய்யவொண்ணு தென்பதும், பிரா மணர்நெருப்பைவாயால் ஊதவொண்ணுதென்பதும், அதில் கசுமா லம் அல்லது அசுத்த வஸ்துக்களைப்போடவும் ஒண்ணுதென்பதும், அதில் கால்களைக்காய்ச்சவும் ஒண்ணுதென்பதும்;—அதைத்தாண்ட வும் ஒண்ணு தென்பதும்;—அவர்கள் ஜலத்தில் மூத்திரம், மலம், உமிழ்நீர், சீலை, அசுத்தமான யாதொருவஸ்துவையும், விடவொண் ணுதென்பதும், ஒருபிராமணன் நித்திரை செய்வதைக் குறித்தும், பசுதண்ணீர் குடிக்கும்போது தடுப்பதைக்குறித்தும், அவன்இன்ன பட்டணத்தில் வாசஞ்செய்யலா மென்பதைக்குறித்தும் அவன் இன் னவஸ்துவை இன்னபொழுது இவ்வளவு புசிக்கலாமென்பதைக்குறி த்தும், இன்னும் அநேக நடவடிக்கைகளைக் குறித்து விதிக்கப்பட் டகடமைகளும்;—பிராமணன் இன்னரிடத்திலிருந்துதானம் வாங்க லாம் இன்னரிடத்திலிருந்து தானம்வாங்கக் கூடாதென்பதும், பொ ருளாசையுள்ள உலோப அரசனிடத்திலிருந்து தானம்வாங்கப்பட்ட வனும், திவ்விய சடங்காசார முறைமைகளைக்கடந்து நடப்பவனும் பலவிதமாகி இருபத்தொரு நரகங்கட்குத் தொடர்ச்சியாகச் செல்லு வாரென்பதும்;—ஒரு பிராமணன் இன்னபொழுதில் வேதம் ஓதலா மென்பதும், இன்னபொழுதில் வேதம் ஓதவொண்ணு தென்பதும் வேதம் பட்டணங்களில் அல்லது நகரங்களில் ஓதப்பட வொண்ணு தென்பதும், துர்வாசனையுள்ள இடங்களிலும் ஓத ஒண்ணுதென்ப தும், ஒரு சாயுமஞ்சத்தின் மீது சாய்ந்து கொண்டு ஒரு வேதபா ரகர் வேதம் ஓத வொண்ணு தென்வதும்;—ஒரு ஆசன பீடத்தின் மீது கால்களையெடுத்து வைத்துக்கொண்டாவது தொடைகளை மறி த்துப்போட்டுக் கொண்டாவது ஓதவொண்ணு தென்பதும்;—வே ளாண்மைக் குதவியாயிருக்கிற ஒரு மிருகமாவது ஒரு தவளையாவது ஒரு பூனையாவது ஒரு நாயாவது ஒரு பாம்பாவது ஒரு கீரியாவது ஒரு எலியாவது வேதபாரகருக்கும் அவருடைய சீடருக்கும் மத்தி

யிற்சென்றால் ஒருபகல் ஒரு இராத்திரி வரையில் வேதம் ஒது தலை நிறுத்திவைக்க வேண்டுமென்பதும், ஒருபிராமணன் மனதறிந்து தெய்வவிக்கிரகங்கள், அந்தணர் முதலாகியபேர்களுடைய சாயைநிழலின் மீது தாண்டவொண்ணாதென்பதும், இன்னின்ன நேரங்களில் நாலு சந்திகூடுமிடத்தில் நிற்கவொண்ணாதென்பதும்;—ஒரு போர் வீரன், ஓர் சர்ப்பம், வேதசாஸ்திரமறிந்த ஒரு அந்தணன், இவரை அலட்சியம் பண்ணவொண்ணாதென்பதும்:—ஒரு அந்தணன் கை கழுவாமல் ஒரு பசுவையாவது ஒரு பிராமணனையாவது அக்கினியையாவது தொடவொண்ணாதென்பதும்;—இன்னஜனங்களுடைய அன்னத்தை அவன் புசிக்கவொண்ணாதென்பதும், ஒருபிராமணனுக்குப் பலிததானங்கள் கொடுப்பதினால் உண்டாகும் பலனும், ஒழுக்கம் அவசியமாய் உண்டாயிருக்க வேண்டுமென்பதும்;—ஒரு மனிதன் தன்சரீரத்தை ஒரு கட்டையைப் போலவும் அல்லது களிமண் கட்டியைப்போலவும் தரையின்மீது பிணமாய் விட்டுப்போகும்போது அவனுடலை விட்டுவிலகிப்போகிறார்கள். ஆனால் அவனுடைய புண்ணியம், அவனுடைய ஆத்துமாவைத் தொடர்ந்து போகின்றதென்பதும், ஒருபிராமணன் இவ்விததானத்தைஅங்கிகரிக்கலாமென்பதும் இவ்வித உணவுகள் நியாயப் பிரமாணங்களுக் கொத்தவைகள் இவ்வித உணவுகள் நியாயப் பிரமாணங்களுக்கு விரோதமான வைகள் இவ்விதமாமிசம், மீன், பட்சிகள் உணவுக்குரியவை, மாமிசஆகாரம் வேவேத்தியம் ஆன்பின்னர்மாத்திரம் சாப்பிடலாம் என்பவைகளுக்குவிதித்தவிதிகளும்;—வேவேத்தியமான மாமிச ஆகாரத்தைத் தள்ளுபடிசெய்கிறவன் இருபத்தொரு ஜனனம்மிருகமாய்ப் பிறக்கவேண்டுமென்பதும், ஒரு ஆசாரியன் மாமிச ஆகாரத்தில் அதிக இச்சை கொள்வானால் வெண்ணெயினாலாவது அல்லது பிசைந்த மாவினாலாவது சிலமிருகத்தைப்போல உருவஞ்செய்து அவனது சுவையினிச்சை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆனாலவன் யாதொரு மிருகத்தையும் வீணில்கொல்ல விரும்பவொண்ணாது. அந்தப்படி கொல்வானால் அவனால் கொல்லப்படும் மிருகத்தின்மீது எத்தனை உரோமங்களுண்டோ அத்தனை பிறப்புக்குள்ளாவ னென்பதும்;—தானியபட்சணத்திற்குரியபயிர், பூண்டுகள்-கால்நடைகள் - வேலிக்குத் தகுந்த மரங்கள் நிலத்திலும்-நீரிலும்-வாழுகிற மிருகங்கள் பட்சிகள் இவைகள்யாசாதி கிருத்தியங்களுக்காக அழிக்கப்பட்டால் அவைகள் மறு

லோகத்தில் மாட்சிமையுள்ள ஜனனமெடுக்குமென்பதும், பிதிர்கட்குங், தேவர்கட்குங், ஹவிர்பாகஞ் செய்யாமல் வேறொரு ஜீவனுடைய மாமிசத்தில் தன்னுடைய சொந்தமாமிசத்தை வளர்க்க இச்சிக்கிறவனைவிட மகாபாதகன் மனிதருக்குள் ஒருவனுமிரானென்பதும்;—சாவுக்காகவும், பிண்டச்சேதத்திற்காகவும், ஸ்திரீ தூரமானதிற்காகவும், பிள்ளைப்பேறு முதலாகிய வைகளுக்காகவுஞ் செய்யப்படும் சமுஸ்காரம் அல்லது ஆசூசம் நீக்குகைக்காகப்பல அசரவஸ்துக்களைப் பரிசுத்தமாக்க வேண்டுமென்பதும்;—ஸ்திரீகள் நடந்துகொள்ளவேண்டிய கடமைகளும், ஸ்திரீசுயாதீனமானவளாயிருக்கவொண்ணுதென்பதும், அவளுடைய தந்தையையாவது கணவனையாவது புத்திரரையாவது அவளுடைய யாதொரு சமீப உறவினரையாவது பற்றினவளாயிருக்கவேண்டும் அல்லது அரசனைப் பற்றினவளாக வாவதிருக்கவேண்டுமென்பதும்;—ஒரு ஸ்திரீயினுடைய கணவன் வேறொருஸ்திரீயினுடைய மோகமயக்கத்தில் இருந்தாலும் நற்குணங்கள் இல்லாதவனாயிருந்தாலும் அவன் கற்புடையமனைவியால் ஒரு தேவனைப்போல எப்போதும் மதிக்கப்படவேண்டுமென்பதும் எல்லாவிதத்திலும் தன்கணவனைக்கனப்படுத்துகிற பெண்மகள் அவனோடு சுவர்க்கபதவியடைகிறாளென்பதும்;—நீதிதோர் கடமைகள் அரசர்கடமைகளைச் செய்பவன் அக்கினியாகவும், வாயுவாகவும், சூரியனாகவும், சந்திரனாகவும், குற்ற விசாரணைதரும் தேவதையாகவும் செல்வக் கருத்தாவியாகவும், உதக அதிபதியாகவும், ஆகாயக்கருத்தாகவும், மனிதவடிவங்கொண்ட தேவனாகவும் இருக்கிறான் என்பதும்;—இராஜதண்டனை நடக்கவேண்டியது அவசிய மென்பதும்; தண்டனை விதிக்காமல் விட்டுவிடுகிற இராச்சியத்திற்குண்டாகிய பயமும், ஏக்கமும், ஆகிய தீங்குகளும்;—ஒரு அரசனது சொந்தஇராச்சியத்துக்குள் நீதி நடக்கவேண்டுமென்பதும்;—அன்னியதேச சத்துருக்களைக் கடினமாய்த் தண்டிக்கவேண்டுமென்பதும்;—பிராமணமந்திராலோசனையேற்பாடுசெய்யவேண்டுமென்பதும், பிராமணபூசைசெய்யவேண்டுமென்பதும், அநுதமாயிருக்கிற அதர்மங்களை நீக்கவேண்டுமென்பதும்;—எட்டுப்பேர் மந்திரிகளை யேற்படுத்தவேண்டுமென்பதும், ஒரு நம்பிக்கையுள்ள மந்திரியிருக்கவேண்டுமென்பதும், ஒரு பிராமணன் இருக்கவேண்டுமென்பதும்;—உத்தி

யோகஸ்தர் இருக்கவேண்டுமென்பதும்;—அவர்கள் தகுதியான சா
மர்த்தியங்களே அடைந்திருக்க வேண்டு மென்பதும்;—சாமர்த்தி
யமுள்ள தானபதி யிருக்கவேண்டு மென்பதும்;—படைகளை அலங்
கரிப்பித்த சேனாபதி யிருக்கவேண்டுமென்பதும்;—இராஜதானிக்குத்
தகுந்த ஸ்தானம் இருக்கவேண்டு மென்பதும்;—இராஜதானிச்சமீ
பத்தில் கோட்டை யிருக்க வேண்டு மென்பதும்;—கூடுமானதா யிருந்
தால் மலைக்கோட்டை அல்லது தருக்கம் இருக்கவேண்டு மென்ப
தும்;—இராஜ விவாகமும்;—இல்லொழுக்கத்திற்குரிய குரு இருக்க
வேண்டுமென்பதும்;—சமயாசாரம் உண்டா இருக்கவேண்டு மென்
பதும்;—அரசிறைதண்டலதிகாரிகளிருக்க வேண்டுமென்பதும்;—
யுத்தகாலத்தில் அரசனது கடமை அவர் யுத்தத்திலிருந்து பின்வாங்
கவொண்ணுமையம்;—யுத்தத்திலே பெறும்வெகுமதி, படைபயிற்சி
தேசசவரட்சணைக்காக ஏற்படுத்தப்படும் உத்தியோகஸ்தர், இராணு
வப்படைபயிற்சி, இராஜாவின் ஊழியக்காரர், தேசாதிபதிகள்
வரிப்பணம் வாங்குதல், கலைவல்லோராகிய அந்தணர் இன்னர்
இறைவரிகொடுக்க வேண்டுதின்மை என்பவையும்;—கற்ற ராயிய
அந்தணர் பகியினல் வருத்தப்படும்படியாவாது இராச்சிய முழுதும்
அழிந்து போகும்படியாகவாவது இருந்திருக்க வொண்ணுமையம்;
மந்திரிகளோடு செய்யப்பட்ட ஆலோசனைவிஷயம் இரகசியமாயிருக்
கவேண்டுமென்பதும்;—ஆலோசனை சபையில்யாதொரு முக்கியமான
விஷயங்களை யெடுத்துத்தருக்கிக்க வேண்டியதும்;—யுத்தஞ் செய்
வதினியல்பும்;—பகைவரது நாட்டில் படையேற்றல் செய்தலும்,
சமாதனவுடன் படிக்கை செய்தலும், அரசன் தனது சொந்த இருக
த்தில் நடந்துகொள்ள வேண்டியவிதமும்;—அவனுண்டபோஜனம்
அவனை வைத்தியங்கள், அவனது காலப்பிரிவினை, அவனது உடை,
அவனுடையதாழில்கள், அவர் நீதிகொலுமண்டபத்தில் வீற்றிரு
க்கை, அவர்கர்த்தியம் பதினெட்டு விதமான பிரதான ஞாயப்பிரமா
ணவழக்குகளை வரிசைக்கிரமமாகத் தீர்மானிக்க வேண்டு மென்ப
வையும்;—அடையாவன, கடன், சுதந்திரம், கூட்டுப்பங்கு கொடுக்
கப்பட்டதிலிருந்து கழிவுக்கணக்கு, சம்பள நிலுவை, கூலிநிலுவை
உடன்படிக்கைதவறுதல், விற்பனைகொள்ளல் இவைகளின்தொடர்பு,
எஜமானுக்கும், ஊழியக்காரருக்கும், உண்டாயிருக்கிற விவாதம்

கள், எல்லோர்க்குறித்தவிவாதம், அடித்தல், அவதூறு, சிறுதிருட்டு கொள்ளை, பலாத்காரம், விபசாரம், புருஷனுக்கும், ஸ்திரீக்கும் நடக்கப்பட்ட வாக்குவாதம், அவர்களுடைய பலகடமைகள், சுதந்திரபாத்தியத்தைக்குறித்த பிரமாணங்களுமாம். சூதாட்டத்தைக்குறித்தும், மிருக வேட்டையைக் குறித்தும், அரசன்சபைக்குவரக்கூடாதபோது அவர் ஒரு பிராமணத் தலைமையான ஞாயாதிபதியையும், மூன்று மந்தியஸ்தரையும் ஏற்படுத்தவேண்டு மென்பதும், எந்தத் தேசத்திலாவது மூன்றுவேதங்களில் முக்கியவிற்பன்னரா யிருக்கிற மூன்று வேதியரோடும் அரசனால் நியமிக்கப்பட்ட அதிவிற்பன்னரா கிய ஒருபிராமணரோடுங்கூடி உட்கார்ந்தபோது அச்சபையை அறிஞர் சதுர்முகபிரம்ம சபையென்று வழங்குதலும்;—நீதியின் பெறுப்பும், அவநீதியினாலுண்டாகிற இடையூறும், தகுந்த சிட்சைதள் விதிக்கவேண்டிய அபிசியமும்;—சூத்திரன் தருமநூலுக்கு விபாக்கியானஞ் செய்யவொண்ணாது அல்லது ஞாயாதிபதியாக உட்கார வொண்ணாதென்பதும்;—சூத்திரன் வழக்குகளைத் தீர்மானிக்கப்பார்த்துக் கொண்டிருக்கிற அரசனால் அந்தராச்சியம் ஒரு பசுவானது ஆழமுள்ளசேற்றில் சிரமப்படுதல்போன்ற கலக்கடியில் அகப்பட்டுக்கலக்கடிப்பட்டுப்போகுமென்பதும்;—ஒருஅரசனாவது ஒருஞாயாதிபதியாவது வழக்காட்டத்தை விர்த்திபண்ண வொண்ணுமையும், வியாச்சியங்களை அசட்டைசெய்யயும்ஒண்ணுமையும், மூன்று பேருடைய சாட்சியம் வேண்டு மென்தும், இப்படிப்பட்ட பேர்சாக்ஷிகளாக இருக்கவேண்டு மென்பதும், நியாதிபதியானவர், ஒரு சூத்திரனுக்குப் பொய்ப் பிரமாணஞ் செய்தால் உண்டாகும் தீங்குகளைக் குறித்த பிரத்திக்ஞையை அறிவிக்க ஒருபிராமணரை அழைக்கவேண்டுமென்பதும், அந்தப்பிரதிக்ஞையாவது ஓ! கல்லமனிதனே உன்னுடையவாக்கு மூலத்தில் நீ பொய்சொல்வாயாகில் பிறந்தது முதல் நீ செய்த அந்தந்த நற்கருமத்தின் பலன் உன்னை விட்டு நீங்கி நாய்களுக்குப்போய்விடும், ஒருவனுக்குபகாரஞ் செய்யவேண்டு மென்கிற எண்ணத்தோடு பொய்ச்சாட்சி சொல்லலாம் அப்படிப்பட்டசாட்சியும் தேவர்களுடைய வாக்கென்று அறிஞர் விளம்புகிறார்கள். அந்தப் பொய்ச்சாட்சிக்காக் கூலிவாணிக்கு யாதொருகாணிக்கை அல்லது நிவேதனஞ்செய்தல் அவசியமா யிருக்கின்ற தென்பதாம். பிர

மாணங்கள் கிரமமாய்ச் செய்யப்பட வேண்டியவிதம். பிராமணன் அவனுடைய உண்மையால் பிரமாணம் பண்ணவேண்டும். க்ஷத்திரியன்தன்னுடைய அசுவத்தை, யானையை, அல்லது ஆயுதத்தைத்தொட்டுப்பிரமாணம் பண்ணவேண்டும் வைசியன் அவனுடைய பசுக்கள் தானியம் சொர்ணம் இவைகளைத் தொட்டுப்பிரமாணஞ் செய்யவேண்டும். சூத்திரன் தன்சொந்தத் தலையின்மீது கையைவைத்துப் பொய் சொன்னால் எல்லாக்குற்றங்களும் செய்தவனாவே னென்று சாபங்கூறிக்கொண்டு பிரமாணஞ் செய்யவேண்டும், முக்கியமான சமயங்களில் ஒருசாக்ஷி அழலேந்தவேண்டும் அல்லது தண்ணீரில் மூழ்கவேண்டும் அல்லது பலதரம் மனவிமக்களுடைய சிரசுகளைத் தொடவேண்டும் என்பதாம். இதுவும், பொய்ப்பிரமாணஞ்செய்ததைக்குறித்த தண்டனைகள், ஒருபிராமணன் பொய்ப்பிரமாணஞ் செய்தால் ஊருக்கப்புறப் படுத்தப்படும். ஒரு சூத்திரன் பொய்ப்பிரமாணஞ் செய்தால் அவனுக்கபராதமும் விதித்துப் பிறதேசத்திற்கு ஏற்றி விடுகையானதண்டனை செய்தலாம். இதுவும், செம்புவெள்ளி தங்களடைகள் வட்டிவீதங்கள், பிணைபினர்பொதுக்கட்டல், விற்பனை, கூட்டுவியாபாரப்பங்குகள், தானங்கள், சம்பளநிலுவைகள், ஒப்பந்தக் கெடுதிகள், பெண்களைக் கலியாணத்தில் தானமாய்விற்பனைசெய்தல், கால்நடைகளைக்குறித்து உடையவனுக்கும் மேய்க்கிறவனுக்கும் உண்டாகிய விவாதங்கள், பூமியைக்குறித்த எல்லை விவாதம், அவதூறனவார்த்தை முதலிய குற்றதண்டனைகளுக்காக மனிதனுக்காவது மிருகத்திற்காவது செய்யப்படும் துன்பமாவது, ஒருமனைவி ஒருபுத்திரன்ஒரு வேலைக்காரன் ஒருசீடன் ஒரு இளையசகோதரன் இவர்கள் ஒருதப்பிதஞ்செய்யும்போது ஒருகயற்றினாலாவது ஒருசிறு பிரம்பாலாவது முதுகின்மீது மாத்திரம் அடித்துத் தண்டிக்கலா மென்பது, இதுவும், குற்றங்களைச் செய்பவர் தகுதியான இராஜதண்டனை யடைவாராயில் பரத்தில் சுவர்க்கபதவியடைவார்கள். நற்காரியம் செய்தபேரொப்பந்தம் நிராபராதிகளாவார்க ளென்பதும்;—அபராத தண்டனைகளின்விவரமும், யாத்திரையாகச் செல்லுகிற இருபிறப்பாளனிடத்தில் சாமக்கிரியைச் சொற்பமா யிருக்குமாகில் அப்படிப் பட்டவன் மற்றொருவனுடைய புலத்திலிருந்து இரண்டு கரும்புகோல்களை மாத்திரம் எடுத்துக் கொண்டாலும் போஜனத்திற் கடுத்த இரண்டு கிழங்குகள் எடுத்துக் கொண்டாலும் அவனுக்கு அபராதம் போட

வொண்ணுமையும்;—விபசாரத்தைக் குறித்த பொய்ப் பிரமாணம், ஆட்கொலை ஸ்திரீசம்மதியின் மீது ஒருவன் சோரத்துவம் செய்தல் இவைகளுக்குத் தண்டனையில்லை யென்பதும்;—உயர்குலப்பெண்ணை யிழிகுலத்தொருவன் இச்சிப்பானுகில் சரீரதண்டனை யடையக்கடவ னென்பதும்;—கடன்களைக் குறித்த சட்டங்கள் நீர்வைக் கேள்வி இவைகளும்;—சமுத்திரத்தின்மீது தீர்மானமான கேள்வி இன்மையும்,—நதிகளைக்கடக்க வேண்டியதைக்குறித்த செலவுகளும்;—இரண்டுமாச கருப்பிணி;—பண்டாரம் பதேசி வானப் பிரஸ்தன், வனவாசி வேதாத்தியயனம் செய்கிற அந்தணன் அவர்கள் வழிப் போக்குத்தீர்வை கொடுக்கவேண்டிய தின்மையும்;—ஒரு மனைவி, ஒரு புத்திரன், ஒரு அடிமை, இவர்கட்குப் பொருளில் நேங்களான பாத்தியமில்லை யென்று சொல்லப் படுகையும், ஒருபிராமணன் ஜீவனத்திற்காக விருத்தப்பட்டுக் கொண்டிருப்பானுகில் அவன் யாதொரு தடையுமில்லாமல் அவனுடைய சூத்திர அடிமைபின் சொத்துகளைப்பறித்துக் கொள்ளலா மென்பதும்,—ஸ்திரீகளை நடப்பிக்க வேண்டிய விதமும்;—ஸ்திரீகள் கட்டுக்காவலில் இருக்க வேண்டியதும் ஒருமனைவியை எதினால் வசப்படுத்தலாமோ, அந்த வஸ்துக்களும்; ஸ்திரீகளுக்கு வேதங்களைக் குறித்த வேலையின்மையும்;—குழந்தைகளைக் குறித்த கடமைகளும், அவையாவன,—ஒரு சூத்திரனுடைய மனைவிக்குப் புத்திரனில்லாவிடில் கணவனுடைய சகோதரனுவது அடுத்தபந்துவாவது அவன்சகோதரனுக்கு ஒருபுத்திரனை யுண்டாக்கி வைக்கலாமென்பதும், ஒருகைம்மை மறுமணஞ்செய்ய வொண்ணுமையும், ஆனால் ஒரு சூத்திரன் சந்ததியில்லாமல் இறந்துபோவானுகில் ஒருசகோதரன் தன்சகோதரனுக்கு ஒருசந்ததியை யுண்டாக்கிவைக்கிற நிமித்தம் அவனுடைய கைம்மையைப் புணரலாம். ஒருநாள் புணர ஒண்ணுமையும்,—காமாதுரத்தினாலும் புணரவொண்ணுமையும் ஆம்,—ஒருவன் சோபன முகூர்த்தத்துக்குமுன் இறந்துபோவானுகில் அவனுடைப் சகோதரனுக்கு அவனுக்கு விவாகமாயிருந்தபெண்ணை நியாயமாய் விவாகஞ்செய்து கொடுக்கலா மென்பதும், மனைவியிடத்திலிருந்து கணவன் எவ்வளவுதூரம் பிரிக்கப்படலாமென்பதும், கணவனிடத்திலிருந்து மனைவியெவ்வளவுதூரம் பிரிக்கப்படலாமென்பதும், உண்மையான கெட்டஸ்திரீயாய் இருப்பாளாகில் கணவன் மற்றொருஸ்திரீயை விவாகஞ்செய்து கொள்ளலா

மென்பதும்;-மலடியாயிருப்பாளாகில் எட்டுவருஷத்திற்குப் பின்னர் மற்றொருவிவாகஞ்செய்துகொள்ளலாமென்பதும்;—அந்தப்படி ஞாயமாய் விவாகஞ்செய்துகொண்டதில் மனைவியானவள்கோபத்தோடு வீட்டைவிட்டுப் போவாளாகில் குடும்பத்தைச்சேர்ந்தவர்களெல்லோருக்கு முன்பாகவுடனே யவளைக்காவல் படுத்தவேண்டு மென்பதும், அல்லது நீக்கிவிடவேண்டுமென்பதும்,—கஜாதிமனைவிகணவன் ஊழியத்திற்குக் காத்திருக்கவேண்டு மென்பதும், பெண்மகன் எட்டுவயதிற்கு முன்னரே விவாகஞ் செய்யப்படவேண்டு மென்பதும், மணமகன் சிறந்தோனாகவும் சுந்தரமுள்ளவனாகவும் இருக்கவேண்டு மென்பதும்,—பெண்மகள் விவாகபக்குவ முள்ளவளானால் மூன்றுவருடங்கள்வரைக்கும் காத்திருந்து அதன்மேல் சுயகுலஸ்தனுபிருக்கிற ஒரு மணமகனைத் தெரிந்தெடுத்துக் கொள்ளலாமென்பதும், அந்தப்படியவன் தெரிந்தெடுத்துக் கொண்டால் அவளுடைய ஆபரணங்களைக்கணவன் வீட்டுக்குக் கொண்டுபோக வேண்டியதில்லை யென்பதும், சுதந்தரபாத்திய ஞாயப்பிரமாணத்தைக்குறித்து, தந்தையுந்தாயுமிறந்ததின்மேல் சகோதரர் சொத்தைப் பாகித்துக்கொள்ளவேண்டும் அல்லது ஜேஷ்ட சகோதரன் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளலாம், மற்றசகோதரர் அவர்களுடைய தந்தையின்கீழ் எப்படியிருந்தார்களோ அவ்விதமாகவே அவன்கிழ் இருக்கலாம், இளையசகோதரர் அவர்களுடைய தந்தையிடத்தில் எவ்விதமாய் நடந்து கொண்டார்களோ அவ்விதமாய்நடந்து கொள்ளவேண்டு மென்பதும், ஜேஷ்டசகோதரனுக்கு இருபதாம் பாகமும், நடுச்சகோதரனுக்குப்பதினாலாம் பாகமும், இளையசகோதரனுக்குப் பதினெட்டாம் பாகமும் கிடைக்குமென்பதும், ஏகோதரவிவாகமில்லாத புத்திரிகளிருப்பாராகில் சகோதரரில் ஒவ்வொருவனும் அவனவன் பங்கிலிருந்து நாலிலொருபாகம் கொடுக்கலாமென்பதும், பலவிதப்புத்திரரில், இறந்துபோனபந்துவுக்கு இன்னர்கருமஞ்செய்ய வேண்டுமென்பதும், நபுஞ்சகன் விவாகஞ்செய்தால் நேமகமான ஒருவனால் புத்திரனுண்டாவதிலாம் அப்புத்திரனுக்குச் சுதந்திரபாத்திய முண்டென்பதும், சூதாட்

டத்தைக்குறித்து, சூதாடுவோர் தண்டிக்கப்படவேண்டியதும், களி மண்ணினால் செய்யப்பட்ட விக்கிரங்களை உடைத்தவருக்கு அபராதம் விதிக்கவேண்டியதும், ஒரு பிராமணன் ஒருவேள்வியை நிறைவேற்றுவதற்காகத் திருடுவானுகில் அதற்காக அவனைத் தண்டிக்கவொண்ணுமையும், தபசைக்குறித்தும்;—பிராயச்சித்ததத்தைக் குறித்தும்,—இதன்கீழ் விரித்துக்காட்டிய அநேககுற்றங்களைக்குறித்தும் விதித்த பலவிதபிராயச் சித்தங்களும், மறுபிறப்பைக் குறித்தும், முத்தியைக் குறித்தும் முக்குணங்களைக் குறித்தும், முக்குணங்களின் காரியங்களைக்குறித்தும் மறுபிறப்பில் முக்குணங்களின் பலன்களைக் குறித்தும், யாதொருபிறப்பினு லுண்டாகும் யாதொருபாபத்தைக் குறித்தும், சொல்பவையும், பிர்மக்கியானம் அடைந்தபேர் அடையும்பேரின்பமும், வேதாத்தியயனத்தால் வந்தசருவ ஞானமும், வேதமறிந்தவன் அனைத்து மறிந்த அறிஞனுயிருக்கிறனென்பதும், தேவபக்தியும், வேதசாஸ்திரக் கியானமும் பிர்மத்தில்ஐக்கியமாவதற்கு வழி வகையா யிருக்கின்றன என்பதும் ஆகும். இவற்றின் விரிவு வடநூட்காண்க.

மநுநீதிசாஸ்திரம்

முற்றிற்று.

மநுதர்ம சாஸ்திரம்
மூலமும்
வசனகாவியமும்.
இதன் விலை ரூபா 1 0 0.

மநுதர்ம சாஸ்திரம்
2847, நிறைந்த சூலோகங்
களுக்கு தமிழ்-உரை.
இதன் விலை ரூபா 3 8 0.

பிராயச்சித்தநிருணயசாத்திர

சங்கிரகம்.

1. பசுக்கொலையும், அந்தணரையுங் கொன்றபாவமும், மதுபானம்செய்தல், குருவினுடைய மனைவியோடு சோரத்தனம் செய்தல் சொன்னமுதலாகிய வைகலைத்திருடல் ஆகியபாவமும்நிவர்த்திக்காக விதிக்கப்பட்டிருக்கிற சாந்திராயணம் முதலியகிரியாங்கங்கள் பிராயச்சித்தமென்று சொல்லப்படுகின்றன. வேதங்களால் விதிக்கப்பட்டிருக்கிற அசுவமேதயாகமும், மற்றசடங்குகளும், செய்வதினால்பாவம் நிவர்த்தியாகிறது மாத்திரமேயல்லாமல் அவற்றைச்செய்கிறவன் சுவர்க்கபதவியுமடைகிறான். ஆகையால் வேதத்தில் செய்யப்பட்ட அசுவமேதயாகமுதலிய சடங்குகள், பிராயச்சித்தங்களென்று சொல்லப்படவில்லை.

2. பிராயச்சித்தசாஸ்திரத்தை ஒருவனுக்குப் போதிக்கிறவன் ஒருபிராமணன் தண்ணீரில்விழுந்து முழுகிப்போகும்போது அவனைக்காப்பாற்றுகிற ஒருவன் எவ்விதபலனடைகிறானே அதற்குச்சமமானபலனடைவான். தருமநூலறியாத ஒருவன் மற்றொருவனுக்கு விதிக்கப்படாத யாகசடங்குகளைச் செய்யுமபடி கற்பிப்பானகில் அவன் அந்தக்குற்றத்திற் குள்ளாவான். முதலில் அந்தப் பாவத்தைச் செய்தவன் அதிலிருந்து நிவர்த்தியாகிவிடுவான். ஒருபண்டிதன் தன்னை வந்திக் கேட்காதிருக்க, மற்றொருவனுக்குப் பிராயச்சித்தஞ் செய்கிற விதத்தைச் சொல்லவொண்ணாது. ஒரு சூத்திரன் சாத்திரமறிந்த ஒருவரிடத்திற்குப் போய்ப் பிராயச்சித்தம் எப்படிசெய்கிறதென்று விசாரிக்கப் போகிறதிற்குமுன் நீராடிச்சொன்னம், ஆபரணங்கள், வஸ்திரம்முதலாகிய காணிக்கைகளோடு தன்னுடையபுரோகிதனை அழைத்தக்கொண்டு பண்டிதரிடஞ் செல்லவேண்டும். இந்தநன்கொடையால் சுபகாரியமடைந்த அந்தணன் புரோகிதன் மூலமாய்த்தகுந்த பிராயச்சித்தத்தைக்குறித்த அவசியமான விவரங்களையவனுக்கு உண்மையாய்த் தெரிவிக்கவேண்டும்.

3. ஒருவன் மனதறிந்து ஒருபாவத்தைச் செய்வானகில் ஒரு சாத்திரவிற்பனரிடத்தில் அதை வெளிப்படுத்தித் தக்கபிராயச்சித்தமென்னவென்று விசாரிக்குமுன் புசித்தானனனும் யாதொரு வேலை

செய்தானுனும், இவனுடைய பாவம் விர்த்தியாகி விடுகின்றது. அல்லது இந்தப்பிராமணனுக்குப் பொய்சொல்வானுகில் அவனுடையபாவம் அதிகரித்துவிடும். பன்னிரண்டு மாதங்கள்வரைக்கும், தக்க பிராயச்சித்தம் செய்துகொள்ள அசட்டைசெய்வானுகில் அந்தப்பாவம் இரட்டிப்பாகிவிடும். பிராயச்சித்தமும், அரசனுக்குக் கொடுக்கவேண்டிய தண்டமும் இரட்டிப்பாக்க வேண்டும். ஆறுமாதங்கள் வரைக்கும் அசட்டை செய்வானுகில் பிராயச்சித்தம் அதனில் பாதி பங்கு அதிகமாகிவிடும். மூன்றுமாதம் அசட்டை செய்வானுகில் நாலிலொருபங்கு அதிகமாகிவிடும். அந்த அந்தணன் வெகுமதிபெற்றுக்கொண்டபினபு பாவஞ்செய்தவனுக்குத் தகுந்த பிராயச்சித்தத்தைத்தெரிவிக்காவிட்டால் குற்றவாளியினுடைய பாவமும் பிராயச்சித்தம்செய்கிறவேலையும் அந்த அந்தணன் மேல்விழும்.

4. சாத்திரங்கற்றவன் குற்றஞ்செய்த சூத்திரனுக்குப் பிராயச்சித்தகியாபாத்தை நோய்ப்போதிக்க ஒண்ணுது ஆனல் பிராமணனுகிய அவனுடைய புரோகிதனுக்குப் போதிக்கவேண்டும். அந்தப்புரோகிதன் நியமிக்கப்பட்ட பிராயச் சித்தத்தைச் சூத்திரனுக்குப் போதிப்பான்.

5. ஒருவன் சொற்ப பாவஞ்செய்வானுகில் சொற்பபிராயச்சித்தம் செய்யவேண்டும். பெரியபாவஞ்செய்வானுகில் பெரியபிராயச்சித்தஞ் செய்யவேண்டும். பெரியபாவஞ் செய்தவன் சொற்பபிராயச்சித்தம் செய்துகொள்வகை கேடவொண்ணுது. ஆகிலும் அந்தத்தேசிகன் குற்றவாளி ஏழையாயிருந்தால் தம்முடைய யுக்தம்போல் விதிக்கப்பட்டிருக்கிற பிராயச்சித்தத்தைக் குறித்துத் தயைசெய்து செலவுகளைக்குறைக்கலாம். ஆனல் அந்தத்தேசிகன் வெகுமதியடைந்ததற்காகவாவது சிநேகத்தைப் பற்றியாவது பக்ஷபாதத்தைப் பற்றியாவது பிராயச்சித்தத்தின் செலவையும் உக்கிரத்தையும் குறைப்பானுகில் குற்றவாளிசெய்தபாவம் அவன்மேல் சாய்கின்றது. அந்தப்பிராயச்சித்தத்தை அவன் செய்யவேண்டும். குற்றஞ்செய்தவன் பிராமணனுயிருப்பானுகில் அவன் சிறுபிள்ளையாகவாவது கிழவனுகவாவது இருந்தாலொழியச் செலவைக்குறித்து அனுகூலப்படுத்த ஒண்ணுது. சிறுபிள்ளையாக அல்லது விருத்தாப்பியனுக இருந்தால் செலவில் நாலிலொருபங்கு குறைத்துவிடலாம். இப்படிப்பட்ட சங்கதி

களைப்பற்றி ஒரு க்ஷத்திரியனும் இந்தப்படி குறைக்கப்படுவதை அடையலாம். வைசியனும், சூத்திரனும், பாதியடையலாம், குற்றவாளி சூத்திரஸ்திரீயாகவாவது குழந்தையாகவாவது இருந்தால், பிராயச்சித்தத்தின் காலிலொருபாகத்தை வாங்கவேண்டும். வேனிற்காலமாகவாவது குளிர்காலமாகவாவது இருக்கிறபருவங்களை யனுசரித்துத் தயைசெய்யப்படலாம். தயைபெற்றுக்கொள்ளப் பாத்திரர்களாயிருப்போர்யாவர் என்றால் பெண்மக்கள், பதினாறுவயதிற்குட்பட்ட குழந்தைகள், எண்பது வயதுக்குமேற்பட்ட கிழவர், அதிதரித்திரர் பிணியாளர், பலகீனர், முதலாகிய பேர்களேயாம். ஐந்துவயதுள்ள அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய ஒரு குழந்தை பாவகாரியஞ் செய்துபிராயச்சித்தஞ்செய்ய அசக்தியுடையதாயிருந்தால் அக்குழந்தையினுடைய குரு அல்லது தந்தை அல்லது சகோதரன் அல்லது புரோகிதன் அதற்குப்பதில் பிராயச்சித்தம் செய்துகொள்ளலாம். ஐந்துவயதிற்குட்பட்ட ஒரு குழந்தை பிராயச்சித்தம் செய்யவேண்டிய ஒரு பாவகாரியத்தைச் செய்யமாட்டாது. ஆனால் மதுபானம் செய்திருந்தால் மந்திரம் அப்போது பிராயச்சித்தம் செய்யப்படவேண்டும். மனதறிந்துசெய்த குற்றங்களுக்காகவும் மனதறியாத குற்றங்களுக்காகவும் எவ்வளவு பெரிய பிராயச்சித்தம் செய்யப்படுமோ அதற்கு இரண்டத்தினை பெரிய பிராயச்சித்தம் செய்யப்படவேண்டும்.

6. குற்றங்கள் மூன்றுவிதங்களில் உண்டாகின்றன. அவையாவன, வேதம் எதைச்செய்யும்படி விதிக்குமோ அதைச் செய்யாமல் விட்டுவிடுகிறது. வேதம் எதைச்செய்ய ஒண்ணாதென்று விலக்குமோ அதைச்செய்கிறது. ஒருவினை அடாதவிதமாய்ச் சபிக்கிறது இவையாம். கடைசியில் சொன்னகுற்ற பரிகாரத்திற்காக, பிரஜாபத்தியம் என்கிற பிராயச்சித்தத்தை ஒருமாதம்வரைக்கும் செய்யவேண்டும்.

7, ஒன்பதுவிதப் பாவங்கள் இருக்கின்றன. ஜாதிப்ரங்கஷியகரம் இது வெங்காயந்தின்னல், சுற்றத்தாருக்குச் சதிசெய்தல் முதலாகியவை. சங்கரிகரணம் அதாவது இயல்புக்கு விரோதமானபுணர்ச்சி அபாத்திரகரணம் அதாவது மிலேச்சரிடத்திலிருந்து தானம்வாங்குகிறது, பிராமணன்வர்த்தகத்தில் பிரவேசிக்கிறது, பிராமணன் சூத்

திரனிடத்தில் சேவகஞ்செய்தல், மலாவகம் அதாவது புழுப்பூச்சி இவைகளே புழித்தல், மதிபானம் செய்கிறவன் அருகேகிடந்த பழத்தைத்தின்னல், சொற்பஷ்டத்திற்காக அத்தியந்தமாகத் துக்கமுறுதல், விறகு, பழம், அல்லது புஷ்பம், திருடுதல். பிரகீர்ணகம், இதில் மற்றவட்டுப் பெயர்களுக்குள்ளாகக் காணப்படாத குற்றங்கள் அடங்கியிருக்கின்றன. உபாதகம், இதில் அநேகக்கிருத்தியங்க ளடங்கியிருக்கின்றன. அவையாவன, கோவதை, ஈனகுலத்தினருக்குப் புரோகிதஞ்செய்தல், தன்னைத்தாலே விற்றல், தந்தைதாய் புத்திரர் இவர்களைக்கைவிடுதல், ஜேஷ்டனிருக்க கனிஷ்டனுக்குப் புத்திரியைக்கொடுத்து வேதங்களோதல் செந்தீவளர்த்தல், மூத்தவனுக்கு முன் இளையவனுக்கு விவாகஞ்செய்தல், கடைகியில் சொல்லப்பட்ட இரண்டு சங்கதிகளில் அப்படிப்பட்ட விவாககாலத்தில் புரோகிதஞ் செய்தல், இரவலாகக்கொடுத்த தட்டுமுட்டுகள் சாமான் முதலாகிய வைகளுக்கு வட்டிவாங்கல், ஒருவிரதத்தை முடிக்காமல் விடல்; குளம் தோட்டம் புத்திரன்முதலாகியபேரைவிற்றல், யாதொரு சமுஸ்காரத்தையும் செய்யாமல்விடல், சிநேகனைக் கைவிடல், ஒரு சிஷ்யனிடத்தில் உபதேசம் பெற்றுக்கொள்ளல், ஒரு ஸ்திரியையாவது ஒரு சூத்திரனையாவது, ஒருவைசியனையாவது. ஒரு க்ஷத்திரியனை யாவது வதைசெய்தல், விறகுக்காகப் பச்சைமரங்களை வெட்டல், பட்டகடனைச்செலுத்தாமல் அசட்டைசெய்தல், சத்துரு அல்லாத ஒருவனை மந்திரபலத்தினால் அடக்குதல் அல்லது துரத்திவிடுதல். பரலோகம் மறுபிறப்பு இல்லை என்பது முதலியவைகளேயாம்.

8. அநுபாதகம்; இதில் பலகிருத்தியங்களடங்கி இருக்கின்றன அவையாவன ஒரு புத்திரன் தன் பிதாவுக்கு மனைவியாயிருக்கிற ஒரு ஸ்திரீயோடு அவள் அன்னிய ஜாதியாயிருந்தாலும் அவளோடு சேர்தல், சிறிய தந்தையின் மனைவியோடு விபசரித்தல், பிதாமகன்மனைவியோடு விபசரித்தல், தாய்வழிச் சிறிய தாயாரோடு விபசரித்தல், அரசன்மனைவியோடு புணர்தல், தந்தையினுடைய சகோதரியோடு புணர்தல் சிரோத்திர பிராமணன் மனைவியோடு புணர்தல், புரோகிதன் மனைவியோடு விபசரித்தல், வித்தை கற்றுக்கொடுக்கிற பிராமணன மனைவியோடு விபசரித்தல், ஒரு சிநேகிதன்மனைவியோடு விபசரித்தல், சகோதரியின் சிநேகிகளோடு விபசரித்தல், இரத்தக்கலப்பான

பெண்மகளோடு விபசரித்தல், உயர்குலப் பெண்மகளோடு விபசரித்தல், ஒரு சண்டாளனது மனைவியோடு விபசரித்தல், ஒரு கன்னிகழியாத கன்னிகையோடு சோரத்துவஞ்செய்தல், ஒரு பிராமணனது புத்திரியோடு சோரத்துவம் செய்தல், ஒரு ஸ்திரீ தூரமாயிருக்கும் போது அவளைப்புணர்தல், பிரமசரியவிரதங்கொண்ட ஒரு ஸ்திரீயைப்புணர்தலாம்.

9. மகாபாதகம். இதில் ஐந்து குற்றங்கள் அடங்கி இருக்கின்றன. அவையாவன பிராமணவதை, பிராமணன் மதுபானஞ் செய்தல், அல்லது சூத்திரன் ஒரு பிராமணன் மனைவியிடத்திற்குப் போகுதல், அந்தணனிடத்திலிருந்து ஒரு பொன்னுமயம், விலைபெற்ற சொர்ணந் திருடுதல், குருவினுடைய மனைவியோடு விபசரித்தல், தந்தையினுடைய மனைவி உயர்குலத்தினளாஇருந்தாலும், சமகுலத்தினளாயிருந்தாலும், அவளோடு புணர்தலாம், இப்படிப்பட்ட கிருத்தியங்கள் எவன் செய்தாலும், அவன் மகாபாதகனென்றழைக்கப்படுகிறான். இவனோடு கூடியிருக்கிறவனும், மகாபாதகனாவான். கூடியிருக்கிறதென்பது. ஒரே சயனத்தில் நித்திரைசெய்தல், ஒரே ஆசனத்தில் உட்காருதல், கூடி உண்ணுதல், ஒரு கிண்ணத்திலிருந்து குடித்தல், ஒரு பாத்திரத்தில் சமைத்த அன்னத்தைக் கூடிப்புசித்தல், மகாபாதகர்க்குப் புரோகிதம் செய்தல், அப்படிப்பட்ட குற்றவாளிக்கு வேதங்கற்பித்தல், அவனோடுகூட ஒரே ஸ்திரீயைச் சிநேகித்தல், ஒருவன் மகாபாதகனோடு சம்பாஷித்தல், அவனைத்தொடல், அவனுடைய மூச்சுமேலேபடுதலாம். இவ்வித அன்னியோன்னியங்கள் பன்னிரண்டு மாதங்கள்வரையிலும் நடந்துவந்தால் இவனும் மகாபாதகனாய்விடுகிறான்.

10. அதிபாதகம் இதில் ஒருவனுடைய சொந்தஸ்திரீயோடு அல்லது புத்திரியோடு அல்லது புத்திரன் மனைவியோடு செய்யும் விபசாரம் அடங்கி இருக்கின்றது.

11. இதற்கடியில் வரப்பட்டது பிராயச்சித்தமாகச் செய்யப்படும் பசுதானத்தைக்குறித்த பிரமாணமாக இருக்கின்றது. ஒருவன் பிராஜாபத்தியமும் மற்றவிரதங்களும் செய்யச் சக்திபில்லாவிட்டால் அப்போது அவன் பிராயச்சித்தமாக ஒரு பாற்பசுவும் கன்றும்கொ

டுக்கவேண்டும். இந்தத் தானமுஞ் செய்யச் சக்தியில்லா விட்டால் ஒரு பசு, கன்று இவைகளுடைய கிரயத்தைக் கொடுக்கவேண்டும். இந்த லீலை தானங் கொடுப்போனுடைய சக்தியின் பிரகாரம் கொடுக்கலாம். அவன் பாக்கியமுள்ளவனு யிருந்தால் அஞ்சுகானசம், கவுரிகள் (ஒரு ரூபாயும் இரண்டணாவும்) கொடுக்கவேண்டும். கிரகஸ்த ஆச்சிரமத்திலிருப்பவன் மூன்று கானசம், (பதினாலணா) கொடுக்கவேண்டும். ஏழையாயிருந்தால் ஒருகானம், (மூன்று அணாவுக்குமேல் பட்டது.) கொக்கவேண்டும். ஆவுங்கன்றும் கொடுக்கப் படுகிறதானம் தேனுவென்று சொல்லப்படுகின்றது. ஒரு எருது தானம் செய்யப்படும் பொழுது அதன்லீலை ஆறுகானசங்களாகஇருக்கவேண்டும்.

12, இதற்கடியில் வரப்பட்டவைகள் குற்றவாளி பிராயச்சித்தம் செய்கிறதிற்கு முன்னுள் செய்யவேண்டிய காரியங்களாக இருக்கின்றன. அவன்முதல் சௌரஞ்செய்துகொண்டு அவனுடைய நகங்களைக் களைவித்துக்கொள்ள வேண்டும். பின்பு அவனுடைய சரீரத்தின்மீது எண்ணெயிட்டுக் கொள்ளாமல் ஸ்நானம்செய்ய வேண்டும். சாயங்காலம் அவன் வீட்டுவாயற்படிக்கு முன் ஓரிடத்தைச் சுத்திசெய்யவேண்டும். அவனுடைய புரோகிதருக்குமுன்பாக இதற்கடியில் வருவதுபோல் சொல்லவேண்டும், "இப்படிப்பட்ட ஒரு பாவம் செய்ததற்காக நான் நாளையதினம் இப்படிப்பட்ட ஒரு பிராயச்சித்தம் செய்ய இருக்கிறேன். ஆகையால் இன்றையதினம் நான் நெய்சாப்பிடுகிறேன்" என.

13, ஒரு அரசன் அல்லது ஒரு விவாகமான ஸ்திரீ அல்லது ஒரு கற்றறிந்த அந்தணன் மகா பாதகராகும் படியான பாவஞ் செய்திருந்தால் பிராயச்சித்தம் செய்துகொள்ளுகிறதற்கு முன்னுள் சரீரசுத்திசரீரம் முழுதும் சௌரஞ்செய்யப் படவேண்டும். ஒரு அரசனுவது ஒரு கலைபயின்ற அந்தணனுவது மகாபாதகனுதும் படியான ஒருவினைவிடக்குறைவான பாவத்தைச்செய்தால் அப்போது சிரசின் வழக்கமான ஸ்தானங்கள் சௌரம் செய்யப்படவேண்டும். ஒருசுமங்கலியானவள் அப்படிப்பட்ட பாவஞ்செய்தால் அவளுடைய கூந்தலில் இரண்டுவிரற்கடையகலம் மறுத்துவிடவேண்டும். ஒரு விதவையாதொரு பிராயச்சித்தம் செய்கிறதற்கு முன்னுள் அவள் சர்வாங்கமும் சௌரம் செய்துகொள்ளவேண்டும்.

14. பிராயச்சித்தம் செய்துகொள்ளுகிற தற்குமுன் சௌரம் செய்துகொள்ள மனமில்லாதிருந்தால் அவருடைய பிராயச்சித்தமும் தட்சணையும் இரட்டிப்பாக வேண்டும்.

15, ஒருவன் பிராயச்சித்தம் பன்னிரண்டு நாள் செய்யவேண்டியிருந்தால் சர்வாங்க சௌரம் செய்துகொள்ள வேண்டும் மூன்று அல்லது ஆறு நாள் பிராயச்சித்தம் செய்வதாயிருந்தால் முகச் சௌரமும் நகங்கள் களைந்து கொள்வதுமே போதும் ஒன்பது நாள் வேள்விசெய்யவேண்டியதா யிருந்தால் முகமும் புருவமும் சௌரம் செய்துகொள்ளவேண்டும்.

16, ஒருவன் பிராயச்சித்தம் செய்து கொள்ளுகிறதற்குப் பதிலாகப் பசு அல்லது திரவியதானம் பண்ணுவேனென்றாலும் பிராயச்சித்த சுபாவப் பிரகாரம் செய்துகொள்ளவேண்டியசௌரம் செய்துகொள்ளவேண்டும்.

17, ஒருவன் யாதொருகருமானுஷ்டானம் செய்யப்பிரவேசிப்பதற்குமுன்னே அவனுடைய குடுமியைமுடித்துக் கொள்ளவேண்டியது சாஸ்திரப்பிரமாணமா யிருக்கின்றது. ஆனால் ஒருமனுஷன் சாத்திரவிதிப்படி தலைச்சௌரம் செய்துகொண்டிருப்பானுகில் இந்தக்கடமையிலிருந்து நிவர்த்திக்கப்படுகிறான்.

18, ஒருவன்மனதறிந்து ஒருபட்சியைக் கொல்வானுகில் அவன்நக்த விரதம்செய்ய வேண்டும். அதாவது ஒருதினத்தில் இரண்டு வேளை புசிப்பதற்குப்பதில் ஒரேதரம் புசிக்கவேண்டும். அதுவும் இரவிலேயாம். இந்த அசனமும் அரிசி நெய் பால் முதலியவைகளைக் கூட்டி உப்பு அல்லது சம்பாரங்களில்லாமல் பொங்கல் செய்யப்பட்டதாயிருக்கவேண்டும். இந்தவிரதம் செய்ய அசக்தியுள்ளவனு யிருப்பானுகில் இரண்டு இரக்திகம் அல்லது அரையணு இடையுள்ளவெள்ளியைத் தானஞ்செய்யவேண்டும். இத்தானஞ் செய்யப்படுதற்குமுன் அதற்குப் பூஜைசெய்துபின்பு அதைப் பெற்றுக்கொள்ளப் போகிற வேதியருக்குப் பூசைசெய்யவேண்டும்.

19, இதற்கடியில் வருவது பிராஜாபத்திய பிராயச்சித்தத்தைக் குறித்த பிரமாணமாக இருக்கின்றது. குற்றவாளி மூன்று நாளைக்கு அரிசி நெய் பால் முதலாகியவைகள்கூட்டிச்செய்த பொங்கலில் இருபத்தாறு கவளமாத்திரமே புசிக்கவேண்டும். அடுத்த மூன்று நாட் சாயங்காலத்தில் இருபத்திரண்டுகவளம் புசிக்கவேண்டும். அதற்கடுத்த மூன்றுநாள் அவன் ஒன்றுங்கேட்க ஒண்ணாது. அவனுக்குயாராவது மனமுவந்து கொடுத்தாலொழியப் புசிக்க ஒண்ணாது. யாதொருஅசனம் அவனுக்குக் கொடுக்கப்பட்டால் மேலேசொல்லிய விதமாக அது ஒரேவித அசனத்தில் இருபத்துநான்கு கவளமாக இருக்கவேண்டும். அடுத்த மூன்றுநாள்வரைக்கும் அவன் ஒன்றும் புசிக்க ஒண்ணாது. எந்தத்தினம் அவனுக்கு அன்னங் கொடுத்தால் புசிக்கலாமென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறதோ அந்தநாளில் புசியாதிருப்பானுகில் அவன் ஒரு குற்றமுஞ் செய்தவனுகான். இந்தப்பிராயச்சித்தம்செய்ய ஒருவன் சக்தியில்லாதவனு யிருப்பானுகில் அவன் ஆறுநாள் உபவாசம் இருந்து மாற்றிக்கொள்ளலாம். ஆறுநாள் உபவாசம் இருக்கச் சக்தியில்லாதவனு யிருப்பானுகில் ஒருபசுவுங் கன்றும் தானங்கொடுத்து நிவர்த்தியாக்கி விடலாம் அல்லது இது செய்யச்சக்திபில்லாத பட்சத்தில் மூன்று பொன்தானங் கொடுக்கலாம். ஒருபிராமணன் ஒருவைசியனுடைய அன்னம் அல்லது விந்து அல்லது மூத்திரம் அல்லது மலம் உண்டால் அவன் பிராஜாபத்திய விரதம் செய்யவேண்டும் அல்லது இந்தப்பிராயச் சித்தத்திற்குப் பிரதியாக விதிக்கப்பட்டிருக்கிற யாதொன்றையேனும் செய்யவேண்டும்.

20, இந்தப்பிராயச்சித்தத்தில் நாலில் மூன்றுகூறு குற்றவாளி செய்யவேண்டியவனு யிருந்தால் இரண்டுநாள் ஒருவேளை போஜனமேசெய்யவேண்டும். இந்தப்போஜனம் காலையில் ஏழரைநாழிகைக்குமேல் புசிக்கவேண்டும். அடுத்த இரண்டுநாள் வரையில் நாள் ஒன்றுக்கு ஒருவேளைமாத்திரமே புசிக்கவேண்டும். அதுவுஞ் சாயங்காலம் புசிக்கவேண்டும். அடுத்த இரண்டு நாள்வரையில் யாராவது அவனுக்கு அன்னங்கொடுத்தால் அவன் புசிக்கலாம்.

21, அடுத்த இரண்டுநாள்வரையில் உபவாசமா யிருக்கவேண் டும். அன்னத்தின் அளவைக்குறித்தும் விதத்தைக்குறித்தும் மேலே விவரித்திருக்கிற பூரண பிராயச் சித்தத்தில் சொல்லப் பட்டிருக்கிற விதிகளைக் கவனித்து நடந்துகொள்ளவேண்டியது. இந்தப்படிசெய்ய அவன் சக்திமானுயிருப்பானுகில் நால்வரை நாள் உபவாசம் இருக்க வேண்டும். இதைச்செய்ய மாட்டாதவனுனல் எட்டணு வரைக்கும் தானம் பண்ணவேண்டும்.

22, குற்றவாளி முதற்பிராயச்சித்தத்தில் பாதிசெய்யவேண்டிய வனுயிருந்தால் மூதனுள் ஒரேதடவை மாத்திரம் புசிக்கவேண்டும். அதுவும்மத்தியானப் பொழுதில் மறுநாள் ஒருதடவை சாயங்காலம் புசிக்கவேண்டும். அடுத்தஇரண்டு நாள்வரைக்கும் யாராவது அவனு க்கு அன்னம் கொடுத்தால் அதை அவன் புசிக்கலாம். அடுத்த இர ண்டுநாள் அவன் உபவாசமா யிருக்கவேண்டும். இதை ஒருவன் செ ய்யமாட்டாதவனுனல் அவன் மூன்றுநாள் உபவாசம் செய்யவேண் டும். அவன் மூன்றுநாள் உபவாசம் செய்ய மாட்டாதவனுனல் ஒரு பொன் தானங்கொடுத்து மாற்றிக்கொள்ளலாம்.

23, குற்றவாளி முதற்பிராயச்சித்தத்தில் நாலில் ஒருபங்கு செ ய்யவேண்டியதா யிருந்தால் மூதற்நாள் பகற்காலத்தில் ஒரு வேளை புசிக்கலாம். இரண்டாம்நாள் இராக்காலத்தில் ஒருவேளை புசிக்கலா ம். மறுநாள் அவனுக்கு அன்னம்கொடுக்கப்பட்டால் அவன் புசிக் கலாம் மூன்றுநாள் உபவாசமா யிருக்கவேண்டும். இதைச் செய்ய அசக்திமானு யிருப்பானுகில் ஒன்றரைநாள் உபவாசமாயிருக்க வே வண்டும் அல்லதுபன்னிரண்டு பொன்தானம் பண்ணவேண்டும்.

24, ஒரு பிராமணன் மற்றொரு பிராமணனுடைய பசுவைக் கொன்றல் அவன் இதற்கடியில்வரும் பிராயச்சித்தம் செய்யவேண் டும். அவன் தலைச்சௌரஞ் செய்துகொள்ள வேண்டும். மூப்பது நாள் பசுக்களோடு கூடயிருக்கவேண்டும். கோமூத்திரத்தில் சமைத் தவாற்கோதுமைச் சாதம்சாப்பிடவேண்டும். பசுவினுடைய தோல் உடுக்கவேண்டும். அடுத்த இரண்டுமாதம் வரையில் ஏகபுக்தனுயிரு க்கவேண்டும். அடுத்த இரண்டுமாதங்கள் வரைக்கும் கோமூத்திரத்

தில் ஸ்நானஞ் செய்யவேண்டும். பசுமந்தையோடு தொடர்ந்து திரிய வேண்டும். அவைகள்நிற்கும்போது நிற்கவேண்டும். அவைகளுடை யகால் அடிகளால் எறிகிறதூசுகளைப் புசிக்கவேண்டும். இரவில் பசு க்களோத்தொழுவத்தில் அடைத்து அவைகளுக்குப் பணியவேண்டும். பிற்பாடுசரியாக உட்கார்ந்து கால்மடிப்புப் போட்டுக்கொண்டு இரா முழுதும் அவைகளைப்பாதுக் காத்துக்கொண்டிருக்கவேண்டும். மந் தையில் ஒன்றுக்கு நோயுண்டானாலும் அல்லது யாதொரு அபாயம் நேரிட்டாலும் அதைக்காப்பாற்ற அவன் பிராணனைக் கொடுக்கவே ண்டும். தங்கிறவெயிலிலிருந்தாவது, அதிகுளிரிலிருந்தாவது வீசு கிறமழையிலிருந்தாவது, தள்ளுகிற பிரசண்டமாருதத்திலிருந்தாவது மந்தையைப்பத்திரப் படுத்துகிறவரைக்கும் அவன் பிராணனைச் சம் ரட்சணை பண்ணவகைதேட ஒண்ணுது. பசுக்கள் மற்றொருவன் பூமி யில்மேய்ந்து கொண்டிருந்தால் அவைகளை ஒட்டவும் ஒண்ணுது. உடையவனுக்குத் தெரிவிக்கவும் ஒண்ணுது. பசுக்கறக்கப்படாததா யிருந்தபோதிலும் உண்ணுகிற கன்றைத்தடுக்கவொண்ணுது. அவன் தப்பாமல் இந்தப் பிராயச்சித்தம் முழுதஞ் செய்தபின்பு கீழ்வரு லோராகிய ஒரு மறையவருக்குப் பத்துப்பசுக்களும் ஒருவரிடபமு ம்தட்சணையாகக் கொடுக்கவேண்டும் இதற்குச் சக்தியில்லாவிட்டால் அவனுக்குள்ளதை யெல்லாம் தட்சணையாகக் கொடுத்து விடவேண் டும். இந்தவிரதமெல்லாம் செய்யக்குற்றவாளி அசக்தியுள்ளவனாயிரு ப்பானால் மேற்சொல்லிய தட்சணையல்லாமல் பதினேழு புதுப்பாற் பசுக்கள் தானஞ்செய்ய வேண்டும். எளியவனாயிருந்தால் அறுபத் தாறு பொன்தானம் செய்யவேண்டும். ஒருபசு ஒரு பிராமணனால் மனதறிந்து கொல்லப்பட்டால் இது தான் பிராயச்சித்தம். சுயுசம்ப வமாய்க் கொல்லப்பட்டால் குற்றவாளிமேற்சொல்லிய வையில் பா திவிரதம் செய்துமுடிக்க வேண்டும். தட்சணைக்காக ஒருபசு தானஞ் செய்யவேண்டும்.

25. ஒருஸ்திரீ ஒருசூத்திரன் அல்லது ஒரு குழந்தை ஒரு பிரா மணனுடைய பசுவைமனதறிந்து கொன்றால் குற்றவாளி அப்படிப்ப

ட்டகுற்றத்தைச் சுய அசம்பாவமாய்ச் செய்தபிராமணனுக்கு விதித் திருக்கிற பிராயச்சித்தம் செய்யவேண்டும். ஒருசூத்திரஸ்திரீ யாவது குழந்தையாவது அந்தக்குற்றத்தைச் செய்தால் குற்றவாளி முன்சொ ன்ன பிராயச்சித்தத்தில் காற்கூறுசெய்யவேண்டும்.

26. ஒருபிராமணன் ஒருசூத்திரியனுக்குச் சொந்தமாயிருக்கி றஒருபசுவைக்கொன்றால் அவன் பசுவினுடைய தோலை உடையாகத் தரிக்கவேண்டும். பசுகளுக்குப் புல்அறுக்கவேண்டும். ஜலத்தில் பாக ஞ்செய்யப்பட்டவாற் கோதுமை மாவைப்புசிக்க வேண்டும் ஆறுமர தங்கள் வரைக்கும் இடைவிடாமல் மந்தையோடு செல்ல வேண்டும். இதைச்செய்ய அசக்தியுள்ளவனுயிருப்பானுகில் பன்னிரண்டுபோற்பசு க்களாவது முப்பத்தாறு பொன்னுவது தானஞ் செய்ய வேண்டும். அவனுடைய சக்தியானுசாரம் தட்சணை கொடுக்கவேண்டும் அந்தப் பசு சுயஅசம்பவமாகக் கொல்லப்பட்டால் பிராயச் சித்தத்தில் பாதி மட்டுஞ்செய்ய வேண்டும். பிராயச்சித்தச் செலவு ஸ்திரீக்கும் குழந் தைகட்கும் சூத்திரர்கட்கும் குறைக்கப் பட்டிருக்கின்றது.

27. ஒருபிராமணன் ஒரு வைசியனுடைய பசுவை மனதறிந்து கொன்றாலும் சூத்திரியனுடைய பசுவை மனதறிந்து கொன்றாலும் செய்யப்படவேண்டிய பிராயச்சித்தத்தை விடக்குறைந்த பிராயச்சித் தஞ்செய்யலாம். சூத்திரனுடையதா யிருந்தால் பிராயச் சித்தம் இன் னும் குறைந்துவிடுகின்றது.

28. ஒருவன் சாத்திரப் பிரகாரம் பிராயச்சித்தம் செய்தபிற்பா டுபார்வணச் சிரார்த்தஞ் செய்யவேண்டும். இந்தச் சிரார்த்தம் அவ னுடைய தந்தை உயிரோடு இருந்தாலும் அவன் செய்யலாம்.

29. பிராயச்சித்த முதலாகியவைகள் செய்யவேண்டியதும்அல் லாமல் ஒருபசுவை மனதறிந்தாவது சுயாசம்பவ மாகவாவது கொன் றால் உடையவனுக்கு அதற்குச் சரியான வேறொரு நல்ல பசு கொடு க்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு பசுகொடுக்க மாட்டாதவனுனால்

அண்டையசலியிருக்கிற கணிசமுள்ள ஐந்து பேர்களால் நிச்சயிக்கப் படுகிற விலையைக்கொடுத்துவிடவேண்டும். தப்பினால் பிராயச்சித்தம் பூரணமடையாது.

30. ஒரு அந்தணன் கன்றீனுங் காலத்திற்குமுன் ஒருசினையுள் ளசிவந்த சாதுப் பசுவைமனதறிந்து கொன்றால் அந்தப்பசு அதிக பால் கொடுத்துக்கொண்டிருந்ததா யிருக்குமாயின் இரட்டிப்பான பிராயச்சித்தம் செய்யவேண்டும். அல்லது தட்சணையோடு நூற்றுமு ப்பத்திரண்டு பொன் தானஞ்செய்யவேண்டும். இந்தப்பாவஞ் செய்த வன் விப்பிரனில்லாவிடில் பிராயச்சித்தம் குற்றவாளியின் சாதிப்பிர காரம் குறைத்துவிடுகின்றது. பசு மூன்று வருஷபிராயமுடையதாயி ருந்தால் பிராயச்சித்தம் நாலில் மூன்றுகூறுக்குறைக்கப்படவேண் டும். கொல்லப்பட்ட பசு கிழமாயிருந்து புல் தின்ன மாட்டாததாக இருந்தால் பிராயச் சித்தம் பாதியாகக் குறைக்கப்பட வேண்டும் இதேபிரமாணம் நுகத்தின்கீழ் சாகிற பசுவுக்கும் உப்யோகப் பட வேண்டும். அது ஒரு வருஷம் வயதுடையதாயிருந்தால் பிராயச்சித் தம் நாலிலொரு கூறுக்குறைக்கப் படவேண்டும்.

31. ஒருபசுத் தொழுவம் தீப்பற்றிக் கொண்டு நூறு பசுக்கள் எரிந்து போனால் இருமடங்கான பிராயச் சித்தம் செய்யப் பட வேண்டும்.

32. ஒருவன் ஒருகை யடியில் பத்துப் பசுக்களைக் கொன்றால் இருமடங்கான் பிராயச்சித்தம் செய்து இருமடங்கான தட்சணை கொ டுக்கவேண்டும்.

33. பத்துபேர் கூடி ஒரு பசுவைக்கொன்றால் ஒவ்வொருவனு முதற்பிராயச்சித்தத்தில் பாதிசெய்ய வேண்டும். தட்சணையும் அவர்க ளுடைய சக்தியை யனுசரித்துத்தக்க அளவாக ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

34. ஒருவன் சாந்திரப்பிராகாரம் சிவசந்நிதிகளில் கோல் பிடிக்க அதிகாரம் பெற்றவனாயிருந்தால் அந்தக் கோல் ஒரு பெரு விரற் பரிமாணப் பருமனும், ஒருமுழநீளமும், பசுமையும், அதன மேல் தழையும் உள்ளதாயிருந்து அதனால், ஒருபசுவைக் கொல்வா னாகில் சாதாரணபிராயச்சித்தம் செய்யவேண்டும்.

35, மேய்ப்பவன் அவனுடைய பசுக்களைப் பாம்புகள் வராத ஒருகிருகத்தில் வைத்திருக்கவேண்டும். அவைகளை மிருதுவான கயிற்றால் கட்டவேண்டும். அவைகளைக்காப்பதற்காக அவனுடைய கையில் ஒரு கோடரிபிடித்து இராமுழுதும் உட்கார்ந்திருக்க வேண்டும் இந்தப்படி ஜாக்கிரதையாய் இருந்தும் ஒரு பசு இறந்து போனால் பிராயச்சித்தம் செய்யவேண்டிய நிமித்தம் இல்லை. ஆயன் இந்தப்படி செய்யத் தப்பிப்போவானுகில் பிராயச்சித்தஞ்செய்யப்படவேண்டும்.

36, மிகவும் மெலிந்ததும் நோயுள்ளதுமாய் இருக்கிற ஓர்பசுவை அபாயமான ஓரிடத்திற்கு அதைப்போகும்படியாயும் ஒருகுழி முதலாகிய வற்றினருகே போகும்படியாயும் செய்வதினால் அதற்கு மரணத்தை யுண்டாக்குவிப்பானுகில் சாந்திராயண பிராச்சித்தத்தில் நாலிலொரு கூறுசெய்ய வேண்டும். அதாவது குற்றவாளி அமாவாசைகழிந்தமுதலுள ஒருகவள அன்னமாத்திரமே புசிக்க வேண்டும். இரண்டாம்நாள் இரண்டுகவள அன்னம்புசிக்கவேண்டும். அந்தப்பிரகாரம் பதினைந்து நாள் அல்லது பௌர்ணமிவரையில் புசிக்க வேண்டும். அதுமுதல் ஒருகவளங்குறைக்க ஆரம்பிக்கவேண்டும். ஆரம்பித்து அமாவாசைவரைக்கும் நாள்தோறும் குறைத்துக்கொண்டே வரவேண்டும். இந்தப்பிராயச்சித்தம நாள ஒன்றுக்குப் பதினைந்து கவளமுதல் செய்யப்படலாம். குற்றவாளி அந்தமாதம் வரைக்கும் நித்தியம் மூன்றுதரம் ஸ்நானம செய்யவேண்டு மென்பது.

37, ஒருவன் ஒருபசுவை அங்கச்சேதம் செய்வானுகில் பதினைந்துநாள்வரைக்கும் ஜலத்தில் பொங்கல் வைக்கப்பட்ட வாற்கோதுமைமாவைத்தவிர மற்றொன்றையும் புசிக்கவொண்ணாது.

38, ஒருபிராமணன் ஒரு இடபத்திற்கு விரைவாங்கினால் ஒரு பிராமணனுடைய பசுவைக்கொன்ற தற்காகச் செய்வதுபோல் ஆறுமாசத்துப் பிராயச்சித்தம் செய்யவேண்டும். அதை அப்படிச் செய்யச்சொல்லிப் போதித்தவன் அதைக்கொன்ற சூத்திரனுக்குச் சமபந்தமாகிய பிராயச்சித்தத்தில் பாதிசெய்ய வேண்டும்.

39, ஒரு பிராமணன் ஒரு இடபத்தையாவது ஒரு பசுவையாவது ஒரு ஏர்முகத்தடி போட்டுக்கட்டி உழுவானுகில் நான்கு பிரஹாபத்திய பிராயச்சித்தம் அவன்செய்யவேண்டும். எருதுகட்டி உழுவானுகில் பிராயச்சித்தம் குறைந்துவிடும்.

40, பிரதிஷ்டைசெய்து விடப்பட்ட இடபம் பிராமண இடபமென்று சொல்லப் படுகின்றது. அதை உழவில் போட்டால் அவன் இரண்டுசாந்திராயண பிராயச்சித்தம் செய்யவேண்டும் அரசனுக்குத் தண்டங்கொடுக்க வேண்டும். பிரதிஷ்டை செய்த இடபத்தை ஒரு மனிதன்கொல்வானுகில் அது ஒரு பிராமணனுடைய உடைமையாயில்லா திருந்தாலும் அதற்கு வாஸ்தவமாய்ச் சொந்தக்காரனில்லாமலிருந்தாலும் அவன் பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

41, ஒருபசு அசம்பவமாய் ஒருவயலில் இறந்தால் அது தக்க பராமரிப்புச் செய்யப்பட இல்லையென்று உடையவன் ஒப்புக் கொண்டால் பிராயச் சித்தம் செய்யவேண்டும். பசுகோதரருள்ள ஒரு குடும்பத்திற்கு அது சம்பந்தப்பட்டதா யிருந்தால் பிராயச்சித்தம் ஜேஷ்டன்பேரிலும் அவனுக்கடுத்த கனிஷ்டன் பேரிலும் விழும். பிராயச்சித்தம் செய்கிறவன் தலைச்சௌரம் செய்து கொண்டு நாள் ஒன்றுக்கு முன்றுதரம் ஸ்நானம் செய்யவேண்டும். பசுவின்கொம்புகள் குளம்புகள் முதலாகியவைகளுடன் இருக்கிறதோலை உடுக்கவேண்டும். மாட்டுமந்தையைப் பின்சென்று போகவேண்டும். இரவில் மந்தைக்காவல் காக்கவேண்டும். அவன் பிராமணனாயிருந்தால் ஒரு பசுவும் ஒரு இடபமும் சில அந்தணருக்காவது அவனுடைய புரோகிதனுக்காவது தானம்கொடுக்க வேண்டும். அசக்திமானாயிருக்கிற பட்சத்தில் பிராயச்சித்தத்தை அபராதமாக மாற்றிவிடலாம். உடையவன் தகுந்தமேய்ப்பவன் வசத்தில் விட்டிருந்து பசுபகற்காலத்தில் இறந்தால் பிராயச்சித்தம் அவன் மேல்விழும் அந்தஜீவன். தொழுவத்திலிறந்தால் இரவில் காவல்காக்காமல் வீட்டுக்குப் போகும்படி கோவலனுக்கு உத்திரவுகொடுத்திருந்த உடையவன் மேல் பிராயச்சித்தம் விழும்.

42. ஒருபசுவினுடைய காதிலிருந்து ஒருமணிவிழுவதினால்பசு இறந்துபோனால் உடையவன் பிரஜாபத்தியப் பிராயச் சித்தத்தில் பாதிசெய்யவேண்டும்.

43. ஒருவன் ஒருமிலேச்சனுக்காவது மற்றயாதொரு மதஸ்தனுக்காவது ஒருபசுவைகொடுபானாகில் சிறுசாந்திராயணம் செய்யவேண்டும். அதாவது நாலுநாளைக்குகாலையில் ஒருகவள மாத்திரமே புசிக்கவேண்டும். அடுத்த நாலுநாளைக்கு அந்தியில் நாள் ஒன்றுக்கு நாலுகவளங்கள் புசிக்கவேண்டும். சக்தியில்லாதவனிருக்கிற பட்சத்தில் அதை அபராதமாக மாற்றலாம். அவர்கள் பசுவைக்கொன்று தின்பாராகில் அந்தச்சீவனைவிற்றவன் ஒருபசுவைக்கொன்ற ஒருபிராமணனுக்கு ஏற்பாடான பிராயச்சித்தமே செய்யவேண்டும்.

44, ஒருபசுநோயினால் இறந்துவிட்டாலும், அதைக்குறித்துச் சகலவித பராமரிக்கைசெய்யப் பட்டிருந்தும் கன்றுடனே இறந்துபோனாலும், அல்லது பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிற ஒரு குளத்தில் விழுந்திறந்தாலும், அல்லது சதுரமாயுள்ள ஒரு அகழியில் விழுந்திறந்தாலும் அல்லது ஒரு கிராமம்பற்றி யெரியும்போது அதிலிறந்தாலும், அல்லது சுயம்புலிங்கமிருக்கிற ஒருகெபியில் விழுந்திறந்தாலும் உடையவன் பிராயச்சித்தத்தினிலிருந்து நிவர்த்திக்கப்படுவான்.

45, ஒருமனிதன் ஒரு அசுவத்தைக் கொல்வானாகில் ஒருபிராமணனுக்கு வஸ்திரதானம் செய்யவேண்டும்.

46, ஒருயானையைக் கொன்றதற்காக ஒருவன் பிராமணருக்கு ஐந்து கறப்பு இடபங்கள் தானங்கொடுக்க வேண்டும்.

47, ஒரு கழுதையையாவது ஒருவெள்ளாட்டையாவது ஒரு செம்மறி ஆட்டையாவது ஒருசேங்கன்றையாவது கொன்றதற்காக ஒரு பிராமணனுக்கு ஒருவருஷத்து வயதைக் கொடுத்து விடவேண்டும்.

48, ஒரு பெருந்தாராவையாவது ஒருமயிலையாவது கொக்கையாவது ஒரு இராஜாளியையாவது ஒருவன்கொன்றால் ஒரு அந்தணருக்கு ஒருபசுக்கொடுக்க வேண்டும்.

49, ஒருவன் ஒருபுலியைக் கொன்றால் அவனுக் கிஷ்டமான ஒருபிராமணனுக்கு ஒருபாற்பசுக் கொடுக்கவேண்டும்.

50, ஒருவன் ஒரு ஒட்டகத்தை யாவது ஒரு எருமையை யாவது கொன்றால் ஒரு ரதகம் பொன் இழந்து விடவேண்டும்.

51, ஒருவன் ஒரு பன்றியைக்கொன்றால் அவன் ஒருபிராமணனுக்கு ஒரு குடநெய் தானஞ்செய்யவேண்டும்.

52, ஒருபட்சியைக் கொன்றதற்குப்பிராயச் சித்தமாகச் சிறு சணல்விதைகள் தானஞ்செய்யவேண்டும்.

53, ஒரு கிளிப்பிள்ளையைக் கொன்றதற்காக ஒருகன்றும் ஒரு வருஷவயதும் தத்தம்செய்யவேண்டும்.

54, ஒரு பாம்பைக் கொன்றதற்காக மரம்வெட்டுங் கருவியானஒரு கோடரியைத்தானம் செய்யவேண்டும்.

55, ஒரு பூனையை, உடும்பை, கீரியை, அல்லது தவளையை ஒருவன்கொன்றால் அவன்மூன்று ராத்திரிக்குப்பால் அன்றிமற்றொன்றும் புசிக்கவொண்ணாது. இச்சுக்குற்றத்தில் யாதொன்றை மறுபடியும் செய்தால் குற்றவாளி பிரஜாபத்திய விரதத்தில் நாலிலொரு கூறு செய்யவேண்டும்.

56. புழுப்புச்சி முதலியசிற்றுயிர்களை ஆயிரங்கொன்றால் சுயசம்பாவமாய் ஒரு சூத்திரனைக்கொன்றதற்காக ஏற்படுத்தியிருக்கிற பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும்இச்சடங்கு செய்கிறதினத்திற்கு முந்தியதினத்தில் அதைச்செய்கிறவன் எண்ணெயிட்டுக் கொள்ளாமல் ஸ்நானம் செய்யவேண்டும், ஸ்திரீசங்கம்செய்ய வொண்ணாது. பிரமசரியனுக்குரியவுணவு மாத்திரம் உண்ணவேண்டும், அடுத்தமூன்றுநாள் வெந்நீர்தவிர மற்றொன்றுங் கொள்ளவொண்ணாது. அதற்கு அடுத்த மூன்றுநாள் காய்ந்தபால் மாத்திரமே கொள்ள வேண்டும். அதற்கடுத்த மூன்றுநாள் உருக்கியநெய்சாப்பிட வேண்டும். அதற்கடுத்த மூன்றுநாள் காய்ந்தபாலிலிருந்து வருகிறபுகைதவிர மற்றொன்றும் சாப்பிட வொண்ணாது. குற்றவாளி இந்தப் பிராயச்சித்தம் செய்து கொள்ள அசக்திமானாயிருப்பானால் நாலு பசுக்களாவது பன்னிரண்டு பொன்னாவது தானம்செயயவேண்டும்.

57. ஒருவன் ஒருபண்டி ஈக்களோவது அவ்வளவு புழுப்பூச்சி களோவது கொன்றால் கடைசியில் சொல்லப்பட்ட பிராயச்சித்தம் செய்யவேண்டும். சிலசிறிய பூச்சிகளைக் கொன்றதற்காக அவன் விரல்களால் அவனது நாசியை நெருக்கிக் கொண்டு மந்திரம் ஓத வேண்டும்.

58. குதிரைகளையும் மற்றமிருகங்களையும் கொன்றதற்காகவும் பூச்சிகளைக் கொன்றதற்காகவும் பிராயசித்தங்கள் எல்லா ஜாதிகளுக்கும் ஒரேவிதமாக இருக்கின்றன. சூலபாணியென்னும் ஒருபண்டிதர் இதற்கு விரோதமாக இச்சங்கதிகளிலே யெல்லாம் ஒரு சூத்திரன், ஒரு பெண்மகள், ஒரு குழந்தை, வயதுசென்ற ஒருவன் இப்பிராயச்சித்தத்தில் பாதிமாத்திரமே செய்யவேண்டுமென்கிறார். பவதேவபட்டு என்கிறவர் இந்தஎல்லாக்குற்றங்களுக்காகச் செய்யப்படவேண்டிய பிராயச்சித்தங்கள் பசுவதையைக்குறித்த ஞாயப்பிரமாணத்தில் கண்டிருக்கிறவிதமாகவே வேறேவித மாற்றுதல் செய்யலா மென்று அபிப்பிராயம் கொள்கிறார்.

59. ஒரு பிராமணன் அல்லது ஒருகூத்திரியன் ஒருகூத்திரியனைக் கொலைசெய்தால் மூன்றுவருஷம் பிரஜாபத்திய விரதம் செய்யவேண்டும். இதுநூற்பத்தைந்து கறவற் பசுக்களும் கன்றுகளும் அல்லது நூற்றைம்பத்தைந்து பொன்னும் தானஞ் செய்து மாற்றிக் கொள்ளலாம்.

60. ஒரு பிராமணனாவது கூத்திரியனாவதுவைசியனாவது ஒரு வைசியனைக் கொலைசெய்தால் மேலே சொல்லிய விரதம் ஒன்றரைவருஷம் செய்யவேண்டும். இந்தவிரதம் இருபத்து மூன்று பசுக்களும் கன்றுகளும் அல்லது அறுபத்தேழரைப்பொன்னும் தானஞ்செய்து மாற்றிக்கொள்ளலாம்.

61. ஒரு சூத்திரனைக் கொலைசெய்ததற்காக மேல் சொல்லிய விரதம் ஒன்பதுமாதங்கள் வரைக்கும் செய்யவேண்டும். இந்த விரதத்தைப் பனிரண்டு பசுக்களும் கன்றுகளும் அல்லது மூப்பத்தாறு பொன்னும் தானஞ்செய்து மாற்றிக்கொள்ளலாம்.

62. இந்த ஜாதிகளில் யாவனொருவனைச் சுயசம்பாவ மாய்க் கொன்ற சங்கதிகளில் பிராயச்சித்தத்தில் பாதி மாத்திரமே செய்ய வேண்டும்.

63. ஈரறு வருணங்களில் சம்பந்தப்பட்ட ஒருவனைக் கொல்ல மற்றொருவனுக்குக் கட்டளையிட்டவன் நிர்மாணமாயிருக்கிற பிராய ச்சித்தத்தில் நாலில் மூன்றுபாகஞ்செய்யவேண்டும்.

64. வேதக்கியானமில்லாத கணவனுடைய ஒரு பிராமணஸ்தி ரீயைக் கொன்றவன் ஆறுவருஷம் வரைக்கும் பிராஜபத்திய விரதம் செய்ய வேண்டும். இதைத் தொண்ணூறு பசுக்களும் கன்றுகளும் அல்லது இருநூற்றெழுபது பொன்னாணயங்களும் தானமாக மாற்றி க்கொள்ளலாம். ஒருகூத்திரியனுடைய மனைவியைக் கொன்றதற்கா மூன்று வருஷம் வரைக்கும் இந்தவிரதம் செய்யப்பட வேண்டும். ஒரு வைசியன்மனைவியைக் கொன்றால் ஒன்றரைவருஷம் செய்யவே ண்டும். ஒரு சூத்திரன்மனைவியைக்கொன்றால் ஒன்பதுமாதம் செய்ய வேண்டும். அந்த ஸ்திரீ கருப்பவதியா யிருந்தாலும் அல்லது மாத விடை உடையவளா யிருந்தாலும் பிராயச்சித்தம் இரட்டித்து செய் யவேண்டும்.

65. ஒருபிராமணன் ஒருசண்டாளனைடு ஒருதரம் உண்டால் சாந்திராயண விரதம் செய்யவேண்டும். அல்லது எட்டுப் பசுக்களும் அவைகளின் கன்றுகளும் அல்லது இருபத்திரண்டு பொன்னும் தானஞ்செய்யவேண்டும்.

66. யாவனொருவனை ஒருசண்டாளனால் சமைக்கப்பட்ட சாத த்தைத் தின்னும்படி பலாத்காரஞ் செய்தவன் பாரகவிரதஞ் செய்ய வேண்டும். இந்தவிரதத்தில் பனிரண்டுநாள் உபவாச மிருக்கவேண் டும். ஆனால் இது ஒருபிராமணனுக்கு ஐந்துபசுக்களும் கன்றுகளும் அல்லது பதினைந்து பொன்னும் தானஞ்செய்வதினால் மாற்றப்பட லாம். அந்தச்சாதம் வேகாமல் இருந்தால் அப்போது அதையுண்ட வன் மூன்றுநாள் உபவாசமாக இருக்கவேண்டும்.

67. ஒருவன் இஷ்டமாய் இருபத்துநான்குகாம் இவ்விதமாக உண்டாலும் அல்லது அபுத்தி பூர்வகமாய் ஐம்பத்தெட்டுத் தரம் உண்டாலும் அவன்மீளாத ஜாதிப்பிரஷ்டனாகி விடுகிறான் இச்சங்கதியில் அவன் பிராயச்சித்தம்செய்யலாம். அதன்பலன்கள் அவன் மறுபிறப்பிலடையலாம். ஆனால் அவனுடைய ஜாதியும் முழுச்சொத்தும் மீளாதவிதமாகப் போய்விடுகின்றன.

68. ஒருவன்தெரியாமல் ஒரு மிலேச்சனுடைய மனைவியிடம் புணர்வானாகில் அவனுடைய ஜாதியைப் போக்கடித்துக் கொள்ளுகிறான். தெரிந்துபோவானாகில் சண்டாளனாகி விடுகிறான்.

69. ஒரு சண்டாளனுடைய அல்லது மிலேச்சனுடைய அன்னம்புசித்ததற்காக அதே பிராயச்சித்தம் செய்யப்படவேண்டும்.

70, கோமாமிசம் மனதறிந்து பட்சிக்கிறவனும், சாஸ்திரங்களுக்கு விரோதமாகப் பேசுகிறவனும், மதுபானசாலைக்குப்போய் ஜலங்கொண்டலம்பாதவனும் மிலேச்சனென்றழைக்கப் படுவானென வைத்தியாயனர் என்னும் ஒரு முனிசிரேஷ்டர் சொல்லுகிறார்.

71, ஒருவன் ஒருசண்டாளனுடைய அன்னத்தைத் தொடுவானாகில் அவன் பிரஜாபத்திய பிராயச்சித்தம் செய்யவேண்டும். செய்யச் சக்தியில்லாதவனாயிருந்தால் ஒருபசுவுங் கன்றுமாவது மூன்று பொன்னுமாவது தானம்செய்யவேண்டும்.

72, ஒருவன் சண்டாளனால் இடப்பட்டதைத் தெரியாமல் புசிப்பானாகில் அவன் சாந்திராயணவிரதம் செய்யவேண்டும். இது எட்டுப்பசுக்களும், அவைகளின் கன்றுகளும், அல்லது தரித்திரனாயிருந்தால் பன்னிரண்டரை பொன்னும் தானங்கொடுத்து மாற்றி விடப்படலாம். அவன் மனதறிந்து இவ்விதமாகவுண்டால் இந்தப்பிராயச்சித்தம் இரட்டிப்பாக வேண்டும்.

73, ஒருசூத்திரியன் ஒரு மிலேச்சனுடைய வாயிலிருந்த தாம்பூலம் தின்னும்படி ஒருவனைப் பலாத்காரஞ் செய்தால் அவன் பிராஜாபத்திபிரதம் செய்யவேண்டும்.

74, ஒருபிராமணன் தெரியாமல் சண்டாளனுடைய கிணற்றிலிருந்து மொண்ட தண்ணீர்க் குடத்திலிருந்து ஜலங்குடித்தால் மூன்றிராத்திரி உபவாசமாயிருந்து அடுத்த நாள் பஞ்சகவ்வியம் சாப்பிட வேண்டும். இதையறிந்து செய்திருப்பானுகில் இரண்டத்தனைப் பிராயச்சித்தம் செய்யவேண்டும். மூழுப்பிராயச்சித்தம் செய்து முடித்த ஒருவன் ஒரு கைப்பிடிப்புல் ஒருபசுவுக்கு முன்பாகப்போட வேண்டும். அதை யதுதின்றுல் பிராயச்சித்த காரியம் முடிந்ததற்கும் பாப நிவாரணமானதற்கும் திருஷ்டாந்தமாக இருக்கின்றது. அதையும் அது தின்னுவிடில் அவனுடைப்பாபம் நிவர்த்தியாகவில்லை யென்பதற்கும் பிராயச்சித்தம் மறுபடியும் செய்யவேண்டு மென்பதற்கும் அடையாளமாக இருக்கின்றது.

75, ஒருபிராமணன் உண்டபின்பு அவனுடைய வைகளையும் வாயையும் கழுவாததற்கு மூன் அவனை ஒரு சண்டாளன் தொடுவானுகில் அந்தப் பிராமணன் மூன்றுநாள் உபவாசமிருந்து ஆயிரங்காயத்திரி ஜெபிக்கவேண்டும்.

76. ஒருசண்டானன் அல்லதுமிலேச்சன் ஒருபிராமணனுடைய பூணூலை அறுத்து விடுவானுகில் பிராமணன் மகாசாந்தபன பிராயச்சித்தம் இரண்டுதரம் செய்யவேண்டும்.

77, ஒரு பிராமணன் தெரியாமல் ஒருசண்டாளனுடைய மனைவியோடு ஒரு தரம் புணர்வானுகில் பனிரண்டு வருஷம் பிரஜாபத்திய பிராயச்சித்தம் செய்யவேண்டும். மனதறிந்து செய்வானுகில் குற்றவாளி அவனுடையபாவ நிவர்த்திக்காகப் பிராணனை விட்டுவிட வேண்டும். அடுத்தடுத்து இக்குற்றத்தைச் செய்வானுகில் பாபத்திலிருந்து நிவாரணமாகமாட்டான்.

78, ஒருபிராமணன் ஒருகன்னிகை யோடாவது அல்லது தன் சொந்தபுத்திரியோடாவதுபுத்திரன் மனைவியோடாவது அயுக்தமானபுணர்ச்சிசெய்வானுகில் அவன் அண்ணகனுகிப் பிராணனை விட்டுவிட வேண்டும். மற்றவருணத்தைச்சார்ந்த ஒருவன் அப்படிப்பட்ட பாபத்தைச் செய்வானுகில் அவன் துசா நலபிராயச்சித்தம் செய்து பிராணனை விட்டுவிடவேண்டும்.

79, ஒரு பிராமணன் மதுவியாபாரியி னுடைய மனைவியால் சமைக்கப்பட்ட அன்னத்தையாவது இரண்டுநாள்களுக்கு முன் மூத ற்பேறுபெற்ற ஒரு ஸ்திரீக்காகச்சமைத்த அன்னத்தையாவது புசித் தால் ஒருமாதம் வரைக்கும் வாற்கோதுமை மாவுபோட்டு வெந்த ஜலந்தவிரயாதொன்றும். புசிக்கவொண்ணாது.

80. அன்னியஜாதிகளுடைய அன்னம் புசிப்பதற்காகவும் இ தேவிதியான பிராயச்சித்தங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

81. ஒருபிராமணன் ஒரு சண்டாளனுல் வெட்டப் பட்டதுரவு குளம் இவைகளில் ஜலபானம் செய்தாலும் ஸ்நானம் செய்தாலும் பஞ்சகவ்வியம் வாங்கிக்கொள்ளவேண்டும்.

82. ஒருபிராமணன் அவனுடைபகையில் அன்னம் இருக்கும் போது ஒருநாய் அவனைத்தீண்டினுல் அவன் ஒருநாள் வரையில் உப வாசமிருக்கவேண்டும்.

83, ஒரு சூத்திரன் ஒரு அந்தணனுடைய பவித்திரத்தைத்தீண் டினுல் அந்தப் பிராமணன் மூன்நூறுதரம் காயத்திரி ஜெபித்து ஒரு நாள் உபவாசமிருக்கவேண்டும்.

84, ஒரு பிராமணன் மற்றொருபிராமணனைப் புசித்தானபின்பு அவன் கைகழுவுகிறதற்குமுன் தீண்டினுல் இருவரும் அந்தப் பாவ நிவர்த்திசெய்ய ஸ்நானம் செய்யவேண்டும்.

85. ஒருபிராமணன் அவனுடைய பூணூனூல்லாமல் புசிப்பா னுகில் நூறுதரம் காயத்திரி ஜெபஞ்செய்து கோமூத்திரந்தவிர மற் றொன்றும் குடிக்கவொண்ணாது.

86, ஒருபிராமணன் மற்றொருபிராமணனுடைய பவித்திரத்தை அறுத்து விடுவானுகில் அவன் அதைக்குறித்து அத்தியந்த துக்கங் கொண்டாடி அன்றையதினம் உபவாசமிருந்து அவனது வலதுகை யின் விரல்களால் காசியைத்தொட்டு மந்திரமோதிப் பிராணுயாமம் செய்யவேண்டும்.

87, கெட்டபேரெடுத்த பிராமணஸ்திரீயை ஒரு பிராமணன் ஒருதரம் புணர்வானுகில் அவன் ஆறுவருஷம் வரைக்கும் பிரஜாபத் தியவிரதம் செய்யவேண்டும். அந்தஸ்திரீ ஒருசிரோத்திரிய பிராமண

ன்மனைவியா யிருப்பாளாகில் பிராயச்சித்தம் ஒன்பது வருஷம் வரைக்கும் செய்யவேண்டும். அவன் இந்தக்குற்றத்தைப் பலதரம் செய்வானுகில் பிராயச்சித்தம் பனிரண்டுவருஷம் செய்யவேண்டும்.

88. கெட்டபேரெடுத்த ஒரு பிராமணஸ்திரீ யிடத்திற்கு ஒரு சூத்திரன் போவானுகில் அவன் ஒருபெரிய அக்கினியில் வீழ்ந்து பிராணனை விட்டுவிடவேண்டும்.

89, மாசற்றபேரெடுத்த ஒருஸ்திரீயை ஒரு சூத்திரன் புணர்வானுகில் அவன் அவனுடைய சரீரத்தின் பலபாகங்களைச் சுற்றிலும் வைக்கோலினால் கட்டிக்கொண்டு அக்கினியில் விழவேண்டும். அந்த ஸ்திரீயை ஒரு கழுதைபின்மீது உட்காரவைத்துப் பட்டணத்தைச் சுற்றிவரச்செய்து பிற்பாடு தூரத்திவிடவேண்டும். அவள் மறுபடியும் பட்டணத்திற்குத் திரும்பி வரவொண்ணுது.

90, ஒரு வைசியன் ஒரு பிராமண ஸ்திரீயையாவது க்ஷத்திரிய ஸ்திரீயையாவது சேர்வானுகில் அவன் அவனுடைய அவயவங்களெல்லாம் சுற்றிலும் குசப்புல்லினால் கட்டிக்கொண்டு அக்கினியில் வீழ்ந்து பிராணனை விட்டுவிடவேண்டும்.

91. ஒரு க்ஷத்திரியன் ஒருபிராமண ஸ்திரீயை ஆலிங்கனஞ்செய்வானுகில் அவன் தன்னுடைய ஒவ்வொரு அவயவங்களையும் குசப்புல்லினால் சுற்றிக்கொண்டு நெருப்பில்குதித்து உயிர்மாய்த்துக் கொள்ளவேண்டும்.

92, ஒருவன் தன்மனைவியோடு தொடர்ந்த அன்பான சரீரசம்பந்தத்தைவிட்டு அவளுடையதாயாரை அல்லது சகோதரியை அழைப்பானுகில் அவன் பிரஜாபத்திய விரதம் செய்யவேண்டும். ஆகிலும் இதற்குப்பின் அவளோடு மறுபடியும் புணர இச்சிப்பானுகில் அவள் சுந்தரமுள்ளவளாகவும், நிரபராதியாகவும், பதிவான குணமுள்ளவளாகவும் இருப்பாளாகில் அவன் சாந்திராயண விரதம் முதலில் செய்யவேண்டும்.

93, ஒருவன் தெரியாமல் கோமாமிசம் புசிப்பானுகில் அவன் பிரஜாபத்திய விரதம் செய்யவேண்டும். அவன் அடிக்கடி கோமாமிசம் புசிப்பானுகில் அவன் சாந்திராயன விரதம் செய்ய வேண்டும். ஒரு இடபமும், ஒரு பசுவும் தட்சணையாகக் கொடுக்கவேண்டும்.

94, ஒருவன், யானை, குதிரை, ஒட்டகம், பாம்பு, அல்லது நாய் இவற்றினுடைய மாமிசத்தைப் புசிப்பானுகில் அவன்பனிரண்டு மாதங்கள் வரைக்கும் பிராஜாபத்தியவிரதம் செய்யவேண்டும்.

95, ஒருசண்டாளனுடைய மனைவியிடத்திற்குப் போகிறதிற் காக அல்லது பசுக் குதிரைகள் முதலாகியவைகளுடைய மாமிசபட் சணைசெய்வதற்காகப் பிராயச்சித்தம் செய்யவேண்டியது மல்லாமல், ஒருபிராமணன் அவனுடைய பழையபூணூலை யெறிந்துவிட்டு மறு படியும் பூணூல் தரிக்கும் சடங்குகளும் செய்யவேண்டும்.

96, ஒரு பிராமணன் மதுபானம் செய்வானுகில் அவன் மறு படியும் பூணூல் தரிக்கிறகருமங்கள் செய்யவேண்டும்.

97, ஒருபிராமணன் அடிக்கடி வெங்காயம் சாப்பிடுவானுகில் அவன் சாந்திராயணவிரதம் செய்து மறுபடியும் பூணூல் தரிக்கும் சடங்குகள் செய்யவேண்டும். அந்தப்படிதரிக்க அசக்தமானு யிருப் பானுகில் அவன் மறுபடியும் சாந்திராயண விரதம்செய்யவேண்டும்.

98, ஒருவன் மனதறிந்து ஒரு பூனையாவது காகமாவாது குதி ரையாவது கீரியாவது எலியாவது யாதொருபட்சியாவது அல்லது ஒரு குழந்தையாவது ஒருதரம்தின்ற அன்னத்தை மனதறிந்து தின் பானுகிலும் அல்லது உரோமங்கள் அல்லது புழுக்கள் விழுந்து அசு சியாகிப்போய்விட்ட அன்னத்தைப் புசிப்பானுகிலும் மூன்று நாள் உபவாசம் இருக்கவேண்டும்.

99, மூத்திரம் அல்லது மலம் வீழ்ந்த கிணற்றிலிருந்து தண் ணீர்குடிப்பானுகில் அவன் பிரஜாபத்திய விரதத்தில் நாலிலொருபா கம் செய்யவேண்டும். இதைமனதறிந்து செய்வானுகில் விரதத்தை இரட்டித்துக் கொள்ளவேண்டும்.

100, ஒருவன் ஒருபசுவினுடைய பாலைக் கன்றுபோட்ட பத் துநாள் கழிதற்குமுன் குடிப்பானுகில் இரண்டுநாள் உபவாசமிருக்க வேண்டும்.

101, யாவனொருவன் ஆட்டுப்பாலேயாவது எருமைப்பாலேயாவது குடிப்பானுகில் இரண்டு இராத்திரி உபவாசமிருக்க வேண்டும். யாவனொருவன் ஒரு கோவுடன் சுபாவவிரோதமான புணர்ச்சிசெய்வானுகில் அவன் நாலுதரம் பிரஜாபத்தியவிரதம் செய்யவேண்டும். இந்தக்குற்றம் அடிக்கடிச் செய்திருப்பானுகில் இந்தவிரதம் பனிரண்டுமாதங்கள் வரைக்கும் செய்யவேண்டும். இந்தப் பாவகாரியம் வெகுகாள் வரைக்கும் செய்து வந்திருப்பானுகில் குற்றவாளி அந்தக்கால அளவின்பிரகாரம் குருவினுடைய மனைவியோடு விபசரிப்பதற்காகச் செய்யவேண்டிய பிராயச்சித்தம் செய்யவேண்டும். அல்லது பிராணனை விட்டுவிடவேண்டும்.

102, பதினேந்துவயது அடைவதற்குமுன் ஒரு சிறுவன் உபநயனம் செய்யப்படாதவனுயிருந்தால் அல்லது காயத்திரி ஓதத்தெரிந்துகொள்ளாதவனுயிருந்தால் அவன்பிரஜாபத்தியவிரதம் மூன்றுதரம் செய்யவேண்டும். பிற்பாடு பூணுநூல் தரிக்கவேண்டும்.

103, ஒருவன் தன்மனைவி மாதவிடாயிலிருந்து ஸ்நானஞ் செய்த பதின்மூன்றுநாள் வரையிலும் அவளோடு கூடாதிருப்பானுகில் மூன்று இராத்திரிகள் உபவாசம் இருக்கவேண்டும். யாதொரு முக்கிய சடங்கின்பொருட்டு அப்படிப்பட்ட புணர்ச்சி விலக்கப்பட்டிருந்தால் நிமித்தமில்லை.

104, ஒருஸ்திரீ மாதவிடாயாகியிருக்கும்போது ஒருவன் அவளைப்புணர்வானுகில் மூன்றுநாள் வரைக்கும் நித்தியம் ஒருவாய்கொண்டநெய்தவிர மற்றொன்றும் சாப்பிடவொண்ணுது.

105, ஒருவன் யாதொரு மிருகத்துடன் சுபாவவிரோதக் குற்றங்கள் செய்வானுகில் அல்லது அவன் இந்திரியத்தை யாதொரு சுபாவவிரோதமானவழியில் போக்கடிப்பானுகில் அவன் சாந்திராயணவிரதம் செய்யவேண்டும்.

106, ஒருவன் யாதொரு பந்துவினுடைய சிராத்தம் செய்தஅன்றிராத்திரி புணர்ச்சி செய்வானுகில் அவன் ஒருநாள் உபவாசமிருக்கவேண்டும்.

107, ஒருவன் பிதாவழியில்வந்த சகோதரன் புத்திரியை யாவது மாதாவழியில்வந்த சகோதரியின் புத்திரியையாவது விவாகம் செய்வானுகில் அவன் சாந்திராயணவிரதம் செய்யவேண்டும். அந்த விவாகம் நீக்குதல் செய்யவேண்டும். ஆனல் அந்த ஸ்திரீக்கு அவள் ஆயுசுபரியந்தம் ஜீவநாமசம் கொடுக்கவேண்டியது குற்றவாளியின் பேரில் விழும்.

108, இரத்தக்கலப்பானதலே முறைக்குள்ளாக விவாகம் செய்வானுகில் பலவித பிராயச்சித்தங்கள் பந்துவந்தின் சமீபப்பிரகாரம் செய்யப்படவேண்டும்.

109, ஜாதிப்பிரஷ்டனுப்போய்விட்டவன் வீட்டில் புகிப்பானுகில் அல்லது அவனிடத்தில் தானம் வாங்குவானுகில் ஒருமாத முழுதும் உபவாசமிருக்கவேண்டும். அல்லது அதுசெய்யச் சக்தியில்லாதவனுயிருப்பானுகில் பிரஜாபத்திய விரதம் பதினைந்துதரம் செய்யவேண்டும்.

110, திருடினபாவம் நீங்கும்படி பல பிராயச்சித்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

111, அதிபாதகம் என்று சொல்லப்படுகிற குற்ற நிவர்த்திக்காகக் குற்றவாளி சித்தப்படுத்தப்பட்ட அக்கினியில் விழுந்து பிராணனே விட்டுவிடவேண்டும்.

112. மகாபாதகி என்பவன் நிலவனத்தில் பிரவேசித்து மரங்களின் காய், கனிகள், இலைகள், மூலங்கள், இவைகளேப் புசித்துக்கொண்டும் சடைதரித்துக்கொண்டும் வெறுந்தரையில் படுத்துக்கொண்டும் பனிரண்டு வருஷம் இருக்கவேண்டும். அவன் இப்படிப்பட்டவனுசம்பாதிக்க மாட்டாதவனுகில் அவன்தன்னுடைய பாபங்களே ஒப்புக்கொண்டு அடுத்த கிராமங்களில் பிச்சை யெடுக்கவேண்டும்.

113, ஒருவன் ஒருபிராமணனைக் கொலை செய்வானுகில் பிராணனை விட்டு விடவேண்டும். அல்லது இருபத்து நாலு வருஷங்கள் வரைக்கும் பிரஜாபத்தியவிரதம் செய்யவேண்டும். அல்லது அதுசெய்யச் சக்தியில்லாதவனு யிருப்பானுகில் முந்நூற்றுபது பசுக்களை அவற்றின் கன்றுடனே தானம்செய்யவேண்டும். நூறுபசுக்கள் காணிக்கையாகக் கொடுக்கவேண்டும். அல்லது இருபத்து நாலுரூபாய் காணிக்கை யல்லாமல் நானூற்றெழுபது ரூபாய் தானங் கொடுக்க வேண்டும்.

114, இந்தக்கிரந்தத்தில் பதினெருவிதமான மத்தியபானமும் பன்னிரண்டுவிதமான சுராபானமும் சொல்லப் பட்டிருக்கின்றன. மூன்று விதசாராயங்கள், சாதம் அல்லது தேன், குடிக் தீஞ்சாறு இவற்றிலிருந்து இறக்கப்படுகின்றன.

115, ஒருபிராமணனுவது க்ஷத்திரியனுவது வைசிய னுவது இவ்விதசாராயங்களில் எதைக்குடித்தாலும் பலவிதபிராயச் சித்தங்கள் செய்யவேண்டும். ஒருபிராமணன் மத்தியபானம் செய்வானுகில் பிராணனை விட்டுவிடவேண்டும். அல்லது இருபத்து நான்குவருஷம் வரையில் ஒருவிரதம் செய்யவேண்டும்.

116, அவசியமான பிராயச்சித்தங்கள் செய்துகொள்ளாதபட்சத்தில் அவர்கள் நரகத்திற்குள்ளாவார்கள். தண்டத்தினுல் பாபநிவர்த்தி செய்துகொண்டபின்பு அவர்கள் மறுபடியும் மானுடப்பிறப்பி லுதிப்பார்கள். அவர்கள் முன்பிறப்பி லடைந்திருந்த நல்வினைப்பயனுல் அந்தப்படி மானுடதேக மடைவார்கள். ஆனுல் இகத்தில் பாவநிவர்த்திக்காகப் பிராயச்சித்தம் செய்ய அசட்டை செய்வார்களாகில் அப்பாவத்தின் அடையாளங்களைத் தரிப்பார்கள். அதற்குத் திருஷ்டாந்தம்.

117. அதிபாதகி யென்பவனுக்குக் குட்டரோக முண்டாகும்.

118, பிராமணவதை செய்தவன் சீலை வியாதியினுல் வருத்தப்படுவான்.

119, மதுபானஞ் செய்தவன் அந்தக் கேடுள்ள பற்களையுடையவனுவான்.

120, சொர்ணம் திருடுகிறவனுக்கு உகிர்ச்சுற்றுண்டாகும்.

121. குருவினுடைய மனைவியைகெடுக்கிறவனுக்குஅவனுடையதோலின்மேல் கிரந்திப்பரு உண்டாகும்.

122. பூர்வஜன்மத்தில் செய்த முக்கியபாவங்களுக்கு இவ்வித அடையாளங்களையடையோர் தகுந்தபிராயச் சித்தங்கள் செய்யவேண்டும். அப்போதிந்தப் பாவங்கள் நிவாரணமாகும். அப்படிப்பட்டவியாதியுள்ள மனிதன் பிராயச்சித்தம் செய்யாமலிறந்தால் அவனுடையசரீரம் தகனம்செய்யப்படவொண்ணாது. அவன் சரீரத்தையாருவது தகனம் செய்தால் அந்தக் குற்றவாளி சாந்திராயண விரதம் செய்யவேண்டும்.

123. ஒருவன் மாமியாருடைய சயனத்தை அசுசிப்படுத்துவானுகில் அவனுடைய வாயில் நிவப்பாக காய்ச்சின கல்லாவது இரும்பாவது போட்டுக்கொண்டு அண்ணகனாகி விடவேண்டும்.

124. இது அவனுடைய மரணத்திற்குக் காரணமாகா விடில் அவன் தூரதேசத்திற்குப் போய் விடவேண்டும். அவனுடைய சொத்துமுழுதும் பிராமணர்களுக்குக் காணிக்கையாகிவிட வேண்டும்.

125. ஒருபிராமணன் ஒருமிலச்சஸ்திரீயினுலாவது சண்டாளஸ்திரீயினுலாவது ஒரு புத்திரனைப்பெறுவானுகில் இந்தப் பாபச்சிற்குப் பிராயச்சித்தமில்லை. ஆனல் அரசன் இந்தக் குற்றவாளியை அவனுடைய சரீரத்தில் பார்வைபடாத விடத்தில் பச்சைகுத்தி தேசத்தைவிட்டுத் துரத்திவிட வேண்டும்.

126. ஒருவன்தன்னைத்தான் கொலைசெய்துக்கொள்ள எத்தனப்பட்டு அப்படிப்பட்ட செய்கையினின்று தடுக்கப்படுவானுகில் அவன்பிரஜாபத்திய விரதம்செய்ய வேண்டும். அல்லது ஆயிரமந்திரம் ஜெபிக்க வேண்டும். மூன்று நாள் உபவாசமிருக்க வேண்டும்.

127. தன்னைத்தானே கொலை செய்து கொண்டவனுடைய மரணத்திற்காகவும் ஒருபசுவையாவது அல்லது ஒரு பிராமணனை யாவதுகொன்றவனுடைய மரணத்துக் காகவும் தூக்கப்பட்டவன் பிராயச்சித்தம செய்யவேண்டும்.

128. தன்னைத்தான் கொலைசெய்து கொண்டவனுடைய சரீரத்தை அவன் பேரால் பிராயச்சித்தம் முதலில் செய்யாமல் ஒருவனும் தகனம் பண்ணவொண்ணாது.

129. ஒருஸ்திரீயானவள் உடன்கட்டை ஏறியபின்பு தக்கப்பட்டால் அல்லது ஒருவன் சாஸ்திரப்பிரகாரம் யாதொரு விதத்தில் பிராணனை விட்டு விடத் தீர்மானித்த பின்பு விசனப்பட்டால் அவள் அல்லது அவன் பிராஜாபத்திய விரதம் செய்ய வேண்டும்.

130. ஒருவன் இரகசியமாக உப பாதகத்திற் சேர்ந்த குற்றஞ் செய்வானுகில் அவன் நூறுமந்திரம் செபிக்கவேண்டும். செய்தபாவம்அதைவிடபெரிதா யிருக்குமாகில் ஆயிரந்தரம் ஜெபிக்க வேண்டும் இன்னம் பெரிதாயிருக்குமாகில் பதினாயிரந்தரம் ஜெபிக்க வேண்டும்.

131. ஒரு பிராமணன் இரகசியத்தில் மகாபாதக மென்று சொல்லப்பட்ட ஒரு பாதகத்தை அடிக்கடிசெய்வவானுகில் நியமித்த மந்திரம் லட்சந்தரம் ஜெபிக்கவேண்டும்.

132. ஒரு பொய் சொன்ன பாதக நிவர்த்திக்காக ஒருவன் விஷ்ணுவினுடைய பேரை ஒருதரம் சொல்ல வேண்டும்.

133. ஒருபிராமணனுடைய ஜீவனை காப்பாற்றுகிற தற்காகவும்கோபங்கொண்ட மனைவியைச் சமாதானப் படுத்துகிற தற்காகவும் பொய்சொன்னால் தோஷமில்லை.

பிராயச்சித்தநிருணய சாத்திரசங்கிரகம் முற்றிற்று.

குறிப்பு.

இந்த நான்குவேத ரகசியத்தினுலும் ஆகஸ்போர்ட் சகல கலா பாடசாலையில் சமஸ்கிருதபண்டிதராகிய உல்சன்துரை யவர்களால் இந்துசமயத்தைக்குறித்துச் செய்யப்பட்ட பிரசங்கம் அல்லது உபந் நியாசத்தினுலும் தெரியவருகிறபிரகாரம் வேதங்கள் முக்கியமாகக் கருமகாண்டம், உபாசனகாண்டம், ஞானகாண்டம், என மூன்று காண்டங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

கருமகாண்டம், இந்திரன், ஆகாயம், அக்கினி, ஆதித்தன், சந்திரன் அப்பு, வாயு, அசரீரிகள், பரமாணுக்கள், பிருதிவி, உருத்திரர், வசுக்கள் அசுவனிதேவர் முதலாகிய தேவர்களையும் அவர்களை நோக்கிச்செய்யப்படும் பலயாகங்கள் சோமபானம் அருக்கியம் முதலாகிய அநேகசமயாசார சடங்குகளையும் தோத்திரங்களையும் மந்திரங்களையும் இவைகளால் உண்டாகும் பலன்களையும் விளக்குகின்றது.

உபாசனகாண்டம்; மேலேசொல்லிய தேவர்களை விசுவசித்துச் செய்யும் உபாசனத்தை விளக்குகின்றது.

ஞானகாண்டமோ வெனில் சர்வபரிபூரண சச்சிதானந்த மாகி அகிலபுவனசராசர பிரபஞ்சத்திற்கு மூலமாயும் காரணமாயும் இருக்கிறபெரிய பொருள் ஒன்றே என்னும் உண்மைக் கியானத்தை விளக்குகின்றது.

கருமகாண்ட மென்றும் உபாசனகாண்ட மென்றும் ஞானகாண்டமென்றும் வேதத்தில் ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதை நோக்குங்கால் ஒருவனுக்குத் தேவபக்தியுண்டாகிற வரைக்கும் மேல்சொல்லியயாகாதி கருமங்கள் செய்துவர வேண்டுமென்றும் உண்மைக்கியானம் உண்டாகிறவரைக்கும் பக்திமார்க்கம் அல்லது உபாசனமார்க்கத்தில் நிற்கவேண்டு மெனவும் உண்மைக் கியானம் உண்டான பின்புகருமம் உபாசனம் இவ்விரண்டும் நீங்கிப்போய் விடுமென்றும் தோன்றுகின்றது. வேதானுசாரத்திற்கும் இக்காலத்து அனுசாரத்திற்கும் மிகவும் முக்கியமான விஷயங்களில் அநேக பேதங்களுண்டாயிருக்கின்றன.

வேதானுசாரமாவது பெரும்பாலும் ஓமாக்கினிக்குநீவேதனம் ஆகுதிசெய்தல், அக்கினி, ஆகாயம், இந்திரன், வாயு, இருதுக்கள், சந்திரன், சூரியன் இப்படிப்பட்ட தேவதைகளுக்கு ஓமாக்கினியில் நெய்யாவது ஓமத்திற்காகச் சித்தம்செய்யப்படுகிற சோமரசமாவது விட்டு ஆகுதிசெய்வதேயாம்.

ஸ்ரீபராசரஸ்மிருதி சங்கிரகம்

மூலமும்-உரையும்.

சுலோ:—அதாதோஹிமசைலாக்ரே தேவதாருவனலயே வ்யாஸமேகாக்ரமாஸீன மப்ருச்சன் ருஷய: புரா.

சுலோ:—மானுஷனும்ஹிதம்தர்மம் வர்த்தமானேகலௌயுகே சௌசாசாராம்யதாவச்ச வதஸத்யவதீஸுத.

இமயமலைச் சிகரத்தில் தேவதாருவனத்தில் நிர்மல மனதுடன் வீற்றிருக்கும் வேதவியாசரிடத்திற்கு ருஷிசிரேஷ்டர்களான சௌனகன் முதலிய ருஷிகள்சென்று ஓ! சத்யவதீகுமாரரே மனிதர்களுக்கு அனுகூலமான தருமத்தையும், சுத்தமாகிய ஒழுக்கத்தையும் உண்மையாகக் கூறவேண்டு மென்று விஞ்ஞாபனை செய்தனர்.

சுலோ:—தச்ச்ருத்வா முனிவாக்யந்துஸ சிஷ்யோக்ஞ்யர் களந்நிப: ப்ரத்யுவாச மஹாதேஜா: ச்ருதிஸ்ம்ருதிவிசாரத.

சுலோ:—நசாஹம்ஸர்வதத்வக்ஞ்ய: கதம் தர்மம் வதாம்யஹம் அஸ்மத்பிதைவப்ரஷ்ட்டவ்ய இதிவ்யாஸஸ்ஸுதோப்ரவீத்.

(இ-ள்) சீடருடன் கூடியவராய், அக்னிக்கும் சூரியனுக்கும் சமானமானவராய் மிக்க தேஜஸ்ஸுடையவராய், சுருதிஸ்மிருதிகளில் விசேடக்ஞ்யான முடையவராய் இருக்கின்ற பராசருடைய புத்திரராகிய வியாசர் அம்முனிவர்கள் வாக்யங்களைக் கேட்டு ஓ! முனிவர்களே நான் எல்லாவுண்மைகளைத் தெரிந்தவனல்ல. நான் தருமத்தை எவ்வாறு கூறுவேன். எனது பிதாவாகிய பராசரரே உங்களுடைய கேள்விகளுக்குரிய விடைகொடுக்கஸமர்த்தர் என்றுகூறினர்.

சுமந்து, வைசம்பாயனர், ஜைமினி, பைலர் இந்நால்வரும் முறையே நான்குவேதங்களையும் சீடபரம்பரையால் பிரசித்தப் படுத்தினமாணாக்கராம்.

சுலோ:—சதஸ்தே ருஷயஸ்ஸர்வே தர்மதத்வார்த்தகாங்க்ஷிண ருஷிம்வியாஸம் புரஸ்க்ருத்ய கத்வாபதரிகாச்ரமம்.

(இ-ள்) பின்பு அம்முனிவர்கள் யாவரும்தருமத்தினுடைய உண்மையான அர்த்தக்ஞ்யானத்தை விரும்பினவர்களாய் வியாசமகாருஷியைமுன்னிட்டுக்கொண்டு பதரிகாசிரமத்திற்குச் சென்று.

சுலோ:—நாநாபுஷ்பலாத கீணம்பலபுஷ்பைரலங்க்ருத்தம் நதீப் ரஸ்வணேபேதம் புண்யதீர்த்தோப சோபிதம்.

சுலோ:—ம்ருகபக்ஷிகி நாதாட்டயம் தேவதாயத நாவ்ருதம் யக்ஷகந்தர்வ ஸித்தைச்சாருத்த தைர்லங்க்தம்.

(இ-ள்) அந்த பதரிகாசிரமமானது பலவிதமான புஷ்பக்கொடி களோடும் அபூர்வமான பழங்களோடும் புஷ்பங்களோடு மலங்கரிக் கப்பட்டதும், பலவிதப்பறவைகளின் சுச்வரங்களோடுசோபிப்பதும் தேவர்களாலும் தேவாலயங்களாலும் சூழப்பட்டதும், யக்ஷர், கதர் வர்சித்தர்முதலியவர்களின் ஆடல் பாடால்களால் சிரவணசுகமாக வும் நேத்திராநந்தமாகவும், சித்தாநந்தமாவுக மிருக்கப்பட்டதாம்.

சுலோ:—தஸ்மின் ருஷிஸபாமத்யே சக்திபுத்ரம் பராசரம்ஸு காவினம் மஹாதேஜாமுனி முக்யகணுவ்ருதம்.

சுலோ:—க்ருதாஞ்ஜலீ புடோபூத்வாவ்யாஸஸ்துருஷிபிஸ்ஸஹ ப்ரதக்ஷிண பிவாதைச் சஸ்துதி பிஸ்ஸமபூஜயத்.

(இ-ள்) அத்தருஷிகூடத்தின் நடுவில் முனிசிரேஷ்ட்டர் களால் சூழப்பட்டு பிரம்மாநந்தத்தோடு வீற்றிருக்கின்ற சத்தியபுத்திரரா கிய பராசர்முனிவரை மிகுந்தமஹிமை யுடைய வியாசர் முனிவர்க ளோடு அடைந்து இரண்டு கைகளையும் குவிந்து அஞ்சலி செய்தவ ராய் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து அனேகவிதங்களால் துதித்து நன்றுரப்பூசித்தார்.

சுலோ:—ததஸ்ஸந்துஷ்ட்ட ஹ்ருதய: பராசர்மஹாமுனி: ஆஹ நஸ்வாகதம் ப்ரூஹீத்யாஹீஜே முனிபுங்கவ.

(இ-ள்) பின்பு பிரம்மாநந்த ஹிருதயத்தோடுகூடி இருக்கும் அப்பராசர்முனி ருஷிசிரேஷ்ட்டராக விருப்பதால் தான் இருந்தபடி யே "சுகமாக வந்தாயோ? சொல்வாயாகவென்று" கூறினர்.

சுலோ:—குசலம்ஸம்ய கித்யுக்த்வாவ்யாஸ: ப்ருச்சத்யத: பரம் யதிஜாநாஹிபக்திம் மேஸ்நேஹாத் வாயக்தவச்சல தர்மம் கதயமே தாத ஹ்யபநுக்ராஹ்யோப்ய ஹம்தவ.

(இ-ள்) க்ஷேமமாக விருக்கிறேனென்றுச் சொல்லி வியாசர் அதன்பின் இவ்விதமாகச் சொல்லத்தொடங்கினார், ஓ! ஸ்வாமி பக்தரிடத்தில் வாத்சல்ய கிணத்தால் ஆதரிக்கப்பட்டவரே? பக்திசினேகத்தினாலாவது, புத்திரனெனும் அபிமானத்தினாலாவது, எனக்கு தருமங்களை தெரியப்படுத்தியருளும். எவ்வகையாயினும் அடியேன் தேவரீரால் அனுக்கிரகம் பெறத்தக்கவனாகியிருக்கின்றேன்.

சுலோ:—ச்ருதாமே மாநவா தர்மாவாவிஷ்ட்டா: காச்யபாஸ்த்ததா. கார்கீயா கௌதமீயாச்சததா சௌசநஸா: ச்ருதா.

சுலோ:—ஆத்ரேர்விஷ்ணோச்சஸம் வர்தாத்த க்ஷாதங்கிரஸஸ்ததா சாதாதபாச்சஹாரீதாத்யாக்ஞ்ய வல்க்யாச்ததைவச.

சுலோ:—ஆபஸ்தம்ப க்ருதா தர்மாச்சங்கஸ்யலிகி தஸ்யச காத்யாயன க்ருதாச்சைவத தாப்ராசேத ஸாங்மூநே.

(இ-ள்) மநு, வசிஷ்ட்டர், கச்யபர், கர்கர், கௌதமர், உசநர், அத்ரி, விஷ்ணுதசம்வர்தர், தக்ஷர், ஆங்கிரஸர், சாதாதபர், ஹாரீதர் யாக்ஞ்ய வல்க்யர், ஆபஸ்தம்பர், சங்கர் காத்யாயநர், ப்ராசெதஸர் இப்பத்தொம்பதின்மரும் வெவ்வேறுகக்கூறியிருக்கும் தருமசாஸ்திரங்கள் அந்தந்த இருடிகளினின்றும் என்னால் உணரப்பட்டது.

சுலோ:—ச்ருதாஹ்யேதேபவத் ப்ரோத்தா: ச்ருத்யர்த்தாமே நவிஸ் ம்ருதா: அஸ்மின் மந்வந்தரே தர்மா: க்ருத்ரேதாதி கேயுகே.

(இ-ள்) தேவரீர்கூற இங்குகிடைத்துள்ள வேதங்களும் சுசௌத தருமங்களும் எவ்வாறு என்னால் கேட்க்கப் பட்டனவோ? அப்படி இந்த மநுவந்தரத்தில் கிருதம்த்ரேதாமுதலிய யுகங்களில் வழங்கும் தருமங்களும் என்னால் மறக்கப்பட்டன அல்ல.

சுலோ:—ஸர்வேதர்மா: கிருதேஜாதாஸ்ஸர்வேநஷ்டா: கலௌயுகே. சாதுர்வர்ண்யஸமாசாரம் கிஞ்சித்ஸாதாரணம் வத.

(இ-ள்) சகலதருமங்களும் கிருதயுகத்திற் பிறந்து கலியுகத்தில் இறக்கின்றன. ஆதலால் நான்குவர்ணங்களுடைய பொதுவான நல்லொழுக்கங்களைச் சற்றுகூறவேண்டும்.

சுலோ:—தர்மா பஹு³விதாலோகே ச்ருதிபேதமுகோத்பவா: தேசதர்மாச்ச த்ருச்யந்தே குலதர்மாஸ்ததை²வச ஜாதிதர்மாவயோ தர்மாகுண தர்மாச்சசோபனே சரீரகாலதர்மாச்ச ஆபத்தர் மாஸ்ததை²வச ஏகத்தர்மஸ்ய நாநாத்வம் க்ரயதேலோ சவாஹிபி: க்ருதே பூத்ஸகலோ தர்மஸ்த்ரே தாயாம் த்ரிபதிஸ்ம்ருத: பாத: ப்ரவிஷ் டோதர்மஸ்ய மச்சரத்வேஷஸம்பவ தர்மாதர்மாஸமென பூத்வாத் விபாதெளத்வாபரேஸ்திதெள திஷ்யேதர்மஸ்த்திதஃ பாதைர்தத்ரம: பாதேன ஸம்ஸ்த்தித.

(இ-ள்) உலகத்தில் வேறுவேறு சுருதிகளிலிருந்து பிரந்ததருமங்கள், பலவகைப்பட்டுள்ளன. அவைதேசதருமங்கள், குலதருமங்கள். ஜாதிதருமங்கள், பருவதர்மங்கள், குணதர்மங்கள், தேகதர்மங்கள், காலதர்மங்கள், ஆபத்தர்மங்கள் எனப்படும், இங்ஙனம் கருமங்கள் பலவகைப்பட்டனவாக உலகத்துள்ளவர்களாற் செயயப்படுகின்றன. கிருதயுகத்தில் தர்மங்கள் முழுவதும் நடந்தன, திரேதாயுகத்தில் மூன்றுபாதங்களுடையனவா யிருந்தன மச்சரம், துவேஷம் உண்டாகின்ற அதர்மத்தின் ஒருகால் அவற்றுட் கலந்திருந்தது. துவாபரயுகத்தில் தர்மம், பாவம், இவ்விரண்டு கால்களால் ஒத்தனவாகி வியாபித்தன. கலியுகத்தில் பாவம் மூன்று காலுடன் நிற்கின்றன. தர்மமொருகாலுடன் நின்றது.

(ஆத்யே க்ருதே து யோதர்மஸ்ஸத்ரே தயாம் ப்ரவர்ததே த்வா பரேவ் யாகுலீபூத: ப்ரணச்யதிகலௌயுகே திஷ்யேமாயா மஸ்ரூயா ஞ்சவதம் சைவதபஸ்வினும் ஸாதயந்தி நராஸ்தத்ர த மஸாவியகுலேந் த்ரியாஃ)

(இ-ள்) முதல்கிருதயுகத்தில் தருமமெதுவே அதுவே திரேதாயுகத்திலும் வழங்குகின்றது. துவாபரத்தில் வியாகுலத்தை யடைந்திருக்கின்றது. கலியுகத்தில் நாசத்தையடைகின்றது. மானுடர் கலியுகத்தில் தாமதகுணத்தால் கவர்ந்து அலைக்கப்பட்ட பொறிபுலன்களையுடையவராய் வஞ்சகத்தையும், அழுக்காற்றையும், தவசிகளைக்கொலைவதையுஞ் செய்கின்றார்கள். (விஷ்ணுபுராணத்தில்) வர்ணாச்ரமா

ரவதீ ப்ரவ்ருத்திர் நகலெளர்ருணும் நஸாமயஜர்ருக்வர்க விநிஷ்பாத னஹேதுகா.) ஸாமம், யஜஸ், இருக்குஇவ்வேதங்களுடைய பயனை அடைவதற்குக் காரணமாகிய வர்ணாசிரம ஒழுக்கங்களை யுடைய நடைகலியுகத்தில் மனிதருக்குள் இல்லாமல் ஒழியும். இன்னும் ஆதித்யபுராணத்தில்.

சுலோ:—யஸ்துகார்த்தயு கோதர்மோககர்தவ்ய: கலௌயுகே பரப்ரஸ்க்தாஸ்துயத: கலௌநார்யோ நராஸ்ததா: மாதர்களும் மைந்தரும் பாவத்தில் நிறந்தவராவார் என்னும் நிமத்தத்தினால் கிருதயுகத்திலுள்ள தருமம் கலியுகத்தில் செய்யத்தக்கதல்ல.

பொதுத்தருமம்.

சுலோ:—தயாக்ஷ மாநஸ்யாச சௌசாநாயாஸமங்கணம், அகார்பண்யால் ப்ருஹத்வே சஸர்வஸாதாரணஇமே தயயுடைமை, பொறுமை, அழுக்காறின்மை, சுத்தமுடைமை, மங்களமுடைமை, மகை இல்லாமை, லோபமில்லாமை, அவாவின்மை. (அவா-ஆசை) இவையாவர்க்கும் பொதுவானதருமம். இவ்வாறு பிருகஸ்பதி கூறினர்.

சுலோ:—க்ஷமாசத்யம் தமச்சௌசம்தான மிந்த்ரியநிக்ரஹம், அஹிம்ஸாகுரு ருசிச்ரூஷாதீர்ததாது லர்ணம்துயா, ஆத்மவத்வமலோபத்வம் தேவதாகாரஞ்சபூகணம், அநப்யஸூயாசததா தர்மஸ்ஸாமான்யஉச்யதேதமம், உண்மை, மனமடக்கம், தானம், இந்திரி நிக்கிரஹமில்லாமை, கொல்லாமை, குருகாகுணியம், தீர்த்தயாத்திரை, பூததயை, தன்னைப்பேசல் மற்றொருவினபாவிப்பது) லோபகுணமில்லாமை, கடவுளைப்பூசித்தல், பொறுமைபில்லாமை இவைகள்பொதுதருமங்களென்று கூறப்படுகின்றன.

சிறப்புத்தருமம்.

பிருஹஸ்பதி ஸ்மிருதி:—ஸ்வாத்யா யோத்யாபனம் சாபி யஜனம் யாஜனம்ததா, தானம்ப்ரக்ரஹச்சேதிஷட் கர்மாண்யக்ரகன்மன இஜ்யாத்யனதானே சப்ரஜா நாம்பரிபாலனம், சஸ்த்ராஸ்தர காரணம்ஸேவாகர்மாணி க்ஷத்ரியஸ்து. ஸ்வாத்யாயோஜநம் தானம் பகூனம்பாலனம் ததா, குஸீத க்ருஷிவாணிஜயம் வைச்யகர்மாணிஸப்

தவை. சௌசம்ப்ராஹ்மண சிச்ருஷாஸ்தியமக்ரோத ஸ்வச, சூத்ரசர் மததாமந்த்ரோ நமஸ்காரோப்யசோதித: இ-ள்வேதியனுக்கு வேத மோதல், ஓதுவித்தல், யாகம்செய்வதும், செய்விப்பதும், தானம்வா ங்குதலும். தானம்கொடுத்தலும் இவ்வாறு கருமங்களுமுரியனவாம் க்ஷத்ரியனுக்கு வேள்விசெய்தல், வேதமோதுதல், ஈதல், உலகோம்பு தல், படைக்கலம் பயிலுதல், சேவைசெய்தல், என்னும் என்னும பஞ்சகருமங்களுரியனவாம் வைசியனுக்கு வேதமோதல், வேள்விபுரி தல், ஈதல், பசுக்காத்தல், வட்டி ஈட்டல், உழவுத்தொழில் செய்தல், பண்டமாற்றுதலாகிய வியாபாரம். இவ்வேழு கருமங்களும் சிறப்புத் தருமமாம். சூத்திரனுக்கு சுத்தமுடைமை, அந்தணர் பணிவிருப்புதல் ஸத்தியம் சிமின்மை, வேதவிதியில்லாத மந்திரம், அவ்வகை நமஸ் காரம் இவைசிறப்புத் தருமமாம்.

பகவத்கீதையில்.

ப்ராஹ்மண க்ஷத்ரியவிசாம் சூத்ராணஞ்ச பரம்தப, கர்மாணி ப்ரக்ருதானிஸ்வபாவப்ரபவைர்குணை: சமோதமஸ்தபச் சௌசம்க்ஷா ந்திரார் ஜவமேவச, க்ஞ்யானம் விக்ஞ்யான மாஸ்திக்யம் ப்ராஹ்மம் கர்மஸ்வபாவஜம்.

(இ-ள்) ப்ரம்ஹக்ஷத்திரிய வைசியசூத்ர வர்ணங்களில் அவர வரியற்கைக் குணத்தால் கருமங்கள் பிரிக்கப்பட்டது. அதாவது சமம், தவம், சுத்தம், பொருமை, நேர்மை, க்ஞ்யானம், விக்ஞ் யானம், கடவுள் உண்டென்பதும், தருமம், மறுமை உண்டென்று நம்பிக்கை இவைவேதியருக்குரிய இயற்கைத்தருமம். "சௌர்யம் தேஜோர்த் ருதிர்த ரக்ஷ்யம் யுத்தேசாப்யபலாயனம், தானமீச்வாபா வச்சக்ஷத்ரம் கர்மஸ்வபாவஜம்."

(இ-ள்) சௌரியம், புகழ் தைரியம், சாமர்த்தியம், போரிற்புற ங்கொடாமை, தானம், ஆணையாற்றல் இவை அசானுக்குரிய இயற் கைத்தருமமாம். "க்ருஷிகோப சுவாணிஜ்யம் வைச்யகர்மஸ்வபா வஜம்."

(இ-ள்) உழவு, ஆன்கிரைகாத்தல், ஏரூப்பசுவின்மேய்த்தல் இம் மூவகையால் வாணிபம்செய்தல். இவைவைசியனுக்குரிய இயற்கைத் தருமமாம். "பரிசர்யாத்மகம் கர்மசூத்ரஸ்யாபி ஸ்வபாஜம்." பணி செய்து நின்றல் சூத்திரனுக்குரிய இயற்கைத்தருமமாம்.

சுலோ:—சதுர்ணமபிவர்ணானும் கர்த்தவ்யம் தர்மகோவிதை, ப்ரூஹிதர்மஸ்ய ரூபக்ஞ்யஸ—க்ஷ்மம் ஸ்தாலஞ்சவிஸ்தராத்.

(இ-ள்) தருமவடிவமுணர்ந்த மஹாநுபாவரே நான்குவருணங் களின் தருமங்களே நன்றாக அறிந்தவர்களால் செய்யவேண்டு வனவும், சிறியதும், பெரியதுமாகிய தருமங்களேவிரித்துக்கூறவேண்டும்.

சுலோ:—வ்யாஸவாக்யாவஸானேது முனிமுக்ய: பராசர: தர்ம ஸ்யநிர்ணயம் ப்ரஹஸ—க்ஷ்மம் ஸ்தாலஞ்சவிஸ்தராத்.

(இ-ன்) வியாசர்வாக்கியத்தின் முடிவிலே முனிவரிற்சிறந்த பரா சர் மாமுனிவர் சூக்ஷ்மமும், ஸ்தாலமுமாகிய தருமநிச்சயத்தைவிரித் துக் கூறினர்.

சுலோ:—ச்ருணுபுத் ரப்ரவக்ஷ்யாமி ச்ருணவந்து முநயஸ்ததா.

(இ-ள்) புத்திரனே நன்றாகச் சொல்லுவன்கேள், முனிவர்களே அவ்வாறே கேட்பீராக.

சுலோ:—கல்பேகல்பே சூயோத்பத்யா ப்ரஹ்மவிஷ்ணு மஹேச்வரா: சருதிஸ்ம்ருதிஸமாசார நிரணேதாரச்சஸர்வதா.

(இ-ள்) கற்பங்கள்தோறும் தோற்ற ஒடுக்கங்களால் பிரஹ்ம விஷ்ணுமஹேச்வரன் என்னும் மூவருமெப்பொழுதும் சுருதிஸ்மிரு திகளின் ஒத்த ஒழுக்கங்களே விதிப்பவர்களாகின்றார்கள்.

கற்பபேதம்.

கற்பம் இருவகைப்படும், அதாவது மஹாகற்பம், அவாந்தர கற்பம் என்பவையாம். அவற்றுள் மூலபிரகுதியினின்றும் உண்டாம் ஸ்ருஷ்ட்டிமுதல் பிரஹ்மாவின் ஆயுள்வரையிலும் ஏற்பட்டுள்ள காலம் மஹாகற்பமாம்.

நான்குவேத ரகசியம்

முற்றும்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 2792
நன்கொடை எண்: 2792
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

போகமுனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

போகர் பஞ்சபட்சி சாஸ்திரம்.

நிமிஷப்பஞ்சபட்சி என்னும்

சுருக்கு பஞ்சபட்சி சாஸ்திரம்.

மூலமும்-உரையும்.

இஃது, மிக்க மேன்மைதங்கிய சோதிட சாஸ்திரங்களில் ஒன்றென்பதை பூர்வீக சோதிடர்க ளறிந்திருந்ததுடன், இக்காலத்துச் சோதிடர்கள் பலருமறிவார்கள்.

இதுவரையில்வடமொழியிலிருந்த இச்சாஸ்திரத்தை (சோதிட மணி தேவேந்திரம்) என்பவரால் லோகோபகாரமாகும்படி பாட்டும் உரையுமாக மிக எளிய தமிழ்நடையில் எழுதித்தர அடியிற்கண் டவம்மால் அச்சிடப்பட்டிருக்கின்றது.

இச்சாஸ்திரத்துள் பஞ்சபட்சிகளின் தொழில்முறைகள் சக்கரங்கள் படங்கள், ஆரூடங்கள். இதன் பலன்கள், நிமிஷ பஞ்சபட்சியென்னும் சுருக்குபஞ்சபட்சிகளின் பலாபலன்கள், தனித்தனிவிவரமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

இதைச்சாமான்னிய சோதிடர்களும்கையாண்டு வருவார்களானால், சோதிடம்வல்ல மகாபண்டிதர்களுக்கு நிகராக நற்பேரெடுப்பார்களென்பது இந்நூல் மொழிபெயர்த்தவரின் கருத்து.

இத்தமிழ்ப் பேருலகில் சோதிடந் தெரியாதவர்களும், தமிழ் நடை யறியாதவர்களுமாயுள்ளவர்கள் இதை யொருமுறை கண்ணோட்டமிடுவார்களானால் சோதிடங்கற்கு முபாயத்தை சொற்ப நாளில் தாமே யுணர்வார்களென்பதும் துணிபு.

ஒரே முறைராய் இந்த புஸ்தகம் 4-வாங்கு கிறவர்களுக்குத் தபாற்சார்ஜ் கிடையாது.

இதன் விலை அணு 12. தபாற்கூலி அணு-2

கண்கட்டு வித்தைகள் 1000.

புத்தகம் 1-க்கு **1000**-வித்தைகள் அடங்கியிருக்கின் றமையால் அவற்றுள் சில வித்தைகளின் தலைப்பெயர்களே மாத்திரம் இதனடியி லெழுதிக்காட்டப்பட்டிருக்கின்றது இப்படியே மற்றவித்தை களும் மிக்க அபூர்வமாயிருக்கு மென்றறிக.

பலகோடி தீபவித்தை
அணைத்தவிளக் கெரியும்வித்தை
ஆடாமுனி யாடும்வித்தை
ஓரகஸியக் கடிதமெழுதும்வித்தை
றப்பர்ஸ்டாம்பு இங்கேசெய்வித்தை
இருட்டில் பேயைக்காட்டுமவித்தை
கரப்பை இனிப்பாக்கும்வித்தை
கண்ணாடிபுட்டியை வெட்டும்வித்தை
கயிற்றின்மேல் நடக்கும்வித்தை
கறக்கும்பால் உதிரமாகும்வித்தை
கற்பூரச்செடிவித்தை
கற்கண்டுசெய்யும்வித்தை

இலை பூ காய் அதிகரிக்கும்வித்தை
இலை பூ காய் உதிரும்வித்தை
ஈ கொசு நசியும்வித்தை
உடைந்தபீங்கான்கள் ஒட்டும்வித்தை
உப்புக்கண்ணி செய்யும்வித்தை
உப்புசலத்தைநல்லசலமாக்கும்வித்தை
எண்ணையை வெண்ணையாச்சும்வித்தை
ஒருகோலை இரண்டாகக்காட்டுவித்தை
ஒருமரத்தில்இருவகைகாய்காய்க்கும்வி
செல்லுபிடிக்காதிருக்கும்வித்தை
சொக்குப்பொடிவித்தை
சோடாவாட்டர்செய்யும்வித்தை

இரண்டுபாகங்களும் 1000-ஆயிரம்வித்தைகள்சேர்ந்த ஒரேபுத்தகம் விலை

அணை-10. வி. பி. தபாற்கூலி அணை-3.

கமலமுனி இரேகை சாஸ்திரம்

மூலமும்-உரையும்,

சிநேகிதர்களே இவ்வுலகத்திலுள்ள சகல ஜீவராசிகளிலும் மே லான ஜென்மத்தை பெற்றதாம் பயன்படும்படி சோதிபெற்ற பதி ணெண்சித்தர்கள் நமதுபேரில் கிருபைவைத்து, சரியை, கிரியையோ கம் ஞானம், மணி, மந்திரம், வயத்தியம், சோதிடமென்னுமிதே கத்திலுள்ள இரேகைகளைப் பார்த்து பலாபலன் சொல்லக் கூடிய சாஸ்திரங்களே ஏராளமாக எழுதியிருக்கிறார்களல்லவா, அதில், கம லமாமுனிவர் இரேகை சாஸ்திரம், எழுகாண்டமும் இதுவரையில் மூலபாடமாகவே யிருந்தது அதில் யெடுத்துச் சொல்லும் விஷயங் கள் நம்மதும். நமது தாய்தகப்பன் புத்திரவர்க்கங்களின் பிறப்பு, இறப்புவயது, போகம் மற்றுமுள்ள பலாபலன்கள் சிலருக்கு இரு ளாகவே யிருந்துவியார்த்தமாய் போவதைக்கண்டு பரிதபிக்கும் சிலவெளிபூர் உள்ளூர் நேசர்களின் வேண்டுகோளால் சாமுத்திரிகா இலட்சணத்தை எடுத்தோத வல்லவர்களைக் கொண்டு அதிபிரயாசை யுடன் செந்தமிழ்நடையில் உரை எழுதியும் சற்றேரும் மற்றேரும் தங்கள் தங்கள் பலாபலன்களை வுள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரி ந்துக் கொள்ளும்படி இரேகைகளின் உரும்படங்களும் சேர்த்து உயர்ந்த கடிதத்தில் குறைந்தவிலைக்கி அச்சிட்டு வெளியுட்டிருக்கி றோம், வேண்டியவர்கள் எமது விலாசத்திற்கு எழுதிபெற்றுக் கொ ள்ளவும். இதன் விலை அணை **0 8 0** தபாற்கூலி அணை-3